பக்கங்கள்: முப்பத்து இரண்டு + 14

# உதயன்

விலை ரூபா 20.00

www.uthayan.com

சுடர் 26 வள்ளுவர் ஆண்டு 2042 வைகாசி 29 ஞாயிற்றுக்கிழமை (12.06.2011) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 198



17
தென்னிலங்கை நோக்கி விரியும் அடக்குமுறை



27
மாற்றம் என்று வாக்களித்த மக்களுக்கு ஏமாற்றம்



28
சர்வதேச மைதானம் அரியாலையில்



29
ஆஸ்திரேலிய அணியும் சப்பலின் ஆட்டமும்

### இலங்கை அரசு 13 + நோக்கிய தீர்வுக்கு.... ஆனால்

# காணி, பொலிஸ் அதிகாரங்களில் பகிர்வுக்கு இடமே இல்லையாம்!

### தெற்குக் கட்சிகள் எதிர்ப்பு எனச் சுட்டிக்காட்டு

கொழும்பு, ஜூன் 12

பதின்மூன்று + முன்னோக்கி நகர்ந்து இனப்பிரச் சினைக் குத் தீர்வுகாண்பதில் இலங்கை அரசு முனைப்புடன் செயற் படுவதாக இந்திய அரசின் தேசிய பாதுகாப்புச் செயலா ளர் சிவ் சங்கர் மேனன் தெரி வித்திருக்கும் அதேவேளை-

தென்னிலங்கையின் எதிர்க்கட்சிகள் எதிர்ப்புத் தெரி விப்பதால் காணி, பொலிஸ் அதிகாரங்களை மாகாண சபை களுக்குப் பகிர்ந்து வழங்க முடியாது என்று இலங்கைத் தரப்பு இந்தியத் தூதுக்குழு விடம் சுட்டிக்காட்டியுள்ளது.

(31ஆம் பக்கம் பார்க்க)



## கொல்லப்பட்டவர்களைக் கணக்கெடுக்க இந்தியா வன்னியில் இருக்கவில்லை!

கொழும்பு, ஜூன் 12

வன்னியில் நடைபெற்ற போரின்போது 40 ஆயிரம் தமிழ் மக் கள் கொல்லப்பட்டனர் என்று ஐ.நா. அமைப்புகளும் ஏனைய சர்வதேச அமைப்புகளும் தெரிவித்து வந்தாலும், அதன் உண் மைத் தன்மை கேள்விக்குரியதாகும். (31ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கைக்கு விரைவில் வருவார் மன்மோகன் சிங்

கொழும்பு, ஜூன் 12

இலங்கைக்கு வருகை தருமாறு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ விடுத்த அழைப்பை இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் ஏற்றுள்ளார்.

கொழும்பு வந்த இந்தியாவின் மூவ ரணியினர் ஜனாதிபதியுடன் நேற்று நடத்திய பேச்சின்போது மன்மோகன் சிங்கின் கடிதத்தைக் கையளித்தனர்.

மன்மோகன் சிங் எப்போது இலங் கைக்கு வருகை தருவார் என்று அந்தக் கடிதத்தில் குறிப்பிடப்படாத போதும், செப்டெம்பர் மாதமளவில் இலங்கை வரலாம் என்று ஊடகங் கள் தெரிவித்தன.

மாலைதீவில் செப்டெம்பர் அல்லது ஒக்ரோபரில் நடைபெறவிருக்கும் சார்க் மாநாட்டில் கலந்துகொள்ள உள்ள மன் மோகன்சிங், அத்தருணம் இலங்கை வரலாம் என எதிர்பார்க்கப்படுகின் றது. (ஒ-ஐ)

# நிலைத்து நீடிக்கக் கூடிய தீர்வைக் காண இந்தியா முழுப் பங்களிப்பையும் வழங்கும்

### கொழும்பு வந்துள்ள உயர்மட்டக்குழு கூட்டமைப்பிடம் உறுதிமொழி

கொழும்பு, ஜூன் 12

ஏற்றுக்கொள்ளக் கூடியதும் நிலைத்து நீடிக்கக் கூடியதுமான தீர்வு ஒன்றைப் பெற்றுக்கொள்ள இந்தியா தனது முழுப்பங்களிப் பையும் ஒத்துழைப்பையும் தொடர்ந்து வழங்கும்.

இந்திய உயர்மட்டக் குழுவின ருடனான நேற்றைய பேச்சுக்க ளின் போது அவர்கள் தமிழ்த் தேசி யக் கூட்டமைப்பு பிரதிநிதிகளி டம் இந்த உறுதிமொழியை அளித்தனர்.

கூட்டமைப்பின் பேச்சாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான சுரேஷ் பிரேமச்சந்திரன் மேற்கண் டவாறு தெரிவித்தார்.

இலங்கைக்கு விஜயம் மேற் கொண்டிருந்த இந்தியாவின் மூவ ரணிக்கும் தமிழ்த்தேசியக் கூட் டமைப்புக்கும் இடையிலான சந்திப்பு இந்தியத் தூதரகத்தில் நேற்று முற்பகல் 10.30 மணிக்கு ஆரம்பமாகி 11.45 மணி வரை இடம்பெற்றது.


இந்தச் சந்திப்பில் இந்திய வெளிவிவகாரச் செயலர் நிருபமா ராவ், பாதுகாப்பு ஆலோசகர் சிவ் சங்கர் மேனன், பாதுகாப்புச் செய லாளர் பிரதீப்குமார் ஆகியோரும்-

கூட்டமைப்பின் சார்பில் நாடா ளுமன்ற உறுப்பினர்களான இரா. சம்பந்தன், மாவை சேனாதிராசா, சுரேஷ் பிரேமச் சந்திரன், செல் வம் அடைக் கலநாதன், எம்.ஏ. சுமந் திரன், ஜனாதிபதி சட்டத்தரணி கன கேஸ்வரன் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

இந்தச் சந்திப்புக் குறித்து வெளியிடப்பட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள் ளவை வருமாறு:-

**மூன்று அம்சக் கோரிக்கையை வலியுறுத்தினோம்**

வடக்கு - கிழக்கில் போரினால்



பாதிக்கப்பட்ட மக்கள் திரும்பவும் வழமையான வாழ்க்கைக்குத் திரும்ப உடனடி நடவடிக்கை எடுக்க வேண் டியதன் அவசியத்தை வலியுறுத் தினோம். (31ஆம் பக்கம் பார்க்க)

# இந்திய வீட்டுத் திட்டத்தில் இவ்வருடம் 1,050 வீடுகள் மட்டுமே நிர்மாணம்

### மிகுதி அடுத்த ஆண்டில் நிறைவு செய்யப்படும்

கொழும்பு, ஜூன் 12

வடக்கு - கிழக்கில் இந்திய அரசின் உதவியுடன் அமைக்கப் படவுள்ள 50 ஆயிரம் வீட்டுத் திட்டத்தில் இந்த வருடம் 1,050 வீடுகள் மட்டுமே பூர்த்தி செய் யப்படவுள்ளன.

போரால் பாதிக்கப்பட்டவர் களுக்கு 50 ஆயிரம் வீடுகளை அமைத்துக் கொடுக்க இந்தியா முன்வந்தது.

இந்த வீட்டுத் திட்டத்தில் 50 வீடுகளை இந்த மாத முடிவுக்குள் அமைத்துக் கொடுக்கவும் - வருட இறுதிக்குள் மேலும் ஆயிரம் வீடுகளை அமைத்துக் கொடுக்கவும் இந்தியா இணங் கியுள்ளது.

எஞ்சிய வீடுகள் அடுத்த வரு டமே அமைத்துக் கொடுக்கப் படும் என்று இந்தியா தெரிவித் துள்ளது.

கொழும்புக்கு வருகை தந்த இந்திய உயர்மட்டக் குழுவும் இலங்கை அரசு குழுவும் நடத் திய பேச்சுக்களில் இந்த இணக் கம் ஏற்பட்டுள்ளது.

இந்த வீடமைப்புத் திட்டத்தை எந்த அமைச்சின் ஊடாக மேற் கொள்ள வேண்டும் என்று இந்தியத் தரப்பு இலங்கையிடம் கேட்டுள்ளது.

இந்தத் திட்டம் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு ஊடாக எதிர்காலத்தில் மேற்கொள்வது என்று இலங்கைத் தரப்பு இந் தியாவிடம் தெரிவித்துள்ளது.

50 ஆயிரம் வீட்டுத் திட்டத் தில்1,050 வீடுகள் போக எஞ்சி யவை அடுத்த ஆண்டே அமைக் கப்படும் என எதிர்பார்க்கப்படு கிறது. (ஒ-ஐ)

## பொருளாதாரத் தடை விவகாரம் இரு தரப்புப் பேச்சில் பிரஸ்தாபம்

கொழும்பு, ஜூன் 12

இலங்கை மீது பொருளாதாரத் தடை விதிக்க வேண்டும் என்று தமிழக அரசு எடுத்துள்ள தீர்மானம் குறித்து இந்தியா விடம் இலங்கை பிரஸ்தாபித்துள்ளது.

இலங்கை வந்த இந்திய உயர் மட்டக் குழுவுடன் நடத்திய பேச்சுக்களின் போது (31ஆம் பக்கம் பார்க்க)

### சங்கத்தானையில் காருடன் மோதி விபத்து:

## 'ஹெல்மட்' இன்றி மோ. சைக்கிள் ஓடியவர் தலை அடிபட்டுச் சாவு

தென்மராட்சி, ஜூன் 12

சாவகச்சேரி, சங்கத்தானை யில் தாமோதரம்பிள்ளை வீதி யில் நேற்று மாலை 4.30 மணி யளவில் இடம்பெற்ற மோட் டார் சைக்கிள் - கார் விபத் தில் ஒருவர் அந்த இடத்தி லேயே மரணமானார்; பின் ஆசனத்தில் இருந்து பயணித் (31ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

உதயன்
தொடர்புகளுக்கு
ஆசிரியபீடம் : 021-2229933
தொலைநகல்: 021-2229944
செய்தி/படங்கள்:
021-5679933
021-5679944
விளம்பரம்: 021-5671111
விநியோகம்: 021-5677222
மின் அஞ்சல்
செய்தி : news@uthayan.com
கருத்து: admin@uthayan.com
விளம்பரம்:
advt@uthayan.com
இணைய முகவரி:
www.uthayan.com

# வடமராட்சி கிழக்கு மக்களுக்கு வீடுகளை அமைக்கும் படையினர்

யாழ்ப்பாணம், ஜூன் 12

மக்கள் மீளக்குடியேற்றம் செய்யப்படவுள்ள வடமராட்சி கிழக்குப் பகுதியில் அரை நிரந்தர வீடுகளை இராணுவத்தினர் அமைத்து வருகின்றனர் என்று யாழ். அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

வடமராட்சி கிழக்கிலுள்ள வெற்றிலைக்கேணி, முள்ளியான், போக்கறுப்பு ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளில் இன்னும் சில தினங்களில் மக்கள் மீளக்குடியமர்த்தப்படவுள்ளனர்.

இந்தப் பகுதிகளில் மக்களை நேற்றுக் குடியமர்த்துவதாக ஏற்கனவே திட்டமிடப்பட்டிருந்தது. எனினும், யாழ். மாவட்ட இராணுவத் தளபதி மக்களை மீளக்குடியமர்த்துவதற்கான திகதியை சில தினங்களுக்கு ஒத்திவைத்துள்ளார்.

மக்களை அந்தப் பகுதியில் மீளக்குடியமர்த்துவதற்கான அடிப்படை வசதிகளை அங்கு ஏற்படுத்துவதில் இராணுவம் அக்கறை காட்டி வருகின்றது.

10 அரை நிரந்தர வீடுகளை இராணுவத்தினர் தற்போது அமைத்து வருகின்றனர். அத்துடன், அங்கு வீதிகள் செப்பனிடும் வேலைகளும் இடம்பெற்று வருகின்றன.

அத்துடன், அங்குள்ள மருந்தகம் ஒன்றும் புனரமைக்கப்பட்டு வருகிறது -என்றார். (த-14)

## பயண முகவர் நிறுவன அலுவலகத் திறப்பு விழா

யாழ்ப்பாணம், ஜூன் 12

நேசன் பயண முகவர் நிறுவனத்தின் யாழ். கிளை அலுவலகத் திறப்பு விழா எதிர்வரும் 15 ஆம் திகதி காலை 9.30 மணிக்கு பிறவுண் வீதியில் இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராசா, மு.சந்திரகுமார், இந்தியத் தூதரக யாழ். அலுவலக அதிகாரி வி.மகாலிங்கம் ஆகியோர் விருந்தினர்களாகக் கலந்துகொள்வர். (ஒ-ஐ)




தெளிவான வானிலை அனைத்து மாவட்டங்களிலும் நிலவுவதற்கான சாத்தியம் . அநேக மாவட்டங்களில் வெப்பமான காலநிலை நாள் முழுவதும் நிலவும்.

## விளக்கமறியல் நீடிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 12

போலி ஆவணங்களைக் காட்டி யாழ். நகரிலுள்ள வங்கி ஒன்றிலிருந்து 11 லட்சம் ரூபாவை எடுத்துச்செல்ல முற்பட்ட வேளை கைது செய்யப்பட்ட வவுனியா வாசியைத் தொடர்ந்தும் விளக்க மறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

கடந்த 31 ஆம் திகதி குறித்த வங்கியில் வைத்து யாழ். விசேட குற்றத் தடுப்புப் பிரிவுப் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டு யாழ். நீதிமன்றில் ஆஜர்செய்யப்பட்ட இவரைக் கடந்த 10 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கும்படி நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது. இந்த நிலையில் நேற்றுமுன்தினம் அவர் நீதிமன்றில் மீண்டும் ஆஜர்படுத்தப்பட்டபோது அவரை எதிர்வரும் 24 ஆம் திகதி வரை தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. (த-4)

## மூடப்பட்டுள்ள தொழிற்சாலைகளை மீண்டும் திறப்பதற்கு நடவடிக்கை

யாழ்ப்பாணம், ஜூன் 12

வடக்கு, கிழக்குப் பிரதேசங்களில் கடந்தகால யுத்தம் காரணமாக இயங்காமல் பாதிக்கப்பட்ட தொழில் முயற்சி நிறுவனங்களை இனங்கண்டு புனர்நிர்மாணம் செய்யும் திட்டம் ஒன்றைத் தேசிய கைத்தொழில் அதிகாரசபை ஊடாகச் செயற்படுத்த கைத்தொழில் மற்றும் வாணிப அமைச்சர் றிஷாத் பதியுதீன் நடவடிக்கை எடுத்துள்ளார். இதன்படி வடக்கு, கிழக்கு பிரதேசங்களில் இயங்கியதும் யுத்த நடவடிக்கைகளால் பாதிக்கப்பட்டதுமான சிறிய மற்றும் நடுத்தர நிறுவனங்களை நடத்திய நிறுவன முகாமையாளர்களிடம் இருந்து விண்ணப்பங்களைத் தேசிய கைத்தொழில் அதிகாரசபை கோரியுள்ளது.

மேற்படி முயற்சியாளர்கள் தம்மிடம் உள்ள உறுதிப்படுத்தக் கூடிய ஆவணங்களை சுய விவரத்துடன் இணைத்து தேசிய தொழில் முயற்சி அதிகாரசபை இல.69,2ஆவது மாடி, செலிங்கோ கட்டடம், கொழும்பு -1 என்னும் முகவரிக்கு எதிர்வரும் 30 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்புமாறு கோரப்பட்டுள்ளது.

இதுதொடர்பான மேலதிக விடயங்களை மேற்படி சபையில் இருந்து அறிந்து கொள்ள முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (த-122)

## சாவகச்சேரி - பருத்தித்துறை கடைசி பஸ் நேர மாற்றம்

### மணிக்கணக்கில் காத்திருக்கும் பயணிகள்

தென்மராட்சி, ஜூன் 12

சாவகச்சேரியிலிருந்து பருத்தித்துறைக்குச் செல்லும் கடைசி, பஸ் நேரம் திடீரென மாற்றப்பட்டதால் பயணிகள் மணிக்கணக்கில் காத்திருக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

சாவகச்சேரி பஸ் நிலையத்திலிருந்து காலை 8.00, முற்பகல் 11.15, பி.ப. 2.15, மாலை 4.30 ஆகிய நேரங்களில் பருத்தித்துறைக்கு பஸ் புறப்பட்டு ச் செல்லும். பிற்பகல் 2.15 மணிக்குச் செல்லும் பஸ் பாடசாலை சேவையாக இடம்பெறுவதால் பொதுமக்கள் மாலை 4.30 மணி சேவையிலேயே பயணம் செய்து வந்தனர்.

சாவகச்சேரி அரச திணைக்களங்களில் பணிபுரியும் வடமராட்சி பிரதேசத்தைச் சேர்ந்தவர்களும் மாலை 4.30 மணிக்குச் செல்லும் பஸ்ஸிலேயே பயணம் செய்து வந்தனர்.

சாவகச்சேரி - பருத்தித்துறைக்குச் செல்லும் 765 மார்க்கத்தில் இந்த பஸ்ஸைத் தவிர வேறு பஸ்களோ தனியார் மினி பஸ்களோ சேவையில் ஈடுபடாததால் அரச உத்தியோகத்தர்கள், பாடசாலை மாணவர்கள், பொதுமக்கள் ஆகியோர் இந்த பஸ் சேவையையே நம்பியுள்ளனர்.

இந்த நிலையில் கடந்த திங்கட்கிழமை தொடக்கம் மாலை நேர சேவை மாலை 5 மணிக்குப் புறப்படுவதால் இந்த பஸ்ஸில் பயணம் செய்வோர் பெரும் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

பருத்தித்துறை பஸ் நிலையத்திலிருந்து ஏனைய பகுதிகளுக்குப் பயணிப்போர் இருட்டிய பின்னரே உரிய இடத்துக்குச் செல்ல வேண்டியுள்ளது. இதனால் சாவகச்சேரியில் இருந்து வடமராட்சிக்குச் செல்வோரின் குடும்ப உறவுகள் வீதிகளில் காத்திருந்து அழைத்துச் செல்ல வேண்டியுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (த-207)

## குடிதண்ணீர் விநியோகம் குறைப்பு

சாவகச்சேரி நகரசபையினால் வழங்கப்பட்டு வரும் குழாய் மூலமான குடிதண்ணீர் விநியோகம் நாளை தொடக்கம் மட்டுப்படுத்தப்படவுள்ளது.

நாளை காலை 5.30 மணி தொடக்கம் காலை 7.30 மணி வரையும் பி.ப. 4.30 மணி தொடக்கம் மாலை 6.30 மணி வரையும் குடிதண்ணீர் விநியோகம் மேற்கொள்ளப் படுமென அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

# சந்தைக்குள் புகுந்த மாடுகள் மரக்கறிகளைத் தின்று தீர்த்தன

### மந்திகை வியாபாரிகள் நேற்றுப் பகிஷ்கரிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 12

பருத்தித்துறை மந்திகை பொதுச் சந்தைக்குள் நேற்று முன்தினம் இரவு உட்புகுந்த கட்டாக்காலி மாடுகள் அங்கிருந்த மரக்கறிகள், வாழைக் குலைகள் என்பவற்றைத் தின்று தீர்த்தன.

இதனால் நேற்று மதியம் வரை வியாபாரிகள் தமது வியாபார நடவடிக்கைகளைப் பகிஷ்கரித்தனர்.

நேற்றையதினம் வியாபாரத்துகென சந்தைக்குச் சென்ற 15 இற்கும் மேற்பட்ட வியாபாரிகள் அங்கு தமது மரக்கறிகள், வாழைக்குலைகளுக்குப் பதிலாக மாட்டுச் சாணத்தையே காணமுடிந்தது.

இது குறித்து உரிய நடவடிக்கை எடுக்கக்கோரி நேற்று மதியம் வரை தமது வியாபாரத்தை முற்றாக நிறுத்திக் கொண்டனர்.

சம்பவ இடத்துக்குச் சென்ற பொலிஸாரும் பருத்தித்துறைப் பிரதேச சபைச் செயலாளர் எஸ். ஜெயவசீகரனும் இதுபற்றி விசாரணைகளை மேற்கொண்டனர். விரைவில் உரிய பாதுகாப்பு வதிகளை ஏற்படுத்தித் தருவதாக உறுதிப்படுத்தப்பட்டதை அடுத்தே நேற்று மதியத்துக்குப் பின்னர் சந்தையில் வியாபாரம் நடைபெற்றது. இதனால் சந்தைக்குப் பொருள்களைக் கொள்வனவு செய்ய வந்த பலரும் சிரமத்துக்கு உள்ளானார்கள்.

மந்திகை பொதுச் சந்தைக்கான கட்டடம் அமைக்கும் பணிகள் கடந்த இரண்டு வருடங்களுக்கு முன்னர் ஆரம்பிக்கப்பட்டன. ஆனால், இதுவரை அந்தக் கட்டடப் பணிகள் நிறைவு செய்யப்படவில்லை. கட்டட வேலை காரணமாகப் பருத்தித்துறைப் பிரதேச சபையின் கீழ் இயங்கும் சபைக்குச் சொந்தமான கட்டடத்துக்கு முன்பாக உள்ள தனியார் காணி ஒன்றிலேயே தற்காலிகமாகப் பொதுச் சந்தை இயங்கி வருகின்றது. சில மாத காலப் பகுதிக்கு மட்டும் எனக் கூறி குறித்த தற்காலிக இடம் வியாபாரத்துக்கென ஒப்பந்தம் செய்யப்பட்டது. எனினும் இரண்டு வருடங்களாகியும் கட்டடப் பணிகள் பூர்த்தியாகவில்லை.

தற்போது பாதுகாப்பு வேலிகள் இல்லாமலும், உரிய ஒழுங்கமைப்புகள் இன்றியும் சந்தை இயங்கி வருகின்றது. இதற்கு உடனடியாகப் பாதுகாப்பு வசதிகளை ஏற்படுத்தித் தருவதாகப் பிரதேச சபைச் செயலாளர் கூறியுள்ளார்.

இதேவேளை, பிரதேச சபை ஊழியர்கள் சிலர் கட்டாக்காலி மாடுகள் பிதம் பார்த்துச் சென்ற பின்னர் சந்தைப் பகுதியைச் சுத்தம் செய்ய முயன்ற போது சந்தை வியாபாரிகளால் தடுத்து நிறுத்தப்பட்டனர். பொலிஸில் இதுபற்றி முறைப்பாடு செய்த பின்னரே சுத்தம் செய்ய அனுமதிப்போம் எனக் கூறினர். இதனால் மதியத்தின் பின்னரே சுத்தம் செய்யும் பணிகள் இடம்பெற்றன.

பொதுச் சந்தைக்கான கட்டட வேலைகள் இன்னும் மூன்று மாதங்களில் முடிக்கப்பட்டு வியாபாரிகளின் பாவனைக்கு விடப்படும் எனவும் பிரதேச சபைச் செயலாளர் மேலும் தெரிவித்தார்.

(த-4-336)

# நிகழ்வுகள்

## பாலர் விளையாட்டு விழா

உடுவில் இந்து இளைஞர் மன்றத்தின் பாலர் விளையாட்டுவிழா இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 1.45 மணியளவில் உடுவில் மேற்கு பாலர் பாடசாலை மைதானத்தில் இடம்பெறும்.

மன்றத்தின் தலைவர் தி.தியாகச்சந்திரன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக தெல்லிப்பழை ஆதாரவைத்தியசாலை வைத்திய அத்தியட்சகர் வைத்திய கலாநிதி அ.ஜெயகுமரன் கலந்துகொள்வார். திருமதி நித்தியா ஜெயகுமரன் பரிசில் வழங்குவார். (ஒ-ஐ)

## பரிபாலன சபைக் கூட்டம்

வேலணை மேற்கு சிற்பனை முருகன் ஆலய பரிபாலன சபையின் பொதுக் கூட்டம் இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு ஆலய மண்டபத்தில் இடம்பெறும்.

பரிபாலன சபையின் உப தலைவர் க.இளங்கோவன் தலைமையில் நடைபெறும் இந்தக் கூட்டங்களில் ஆலய உற்சவங்கள் தொடர்பாக ஆராயப்படவிருக்கிறது. (ஒ-ஐ)

## கலந்துரையாடல்

யாழ். மாவட்டத்தில் இயங்கும் சகல முழுநேர, பகுதிநேர தனியார் மேலைத்தேய மருத்துவ சிகிச்சை நிலையங்களின் உரிமையாளர்களுக்கான கலந்துரையாடல் எதிர்வரும் 16 ஆம் திகதி வியாழக்கிழமை பி.ப. 3 மணிக்கு சுகாதார சேவைகள் மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது. சகல முழுநேர பகுதிநேர தனியார் மேலைத்தேச மருத்துவ சிகிச்சை நிலையங்களின் உரிமையாளர்களும் இந்தக் கலந்துரையாடலில் பங்குபற்றுமாறு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் கேட்டுள்ளார்.

(ஒ-ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொன்சேகாவுக்குச் சிறைச்சாலை புலனாய்வுப் பிரிவு பாதுகாப்பு

முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவுக்கு சிறைச்சாலை புலனாய்வுப் பிரிவு உத்தியோகத்தர்களைக் கொண்டு பாதுகாப்பளிக்கப்படுவதாக சிங்கள இணையத்தள செய்தியொன்று தெரிவிக்கின்றது.

இதுவரை காலமும் அவர் சாதாரண சிறைக்காவலர்களின் பாதுகாப்பிலேயே வழக்கு விசாரணைகளுக்காகச் சிறைச்சாலைகளுக்கு அழைத்து வரப்பட்டிருந்தார். ஆயினும், அண்மைய நாள்கள் தொடக்கம் அவருக்கான பாதுகாப்பு சிறைச்சாலைப் புலனாய்வுப் பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

அத்துடன் அவ்வாறு சரத் பொன்சேகாவுக்குப் பாதுகாப்பு வழங்கும் உத்தியோகத்தர்களின் பெயர் விவரங்களை வாரம் தோறும் பாதுகாப்பு அமைச்சின் செயலாளருக்கு அனுப்பி அனுமதியைப் பெற்றுக் கொள்ளுமாறும் சிறைச்சாலை அத்தியட்சகர் பணிக்கப்பட்டுள்ளார்.

அது தொடர்பில் கருத்து வெளியிட்ட சிறைச்சாலை ஊடகப்பேச்சாளர், சரத் பொன்சேகாவின் பாதுகாப்புக் கருதியே பிரஸ்தாப நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும், அது தொடர்பில் மேலதிக கரிசனையாகவே பாதுகாப்பு அமைச்சுக்குப் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் குறித்த தகவல் சமர்ப்பிக்கப்பட்டு வருவதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

*(தமிழ்வின்)*

# கனேடிய நாடாளுமன்றில் ராதிகா தமிழில் கன்னி உரை

கனேடிய நாடாளுமன்றத்துக்கு தெரிவான முதல் தமிழர் என்ற பெருமையைப் பெற்ற ராதிகா சிற்சபேசன் நாடாளுமன்றத்தில் தனது கன்னி உரையை தமிழிலும் நிகழ்த்தியுள்ளார்.

ராதிகா சிற்சபேசன் கடந்த மே மாதம் 2ஆம் திகதி நடைபெற்ற தேர்தலில் ஸ்கார்பரோ - ரூச் ரிவர் என்ற தொகுதியில் புதிய சனநாயகக் கட்சியின் சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்றார்.

நாடாளுமன்றத்தில் அவர் தனது கன்னி உரையை நிகழ்த்தும் போது:

நாடாளுமன்றத்திற்கு தெரிவான முதல் தமிழர் என்ற வகையில் இந்த மதிப்பிற்குரிய அவையில் எனது தாய் மொழி தமிழிலில் பேசுவதையிட்டு ஒருங்கே பெருமையாகவும், எளிமையாகவும் உணர்கிறேன்.

தமிழர்களாகிய நாம் ஒடுக்குமுறைகளில் இருந்தும் போர்ச் சூழலில் இருந்தும் தப்பித்தே கனடாவுக்கு வந்திருக்கிறோம். கனடா எம்மை இருகரம் கொண்டு வரவேற்றது.

நாமும் கனடாவின் பொருளாதார வளர்ச்சிக்கும், பண்பாட்டு வளத்திற்கும் முனைப்போடு பங்காற்றி வருகிறோம்.

இன்று இந்த அவையிலே தமிழ்மொழியில் பேசப்பட்டதை, இந்த மைல்கல் எட்டப்பட்டதை உலகெங்கிலும் பரந்து வாழும் புலம்பெயர் தமிழர்கள் நிச்சயமாகப் பெருமையடைவர்.

தமிழர்களின் பிள்ளைகள் எதிர்நோக்கும் தடைகள் தகரும். அவர்கள் கனடாவின் உயர் தலைமைப் பொறுப்புக்களில் முன்னேறுவர் என்றார்.

*(தமிழ் சி.என்.என்)*

# தமிழர்களின் காணிகளை விற்குமாறு நிர்ப்பந்தம்

## பிரதேச செயலரிடம் முறைப்பாடு

மட்டக்களப்பு மாவட்ட கரையோரக் கிராமங்களான இரலஓடை, காயங்கேணி என்பனவற்றில் உள்ள தமிழ் குடும்பங்கள் தமது காணிகளை விற்குமாறு நிர்ப்பந்திக்கப்பட்டு வருவதாக கோரளைப்பற்று வடக்குப் பிரதேசச் செயலாளரிடம் மக்கள் முறையிட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

இராணுவப் புலனாய்வுப் பிரிவினரால் இந்தப் பிரதேசங்களுக்கு அழைத்து வரப்பட்டுள்ள பெரும்பான்மை இனத்தவர்களுக்கே காணிகளை விற்குமாறு தமிழ் மக்கள் வற்புறுத்தப்படுகின்றனர். சில கிராம வாசிகள் நிர்ப்பந்தம் காரணமாக காணிகளை விற்றும் உள்ளனர். ஒரு ஏக்கரின் கால் பகுதி 60 ஆயிரம் ரூபாவுக்கு விற்கப்படுகின்றதாம்.

இதில் இராணுவத்தினர் தமக்குரிய கட்டணம் எனக் கூறி ப் பத்தாயிரம் ரூபாவைப் பெற்றுக் கொண்டு மீதியை காணி உரிமையாளர்களுக்கு வழங்குவதாகவும் மக்கள் தமது முறைப்பாட்டில் தெரிவித்துள்ளனர். *(தமிழ் சி.என்.என்)*

# இந்தியாவுக்கு எதிரான போரில் இலங்கையின் உதவிகளுக்கு நன்றி கூறுகின்றது பாகிஸ்தான்

1971இல் இந்தியாவுக்கு எதிரான போரில் பாகிஸ்தானுக்கு எல்லாவிதமான உதவிகளையும் வழங்கியதற்காக இலங்கைக்குப் பாகிஸ்தான் நன்றி தெரிவித்துள்ளது.

இந்தியாவின் உயர்மட்ட அதிகாரிகள் குழுவொன்று கொழும்பு சென்றுள்ள நிலையிலேயே பாகிஸ்தான் நன்றி கூறியுள்ளது.

கொழும்பில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற இலங்கை-பாகிஸ்தான் வர்த்தக சபையின் கூட்டத்தில் பேசிய போதே, இலங்கைக்கான பாகிஸ்தான் தூதுவர் சீமா இலாகி பலோச் இவ்வாறு நன்றி கூறியுள்ளார்.

இந்தக் கூட்டத்தில் பேசிய பாகிஸ்தான் தூதுவர் இலாகி பலோச், நாங்கள் இலங்கையை நம்புகிறோம். இலங்கை தனது இறைமை விடயத்தில் விட்டுக் கொடுக்காமல் இருப்பதையிட்டுப் பெருமை கொள்கிறோம். எமது பிரதேசத்தில் நிலையான அமைதி ஏற்பட வேண்டும் என்பதைப் புரிந்து கொள்கிறோம்.

காஷ்மீர் விவகாரம் ஐ.நா பிரகடனங்களின் அடிப்படையிலும், அங்குள்ள மக்களின் விருப்பத்தின் அடிப்படையிலும் அமைதியாகத் தீர்க்கப்பட வேண்டும். 1971இல் இந்தியாவுக்கு எதிரான போரின்போது இலங்கை செய்த உதவிகளை ஒருபோதும் மறக்க முடியாது.

பாகிஸ்தானில் இருந்து எம்மால் விநியோகங்கள் மற்றும் அரசியல் உதவியை வழங்க முடியாத போது- இலங்கை உதவ முன்வந்தது. தனது எரிபொருள் நிரப்பும் வழிகளை எமக்காகத் திறந்து விட்டது.

இலங்கை மக்களின் அமைதியான வாழ்வுக்கு உதவ பாகிஸ்தான் முயற்சிகளை மேற்கொண்டுள்ளது என்றும் அவர் மேலும் கூறியுள்ளார்.

1971ஆம் ஆண்டு போரின் போது பாகிஸ்தானிய போர் விமானங்கள் கட்டுநாயக்க விமான நிலையத்தில் எரிபொருள் நிரப்பிக் கொண்டு சென்று கிழக்கு பாகிஸ்தானில் (இப்போதைய பங்களாதேஷ்) தாக்குதல்களை மேற்கொண்டன.

இந்தியாவுக்கு மேலாக பாகிஸ்தான் போர் விமானங்கள் பறக்க முடியாததால்தான் இலங்கையை எரிபொருள் நிரப்பும் தளமாக பாகிஸ்தான் பயன்படுத்தியிருந்தது.

பாகிஸ்தான் விமானங்கள் கட்டுநாயக்க விமான நிலையத்தில் எரிபொருள் நிரப்பிக் கொண்டிருந்த போது ஜேவிபி கிளர்ச்சியாளர்களிடம் இருந்து விமான நிலையத்தைப் பாதுகாக்க அனுப்பி வைக்கப்பட்டிருந்த இந்தியப் படையினரின் சிறிய பிரிவு ஒன்று அங்கே பாதுகாப்பு அளித்து வந்தது.

எரிபொருள் நிரப்ப பாகிஸ்தானுக்கு இடமளித்ததால் இந்திய- இலங்கை உறவுகளில் கசப்பான நிலை ஏற்பட்டிருந்தது.

விடுதலைப் புலிகளுக்கு எதிரான போரின் போது இலங்கைக்குப் பாகிஸ்தான் ஆயுதங்களை வழங்கித் தனது கடனைத் தீர்த்துக் கொண்டதும் குறிப்பிடத்தக்கது.

*(புதினப்பலகை)*

# புனர்வாழ்வு முகாம்களுக்கு ஆண்டு இறுதியுடன் மூடுவிழா

இறுதிப்போரின் பின்னர் சரணடைந்த மற்றும் கைது செய்யப்பட்ட விடுதலைப் புலிகள் இயக்க முன்னாள் போராளிகளுக்கான புனர்வாழ்வு முகாம்கள் அனைத்தும் இந்த ஆண்டு இறுதிக்குள் மூடப்பட்டு விடும் என்று இலங்கை இராணுவத்தின் புனர்வாழ்வு ஆணையாளர் நாயகம் மேஜர் ஜெனரல் சுதந்த ரணசிங்க தெரிவித்துள்ளார்.

தற்போது புனர்வாழ்வு முகாம்களில் 3 ஆயிரத்து 572 முன்னாள் போராளிகள் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

இவர்களுக்கான புனர்வாழ்வு நடவடிக்கைகள் யாவும் இந்த ஆண்டு இறுதிக்குள் நிறைவடைந்து விடும். அதன் பின்னர் அனைத்து புனர்வாழ்வு முகாம்களும் மூடப்பட்டு விடும்.

இலங்கைப் பாதுகாப்பு அமைச்சினால் புனர்வாழ்வு அளிப்பதற்கென 11 ஆயிரத்து 664 முன்னாள் போராளிகள் ஒப்படைக்கப்பட்டனர்.

2009 ஓகஸ்ட் மாதம் தொடங்கப்பட்ட 12 முகாம்களில் இந்தப் புனர்வாழ்வு நடவடிக்கைகள் ஆரம்பமாகின.

இதுவரை 7 ஆயிரத்து 343 பேர் புனர்வாழ்வு கொடுக்கப்பட்டு விடுவிக்கப்பட்டுள்ளனர்.

ஏனையோரும் இந்த ஆண்டு இறுதிக்குள் விடுவிக்கப்பட்டு விடுவர் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். *(புதினப்பலகை)*

# இந்திய அழுத்தத்துக்கு எதிராகப் போராட்டம்

தமிழ் மக்களுக்கான அதிகாரப் பரவலாக்கல் குறித்து இந்திய அரசிடம் இருந்து பிரயோகிக்கப்படும் அழுத்தத்துக்கு எதிராக நாடுதழுவிய ரீதியில் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களை மேற்கொள்ள அரசு இரகசிய முயற்சிகளை மேற்கொண்டுள்ளது.

நேற்றுமுன்தினம் நாடாளுமன்றத்துக்கு வருகை தந்திருந்த ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அமைச்சர்களான விமல் வீரவன்ச மற்றும் சம்பிக்க ரணவக்க இருவரிடமும் இந்திய எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களை மேற்கொள்ளும் பொறுப்பை ஒப்படைத்துள்ளார்.

சர்வதேச சமூகத்தைத் திருப்திப்படுத்தவும், இந்திய அழுத்தங்களை திசைதிருப்பவும் பதின்மூன்றாவது திருத்தச் சட்டத்துக்கு அப்பால் சென்று தமிழ் மக்களுக்கு கணிசமான அதிகாரப் பகிர்வொன்றை வழங்க அரசாங்கம் தயாராக இருப்பதாக சொல்லிக் கொண்டாலும், வெளிநாட்டு அழுத்தங்களுக்கு அடிபணிந்து தான் ஒருபோதும் அதிகாரப் பரவலாக்கலை மேற் கொள்ளப் போவதில்லை என்று ஜனாதிபதி பொதுக்கூட்டங்களில் அடிக்கடி வலியுறுத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. *(தமிழ் சி.என்.என்)*

# தமக்கிடையே மோதும் அரச புலனாய்வுச் சேவைகள்

மகிந்த ராஜபக்ஷ அரசின் நடவடிக்கைகளினால், இலங்கையின் புலனாய்வுப் பிரிவுகள் ஒன்றையொன்று சந்தேகக் கண் கொண்டு பார்க்கும் நிலை ஏற்பட்டுள்ளதாகக் கொழும்பு ஆங்கில ஊடகம் ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது.

புலனாய்வுப் பிரிவுகள் ஒன்றையொன்று கண்காணிப்பதும், சந்தேகத்துடன் பார்ப்பதும் குழப்பமான நிலைமையைத் தோற்றுவித்துள்ளதாகவும் அந்த ஊடகம் குறிப்பிட்டுள்ளது.

இந்தக் குழப்பமான நடவடிக்கையின் ஒருகட்டமாக, இலங்கை அரச புலனாய்வுச் சேவையின் தலைவரான பிரதி பொலிஸ்மா அதிபர் சந்தன விக்கிரமரத்ன புத்தளம் மாவட்ட பிரதி பொலிஸ்மா அதிபராக இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

அரச புலனாய்வுச் சேவையின் பணிப்பாளர் பிரதிப் பொலிஸ்மா அதிபர் கீர்த்தி கஜநாயக்க எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் ஓய்வு பெற்றுச் செல்லவுள்ளார்.

இவருக்குப் பொலிஸ்மா அதிபர் பதவி அல்லது பாதுகாப்பு அமைச்சின் ஆலோசகர் பதவி தருவதாக ராஜபக்ஷ அரசு வாக்குறுதி கொடுத்திருந்தது.

ஆனால் அந்தப் பதவிகள் எதுவும் கொடுக்கப்படாமல் அவர் ஏமாற்றமடைந்துள்ளார்.

அரசின் பொய்யான வாக்குறுதிகளால் மனமுடைந்து போன அவர், பொறுப்புணர்வுடன் புல்னாய்வுச் சேவையை முன்னெடுக்கவில்லை.

இவரையடுத்து இந்தப் பதவியைப் பொறுப்பேற்கவிருந்த பிரதிப் பொலிஸ்மா அதிபர் சந்தன விக்கிரமரத்னவே திடீரென சில நாள்களுக்கு முன்னர் புத்தளத்துக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

இந்த இடமாற்றத்துக்கு முக்கியமான காரணம், அரச புலனாய்வுச் சேவைகள் இரண்டுபட்டு நின்று ஒன்றையொன்று உளவு பார்க்கின்ற நிலை தான் என்றும் கூறப்படுகிறது.

இராணுவப் புலனாய்வுப் பிரிவின் தொலைபேசி உரையாடல்களை இடைமறித்து அரச புலனாய்வுச் சேவை ஒட்டுக்கேட்டு வந்தது.

அதுபோலவே இராணுவப் புலனாய்வுப் பிரிவும் அரச புலனாய்வுப் பிரிவின் தொலைபேசி உரையாடல்களை ஒட்டுக்கேட்டு வந்தது.

இந்த நடவடிக்கையை மேற்கொள்ளுமாறு இருதரப்புக்கும் பாதுகாப்புச் செயலரே உத்தரவிட்டிருந்தார்.

இராணுவப் புலனாய்வுப் பிரிவு இப்போது மேஜர் ஜெனரல் பிரசாத் சமரசிங்கவின் கீழ் உள்ளது.

பிரிகேடியர் அருண வன்னியாராச்சியும் கூட கீர்த்தி கஜநாயக்க, சந்தன விக்கிரமரத்ன ஆகியோரின் தொலைபேசி உரையாடல்களை ஒட்டுக்கேட்டு வந்தார்.

அதேவேளை, கீர்த்தி கஜநாயக்க குழு மேஜர் ஜெனரல் பிரசாத் சமரசிங்கவினது மட்டுமன்றி பாதுகாப்பு அமைச்சின் ஆலோசகர் மேஜர் ஜெனரல் கபில ஹெந்தவிதாரணவின் தொலைபேசியைக் கூட ஒட்டுக்கேட்டது.

இராணுவப் புலனாய்வுப் பிரிவு இதுவரையில், அரசியல்வாதிகளினதோ அல்லது ஊடகவியலாளர்களினதோ தொலைபேசி உரையாடல்களை ஒட்டுக் கேட்கவில்லை.

அவர்களின் நடவடிக்கைகள் தீவிரவாதிகள் தொடர்பான தகவல்களை திரட்டும் நோக்குடையனவாக இருந்தன.

ஆனால் இப்போது தேசிய பாதுகாப்பை உறுதிப்படுத்த வேண்டிய பொறுப்பைக் கைவிட்டு கீழ்த்தரமான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர் என்றும் அந்த ஊடகம் மேலும் தகவல் வெளியிட்டுள்ளது. *(புதினப்பலகை)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## "புரியாதவற்றை புரியவைக்கும் ஆவியானவரே வாரும்..."

''நான் மாந்தர் யாவர் மேலும் என் ஆவியைப் பொழிந்தருள்வேன்; உங்கள் புதல்வர் புதல்வியரும் இறைவாக்குரைப்பர்.''(யோவேல் 2:28)

உலக கிறிஸ்தவர்கள் இன்று தூய ஆவியானவரின் வருகையினை அக்களிப்போடும், நிறை மகிழ்வோடும் கொண்டாடுகின்றனர். இயேசு விண்ணேறிச் செல்லும் முன்பாக ''நான் உங்களுக்கு ஒரு துணையாளரை அனுப்புவேன்'' என்று திருவாய் மொழிந்தார். அதற்கிணங்க அவர் அர்ச்சிக்கும் ஆற்றலின், அக்கினியின், ஆளுமையின், ஞானத்தின், புத்தியின், அறிவின் விமரிசையின், திடத்தின், பக்தியின், தேவபயத்தின் ஆவியானவரை அக்கினி நாவைப்போன்று அப்போஸ்தலர்களின் மேல் அனுப்புகின்றார். ''அக்கினி, தீ, நெருப்பு எல்லாமே சுட்டெரிக்கும் தீச்சுவாலையையே குறித்து நிற்கும்'' அக்கினி நெருப்பானது தன்னிடம் வந்து சேருபவற்றையோ அல்லது தனக்குள் போடப்படுபவற்றையோ இன்னொரு நெருப்புப் பிழம்பாக மாற்றும் சக்தி கொண்டது.

இந்த நெருப்புப் பிளம்பாக மாறும் நிகழ்வுதான் தூய ஆவியானவரின் வருகையின் போதும் நிகழ்கின்றது. இயேசு ஆண்டவருடைய விண்ணேற்பின் பின்னர் எது நடக்குமோ என்று தெரியாமல் மனம் கலங்கியவர்களாக திரும்பும் திசை எங்கிலும் பயமும், பதற்றமும் நிறைந்து நின்றதனை கண்ணுற்று தாமும் இயேசுவைப் போன்று கொல்லப்படுவோமோ என்று பயந்து கலங்கி மரியன்னையோடு செபத்தில் நிலைத்திருக்கும் போது ஆவியானவர் அக்கினிப் பிழம்பாக அவர்கள்மேல் வந்து இறங்குவதனைக் காண்கின்றோம். ''நெருப்பு போன்ற பிளவுற்ற நாவுகள் ஒவ்வொருவர் மேலும் வந்து அமர்ந்ததை அவர்கள் கண்டார்கள்''. (தி.பணி 2:3) இந்த நிகழ்வின் பின்னர் அப்போஸ்தலர் பணி, நூல் முழுவதிலும் நாம் காண்பது என்னவென்றால் தூய ஆவியானவரின் சுட்டெரிக்கும் நிகழ்ச்சிகள்தான்.




இன்று நாம் பேருவகையோடு தூய ஆவியின் வருகையினைக் கொண்டாடுகின்றோம். ஆனால் ஆவியானவர் அழைக்கும் சாட்சிய வாழ்வினை விட்டுச் சறுகி ஆவியானவரின் ஏவுதல்களை அறிய முடியாதவர்களாக மனம் இறுகி வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். சிந்திப்போம், சீர்தூக்கிப் பார்ப்போம். கிறிஸ்தவ விசுவாசம் மட்டுப்படுத்தப்பட்ட கால கட்டத்தில் கட்டுப்பாடுகள், கலாபனைகள் மத்தியிலும் திருமறை திக்கெட்டும் பரவியது. ஆனால் மதச் சுதந்திரம் கிடைத்தது. இன்று எண்ணிலடங்கா பணியாளர்கள் நன்று உருவாக்கப்பட்ட திருச்சபை நிர்வாகம், குலையாத சட்டதிட்டங்கள். ஆனால் இவை எல்லாம் இருந்தும் அப்போஸ்தலர் கால வளர்ச்சியோடு ஒப்பிடும் போது திருச்சபை எதிர்பார்த்த அளவு இன்னும் எட்டிப்பிடிக்கவில்லை எனலாம். இதற்கு காரணம் என்ன? ஏது குறை? எப்படி இந்த நிலை? எனச் சிந்திக்கின்றபோது சாட்சிய வாழ்வுக் குறைபாடும், இன்றைய மனிதர்களாகிய நாங்கள் ஒற்றுமையில் வாழாமலும், அப்போஸ்தலர்களைப் போன்று எல்லாவற்றையும் எல்லோருக்கும் பொது எனக் கொள்ளாமலும் வாழ்கின்ற வாழ்க்கையே காரணமாகும்.

ஆவியானவர் வந்து அப்போஸ்தலருக்கு புரியாத பல விடயங்களைப் புரியப்பண்ணினார், முடியாது என நினைத்தவற்றை முடித்துக் கொடுத்தார். நாமும் எம்மீது அக்கினியின் ஆவியானவரின் வரம் பொழியப்பட்டு புரியாதவை புரிந்து, தெரியாதவை தெரிந்து, உண்மைச் சாட்சிய வாழ்வின் மையங்களாக வாழ வரம் வேண்டி அனைவருக்கும் இறையருள் கிடைக்கச் செபித்து தூய ஆவியானவரின் இப்பெருவிழாவை அர்த்தமான முறையில் கொண்டாடுவோம்.

அருட்பணி. ஜோசப் செல்வன் செ.தா.ச
அருள் ஆச்சிரமம், யாழ்ப்பாணம்.

## Cap STUDY IN UK


July September INTOKE

G.C.E. (O/L) மற்றும் G.C.E. (A/L)
உடன் கற்கை நெறிகளை தொடரலாம்.

- G.C.E. (O/L) சித்தியுடன் அடிப்படை ஆங்கில பாடநெறியினை தொடர்வதற்கு (IELTS) அவசியமில்லை. (Student Visitor Visa)
- U.K இல் உயர் கல்வியினைத் தொடர்வதற்கு அடிப்படைத் தகைமைகளுடன் IELTS எதிர்பார்க்கப்படும்.
- நீங்கள் விரும்பும் பாடநெறிகளை உரிய முறையில் தொடரலாம்.
- இலகு தவணைக்கட்டண முறையுடன் 100% விசா உத்தரவாதம்.
- அனுமதிகள், ஆவணங்கள் மற்றும் ஆலோசனைகள் உரிய முறையில் மேற்கொள்ளப்படும்.
- சகல ஆவணங்களும் அனுபவம் வாய்ந்த சட்டத்தரணிகளால் பெற்றுத்தரப்படும். அத்துடன் Sponser ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படும்.
- மற்றும் யூரோப் நாடுகளுக்கான விசா ஒழுங்குகளும் மேற்கொள்ளப்படும்.

**PS CONSULTING (PVT) LTD,**
STATION ROAD, KONDAVIL WEST, KONDAVIL,
JAFFNA. T.P. 0778328290, 0755766786

ROLLING SHUTTERS ROLLING GRILL SHUTTER
FOR SHOPS SHOP WIN DOWS, WAREHOUSE, GARAGES
ETC STRONG AND STURDY - SINCE 1987



யாழ்ப்பாணம் - ஜெய கிருஷ்ணா, 20, K.K.S.வீதி,
சுன்னாகம்
07777 22589, 021 2240221, 0777 310051

Colombo - Nafis Industries (Pvt) Ltd 38/7
old Kesbewa Road, Rattanapitiya, Boralasgamuwa

011 4807252, 2517552, 07777 21152

## மரண அறிவித்தல்



### சபாரத்தினம் கனகசபாபதி

வேலணை மேற்கைப் பிறப்பிடமாகவும் புளியங்கூடலை வசிப்பிடமாகவும் தற்போது கொட்டாஞ்சேனையில் வசித்தவருமான சபாரத்தினம் கனகசபாபதி நேற்றுமுன்தினம் (10.06.2011) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சபாரத்தினம் - சொர்ணம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் - செல்லக்கண்ணு தம்பதியரின் அன்பு மருமகனும் நாகேஸ்வரியின் அன்புக் கணவரும் பாலகுமார் (சுவிஸ்), வனஜா ஆகியோரின் பாசமிகு தந்தையும் வேணுகாவின் (சுவிஸ்) பாசமிகு மாமனும் இனிதா, தன்யா ஆகியோரின் பேரனும் காலஞ்சென்ற மகேஸ்வரி மற்றும் பரமேஸ்வரி, மாணிக்கவாசகர், மகாலட்சுமி (ஜேர்மனி), ராஜேஸ்வரி (சுவிஸ்), யோகேஸ்வரி, நல்லைநாதன் (சுவிஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்றவர்களான பாக்கியநாதன், பொன்னுத்துரை மற்றும் மகேஸ்வரி, தங்கராஜா (ஜேர்மனி), பஞ்சலிங்கம் (சுவிஸ்), குகனேசன், இந்திரலதா, திலகேஸ்வரி, வரதராஜா, அருமைநாயகம் (பிரான்ஸ்), சொர்ணகாந்தி, ராஜகுமார் (ஜேர்மனி), காலஞ்சென்ற செல்வகுமார் ஆகியோரின் அன்பு மைத்துனரும் கணபதிப்பிள்ளை, காந்தி, சியாமளா ஆகியோரின் சகலனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.06.2011) ஞாயிற்றுக்கிழமை பி.ப. 3 மணிக்கு பொரளை ஜெயரட்ண மலர்ச்சாலையில் நடைபெற்று பூதவுடல் கனத்தை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

S.M.K. ரேடர்ஸ்,
இல.40, பிரம்படி லேன், கொக்குவில்.

தகவல்: S.மாணிக்கவாசகர்
(சகோதரர்).

## தேவை

கொத்து/றொட்டி/சிற்றுண்டி தயாரிப்பவர் உடன்தேவை. (சம்பளம் பேசித்தீர்மானிக்கப்படும்.)
தொடர்புக்கு: 0774897925

## தேவை

பிரபல்யமான நிறுவனம் ஒன்றின் பொருள்களை யாழ். மாவட்டத்தில் விற்பனை செய்வதற்கு O/L, A/L படித்த அனுபவமுள்ள விற்பனைப் பிரதிநிதி (Sales Rep) ஆண்கள் தேவை.
தொடர்புகொள்ள வேண்டிய
தொலைபேசி இல. 0777590722

## ALTO MARUTI- LXI விற்பனைக்கு

WPKC XXXX தொடரிலக்கமுடைய ALTO MARUTI கார் விற்பனைக்குண்டு. (Caribean Blue)
தொடர்பு:-0777323156, 021 5105100
(தரகர் தேவையில்லை)


## கடைகள் வாடகைக்கு

புங்குடுதீவு, குறிகாட்டுவான் துறைமுகத்துக்கு அருகில் 11 அடி அகலமும் 33 அடி நீளமும் கொண்ட கடைகள் வாடகைக்கு உண்டு.
T.P: 0770556369

## விழிநீரில் ஈராண்டு

உருவில்
08
10
1976

நினைவில்
04
06
2009



### அமரர் பற்குணம் சதீஸ்குமார்

(தாதிய உத்தியோகத்தர்- யாழ். போதனா வைத்தியசாலை)
திதி- துவாதசி(12.06.2011)

உதித்தெழுந்த சூரியனே உடைந்தா வீழ்ந்தாய்?
ஒளிகொடுத்த விண்மதியே ஒடிந்தா சாய்ந்தாய்?
கிழம் ஒன்று வீழ்ந்ததென்றால் இயற்கை என்போம்
இளமொட்டு உதிர்வதென்றால் பொறுக்கலாமோ?
சதீஸ்குமாரா சரவிளக்கே சாவா உனக்கு?
தாதவனோ வழக்காடி எடுத்தோ போட்டான்?
உருண்டோடிக் காலங்கள் இரண்டும் போச்சு
உள்ளமிது பாவமடா காயம் ஆழம்.

118/4, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.

(1904)

கண்ணீர்க் கடலில்,
குடும்பத்தினர்.

STARTING PROFESSIONAL TRAINING FOR DRAFTSMEN & STUDENTS TO BECOME
MASTERING ARCHITECTURAL, MECHANICAL & ELECTRICAL DRAWINGS



*UTIT / 1 CAD
*UTIT / 2 CAD AD
*UTIT / 3 3DMAX

AutoCAD 2010

COURSE DETAILS
UTIT / 1 CAD
TOOLS & 2D DRAWINGS
UTIT / 2 CAD AD
2D DRAWINGI & 3D
UTIT / 3 3DMAX
TOOLS & 3D MODEL

REGISTER @ GATEWAY
UTHAYAN IT ISLAND - 349, KASTHURIYAR RD, JAFFNA. TP -021 567 5555

## கார் விற்பனைக்கு

Toyota vitz Unregistered Vitz KSP90
1000cc, Year 2007 Mileage 13,000Km
DVD Player Purple,
8 Air Bags Jaai Certificate
Rs.2,825,000 Million
தொடர்பு - 0772389584



## வீடு, காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம், சுண்டுக்குளி மகளிர் கல்லூரிக்கு அருகில் 6 அறைகள், குளியலறைகளுடன் 2 பரப்பில் அமைந்த ஒரு வீடும், அருகில் காட்டுக் கந்தோர் ஒழுங்கையில் 6 அறைகள், குளியலறைகளுடன் 3¼ பரப்பில் அமைந்த ஒரு வீடும், யாழ்ப்பாணம் பிறவுண் வீதியில் 3 பரப்பில் அமைந்த வீடும் (சகல வசதிகளுடன்), ஸ்ரான்லி கல்லூரிக்கு முன்பாக செல்லும் வீதியில் சுற்றுமதில், கிணற்றுடன் அமைந்த 3½ பரப்புக் காணியும் உடன் விற்பனைக்குண்டு.
தொடர்பு: T.P. No: 0778449687

## கார் விற்பனைக்கு

Toyota vitz Unregistered Vitz KSP90
1000cc, Year 2008 Mileage 1491Km
DVD Player Has Navi/Winker
Mirror Remote Key,
Purple, Certificate
Rs.2,875,000 Million
தொடர்பு - 0772389584



## வேலையாள் தேவை

உணவு பரிமாறுபவர் - கிச்சின் உதவியாளர் தேவை.
அமுதல் கிறீம் கவுஸ்,
452, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

## திருமண சேவை

உள்நாடு வெளிநாடு மணமக்கள் எம்மிடம் உண்டு.
தொடர்பு: ஈசன் திருமண சேவை, தெல்லிப்பழை வீதி, வட்டு. வடக்கு, வட்டுக்கோட்டை. T.P. 0773618507, 021 7900924
பக்ஸ்: 021 222 3734 மின்னஞ்சல்: esanthirumanaservai@gmail.com

## தங்குமிட வசதி

யாழ். நகர் பஸ் நிலையம் முன்பாக
தங்குமிட வசதியுடன் கூடிய றூம்
வாடகைக்கு விடப்படும்.
எமது தயாரிப்புகள்: பிறைற் றைஸ்,
கொத்துறொட்டி, காலை, மதிய இரவு
உணவுகளையும்
பெற்றுக்கொள்ளலாம்.
சண்ஜெயா உணவகம்,
இல. 414, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# பெரும் சமூக வினையாக மாறிவரும் குடாநாட்டின் ஆலயத் திருட்டுக்கள்

ஆலயம் தொழுவது சாலவும் நன்று என்பது ஆன்றோர் நல்வாக்கு. யாழ்ப்பாண மக்கள் கடவுள் வழிபாட்டிலும் சமயாசாரங்களிலும் கலாதி காலமாகப் பெரும் ஈடுபாடு கொண்டவர்கள். ஊர்கள் தோறும் தத்தம் இஷ்ட தெய்வங்களுக்குக் கோயில்கள் கட்டி வழிபாடு இயற்றி வருபவர்கள். ஆலயச் சொத்துக்களைத் தீண்டினால் பாவம் வந்து சேரும் என்ற நம்பிக்கையில் ஊறித் திளைத்தவர்கள்.

ஆனால், காலத்தின் கோலத்தால், ஒழுக்க நெறிகள் தடம்புரண்டு போகும் பேராபத்து எமது சமூகத்தைப் பீடித்து வருகிறது. அதன் விளைவாக ஆலயச் சொத்துக்களையே திருடும் பாழ்பட்ட நிலைக்கு நமது சமூகம் சென்று கொண்டிருக்கிறது.

யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள பல ஆலயங்களில் தெய்வ விக்கிரகங்கள் உட்பட, உண்டியற் பணம், ஆலயப் பொருள்கள், ஒலிபெருக்கி சாதனங்கள் திருடப்படும் சம்பவங்கள் நாளாந்தம் பல்கிப் பெருகுவதாகச் செய்திகள் வெளிவந்து கொண்டிருக்கின்றன. பெரிய ஆலயங்கள், சிறிய ஆலயங்கள் என்ற வேறுபாடின்றி, நாளுக்கு நாள் தெய்வ சந்நிதிகளில் திருட்டுக்கள் நடைபெறுகின்றன.

ஒரு காலத்தில் அடியார்களின் வசதி கருதி, பகல் வேளைகளில் பூசைகள், கிரியைகள் முடிவுற்ற பின்னரும், மணிக்கணக்காக கோயில் வாசல்கள் அகலத் திறந்திருக்கும். பூசை வேளைகளில் வரமுடியாது, கடவுளை வணங்க முடியாது தவறியவர்கள், ஆலயங்களுக்குச் சென்று தமது இஷ்ட தெய்வங்களை வழிபடுவதற்கு வசதியாக ஆலயங்களின் பிரதான வாசல் கதவுகள் நீண்ட நேரம் திறந்து வைக்கப்பட்டிருக்கும்.

ஆனால், இப்போது ஆலயப் பொருள்கள், இரவு நேரங்களில் மட்டுமன்றிப் பகல் வேளைகளிலும் திருடப்படும் அளவுக்கு குடாநாட்டில் ஒழுக்கம் கெட்டிருப்பதால் -

பூசை வழிபாடு முடிந்த ஒரு சில நிமிட நேரத்தில் ஆலயக் கதவுகளைப் பூட்ட வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டிருக்கிறது. வெட்கத்துக்குரிய, கூனிக் குறுகும் நிலைக்கு குடாநாட்டின் ஒழுக்கம், பண்பாடு ஆகியன அர்க் கெட்டுப் போய்விட்டதையே இது வெளிச்சம் போட்டுக் காட்டுகிறது!

பகல் வேளைகளிலேயே நிலைமை இவ்வாறாயின், சனசந்தடியற்ற, இருள் கவிந்த இரவு வேளைகளில் தெய்வ சந்நிதானங்களில் இடம் பெறும் திருட்டுக்களின் எண்ணிக்கை எந்தளவுக்கு அதிகமாக இருக்கும் என்று ஊகித்துக்கொள்ளலாம்.

இரவு வேளைகளில் ஆலயங்களின் பிரதான கதவுகளை உடைத்து உட்சென்று திருடர்கள் தமது கைவரிசையைக் காட்டுவதாகப் பொலிஸாரின் தகவல்கள் தெரிவிக்கின்றன. பல ஆலயங்களில் நடந்த திருட்டுச் சம்பவங்கள் தொடர்பில் சந்தேக நபர்கள் பலர் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் நிறுத்தப்பட்டிருப்பதாகவும் பொலிஸார் கூறுகின்றனர்.

பொலிஸாரும் ஆலயத் திருட்டுக்களைத் தடுக்கவும் அதில் ஈடுபடுபவர்களைச் சட்டத்தின் முன் நிறுத்தவும் நடவடிக்கை எடுத்து வருகிறார்கள். தெய்வக் குற்றத்தில் ஈடுபடும் திருடர்களை இனம் காணவும் அக்கறையுடன் செயற்படுகிறார்கள். பிரதேச செயலர்கள், கிராம அலுவலர்கள், கிராம மட்டப் பிரதிநிதிகள், ஆலய தர்மகர்த்தாக்கள் ஆகியோரைச் சந்தித்து ஆலயத் திருட்டுக்களைத் தடுப்பதற்கான வழிமுறைகளை அறிவுறுத்தி வருகின்றனர்.

ஆலயங்களில் இரவு நேரக் காவலாளிகளை நியமிப்பதன் மூலம் ஆலயங்களில் நடைபெறும் திருட்டுக்களைத் தடுக்க முடியும் என்று யாழ். குற்றத்தடுப்புப் பொலிஸ் அதிகாரி சி.ஐ. டியகெலினாவெல அறுவுறுத்தி இருக்கிறார்.

வாழ்க்கையில் ஏற்படும் தாக்கங்களால், பாதிப்புக்களால் மனம் நொந்து போகும் மக்கள், இரவு வேளைகளில் கூடிப் பஜனை நடத்தி தமது மனப் பாரங்களை நீக்கும் வழக்கம் எமது கிராமங்களில் முன்னர் நிலவியது.

பொலிஸ் அதிகாரி கூறும் அறிவுரையோடு அந்தந்தப் பகுதிகளில் உள்ள இந்து இளைஞர் மன்றங்கள் முந்திய நடைமுறையையும் கைக்கொள்ளலாம்.

தெய்வக்குற்றம் இழைப்பதால், அதில் ஈடுபடுவோர் மட்டுமன்றி அவர்களின் சந்ததியினரும் வாழ்க்கையில் அல்லற்படுவார்கள் என்று நம்பும் எம்மவர் மத்தியில், ஆலயங்களில் திருடும் ஒரு "புதிய சந்ததி" உருவெடுத்துள்ளது மக்கள் செய்த வினைப்பயன் என்று சமயதத்துவவாதிகள் கருதக்கூடும்.

கோயில் இல்லா ஊரில் குடியிருக்கவேண்டாம் என்ற பெருமொழியை சிரமேற்கொண்டு ஒழுகும் ஒரு சமூகத்தில், இத்தகைய புல்லுருவிகள் பெருகுவதற்கு முன்னதாகத் தடுப்பு நடவடிக்கைகளில் கூட்டு முயற்சியில் ஈடுபட வேண்டும்.

எங்கள் சமய நெறிகளையும் அவற்றின் விழுமியங்களையும் புரிந்து கொள்ள முடியாதவர்களுமே, ஆலயங்களில் திருடும் பாவச் செயல்களில் ஈடுபடுகிறார்கள் என்று மெத்தனப் போக்குடன் சமய, சமூகப் பெரியார்கள் மற்றும் நிறுவனங்கள் இருக்கலாது. இந்த விவகாரத்தினை பெரும் பொருட்டாகக் கருதி, அதில் உடன் கவனம் செலுத்தி ஒன்றுகூடி ஆராய்ந்து தடுப்பு நடவடிக்கைகளைக் கண்டறிய வேண்டும்.

ஆலயத் திருட்டுக்களை ஏனைய குற்றச்செயல்களின் மட்டத்தில் வைத்துக் கருதாது, இது ஒரு பெரும் சமூகவினை எனக் கருதி அதனைத் தடுக்க வேண்டும்.

மனிதனுக்குக் காவலும் பாதுகாப்பும் தெய்வமே என்ற நிலை மாறி, கடவுள் குடிகொண்டிருக்கும் கோயில்களுக்கு மக்கள் - பக்தர்கள் - பாதுகாப்பு அளிக்க வேண்டிய கலிகாலம் பிறந்திருப்பது மிகவும் ஆபத்து நிறைந்தது என்பதனை மனதிருத்திச் செயற்படவேண்டிய வேளை இது.

# யாழ். குடாநாட்டில் மீன்பிடித்துறை ரூ. 300 கோடி செலவில் அபிவிருத்தி

## அமைச்சர் ராஜித தெரிவிப்பு

கொழும்பு, ஜூன்12

யாழ். குடாநாட்டில் 300 கோடி ரூபா செலவில் மீன்பிடித்துறை அபிவிருத்தி செய்யப்படும். மயிலிட்டி உட்பட ஏழு மீன்பிடித் துறைமுகங்கள் அமைக்கப்படும். இரணைமடு குளமும் மீண்டும் மீன்பிடிக்க அனுமதிக்கப்படும் என கடற்றொழில் நீரியல் வளத்துறை அமைச்சர் டாக்டர் ராஜித சேனாறட்ன நாடாளுமன்றத்தில் தெரிவித்தார். மேற்படி திட்டத்துக்கு டென்மார்க் உட்பட பல நாடுகள் உதவிகளை வழங்க முன்வந்துள்ளன என தெரிவித்த அமைச்சர் இது தொடர்பான ஒப்பந்தம் ஒன்று அடுத்த மாதம் கைச் சாத்திடப்படவுள்ளதாகவும் குறிப்பிட்டார்.

யுத்தத்தின் பின் மீன்பிடித்துறை மேம்பாட்டுக்கு அரசு மேற்கொண்டுவரும் நட வடிக்கைகள் எவை என்பதை தெரிந்துகொள்ளும் வகையில் ஜே.வி.பி. உறுப்பினரான விக்டர் அந்தனி சபை ஒத்திவைப்பு வேளையில் முன் வைத்த பிரேரணைக்குப் பதில் அளிக்கும்போதே அமைச்சர் மேற்கண்ட விவரங்களைத் தெரிவித்தார்.

அமைச்சர் மேலும் கூறுகையில்:

நாட்டின் மீன்பிடித் தேவையில் 47 வீதத்தை வடக்கு, கிழக்கில் இருந்தே நாம் பெற்றுக் கொண்டோம். அந்த நிலையை மீண்டும் உருவாக்குவோம். இன்று மந்த போஷாக்கு ஒரு அச்சுறுத்தலாக இருக்கின்றது. தற்போது அன்றாட உணவில் 11 வீதமாக இருக்கும் மீன் பாவனையை 24 வீதமாக அதிகரிக்க திட்டம் வகுக்கப்பட்டுள்ளது. இதன்படி 2013 ஆம் ஆண்டளவில் மந்த போஷாக்கை இல்லாதொழிக்க முடியும். கிளிநொச்சி மாவட்டத்தில் இரணைமடுக் குளத்தில் மீன்பிடிக்கவும் நன்னீர் மீன் வளர்க் கவும் அனுமதி பெற்றுத் தருமாறு பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவிடம் கேட்டுள்ளேன். வெகு விரைவில் அந்தக்குளத்தில் மீன் பிடிக்க அந்தப் பிரதேச மக்களுக்கு அனுமதி வழங்கப்படும்.

வடக்கில் இந்திய மீனவர்கள் ட்ரோலர் படகுகளில் வந்து மீன்பிடிப்பது பெரும் பிரச்சினையாக உள்ளது.

இது சர்வதேச கடல் எல்லை நிர்ணயம் தொடர்பான விடயம் என்பதால் உரிய முறையில் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டு வருகின்றது. விரைவில் இந்தச் சிக்கலுக்கு முற்றுப் புள்ளி வைக்கப்படும்.

வடக்கில் பால்மீன் பிரசித்தி பெற்றது. இந்தவகை மீன் இனப்பெருக்கத்துக்கு மலேசிய நிறுவனங்களுடன் இணைந்து நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

அதேவேளை வடக்கு கிழக்கில் இறால் உற்பத்திக்கான வளங்கள் குறைவாகக் காணப்படுகின்றன. இதனை ஊக்குவிக்கும் வகையில் மட்டக்களப்பில் 2820 ஏக்கரும் திருகோணமலையில் 2220 ஏக்கர் காணியும் தரப்பட்டு அங்கு இறால் உற்பத்திகள் மேற்கொள்ளப்படும். இறுதி யுத்தத்தின் போது பிரபாகரன் கொல்லப்பட்ட நந்திக்கடல் பகுதியில் 1.4 மில்லியன் இறால் குஞ்சுகளை வழங்கி இறால் வளர்ப்பை ஊக்கப்படுத்தி உள்ளோம் - என்றார். (த-2)

# காலி முகத்திடலில் காணி விற்ற பணம் எங்கே? அரசிடம் ஐக்கிய தேசியக் கட்சி கேள்வி எழுப்புகிறது

கொழும்பு, ஜூன் 12

கொழும்பு, காலிமுகத்திடலுக்கு முன்னாலுள்ள 20 ஏக்கர் காணி வெளி நாட்டு முதலீட்டாளர்களுக்கு விற்கப்பட்டுவிட்டதாக அரசு தெரிவிக்கிறது. அந்தப் பணம் எந்தக் கணக்கில் வைப்பிலிடப்பட்டுள்ளது?

இப்படி ஐக்கிய தேசியக் கட்சி கேள்வி எழுப்புகின்றது. இந்தப் பணம் அரச கணக்கில் வைப்பிலிடப்பட்டுள்ளதா? திறைசேரி கணக்குக்கு வெளியே வெளியார் கணக்கொன்றில் வைப்பிலிடப்பட்டுள்ளதா? அல்லது எந்தவொரு அரச கணக்கில் வைப்பிலிடப் பட்டுள்ளது என்பதை எமக்கு அறிந்துகொள்ள முடியாமல் இருக்கிறது என ஐ.தே.கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி ஹர்ஷ டி சில்வா கேள்வி எழுப்பினார்.

ஐ.தே.கட்சியின் செய்தியாளர் மாநாடு நேற்று முன்தினம் காலை எதிர்க்கட்சித் தலைவரின் உத்தியோகபூர்வ அலுவலகத்தில் நடைபெற்றபோதே ஹர்ஷ டி சில்வா மேற்கண்டவாறு கேள்வி எழுப்பினார்.

அவர் தொடர்ந்து கூறியவை வருமாறு:-

அண்மைக்காலத்தில் சில கொடுக்கல் வாங்கல்களில் அரசு நடந்துகொள்ளும் முறையைப் பார்க்கும்போது அரச நிதி தொடர்பான நாடாளுமன்றத்தின் அதிகாரம் பறிக்கப்படும் சாத்தியமுள்ளது. காலிமுகத் திடலுக்கு முன்னாலுள்ள 20 ஏக்கர் காணி இரண்டாகப் பிரிக்கப்பட்டு ஷாங்கிலா சர்வதேச ஹோட்டல் நிறுவனத்துக்கும், கெட்டிக் எனப்படும் தாக்குதல் நடத்தும் விமானங்களை தயாரிக்கும் சீன கம்பனிக்கும் விற்கப்பட்டது எனத் தெரிய வருகிறது. இந்தச் சொத்து விற்பனை தொடர்பாக நாம் நாடாளுமன்றத்தில் எழுப்பிய கேள்விக்கு அமைச்சர் லக்ஷ்மன் யாப்பா அபேவர்த்தன அளித்த பதில் மூலம் இந்த விற்பனையில் கேள்விகோரல் முறை பின்பற்றப்படவில்லை என்பது தெளிவாகின்றது.

இதேபோல் வெளிநாட்டு முதலீட்டாளர் ஒருவர் எமது நாட்டின் காணியொன்றின் பெறுமதியை ஒரே முறையில் பணமாக செலுத்திய முதல் சந்தர்ப்பம் இதுவென எனது கேள்வியொன்றுக்குப் பதிலளிக்கும்போது அமைச்சர் தெரிவித்தார். இதன்படி இந்தக் காணி வெளிநாட்டு முதலீட்டாளருக்கு விற்பனை செய்யப்பட்டு அரசு பணம் பெற்றுக்கொண்டது தெளிவாகின்றது. அப்படியானால், இந்தப் பணம் எங்கே? இந்தக் காணியை அரசு வெளி நாட்டு முதலீட்டாளருக்கு எவ்வளவு பணத்துக்கு விற்றது? வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கு இந்தக் காணியை விற்பனை செய்தமை தொடர்பாக நாடாளுமன்றத்தில் தாம் எழுப்பும் கேள்விகளுக்கு அரசு பதிலளிக்காமலிருப்பதால் இந்தக் கொடுக்கல் வாங்கலின் உண்மைத் தன்மை மற்றும் அது தொடர்பான தகவல்கள் எதையும் நாட்டு மக்கள் அறிந்துகொள்ள வழியில்லை.

- இவ்வாறு அவர் தெரிவித்தார். (இ-01)

# சிறந்த கிராம சேவையாளர்களுக்கு ஹேமலதா ஞாபகார்த்த விருது

யாழ்ப்பாணம் ஜூன் 12

யாழ்.மாவட்டத்தில் சிறந்த கிராம அலுவலர்களுக்கான ஹேமலதா செல்வராஜா ஞாபகார்த்த விருது நாளைமறுதினம் செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு யாழ். செயலகத்தில் இடம்பெறவுள்ளது.

யாழ்.மாவட்ட அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் இதனை அறிவித்துள்ளார்.

நவாலி சென்.பீற்றர் விமானத்தாக்குதலில் சேவையின் போது உயிர்நீத்தவர் நவாலியூர் செல்வி.ஹேமலதா செல்வ ராஜா.

இவரது சேவையை நினைவு கூர்ந்து பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சு வருடா வருடம் ஹேமலதா ஞாபகார்த்த விருது வழங்கி வருகிறது. 2009 ஆம் ஆண்டு முதல் இவ்விருது வழங்கப்படுகிறது.

2010 ஆம் ஆண்டுக்கான விருது எதிர் வரும் 14 ஆம் திகதி யாழ்.செயலக மாநாட்டு மண்டபத்தில் வழங்கப்படும். யாழ். மாவட்டத்தில் 15 பிரதேச செயலாளர் பிரிவுகளில் இருந்தும் மிக வினைத்திறனாக சமூகத்துக்கு சேவையாற்றிய மூவர் விருதுக்காக தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

யாழ்.மாவட்டத்தில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற கிராம அதிகாரிகளின் விவரம் வருமாறு:-

- முதலாம் இடம் -இ.எ.மசனட்(உடுவில் பிரதேச செயலகம்)
- இரண்டாம் இடம் :- பா.லலித் (கரவெட்டி பிரதேச செயலகம்)
- மூன்றாம் இடம் :- கே.பூபாலசிங்கம் (தெல்லிப்பழை பிரதேச செயலகம்)(த-302)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மனதார வாழ்த்துகின்றோம்



தென்மராட்சி பிரதேசத்தை சேர்ந்தவரும் தற்போது யாழ். பல்கலைக்கழகத்தில் துணைவேந்தராகப் பதவியேற்ற முதல் பெண் என்ற வரலாற்றில் சாதனை செய்த முதுநிலை பேராசிரியர்

செல்வி

**வசந்தி அரசரட்ணம்**

அவர்களை உயர்வான சேவை உன்னதமாய் ஆற்றிடவே வணிகர்களின் சார்பாக உளம் மகிழ்ந்து வாழ்த்துகின்றோம்.

சாவகச்சேரி கைத்தொழில்
வணிகர் மன்றம்.

## ஹீரோ, கென்டன் காட்சியறை

HERO CYCLES
KENTON



சிறியோர் முதல் பெரியோர் வரையான அனைவரினதும் சொகுசான சைக்கிள் சவாரிக்கு Hero, மவுண்டன், BMX சைக்கிள்களை எமது காட்சியறையில் உத்தரவாதத்துடன் பெற்றுக் கொள்ளலாம்.

சிறுவர்களின் மின்சார மீள்நிரப்புக் (Recharchable) கார்களை மலிவு விலையில் எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம்.



ஒரிஜினல் ஹீரோ லேடீஸ் சைக்கிள்களும் ஆண்கள் சைக்கிள்களும் பெற்றுக்கொள்ளலாம்



ஹீரோ, கென்டன் விநியோகத்தர்கள்
ஸ்ரார் ரேடர்ஸ்
இல.258, 260, மானிப்பாய் வீதி,
ஐந்துசந்தி, யாழ்ப்பாணம்.
தொ.பே.: 021 4921672

## 3ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு:
10.08.1933



உதிர்வு:
16.05.2008

## திருமதி யோகம்மா அருளப்பு

(முன்னாள் வேம்படி மகளிர் கல்லூரி ஆசிரியர்)

திதி: துவாதசி 12.06.2011

கண்ணீரை எமக்களித்து விண்ணேகி விட்டீர்
காலமோ மூன்றாண்டு கரைந்ததுவே அம்மா
கடலலைகள் சில வேளை ஓய்ந்தாலும் உங்கள்
நினைவலைகள் எம்மனதில் ஓயாது தாயே!

91/14, இந்து மகளிர் வீதி,
கந்தர்மடம்.

குடும்பத்தினர்.

## லான்ட் மாஸ்ரர் மோதியதில் வயோதிபர் காயம்

யாழ்ப்பாணம்,ஜூன் 12

வேகக் கட்டுப்பாட்டை இழந்த லான்ட் மாஸ்டர் எதிரே வந்த வயோதிபரை மோதி வீழ்த்தி விட்டு முன்னால் இருந்த வீட்டு மதிலுடன் மோதி நின்றது.

இதனால் காலில் படுகாயமடைந்த வயோதிபர் சிகிச்சைக் கென உடனடியாக யாழ்.போதனா வைத்தியசாலையில் அனு மதிக்கப்பட்டார்.

இந்தச் சம்பவம் குருநகரில் நேற்றுமுன்தினம் இடம் பெற் றது. இந்தச் சம்பவத்தில் இதே இடத்தைச் சேர்ந்த நா.வீனஸ் (வயது-69) என்பவரே படுகாயமடைந்தார்.

சம்பவ இடத்துக்குச் சென்ற பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டனர்.(த-4)

## இன்றைய நாள் கும்பாபிஷேகம்

யாழ்ப்பாணம்,ஜூன்12

கொக்குவில் மஞ்சவனப்பதி முருகன் ஆலய மகாகும்பாபிஷேகம் இன்று காலை 7 மணிக்கு இடம்பெறும்.

கும்பாபிஷேகத் தைத் தொடர்ந்து 48 நாள்கள் மண்டலாபிஷேகம் இடம் பெறும். இறுதி நாள் சங்காபிஷேகம் நடைபெறும். (சிறப்பிதழ் D,E பக்கங்களில்) (ஐ)

* * *

நீர்வேலி அரசகேசரிப் பிள்ளையார் ஆலய புனருத்தாரன மகா கும்பாபிஷேகம் இன்று காலை 7.00 மணி தொடக்கம் 7.30 வரையுள்ள சுபவேளையில் நடைபெறவுள்ளது.

கும்பாபிஷேக நிகழ்வை முன்னிட்டு கிரியைகள் கடந்த புதன் கிழமை ஆரம்பமாகி நடைபெற்றன.

கும்பாபிஷேகத்தை தொடர்ந்து 45 நாள்கள் மண்டலாபிஷேகம் இடம் பெறும். (ஒ-72)

* * *

(சிறப்பிதழ் B,G பக்கங்களில்)

புலோலி மத்தி ஆத்தியடி பிள்ளையார் கோவில் புனரவர்த்தன மகா கும்பாபிஷேகம் இன்று அதிகாலை 5.53 மணி தொடக்கம் 6.32 மணி வரையுள்ள சுப வேளையில் நடைபெறுகின்றது.

கும்பாபிஷேகத்தைத் தொடர்ந்து 40 நாள்கள் மண்டலாபிஷேகம் இடம்பெறும் (சிறப்பிதழ் A பக்கத்தில்)

## கொடுப்பனவு

தெல்லிப்பழை, வித்தகபுரம் பகுதியில் காணிகளை துப்புரவு செய்வதற்கான கொடுப்பனவை இதுவரை பெற்றுக் கொள்ளாதவர்கள் நாளை திங்கட்கிழமை காலை 9 மணிக்கு கிராம சேவையாளர் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளுமாறு வித்தகபுரம் கிராம அபிவிருத்திச் சங்கம் கேட்டுள்ளது. (ஐ)

### German, Swiss மொழிகள்

German, Swiss மொழிகள் தமிழ் மொழி பெயர்ப்புடன் நடைபெறுகிறது.
தொடர்புக்கு: 10 Palaly road, Jaffna.
T.P. 0771604823

### வீட்டுடன்கூடிய காணி விற்பனைக்கு

இளவாலை மெய்கண்டான் வீதிக்கு அருகில் 4 பரப்புக்காணியுடன் கூடிய வீடு விற்பனைக்குண்டு.

தொடர்பு: 0773363473

## STUDY & WORK IN
## New zeland / Australia / Italy
## UK / Canada / Switzer land
### (Study + Work + PR(Permanant Residency)

✓ அரச மற்றும் Embassy சட்ட திட்டங்களுக்கு அமைவாக சிறந்த சட்டத்தரணிகளின் உதவியுடன் WORK PERMIT VISA/ TOURIST VISA / MIGRATION VISA செய்துதரப்படும்.

✓ **100% Visa Gurantee for Genune Students**

Courses :-
Business Management
- Computing
- Information Technology
- Hotel Management
- Beauty Culture

✓ **100% Accomodation and Part Time Work Gurantee**

- Intake in Progress Admissions From Reputed Colleges

**No Need IELTS**

Minimum Qualification :- O/L நிபந்தனைகளுக்குட்பட்டது

### Study MBBS/MD in UKRINE - East Europe

**Lugansk State Medical University**
SLMC Appoved
➡ **Admission in Progress**
UKRAINE
Entry Qualification : A/L 3 Passes (Biology,Chemistry,Physics)

### Study in INDIA (Bangalore,Tamilnadu)

Admissions From Reputed Colleges
- Engineering
- Medicine (MBBS)
- Business Management
- Computing Etc......

Note:-
Free Laptop
Free International Tour
✱ Condition Apply

● **Minimum Qualification A/L or Equivalent**

**SIBS College**
169 , George R De Silva Mawatha,
Kotahena , Colombo-13. Tel :- 011-2434767
Mobile :- 077 3 502 612

## தூரஇடங்களில் உள்ளவர்களுக்கு தொழில் வாய்ப்பு



ஏற்றுமதிக்காக கணனி இணைவான லேபல் செய்யும் இயந்திரம், ஓப்செட் அச்சு இயந்திரம் பழகி நிரந்தர வேலைகளுக்காக ஊழியர்கள் இணைத்துக்கொள்ளப்படுகின்றனர்.

வெளிப்பிரதேசங்களைச் சேர்ந்தவர்களுக்கு தங்குமிடம்,உணவு சமைத்துக்கொள்ள வசதிகள் உண்டு. பயிற்சியின்போது மேலதிகநேர கொடுப்பனவுடன் 12,000 - 15,000 வரை சம்பளம் பெறலாம்.தூர இடத்தில் இருந்து வருபவர்களுக்கு அன்றையு தினமோ அல்லது கலந்தாலோசித்து வேறு ஒருநாள் வருகை தரலாம் 10 நாட்களுக்குள் விண்ணப்பப்படிவத்தை அனுப்பிவைக்கவும்.

மனிதவள முகாமையாளர்
டாவின்சி டிஜிடல் இமேஜின் (தனி) நிறுவனம்,
இல.258,ஜோர்ஜ் ஆர் டி சில்வா மாவத்தை,
கொட்டாஞ்சேனை,கொழும்பு -13.
பெக்ஸ்: 0112 530838
ஈமெயில்: davpersonnel@davincilabels.com

## பணியாளர் தேவை

1. சகலவிதமான உடைகளும் சிறந்த முறையில் வெட்டித் தைக்கக் கூடியவர்.
2. மின்சாரத்தில் தைக்கக்கூடிய அனுபவம் வாய்ந்தவர்கள்.

கொடுப்பனவு நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.
ஆர்வம் உள்ளவர்கள் நேரில் தொடர்பு கொள்ள வாரநாள்களில் மு.ப 10.00 பி.ப-3.00 [illegible] வரை 25.06.2011 இற்கு முன்னர் தொடர்பு கொள்ளவும்.

நிர்வாகி:
கனகபுரம் வீதி, கிளிநொச்சி

## கோழிக்குஞ்சு விநியோகம்

35 நாளில் 2Kgவுக்கு மேல்
வளர்ச்சியடையக்கூடிய
**NO.1 BAHIRAHA** புறொயிலர் குஞ்சுகள்
15.06.2011 விநியோகிக்கப்படும்.

✱ **ராஜீவ்**, நவாலி வீதி, ஆனைக்கோட்டை.
✱ **துர்க்கா பாம்**, சுன்னாகம். (0779346599)
✱ **ஜெனிஸி பாம்**, பருத்தித்துறை. (0773541771)
✱ **P. ரவி**, தபாற்கந்தோர் வீதி, சாவகச்சேரி.
✱ **கோல்டன் பாம்**, கோயில் வீதி, யாழ்ப்பாணம்.

தொ.பே:- 0776090926.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டென்மார்க் அரசின் நிதி உதவியுடன் குருநகரில் கடற்றொழில் துறைமுகம்

## முதற்கட்டப் பணிகள் ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஜூன் 12

டென்மார்க் அரசின் நிதியுதவியுடன் குருநகரில் அமைக்கப்படவுள்ள கடற்றொழில் துறைமுகத்துக்கான ஆரம்பக் கட்டப் பணிகள் இடம்பெற்று வருகின்றன.

சகல வசதிகளையும் கொண்டதாக இந்தத் துறைமுகம் குருநகரில் அமைக்கப்படவுள்ளது.

டென்மார்க் அரசின் நிதியுதவியுடன் தற்போது அந்தத் துறைமுகம் அமையவுள்ள இடத்தில் கடலிலுள்ள பாறைகளின் தன்மை தொடர்பான ஆய்வுப்பணிகள் ஆரம்பமாகியுள்ளன.

யாழ்.மாவட்டத்தில் கடற்றொழிலுக்கு மயிலிட்டியில் இயற்கையான துறைமுகம் உள்ளது. அது உயர் பாதுகாப்பு வலயத்தினுள் அமைந்துள்ளமையால் அதனை மீனவர்கள் பயன்படுத்த முடியாத நிலை உள்ளது.

இந்த நிலையில் குருநகர் பகுதியில் அமைக்கப்படவுள்ள துறைமுகம் பலநாள் கடலில் தங்கித் தொழில் செய்யக் கூடிய படகுகள் உட்படக் கடற்கலங்களை நிறுத்தக் கூடியதாக அமையும். இது யாழ். மாவட்ட கடற்றொழிலாளர்களுக்கு மிகவும் பயனுள்ளதாக இருக்கும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

பருத்தித்துறை இன்பருட்டிப் பகுதியிலும் புதிதாகக் கடற்றொழில் துறைமுகம் ஒன்று அமைக்கப்படவுள்ளது. அத்துடன் சேதமடைந்துள்ள மயிலிட்டித் துறைமுகத்தைப் புனரமைப்புச் செய்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகக் கடற்றொழில் திணைக்கள வட்டாரங்கள் உதயனுக்குத் தெரிவித்தனர். (த-14)

# பருத்தித்துறை நகரப் பகுதியில் மதுபான நிலையத்துக்குத் தடை

வடமராட்சி ஜூன் 12

பருத்தித்துறை நகரில் புதிதாக மதுபான விற்பனை நிலையம் திறக்க அனுமதிக்கப்பட மாட்டாதெனப் பருத்தித்துறை பிரதேச ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.

நகரில் இரண்டாம் குறுக்குத்தெரு, மூன்றாம் குறுக்குத் தெரு, நான்காம் குறுக்குத் தெருப் பகுதிகளில் ஏதாவது ஓரிடத்தில் புதிதாக மதுபான விற்பனை நிலையம் ஒன்றைத் திறக்க அனுமதி கோரப்பட்டுள்ளது. இந்தக் கோரிக்கையை நகர மக்களின் வசதிகருதி நிராகரிக்க வேண்டுமெனப் பருத்தித்துறைப் பிரதேச செயலகத்தில் அண்மையில் இடம்பெற்ற இணைப்புக்குழுக் கூட்டத்தில் கலந்து கொண்ட பொது அமைப்பு ஒன்று கேட்டுக் கொண்டது. இதற்குப் பதிலளித்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, புதிதாக மதுபான விற்பனை நிலையம் எதுவும் திறக்க அனுமதிக்கப்படமாட்டாது என உறுதி அளித்தார். அதேவேளை கூட்டத்தில் கலந்து கொண்ட மதுவரித் திணைக்களத்தின் பிரதிநிதி புதிதாக மதுபான விற்பனை நிலையம் திறக்க அனுமதி கேட்டு மதுவரித்திணைக்களத்துக்கு விண்ணப்பம் ஒன்று கிடைத்த போதிலும் அவ் விண்ணப்பத்தை மதுவரித்திணைக்களம் நிராகரித்து விட்டதாகத் தெரிவித்தார். (த-236)

# சந்தைகளில் வியாபாரிகளின் விவரம் திரட்டும் படையினர்

சண்டிலிப்பாய்,ஜூன் 12

பொதுச் சந்தைகளில் வியாபாரம் செய்யும் வியாபாரிகளின் விவரங்களை அறிய முற்பட்டுள்ள பாதுகாப்புப் படையினர், சந்தைகளில் வரி அறவிடுபவர்களின் உதவியுடன் இவர்களின் விவரங்களைத் திரட்டிவருகின்றனர்.


பாதுகாப்புப் படையினரின் இந்தச் செயற்பாடு வியாபாரிகள் மத்தியில் பீதியையும், அச்சத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

நாட்டில் ஏற்பட்டுள்ள சமாதானச் சூழ்நிலையைத் தொடர்ந்து, மக்கள் நடமாட்டம் அதிகரித்துள்ளதுடன் பொதுச் சந்தைகளில் வியாபாரம் செய்பவர்களின் எண்ணிக்கையும் கணிசமான அளவு அதிகரித்துள்ளது. அதேநேரம் காலையிலிருந்து நண்பகல் வரை சந்தைகள் சுறுசுறுப்பாக இயங்குவதுடன் மக்கள் கூட்டமும் அதிகரித்துள்ளது. வலி. தென்மேற்குப் பிரதேசத்திலுள்ள பொதுச் சந்தைகளில் மானிப்பாய்ப் பட்டணத்தில் அமைந்திருக்கும் பொதுச்சந்தை முன்னணி வகிக்கிறது. இங்கு அதிகமான வியாபாரிகள் வியாபாரம் செய்து வருகிறார்கள். பொதுமக்களும் குவிந்த வண்ணம் இருக்கிறார்கள்.

இந்த நிலையில், மேற்படி சந்தையில் வியாபாரத்தில் ஈடுபடுபவர்களின் விவரங்களை அறிய முன்வந்துள்ள பாதுகாப்புப் படையினர், அங்கு வரி அறவிடுபவர்களின் உதவியுடன் வியாபாரிகளின் விவரங்களைத் திரட்டி வருகிறார்கள். வியாபாரிகளின் பெயர், அடையாள அட்டை இலக்கம் போன்ற விவரங்கள் திரட்டப்பட்டு வருகின்றன.

இந்தச் செயற்பாட்டினால் வியாபாரிகள் மத்தியில் ஒருவித அச்ச உணர்வு ஏற்பட் டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (த-135)

## உயிர்காக்கும்...



உன்னதபணி: நவாலி முருகானந்தா சனசமூக நிலையத்தில் மானிப்பாய் லயன்ஸ் கழகத்தின் அனுசரணையுடன் இரத்ததானம் வழங்கும் நிகழ்வு கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது. இதில் நிலையத்தைச்சேர்ந்த இளைஞர்களும் பெண்களும் இரத்ததானம் வழங்கினர்.

# உதவிப் பணம் பெறுவோரின் விவரம் மீளாய்வு

வலி.வடக்கு, ஜூன் 12

உடுவில் பிரதேச செயலகர் பிரிவில் சமூக சேவைகள் அமைச்சினால் மாதாந்த பொதுசன உதவிப்பணம் மற்றும் புற்றுநோய் உதவிப்பணம் பெறுபவர்களின் விவரங்களை மீளாய்வு செய்யும் நடவடிக்கைகள் சமூக சேவை அலுவலரால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்த மீளாய்வு நடவடிக்கை நாளை திங்கட்கிழமை காலை 8.30 மணிமுதல் பிற்பகல் 12.30 மணிவரை சுன்னாகம் மேற்கு ஜே/199 கிராம அலுவலர் பிரிவிலும் பிற்பகல் 1.00 மணியில் இருந்து மாலை 4.30 மணிவரை சுன்னாகம் மத்தி ஜே/198 கிராம அலுவலர் பிரிவிலும் நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (த-86)

# 'றூட் போர்மிட்' இல்லாத பஸ் உரிமையாளர்களுக்கு நீதிமன்றில் அபராதம்

யாழ்ப்பாணம், ஜூன் 12

பாதை அனுமதிப் பத்திரமின்றி (றூட் போர்மிட்) பயணிகளை ஏற்றிச்சென்ற யாழ்ப்பாணம்-கொழும்பு சேவையில் ஈடுபடும் தனியார் பஸ் உரிமையாளருக்கு யாழ்.நீதிமன்றம் 2 ஆயிரத்து ஐநூறு ரூபாவை அபராதமாக விதித்தது.

கடந்த மாதம் 21 ஆம் திகதி இவ்வாறு பாதை அனுமதிப் பத்திரமின்றி பயணிகளை ஏற்றிச் சென்ற வேளை யாழ்.பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கையின் போது இந்த பஸ் சிக்கியது. அதையடுத்து பொலிஸார் வழக்குத் தாக்கல் செய்திருந்தனர்.

இந்தவழக்குநேற்றுமுன் தினம் யாழ். நீதிமன்றில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது பிரஸ்தாப நபருக்கு 2 ஆயிரத்து 500 ரூபா அபராதம் விதித்து தீர்ப்பளிக்கப்பட்டது. (ஒ-4)

## வடமாகாணத்தில் கடமையாற்றும்

# 50 ஆண் ஆசிரியர்களுக்கு துறை சார்ந்த பயிற்சிகள்

யாழ்ப்பாணம், ஜூன் 12

வடமாகாணத்திலுள்ள சகல கல்வி வலயங்களையும் சேர்ந்த பாடசாலைகளில் கடமையாற்றும் ஆண் ஆசிரியர்களில் துறைசார் திறமையுடைய 50 ஆசிரியர்கள் தெரிவு செய்யப்பட்டுஅவர்களுக்குக் குறித்த துறை சார்பான மேலதிக பயிற்சிகள் வழங்கப்படவுள்ளன.

எனவே துறைசார் ஆண் ஆசிரியர்கள் தத்தமது வலயங்களினூடாகத் தமது விண்ணப்பப் படிவங்களை இரண்டு வார காலத்தினுள் வடமாகாணக் கல்வித் திணைக்களத்துக்கு அனுப்பி வைக்குமாறு வடமாகாணக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் அறிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர்மேலும் தெரிவித்தவை வருமாறு:

ஒவ்வொரு பாடத்துறையிலும் திறமையானவர்கள் தெரிவு செய்யப்பட்டு ஒரு குழுவாக அமைக்கப்படவுள்ளனர். அவர்களுக்குத் துறை சார் மேலதிக பயிற்சிகள் வழங்கப்படவுள்ளன. அவர்கள் சிறந்த உடல்உள ஆரோக்கியம் உடையவர்களாக இருத்தல் வேண்டும். துறைசார் ரீதியாக உள்நாட்டிலோ வெளிநாட்டிலோ புலமைப்பரிசில் கிடைக்கும் பட்சத்தில் அதனைப் பயன்படுத்தக்கூடியவராக இருத்தல் வேண்டும்.

இவர்களுக்குச் சிறந்த பயிற்சிகளை வழங்கி இவர்கள் மூலம் மாணவர்களுக்குப் பயிற்சிகளை வழங்குவதற்காகவே இந்த ஒழுங்குகள் மேற்கொள்ளப்படுகின்றன. இதற்கென முதற்கட்டமாக 50 ஆண் ஆசிரியர்கள் தெரிவு செய்யப்படவுள்ளனர்.

வடமாகாணத்திலுள்ள பன்னிரண்டு கல்வி வலயங்களையும் சேர்ந்த ஆசிரியர்களில் தகுதியானவர்கள், ஆர்வம் உடையவர்கள் அடுத்த இரண்டு வாரகாலப் பகுதியினுள் தமது விண்ணப்பங்களை தத்தமது வலயங்களினூடாக அனுப்பி வைக்கவேண்டும் - என்றார். (த-4)

# கிராமியக் கடற்றொழில் அமைப்புக்கள் யாழ்ப்பாணத்தில்

## அமைச்சர் ராஜித பணிப்புரை

யாழ்ப்பாணம், ஜூன் 12

யாழ்.மாவட்டத்தில் கிராமியக் கடற்றொழில் அமைப்புக்கள் புதிதாக உருவாக்கப்பட்டுள்ளன.

கடற்றொழில் அமைச்சர் ராஜித சேனரத்னவின் பணிப்புரைக்கு அமைய நாடு முழுவதும் இந்தக் கிராமியக் கடற்றொழில் அமைப்புக்கள் ஏற்படுத்தப்பட்டு வருகின்றன.

இதன் அடிப்படையிலேயே யாழ். மாவட்டத்திலும் கிராமியக் கடற்றொழில் அமைப்புக்கள் உருவாக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

யாழ்ப்பாணத்தில் 61 கிராமியக் கடற்றொழில் அமைப்புகள் புதிதாக உருவாக்கப்பட்டுள்ளன.

இந்த அமைப்புக்கள் அனைத்தும் யாழ்.மாவட்ட கடற்றொழில் நீரியல் வளத்திணைக்களத்தின் கீழ் பதிவு செய்யப்பட வேண்டும் எனவும், அதற்கான நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் திணைக்களப் பிரதி உதவிப் பணிப்பாளர் ஆர்.ரவீந்திரன் தெரிவித்தார்.

யாழ்.மாவட்டத்திலுள்ள கடற்றொழில் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசங்களை அடிப்படையாகக் கொண்டே இந்த அமைப்புக்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

இந்த அமைப்புக்களின் அங்கத்தவர்களாக இருப்பதன் மூலம் கடற்றொழிலாளர்கள் பல்வேறு நன்மைகளைப் பெற முடியும் எனப் பிரதி உதவிப் பணிப்பாளர் தெரிவித்தார்.

திணைக்களத்தின் சிபார்சுடன் வங்கிகள் ஊடாக வழங்கப்படும் குறைந்த வட்டிவீதக் கடன்கள், ஓய்வூதியத் திட்டங்கள் மீனவர்களுக்கான காப்புறுதித் திட்டங்கள் ஆகியவை இந்த அமைப்புக்களின் ஊடாகவே அங்கத்தவர்களுக்கே வழங்கப்படவுள்ளன என்றும் அவர் தெரிவித்தார். (த-14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி

யாழ்.போதனா வைத்தியசாலையில் தாதிய உத்தியோகத்தராக கடமை புரியும் திருமதி கமலாதேவி ஜெனரட்ணசிங்கம் அவர்களின் அன்புக் கணவர் கணேசையா ஜெனரட்ணசிங்கம் அவர்கள் காலமானதை யிட்டு துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதா பத்தைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம்வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

தாதிய உத்தியோகத்தர் நலன்புரி கூட்டுறவுச் சங்கம்.



வடகோவை- இலுப்பையடி
## வீரகத்தி விநாயகர் ஆலயம்
## அலங்கார உற்சவ விஞ்ஞாபனம்-2011
உற்சவகால நிகழ்வுகள்

12.06.2011- 23.06.2011 வரை தொடர்ந்து நடைபெறும். 21.06.2011 செவ்வாய்க்கிழமை சஹஸ்ர சங்கா பிஷேகமும் மாலை மணவாளக்கோல உற்சவமும் இடம்பெற்று சுவாமி வீதி உலாவரும் காட்சியும் இடம்பெறும்.

விளம்பர அனுசரணை:
**அஜந்தாஸ் ரெக்ஸ்ரைல்**
66, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

# மரண அறிவித்தல்

## திருமதி சின்னப்பொடி செல்லம்மா



உடுவில், புதுமடத்தைப் பிறப்பிடமாகவும் கொக்குவில் மேற்கு, பிடாரி கோயிலடியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சின்னப்பொடி செல்லம்மா கடந்த (10.06.2011) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கணபதி - பாக்கியம் தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான கந்தன் - தெய்வானை தம்பதியரின் அன்பு மருமகளும் கந்தசாமி, திரவியம், பத்மநாதன், தேவி அம்பிகாபதி (பிரான்ஸ்), பாலசிங்கம், பரராசசிங்கம் (பிரான்ஸ்), சந்திரராணி (இத்தாலி), சந்திரராணி (கொக்குவில்), தவராணி (அமெரிக்கா), காலஞ்சென்ற கண்ணுத்துரை ஆகியோரின் பாசமிகு தாயும் தம்பிராசா, காலஞ்சென்ற இராசம்மா மற்றும் யோகம்மா, இராசாத்தி, காலஞ்சென்ற இரசமணி மற்றும் பூமணி, கண்மணி, சின்னம்மா ஆகியோரின் சகோதரியும் செல்லம்மா, தவமணி, மகாலிங்கம் (பிரான்ஸ்), ரீட்டா, சாந்தினி(பிரான்ஸ்), பரராசசிங்கம் (இத்தாலி), அர்ச்சுனராசா, காலஞ்சென்றவர்களான கேதீஸ்வரன், தங்கராசா, சிங்கரத்தினம் ஆகியோரின் மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (13.06.2011) திங்கட்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் நண்பகல் 12 மணியளவில் தாவடி இந்து மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*தகவல்:*
மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளை.

*பிடாரி கோயிலடி,*
*கொக்குவில் மேற்கு.* (1876)

# காணி விற்பனைக்கு

மல்லாகம் நீதிமன்றத்துக்கு முன்பாக உள்ள 3 பரப்புப்காணி கிணற்றுடன் விற்பனைக்கு உண்டு.
தொடர்பு: 078 7524839, 021 4917146

# அம்மி, ஆட்டுக்கல் செய்து கொடுக்கப்படும்

அம்மி, ஆட்டுக்கல், கல்லுரல் என்பன ஓடருக்கு செய்து கொடுக்கப்படும். (வீட்டுக்கு இலவசமாக ஏற்றித் தரப்படும்)
தொடர்பு: 0776934120, 0213201176

# மணமகன் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பம், 1981 இல் பிறந்த, 8இல் செவ்வாய், 80 கிரக பாவம் உடைய MBBS டாக்டர் பெண்ணுக்குத் தகுந்த மணமகன் தேவை.
தொடர்பு: தொ.பே.0779015767

# இறைச்சிக் கோழி விற்பனை

உள்ளூரில் உற்பத்தி செய்யப்பட்ட புறொயிலர், கல்பேட் தினமும் சுத்தம் செய்து காலை 6மணி தொடக்கம் இரவு 8மணி வரை பெற்றுக் கொள்ளலாம்.
**நல்லூர் பாம் சென்ரர்,**
19, முருகேசர் லேன், நல்லூர்.

# வீடு விற்பனைக்கு

நல்லூர், செட்டித்தெருவுக்கு அண்மையில் 639/4, நாவலர் வீதி என்னும் முகவரியிலுள்ள 2 ¾ பரப்புக் காணியில் அமைந்துள்ள வீடு விற்பனைக்குண்டு. சுற்றுமதிலுடன் கூடியது.
தரகர் தேவையில்லை. தொடர்பு கொள்ளவேண்டிய
தொலைபேசி இலக்கம்:- 0772267191.

# செயலாளர் தேவை

**கட்டுரைகள், கவிதைகள் மற்றும் தமிழ் இலக்கியத்தில் மிகவும் திறமையுள்ள செயலாளர் ஒருவர் தேவை**
**தொடர்பு: 071 9364237**
(1842)

# மாடி வீடு விற்பனைக்கு

யாழ். மநாகரசபை எல்லைக்குட்பட்டதும் சுண்டுக்குளி வீதியில், சென். ஆன்ஸ் ஒழுங்கையில் 6 பரப்புக் காணியில் அமைந்த மாடி வீடு விற்பனைக் குண்டு. இக்காணியில் 40' நீளம், 21' அகலம் கொண்ட பெரிய மண்டபமும் (களஞ்சியசாலைக்கு ஏற்றது) இரண்டு நன்னீர்க் கிணறுகளும் அமைந்துள்ளன. அரச சார்பற்ற நிறுவனங்களுக்கும் வர்த்தக நிறுவன்ங்களுக்கும் ஏற்றது. பார்வையிடும் நேரம் ஞாயிறு 11.00- 3.00 மணி வரை.
தொடர்பு-0213212850, 0776145305, 0773614283

# ஆறுதல் நிறுவன அறிவியல் பயணம்

ஆறுதல் நிறுவனத்தினால் மாதந்தோறும் அறிவியல் பயணம் நிகழ்வுகள் இடம்பெற்றுவருகின்றன. இதனடிப்படையில் இந்த மாத அறிவியல் பயணத்தில் எதிர்வரும் 15 ஆம் திகதி புதன் கிழமை பிற்பகல் 3 மணிக்கு யாழ். இந்துக் கல்லூரியின் குமார சாமி மண்டபத்தில் நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன.

இந்த நிகழ்வில் யாழ். போதனா வைத்திய சாலையின் சட்ட வைத்திய அதிகாரி டாக்டர் எஸ்.சிவரூபன் "சூழலும் சவால்களும்" எனும் தலைப்பில் கருத்துரைகளை வழங்கவுள்ளார். (த-313)


# எட்குரோ

GREAVES
SINCE 1859

மின்சார நீர் இறைக்கும் இயந்திரம்

Mk12 SP & NSP
Engine Driven Pumps



கமத்தொழிலுக்கும்,
கட்டிடநிர்மாணத்துறைக்கும்
ஏற்ற உற்ற நண்பன்!

→ஒரு வருட கால உத்தரவாதம்.
→தன்னிச்சையான, தன்னிசையற்ற நீர் நிரப்பல்.
→உதிரிப்பாகங்கள் இலகுவாக பெறலாம்.
→நாடு முழுதும் அங்கிகரிக்கப்பட்ட விற்பனைக்கு பிந்திய சேவை.

EDNA GROUP
எட்னா என்ஜினிரிங் (பிரை) லிமிட்டட்
257, கிராண்பாஸ் வீதி, கொழும்பு-14.
தொலைபேசி: 2498200 பெக்ஸ்: 2472628 E-mail: agro@edna.lk



# STUDY MEDICINE
MD / MBBS

**லண்டன் A/L**
எடுத்த மாணவர்கள் ஒருவருடத்தை வீணாக்காமல் 2011ஆம் ஆண்டிலேயே உங்கள் கல்வியைத் தொடர யூலைமாதம் 18ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பங்களைச் சமர்ப்பித்த அடுத்த நாளே பயணத்தை ஆரம்பிக்கலாம்.

மருத்துவ மாணவர்கள் தங்களது கல்விக்குரிய சந்தர்ப்பத்தைப் பயன்படுத்த எதிர்காலத்தை வளமூட்டலில் 15வருடகால அனுபவத்தைக் கொண்ட மிகவும் நம்பிக்கையுடைய பங்காளியுடன் வந்து இணைந்து கொள்ளுங்கள்.மாகாண மட்டத்திலும் பாடசாலை ரீதியாகவும், பட்டம் பெற்ற, படித்துக்கொண்டிருக்கின்ற மாணவர்களின் விபரங்களை அறிந்து கொள்ள தொடர்பு கொள்ளுங்கள்.

பணிப்பாளர் (உலகளாவிய மருத்துவ மாணவர்களின் அனுமதிக்கு 0773017883.

LEADER IN MEDICAL EDUCATION
PATHE ACADEMY
The People's Academy...
PEOPLE'S ACADEMY FOR TERTIARY AND HIGHER EDUCATION
Overseas Student Placement Department.
*Conditions apply
111- 1/2, Maya Avenue, Kirulapone, Colombo- 06 Tel :0773 017 883, 011-2502012 www.patheacademy.org



SINCE 1978

வெள்ளவத்தை நித்தியகல்யாணி ஜுவலறி

# VACANCY

## Graphic Designer

- Ms Office
- Adobe Photoshop CS3
- Coreldraw 12
- Illustrator
- Tamil Typing
- முன் அனுபவம் வாய்ந்தவராக இருத்தல் வேண்டும்.

## Trainee Jewellery Designer

- இத்துறை சார்ந்த கற்கை நெறி பயின்றிருத்தல் அவசியமாகும்.
- சம்பளம் பேசித்தீர்மானிக்கப்படும்.
- உங்கள் விண்ணப்பத்தை ஈ.மெயில் அல்லது கீழ் காணும் முகவரிக்கு 7 நாள்களுக்குள் அனுப்பி வைக்கவும்.

முகாமையாளர்,
வெள்ளவத்தை நித்தியகல்யாணி ஜுவலறி
541, காலி வீதி, கொழும்பு 06.
தொலைபேசி 0112 363392
ஈ.மெயில் nithkal@slt.lk



முன் ஒருபோதும் இல்லாத வகையில் முதலாவது
உல்லாசப் பயணிகள் படகு சேவை இலங்கையிலிருந்து இந்தியாவுக்கு

# ஸ்கோட்டியா பிரின்ஸ்

*ஒருகனவு நனவாகின்றது...!*


இந்தப் படகுச் சேவையைப் பயன்படுத்தி மகிழ்வதற்குக் காத்திருந்தவர்களுக்கு

★ பயண ஆரம்பம்: 2011.06.13 பி.ப 6.00 மணி
தூத்துக்குடியிலிருந்து - கொழும்புக்கு (திங்கள்-வெள்ளி) கட்டணம் 5, 363/-
★ பயண ஆரம்பம்: 2011.06.17 பி.ப.6.00 மணி
கொழும்பிலிருந்து தூத்துக்குடிக்கு (புதன் - ஞாயிறு) கட்டணம் 6600/-
இருவழிக் கட்டணம் - 11 963/-

*(12 மணிநேர பயணம் வரவேற்பு பானம் மற்றும் இரவு உணவு வழங்கப்படும்)*

ஒவ்வொரு கிழமையும் இரண்டு இருவழிப் பயணங்கள்

***நிபந்தனைகள்:-***
- சிக்கன கபின் பிரயாணிகளின் அதிகபட்ச பொதி நிறை 100கிலோ
- முதல்வகுப்பு மற்றும் டிலக்ஸ் (Deluxe) பிரயாணிகளின் அதிகபட்ச பொதியின் நிறை 200 கிலோ



***கட்டணச் சலுகைகள்:-***
- குழந்தைகள் (2வயதுவரை) வகுப்புக் கட்டணத்தின் 10%மும் வரிகளும்
- சிறுவர்கள் (2முதல் 12வயதுவரை) வகுப்புக்கட்டணத்தின் 50% மும் வரிகளும்
- முதியவர்கள் (60வயதின்மேல்) வகுப்புக் கட்டணத்தின் 60%மும் வரிகளும்
- கவர்ச்சியான கட்டணங்கள்.



மேலதிக விபரங்களுக்கு:-

FOR FURTHER DETAILS PLEASE CONTACT
ARUGAMBAY TRAVELS & TOURS (PVT) LTD
(APPROVED BY SRI LANKA TOURISM)
No. 20, Deal Place, Colombo 03.
E-mail: info@arugmabaytravels.net
Hotline: 0771978000/0777876461

தயவுசெய்து முன்கூட்டியே பதிவுசெய்து
உங்கள் பயணச் சீட்டுக்களைப் பெற்றுக்கொள்ளுங்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வற்றாப்பளையில் கண்ணகிக்குப் பெருவிழா!

வன்னிப் பிரதேசத்தில் கண்ணகி அம்மனுக்கு பல வழிபாட்டுத் தலங்கள் உள்ளன.

முள்ளியவளை, வற்றாப்பளை, சிலாவத்தை கற்கிடங்கு, பனையாண்டான், அரியாமடு, கொக்குளாய், குமுழமுனை முதலிய வன்னிக் கிராமங்கள் பலவற்றிலும் அம்மனுக்குரிய வழிபாட்டிடங்கள் அமைந்திருப்பதைக் காணலாம்: ஆண்டுதோறும் வைகாசித் திங்களிலே இங்கெல்லாம் கண்ணகி அம்மனுக்குச் சிறப்பாகப் பொங்கல்விழா நடைபெறுகின்றது.

முள்ளியவளையிலும், வற்றாப்பளையிலும் நடைபெறுகின்ற பொங்கல் வழிபாடுகள் ஏனைய இடங் களில் இல்லாத பல சிறப்புக்களைக் கொண்டு விளங்குகின்றன. முள்ளியவளையிலே கண்ணகி அம்மனுக்குக் கடல்நீரில் விழக்கேற்றி ஒரு வார காலமாக நடைபெறுகின்ற சிறப்பான வழிபாட்டு மரபுகளை இலங்கையின் வேறு எப்பகுதியிலுமே காணமுடிவதில்லை. முள்ளியவளையில் இரண்டு வாரங்களாக நடைபெறுகின்ற விழாவின் இறுதிநாள் நிகழ்வு வற்றாப்பளையில் நடைபெறுகிறது. வன்னிப் பிரதேசத்தவர்கள் அனைவரையும் ஒன்று கூட்டி பிரதேசப் பெருவிழாவாகவே நடைபெறும் இவ்விழாவுக்கு இலங்கையின் பல பாகங்களிலிருந்தும் பெருந்தொகையான மக்கள் ஆண்டுதோறும் வந்து கூடுவர். சித்திரை முடிந்து சோழகக்காற்று வீச ஆரம்பிக்க வன்னிப் பிரதேச மக்கள் பொங்கல் வந்துவிட்டது என்ற புத்துணர்ச்சியோடும் புதுப்பொலிவோடும் தம்மைத் தயார்ப்படுத்திக்கொள்வார்கள். வீடுகள் புதிய ஓலையால் வேயப்பட்டு, வேலிகள் செப்பனிடப்பட்டு, வீட்டுத் திண்ணைகள் அழகாகப் பசிய சாரிட்டு மெழுகப்பட்டு, சுவர்கள் வெள்ளை, சிவப்பு மண்ணால் மெழுகப்பட்டு அழகுபடுத்தப்பட்டு, கிணறுகள் இறைக்கப்பட்டுத் துப்புரவு செய்யப்படும். இதனால் வன்னிப்பிரதேசம் புதுப்பொலிவு பெறும். வற்றாப்பளையில் நடைபெறுகின்ற பொங்கல் விழாவுக்கு முள்ளியவளை காட்டா விநாயகர் ஆலயம் முதன்மைப்படுத்தப்படுகிறது. முள்ளியவளையில் இருந்து 6 மைல் தொலைவிலுள்ள சிலாவத்தைக் கடலில் இருந்து உப்பு நீர் எடுத்து வந்து முள்ளியவளை காட்டா விநாயகர் ஆலயத்தின் கண்ணகை அம்மனுக்கு முதல் வாரம் முழுவதும் கடல் நீரிலேயே விளக்கெரியும் அதிசயம் நடைபெறுகிறது. வைகாசித் திங்கள் இரண்டு வாரங்களாக நடைபெறுகிற பொங்கல் நிகழ்ச்சிகள் முதல் இரண்டு வாரங்களும் முள்ளியவளை காட்டா விநாயகர் ஆலயத்தில் வெகு சிறப்பாக நடைபெறுகின்றன. வைகாசித் திங்களில் விசாக நட்சத்திரம் கூடிய பூரணையில் வருகின்ற வாரத்தில் திங்கட்கிழமை வற்றாப்பளையில் இறுதியாக ஒருநாள் நிகழ்ச்சி நடைபெறுகிறது. பொங்கல் விழாவில் இது மூன்றாவது திங்கட்கிழமையாக அமைகிறது.

**வே.ம.இந்திரநாதன்**

பொங்கல் விழாவின் ஆரம்ப நிகழ்ச்சி முதலாவது திங்கட்கிழமை முள்ளியவளையில் இடம்பெறுகின்ற பாக்குத் தெண்டலுடன் ஆரம்பமாகின்றது. பொங்கல் கடமைகளைச் செய்வதற்காகத் தெரிவு செய்யப்பட்ட ஒருவர் அதிகாலையில் புறப்பட்டு முள்ளியவளை புதுக்குடியிருப்பு, கேப்பாபுலவு, வற்றாப்பளை, கணுக்கேணி, குமுழமுனை, சிலாவத்தை ஆகிய ஏழு கிராமங்களில் இருந்தும் பூசைக்குரிய மங்கலப் பொருள்களைச் சேகரித்து வருவார்கள். இவ்வாறு சேகரிக்கப்பட்ட பொருள்களை மஞ்சள் துணியிலே கட்டிக் கோயிலில் உள்ள வேப்பமரம் ஒன்றிலே தொங்க விடுவார்கள். இந்த நிகழ்ச்சியே பாக்குத் தெண்டல் எனப்படும். இரண்டாவது திங்கட்கிழமை மாலை வேளையில் முள்ளியவளையிலிருந்து சுமார் ஏழு மைல் தொலைவிலுள்ள கடற்கரைக் கிராமமான சிலாவத்தை தீர்த்தக் கரைக்குச் சென்று கடல்நீரை அள்ளி வருவதே தீர்த்தமெடுத்தல் நிகழ்ச்சியாகும். இரவுவேளை தீப்பந்தங்களின் வெளிச்சத்துடன் பறைமேளங்கள் முழங்க கண்ணகியின் புனித தீர்த்தம் ஊர்வலமாக எடுத்து வரப்படும்போது வழியெங்கும் மக்கள் நிறைகுடங்கள் வைத்து அதனை வரவேற்று வழிபடுவார்கள்.

புனித தீர்த்தம் எடுத்து வரப்படும் அன்றைய தினமே வற்றாப்பளையிலிருந்து கண்ணகை அம்மனின் உருவம் எடுத்துவரப்பட்டு அம்மனின் மண்டபத்தில் வைக்கப்படும்

இவ்வாறு கொண்டு வரப்பட்ட புனித தீர்த்தம் காட்டா விநாயகர் கோயிலிலுள்ள அம்மனுக்குரிய மண்டபத்தில் வைக்கப்படும்.

இதனைத் தொடர்ந்து புனித தீர்த்தத்தில் கண்ணகிக்கு விளக்கேற்றி விசேட வழிபாடுகள் நடைபெறும். சடங்காசாரங்களுடன் நடைபெறுகின்ற தூலி பிடித்தல், கச்சு நேர்தல், வளர்ந்து நேர்தல் முதலிய வழிபாட்டு முறைகளை பெருந்தொகையான மக்கள் கூடி நின்று பக்தி பூர்வமாகக் கண்டு களிப்பதை காணலாம்.

தீர்த்தமெடுத்த நாளிலிருந்து பொங்கல் முடிந்து பத்தஞானி பொங்கல் முடியும் வரை இப்பகுதி மக்கள் காட்டுக்குப் போவதில்லை, மரணச்சடங்குகளுக்கு மேளம் அடிப்பதில்லை, உரலில் உலக்கை போட்டு இடிப்பதில்லை, வெளியூர்களுக்குப் போவதில்லை. இது இப்பகுதி மக்களுக்கு ஒரு கட்டுப்பாடாக இருந்தது. இதை மீறுவோருக்கு குற்றங்கள் வந்துவிடும் என்ற ஒரு பயவுணர்வு இருந்து வருகின்றது. இத்தகைய சடங்கு ரீதியான வழிபாட்டு முறைகளைத் தொடர்ந்து ஞாயிற்றுக்கிழமை இரவு பொங்கல் நிகழ்ச்சி நடைபெறும். காலை முதல் இரவிரவாக அடியார்கள் காவடி, கரகம், பாற்செம்பு என்பன சுமந்து ஆடியும் பாடியும் தமது நேர்த்திக் கடன்களை நிறைவேற்றிக் கொள்ளும் ஊர்ப் பெருவிழாவாகவே பொங்கல் நிகழ்சி நடைபெறும். இதுவே முள்ளியவளையில் நடைபெறுகின்ற இறுதி நிகழ்ச்சி ஆகும்.

முள்ளியவளையில் இருந்து மீண்டும் கண்ணகி அம்மனின் உருவத்தினையும் வேறு பூசைப் பொருள்களையும் எடுத்துக்கொண்டு வற்றாப்பளைக்குச் செல்லும் பூசைக் குழுவினர் இறுதிப் பொங்கல் நிகழ்ச்சியை நடத்துவார்கள். வற்றாப்பளையில் நந்திக் கடற்கரையில் பெருமரங்கள் சூழ்ந்த சோலை வெளியில் கண்ணகியின் ஊர் விழாவைக்காண இலங்கையில் பல்வேறு பாகங்களில் இருந்தும் பெருந்தொகையான மக்கள் வந்து கூடுவார்கள்.

இவ்வாறாக அம்மன் இங்கு பத்தாவது இடமாக வந்து குடியேறியதாக ஐதீகம்.

அம்மன் பத்தாவது இடமாக இங்கு வந்து எழுந்தருளியதால் இவ்விடத்தை பத்தாப்பளை என அழைக்கலாயினர். காலப்போக்கில் இது மருகி வற்றாப்பளையாக மாறியது என்பது வரலாறு.

# எனது 40 வருடகால சேவை மனமகிழ்வைத் தருகிறது

**40** வருட காலமாக கல்விச் சேவையில் கடந்த மூன்றரை வருடங்களாக யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளராக இருந்து தனது 60ஆவது வயதில் கடந்த இரண்டாம் திகதி கல்விச் சேவையி லிருந்து ஓய்வுபெற்றுள்ளார் திருமதி அருளேஸ்வரி வேதநாயகம். தனது கல்விச் சேவை தொடர்பாக அவர் உதயனுடன் பகிர்ந்துகொண்டவை.

கே:கல்விச் சேவையில் உங்களைப்பற்றி...?

ப:நான் பிறந்தது அச்சுவேலியில்தான். எனது ஆரம்பக் கல்வியை சென்.திரேசா மகளிர் வித்தியாலயத்திலும் யாழ்.அச்சுவேலி சரஸ்வதி வித்தியாசாலையிலும் பயின்று வசாவிளான் மத்திய மகாவித்தியாலயத்தில் உயர்கல்வியைத் தொடர்ந்தேன். தொடர்ந்து கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயத்தில் கணிதப் பிரிவைத் தேர்வுசெய்து கற்றேன். ஆசிரியத் தொழிலில் ஆர்வமுள்ளதால் பலாலி ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் கற்று திறந்த பல்கலைக்கழகத்தில் கணிதத்தில் டிப்ளோமாவும் கொழும்பு காமராஜன் பல்கலைக்கழகத்தில் பொது நிர்வாகத் தில் முதுகலைமாணிப் பட்டம் பெற்றேன்.

1971ஆம்ஆண்டு முதன்முதலாக ஆசிரியத் தொழிலில் கணிதபாட ஆசிரியராகக் கற்பிக்கத் தொடங்கினேன். பின்னர் புனித ஹபிரியல் பாலிக் காம மகா வித்தியாலத்தில் கற்பித்தேன். யாழ்.ஆவரங்கால் நடராஜா ராமலிங்க வித்தியாலயத்தில் கற்பிக்கும்போது சேவைக் கால ஆலோசகராகவும் இருந்தேன். யாழ்.ஆவரங்கால் மகாஜன வித்தியாலயத்தில் கற்பிக்கும்போது இலங்கை கல்வி நிர்வாகச் சேவைப் பரீட்சையில் சித்தியடைந்தேன்.

1990ஆம் ஆண்டு யாழ்.பிரதேச கல்வித் திணைக்களத்தில் கணித விஞ்ஞான பாடத்துக்கான உதவிக் கல்விப் பணிப்பாளராகவும் யாழ்.கல்வி வலயம் இரண்டில் கல்வி அபிவிருத்திக்குப் பொறுப்பாகவும் 1996ஆம் ஆண்டு இடப்பெயர்வோடு துணுக்காய் கோட்டக் கல்விப் பணிப்பாளராவும் துணுக்காய் கல்வி வலயத்துக்கும் பணிப்பாளராகவும் 2000 ஆம் ஆண்டு ஆரம்பக் கல்வி அபிவிருத்திக்குப் பொறுப்பாளராகவும் 2001 ஆம்ஆண்டு முன்பள்ளிக்கல்வி அபிவிருத்திக்குப் பொறுப்பாளராகவும் 2003 ஆம் ஆண்டு வடக்கு, கிழக்கு மாகாணக் கல்வித் திணைக்களத்துக்குக் கல்வி அபிவிருத்திக்கும் பொறுப்பாளராகவும் செயற்பட்டேன்.



பெருமிதம் கொள்கிறார் ஓய்வு பெற்றுள்ள யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம்

2005 ஆம் ஆண்டு தென் மராட்சிக் கல்வி வலயத்துக்குப் பணிப்பாளராகவும் 2008 மார்ச் மாதம் தொடக்கம் 2011ஆம் ஆண்டு ஜூன் 2ஆம் திகதி வரை யாழ். கல்வி வலயப் பணிப்பாளராகவும் இருந்து ஓய்வு பெற்றுளேன். மொத்தம் 40 வருடங்கள் சேவையாற்றியுள்ளேன்.

கே: உங்களின் பணி தொடர்பான அனுபவங்கள் அதில் மறக்க முடியாத வியங்கள்.

ப: எந்த ஒரு சேவையாளனாலும் ஆசிரியத் தொழிலிலும் சரி, பணிப்பாளராக இருந்ததிலும் சரி எந்த ஒரு சேவையிலும் ஐந்து வருட காலத்துக்கு மேல் இருந்ததில்லை. ஒரு தொழிலில் நிரந்தரமாக இருந்தால் பணியில் தொய்வு நிலை ஏற்படும். ஒரு சேவையில் பணியாற்றிக்கொண்டிருக்கும்போது நலிவான கல்வி நிலைகள் எங்கு உள்ளன என நன்கு அறிந்து திட்டமிட்டுப் பணியை ஆரம்பிப்பேன்.

இதற்காக வலய அதிபர்கள், ஆசிரியர்கள், கல்வியாளர்கள் போன்றோரிடம் கலந்து ஆலோசித்துவிட்டு முடிவெடுத்து நடைமுறைப்படுத்துவேன். ஒவ்வொரு சேவைக்காலத்திலும் ஒவ்வொரு அனுபவத்தை அடைந்துள்ளேன். ஒரு பெண்ணாக இருந்து யாழ்.மாணவர்களின் கல்விக்காக இத்தனை வருடங்களும் சேவை ஆற்றியுள்ளேன் என்பது எனக்கு மகிழ்ச்சியளிக்கிறது.

கல்வியின் முக்கியத்துவத்தையும் அதை எவ் வாறு மாணவர்களிடையே ஊக்கப்படுத்தி எளிதில் கற்பிக்கலாம் எனவும் அனுபவசாலிகள் ஊடாக அறிந்துகொண்டேன்.கல்லூரிகளில் படிக்கும்போதும், சேவைகளில் ஈடுபட்டிருக்கும்போதும் அனைத்து விதமான பிரச்சினைகளுக்கும் முகம் கொடுத்துள்ளேன்.

லண்டன் பொதுநலவாய அமைப்பு எளிதான கல்வி முறை வழிக்கு நடத்திய போட்டியில் கணிதத்துக்கான போட்டியில் சிறந்த பரிசைத் தட்டித் தந்தது.

1995ஆம் ஆண்டு நடைபெற்ற இப்போட்டியில் லண்டனில் வைத்து கணித விஞ்ஞான தொழில்நுட்ப கல்வியாளருக்கான விருது வழங்கப்பட்டது. அதன் போது போட்டியில் பங்குபற்றிய பொட்சுவான பல்கலைக்கழகம், இந்தியா எம்.கே.பல்கலைக்கழகம் ஆகியவற்றின் விரிவுரையாளர்களும் பாராட்டினார்கள். இது மறக்க முடியாத சம்பவமாக இருக்கிறது.

கே: யாழ்ப்பாண மாணவர்களின் கல்வி வீழ்ச்சியடைந் துள்ள நிலையில் உங்கள் கருத்து என்ன?

**வாணி**

ப: யாழ்ப்பாண மாணவர்களின் கல்வி வீழ்ச்சிய டைந்துள்ளது என்பதை நான் ஒருபோதும் ஏற்றுக்கொள்ளமாட்டேன்.

கே: 40 வருடகால சேவையில் இருந்து ஓய்வு பெறும் நீங்கள் கூற விரும்புவது என்ன?

ப: 40 வருட சேவையும் எனக்கு மகிழ்ச்சியையும் மன நிறைவையும் தருகிறது. எனது சேவையைப் பரிபூரணம் அடைந்து விட்டேன் என்ற எண்ணம் உண்டு.

இக்காலத்தில் தமிழ், ஆங்கிலம், சிங்களம் ஆகிய 3 மொழிகளும் இன்றியமையாதவை. அதனை அனைவரும் கற்றுக்கொள்ள வேண்டும். மாணவர்கள் பாடசாலையில் கற்பதோடு நின்று விடாது ஒழுக்கம், ஆன்மீகம் என்பவற்றையும் கற்க வேண்டும். ஆசிரியர்கள் ஒவ்வொரு பிள்ளையுடனும் அன்பு வைத்துச் செயற்பட்டால் அனைவரும் முன்னேறலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

THE HALO TRUST

# Vacancies

## Administrative Assistant

The HALO Trust is a British Mine clearance NGO working in ten countries worldwide. The HALO Trust have been working in Sri Lanka since 2002 clearing mines and other explosive remnants of war.

We are currently recruiting an administrative assistant to help with the upkeep of our daily records.

***Requirements:***

- High standard of written and spoken English
- Proficiency in Microsoft Word, Excel, Access and Outlook

Interested candidates should submit their bio-data, contact details and a brief summary of their experience to:

**The HALO Trust**
**12 ,NALLUR CROSS ROAD, JAFFNA, SRI LANKA.**

All applications must be submitted not later than Tuesday 14th June 2011 (48,20,22)

## கோழிக்குஞ்சு விநியோகம்

தரமான Prima No.1 புறொயிலர் கோழிக்குஞ்சுகள் Prima கொம்பனி உத்தரவாதத்துடன் நியாயமான விலையில் சிவப்புப் பேட்டுக் குஞ்சுகளும் 17.06.2011 காலை விநியோகிக்கப்படும் முன் பதிவு செய்யவும்.

★ சூட்டி பாம் சென்ரர், வட்டுக்கோட்டை - 0778996085
★ சன்னதி பாம் சென்ரர், தொண்டமானாறு - 0776904590
★ நெல்லியடி பல்பொருள் விற்பனை நிலையம், நெல்லியடி - 0774656377
★ நல்லூர் பாம் சென்ரர், பிரதான வீதி, பருத்தித்துறை - 0771392593

**நல்லூர் பாம் சென்ரர்**
*19, முருகேசர் லேன், நல்லூர். தொ.பே.இல. 021 222 6944*

யூனியன் அஷ்யூரன்ஸ்
உங்கள் நாளைய நம்பிக்கை, இன்றே.

## உடனடி வேலை வாய்ப்பு

இலங்கையின் முன்னோடி காப்புறுதி நிறுவனமான யூனியன் அஷ்யூரன்ஸ் தனது புதிய கிளை அலுவலகத்தை சுன்னாகம் பிரதேசத்தில் வெகுவிரைவில் ஆரம்பிக்கவுள்ளது. சுன்னாகம் கிளை அலுவலகத்துக்கு உடனடியாக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. கீழ் குறிப்பிடப்பட்ட பதவி வெற்றிடங்களுக்கு ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்

**தகைமை:-**

★ க/பொ/த. சாதாரண தரம் மற்றும் க/பொ/த. உயர்தரம்
★ 19 வயதுக்கும் 45 வயதுக்கும் இடைப்பட்டோர்.
★ வலிகாமம் பிரதேசத்தைப் பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்டோர் விரும்பத்தக்கது.

**பதவி வெற்றிடம்**

1) காப்புறுதி ஆலோசகர்
2) தனிப்பட்ட நிதித்திட்டமிடல் ஆலோசகர்
3) தனிப்பட்ட நிதித்திட்டமிடல் முகாமையாளர்
4) முகவர் அபிவிருத்தி முகாமையாளர்
5) பட்டதாரிகளுக்கென விசேட நிலைகள் மற்றும் மாதாந்த ஊதியம்+விசேட சலுகைகள்

(49,50,22)

உங்கள் விண்ணப்பங்களைக் கீழ்க்கண்ட முகவரிக்கு ஒருவார காலத்துக்குள் அனுப்பி வைக்கவும்.

தொடர்பு:- 'பிராந்திய முகாமையாளர்'
**யூனியன் ஆஷ்யூரன்ஸ் பிராந்திய அலுவலகம்,**
**139, ஸ்ரான்லி வீதி,யாழ்ப்பாணம்.**

**Car For Sale** Maruti 800
Carebian Blue 2006 Model
KC- Number (CP-KC-XXXX)
Doctor used -car Up to 925000
Contact Number : 0772933342

## வீடு வாடகைக்குண்டு

Temple Road, Navalar Road இல் சகல வசதிகளுடனும் கூடிய வீடு வாடகைக்குண்டு வாகனத் தரிப்பிட வசதி கொண்டது.
தொடர்பு: 0717831852

## வீடு வளவு விற்பனைக்கு

அல்லாரை வடக்கு, கொடிகாமத்தில் உள்ள வீடு வளவு விற்பனைக்கு உண்டு. 14 பரப்புக் காணி சகல வசதிகளுடன் மேலதிகமாகத் தோட்டக்காணி 14 ½ பரப்புக்காணியும் உண்டு.
தொடர்பு: 0770547829,021 222 8790

## கல்வி

Medical Faculty
V.K. Aran உங்கள் வீட்டுக்கு.
A/L Chemistry,Biology, Physics, Grade 5-O/L Science, Maths, English
0713141834 Both Mediuns.

## விலைகுறைந்து விற்பனையாகிறது

நல்ல தரமான கண்டாவளை மண்ணில் அரிந்தது 1 கல் 37/= வெள்ளைச் சல்லி ½" போட்டது. 38/= கருங்கல் ½" சல்லிபோட்டது. 40/= ¾" சல்லிபோட்டது 41/= வீட்டுக்கு கொண்டுவந்தும் தரப்படும். மேலதிகமாக 1 கல்லுக்கு 3/= செலவாகும். கட்டுமண், பூச்சு மண் போன்றவை விற்கப்படுகின்றது.
தொடர்பு: 0776253719

## ஐக்கெயா பாம் சென்ரர்

எம்மிடம் தரமான இறைச்சிக்கோழிகள் மலிவு விலையில் விற்னைக்கு உண்டு. புறோயிலர், கல்பேட் சுத்தம் செய்தது -420/=
தொடர்புகளுக்கு: **ஐக்கெயா பாம் சென்ரர்**
**கண்டிவீதி**
(பொன்னம்பலம் சந்திக்கும் அரியாலைச் சந்திக்கும் இடையில்)
தொடர்பு: 0729827024

## மணமக்கள் தேவை

இந்து கௌரவகுடும்பம் London PR 1978 பாவம் (5) ஐந்து Engineer சகோதரி Engineer 8 இல் செவ்வாய்பாவம் 34 1979 பாவம் 29 ஆசிரியருக்கும், 1985 செவ்வாய்க் குற்றம் பாவம் 60 ஆசிரியைக்கும், 1983 பாவம் 8 அரச உத்தியோகத்தருக்கும் மணமக்கள் தேவை.
தொடர்பு: 0771619518

## அருள்முருகன் திருமணப்பணியகம்

யாழ்.இந்து - கிறீஸ்தவ மணமக்களுக்கான உலகளாவிய திருமணப்பணிகள் Doctors, Engineers உட்பட எத்தகைய மணமக்கள் தேவைக்கும் ,வெளிமாவட்டங்கள் மற்றும் வெளிநாடுகள்.
தொடர்புகளுக்கு: 021 222 9334 Fax: 021 222 9947
யாழ்.மாவட்டத்தில் உள்ளவர்கள் நேரில் வரவும்.
03, யாழ்.வீதி, சிறாம்பியடிலேன்
(Cosy Restaurant lane)
ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்

## வாடகைக்கு

கஸ்தூரியார் வீதியில் அமைக்கப்படவுள்ள நான்கு மாடி வர்த்தக ஸ்தாபனம் வாகனத் தரிப்பிட வசதிகளுடன் அலுவலக உபயோகத்துக்கு அல்லது வர்த்தகத்துக்கு பயன்படுத்தத்தக்க 3000 சதுர அடி இடம் வாடகைக்கு உள்ளது.
மேலதிக விவரங்களுக்கு 0778587708

## காணி விற்பனைக்கு

புன்னாலைக்கட்டுவன், மல்லாகம் வீதியில் ஸ்ரீ முருகன் பாடசாலைக்கு அருகில் 20 பரப்புத் தோட்டக்காணி தனிப்பாதையுடன் விற்பனைக்குண்டு. பிரித்தும் கொடுக்கப்படும்.
தொடர்பு: 0773867239

## மணமகன் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பம் 1984,5'2'' பூராடம் 2 இல் செவ்வாய் தனுராசி, கி.பாவம் 65 ¼ பிரபல நிறுவனத்தில் (Accounts Assistant) மணமகளுக்கு பெற்றோர் தகுதியான உள்நாட்டு, வெளிநாட்டு மணமகனை எதிர்பார்க்கிறார்கள்.
தொடர்பு: (மாலையில் ) 0779940039
Pathush93@g.mail.com

## 2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்: 02.10.1930
மறைவு: 12.06.2009



**திருமதி தவமணி சண்முகம்பிள்ளை**

ஆயிரம் உறவுகள் இருந்தாலும்
அம்மா என்று ஆசையுடன்
அழைத்து மகிழ உறவொன்று
இல்லையே!
ஈராயிரம் ஆண்டுகளானாலும்
ஆறுமோ எம் துயரம்
உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்

என்றும் உங்கள் நினைவுகளுடன்:
கணவர், மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

உரும்பிராய் தெற்கு,
உரும்பிராய். (48,20,50)

## STUDY IN UK, CANADA, USA, New Zealand CYPRUS, POLAND & GERMANY

| | |
|---|---|
| UK | → Part Time Job + Cost Max. Rs: 150,000/- |
| USA | → Cost Max. Rs: 2 Laks |
| CANADA | → No IELTS/ No Sponsor/ No age limit/ PR |
| POLAND | → Tuition Fee after visa + Part Time Job |
| GERMANY | → No Tuition Fee + PR + IELTS 5.5 |
| CYPRUS | → Tuition Fee after visa + Part Time Job |
| New Zealand | → IELTS - 5.0 + Work Permit |

Next Intake: July. '11

E-mail: read.int@gmail.com

For further Info: Need island wide agent
Fazna:0778438403, Rifky :0779898931, Niroshi: 0778873132, Madu:0774848888

READ International
No:201-1/1A, Galle Road, Dehiwala ( Opposite to The Finance/HNB)

JAFFNA COLLEGE

## VACANCIES AT JAFFNA COLLEGE

**Applications are invited for the following posts from qualified and experienced candidates in the respective fields:**

1. A Graduate Teacher in Chemistry with Botany / Zoology
2. A Graduate Teacher in Mathematics with Computer Studies.
3. A Graduate/ Trained Teacher in English.
4. A Graduate Teacher in Economics& Business Studies.
5. A Female Teacher To Primary Section with Physical Education Diploma.
6. Accounts Clerk with Computer Knowledge and English.

Those who have the necessary qualifications and experiences, can apply on the application forms available at the college office during office hours with copies of certificates. Sort listed applicants will be called for an interview.
Closing date for the application is 30 th June, 2011.
Please apply to The **Principal, Jaffna College, Vaddukoddai.** The envelope containing your application should have the post applied for written on the top left hand corner.

**- Principal** (41-C/786)



## நெல்லை நகரில் புதியதோர் உதயம்

## 'கோகில்ஸ் பேபி நீட்ஸ்'



## KOHIL'S BABY NEEDS

நிகழும் மங்களகரமான கர வருஷம் வைகாசி மாதம் 29ஆம் நாள் இன்று (12.06.2011) ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணி தொடக்கம் 9.30 மணி வரையுள்ள கர்க்கடக லக்கினம் கூடிய சுபயோக சுபமுகூர்த்த வேளையில் **கோகில்ஸ் பேபி நீட்ஸ்** எனும் ஸ்தாபனத்தை ஆரம்பிப்பதற்கு இஷ்ட சித்திகளும் கைகூடியுள்ளது. அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து எமது ஸ்தாபனம் மேன்மேலும் வளர ஆசிகள் வழங்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**கோகில்ஸ் பேபி நீட்ஸ்,**
**இல.57/5, முதலாம் குறுக்குத்தெரு**
(செல்லமுத்தூஸ் அருகிலுள்ள வீதி) **நெல்லியடி.** T.P.0776661805

**உரிமையாளர்:**
**செ.அருண்**
**கோகில பவனம்,**
**கப்புதூ, கரவெட்டி.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமூக சேவைகள் திணைக்களத்தின் சுயதொழில் ஊக்குவிப்பு நன்கொடை

கிளிநொச்சி, ஜூன் 12

வடமாகாண சமூகசேவைகள் திணைக்களத்தால் வன்னிப் பிரதேசத்தில் இந்த வருடத்தில் முதல் 5 மாதங்களிலும் 371 பேருக்கு சுயதொழில் ஊக்குவிப்பு நன்கொடைகள் வழங்கப்பட்டன.

வறுமைக்கோட்டின் கீழ் வாழும் மாற்றுத் திறனாளிக் குடும்பங்கள், பெண்கள்தலைமை தாங்கும் குடும்பங்கள், மிக வறிய குடும்பங்கள் இவ்விதம் தலா 15 ஆயிரம் ரூபா உதவி நன்கொடையைப் பெற்றுள்ளன.

முதற்கட்டமாக 7 ஆயிரத்து 500 ரூபாவும் சுயதொழில் முன்னேற்றத்தின் அடிப்படையில் அடுத்த கட்டமாக 7 ஆயிரத்து 500 ரூபாவும் வழங்கப்பட்டுள்ளன.

ஆடு வளர்ப்பு, மாடு வளர்ப்பு, கோழி வளர்ப்பு, சிறுவியாபாரம், சிறுகைத்தொழில் என்பவை போன்ற தொழில்கள் இந்த உதவி நன்கொடை மூலம் ஆற்றப்பட்டு வருகின்றன.

இவ்வாறு வழங்கப்பட்ட பிரதேச செயலகப் பிரிவுகளினதும், பயனாளி எண்ணிக்கைகளின் தொகைகளும் வருமாறு:

முல்லைத்தீவு மாவட்டத்தில் கரைதுறைப்பற்றில் 8 பேருக்கு 60 ஆயிரம் ரூபாவும், துணுக்காயில் 53 பேருக்கு 3 லட்சத்து 97 ஆயிரத்து 500 ரூபாவும், ஒட்டுசுட்டானில் 72 பேருக்கு 5 லட்சத்து 40 ஆயிரம் ரூபாவும் வழங்கப்பட்டன.

கிளிநொச்சி மாவட்டத்தில் கண்டாவளையில் 24 பேருக்கு ஒரு லட்சத்து 80 ஆயிரம் ரூபாவும், கரைச்சியில் 13 பேருக்கு 97 ஆயிரத்து 500 ரூபாவும், பச்சிலைப்பள்ளியில் 2 பேருக்கு 15 ஆயிரம் ரூபாவும் வழங்கப்பட்டன.

மன்னார் மாவட்டத்தில் மன்னார் நகரத்தில் 37 பேருக்கு 2லட்சத்து 75 ஆயிரத்து 500 ரூபாவும், மாந்தை மேற்கில் 6 பேருக்கு 45 ஆயிரம் ரூபாவும், நானாட்டானில் 25 பேருக்கு ஒரு லட்சத்து 87 ஆயிரத்து 500 ரூபாவும், முசலியில் 3 பேருக்கு 22 ஆயிரத்து 500 ரூபாவும், மடுவில் ஒருவருக்கு 7 ஆயிரத்து 500 ரூபாவும் வழங்கப்பட்டன.

வவுனியா மாவட்டத்தில் வவுனியா நகரத்தில் 70 பேருக்கு 5 லட்சத்து 25 ஆயிரம் ரூபாவும், செட்டிகுளத்தில் 27 பேருக்கு 2லட்சத்து 2 ஆயிரத்து 500 ரூபாவும் இவ்விதம் வழங்கப்பட்டுள்ளன. (க-எ-121)

# பணம் செலுத்தி பல மாதங்களாகியும் நீர் இறைக்கும் இயந்திரம் இல்லை

கிளிநொச்சி, ஜூன் 12

அரை மானியத் திட்டத்தின் கீழ் நீர் இறைக்கும் இயந்திரங்களைப் பெறுவதற்குப் பணம் செலுத்திய பல விவசாயிகள் பல மாதங்கள் கழிந்த நிலையிலும் இதுவரை நீர் இறைக்கும் இயந்திரங்கள் வழங்கப்படாமையால் கவலையடைந்துள்ளனர்.

கிளிநொச்சி மாவட்ட விவசாய விரிவாக்கத் திணைக்களம் விவசாயிகளுக்கு அரை மானியத் திட்டத்தின் கீழ் நீர் இறைக்கும் இயந்திரங்களை வழங்கி வருகின்றது.

இதற்கெனப் பல விவசாயிகள் 16 ஆயிரத்து 400 ரூபாவைச் செலுத்தியுள்ளனர்.

ஆனால் பல மாதங்கள் கழிந்தும் உருத்திரபுரம் வடக்கு, நீவில், சிவநகர், உருத்திரபுரம் மத்தி ஆகிய பகுதிகளுக்கு இந்த இயந்திரங்கள் இதுவரை வழங்கப்படவில்லை.

இதுகுறித்து விவசாயத் திணைக்கள அதிகாரிகளிடம் விவசாயிகள் கேட்டபோது அனுமதிப் பட்டியல் இதுவரை கிடைக்கவில்லையெனத் தெரிவிக்கின்றனர். இதனால் பணத்தைச் செலுத்திவிட்டு நீண்டகாலமாகக் காத்திருக்கும் விவசாயிகள் கவலையடைந்துள்ளனர்.

அத்துடன் தம்மிடம் பணத்தைப் பெற்றுக்கொண்டு இவ்வாறு இழுத்தடிப்புக்கள் செய்வது குறித்துத் தமது விசனத்தையும் வெளிப்படுத்தியுள்ளனர்.

ஆகவே விவசாயத் திணைக்களத்தினர் இதனைக் கவனத்தில் கொள்ளவேண்டுமென இவர்கள் தெரிவிக்கின்றனர். (க-301)

## புன்னை நீராவியில் மக்கள் மீள்குடியமர்வு


கிளிநொச்சி, ஜூன் 12

கிளிநொச்சி புன்னைநீராவி கிராம அலுவலர் பிரிவுக்குட்பட்ட கிராமங்களில் 1607 குடும்பங்கள் மீளக்குடியமர்ந்துள்ளன.

கிளிநொச்சி, கண்டாவளை உதவி அரச அதிபர் பிரிவுக்கு உட்பட்ட புன்னை நீராவி கிராம அலுவலர் பிரிவில் உள்ள கண்ணகி நகர், குமாரசுவாமிபுரம், புன்னை நீராவி, உழவனூர் உள்ளிட்ட கிராமங்களில் 1607 குடும்பங்களைச் சேர்ந்த 5157 பேர் மீள்குடியமர்ந்துள்ளனர். இவ்வாறு மீளக்குடியேறியுள்ள குடும்பங்கள் போதிய வசதி வாய்ப்புக்கள் இன்றியும் அடிப்படை வசதிகளின்றியும் வாழ்ந்து வருகின்றன.

இதனால் அதிகமான குடும்பங்கள் வாழ்வாதார வசதிகள் இன்றிப் பெரும் பொருளாதார நெருக்கடிகளுக்கு முகம் கொடுத்து வருகின்றன. (க-6)

### ஐக்கியம் வளர...



நல்ல வரவேற்பு: கண்டி மாவட்டத்திலிருந்து மன்னாருக்கு வந்த இளைஞர், யுவதிகளை வரவேற்கும் நிகழ்வில் கலந்து கொண்டவர்கள் (601)

## காசநோய் தொடர்பான விழிப்புணர்வுக் கருத்தரங்கு

மன்னார், ஜூன் 12

மன்னார் மாவட்டப் மார்புநோய் சிகிச்சை நிலையத்தின் அனுசரணையுடன் இந்த மாவட்டத்தைச் சேர்ந்த சுதேச மருத்துவர்களுக்குக் காசநோய் தொடர்பான விழிப்புணர்வுக் கருத்தரங்கு நடைபெற்றுள்ளது.

மன்னார் மாவட்ட சுகாதார சேவைகள் பணிமனையில் நடைபெற்ற இந்தக் கருத்தரங்கில் மன்னார் மாவட்ட மார்புநோய் சிகிச்சை வைத்திய நிபுணர் டாக்டர் யூட். பச்சேக் மார்பு நோய் தொடர்பாகச் சித்த வைத்தியர்களுக்கு விளக்கமளித்தார்.

இந்தக் கருத்தரங்கில் மன்னார் மாவட்ட ஆயுள்வேத பாதுகாப்புச் சபையின் தலைவர் வைத்திய கலாநிதி செல்வமகேந்திரனும் உரையாற்றினார். (க-601)

## வைத்தியசாலையில் காணாமல் போனவர் பேசாலைக் கிராமத்தில் கண்டுபிடிப்பு

மன்னார், ஜூன் 12

மன்னார் மாவட்டப் பொது வைத்தியசாலையில் சுகயீனம் காரணமாகச் சிகிச்சை பெற்ற சமயம் காணாமற்போனவர் பேசாலைக் கிராமத்திலிருந்து கண்டு பிடிக்கப்பட்டார்.

மன்னார் தம்பனைக்குளம் பகுதியைச் சேர்ந்த 83 வயது நிறைந்த வயோதிபர் ஒருவர் சுகயீனம் காரணமாக மன்னார் மாவட்டப் பொது வைத்திய சாலையில் சிகிச்சை பெற்று வந்தார். இவர் கடந்த வியாழக்கிழமை தொடக்கம் வைத்தியசாலையிலிருந்து காணாமல் போயுள்ளார். இதனால் வைத்தியசாலையில் பதற்ற நிலை தோன்றியது. பின்னர் வைத்தியசாலைப் பணியாளர்கள் இவரை மன்னாரின் சகல பாகங்களிலும் தேடினர். அன்று மாலை மன்னார் பேசாலைக் கிராமத்தில் இவர் இருந்தமை கண்டுபிடிக்கப்பட்டது.

பின்னர் இவர் மீண்டும் வைத்தியசாலைக்கு அழைத்து வரப்பட்டார். குறித்த வயோதிபர் சற்று மனநலம் பாதிக்கப்பட்டவர் எனத் தெரிய வருகின்றது. (க-601)

# பிரயாணிகளை அவலத்தில் ஆழ்த்தும் வீதிகளில் திரியும் கால்நடைகள்

வவுனியா, ஜூன் 12

வவுனியா மாவட்டத்தில் முக்கியமான பல வீதிகளைக் கால்நடைகள் ஆக்கிரமித்துள்ளதால் இவற்றினூடாகப் பிரயாணம் மேற்கொள்வோர் பல்வேறு சிரமங்களுக்கு ஆளாகி வருவதை அவதானிக்க முடிகின்றது.

வவுனியா நகரம் யாழ்ப்பாணம், திருகோணமலை, மன்னார் ஆகிய மாவட்டங்களை இணைக்கும் முக்கிய பகுதியாக விளங்குவதால் வாகனப் போக்குவரத்தும் அதிகரித்துக் காணப்படுகின்றது. ஆனால் கால்நடைகளை வளர்ப்போர் இவற்றைக் கட்டாக்காலிகளாக அலைய விடுவதால் இவை வீதிகளில் படுத்திருப்பதும், வீதிகளுக்குக் குறுக்கே உலாவித் திரிவதுமாகக் காலத்தைக் கடத்தி வருகின்றன. இதனால் வாகனங்களில் செல்வோர் பெரும் விபத்துக்களைச் சந்திக்க வேண்டிய நிலையிலுள்ளனர்.

வவுனியா மாவட்டக் காவல் துறையினரும் கால்நடைகளைக் கட்டி வளர்க்குமாறு பலமுறை அறிவித்தல்கள் விடுத்தும் பயன் எதுவும் ஏற்படவில்லை.

ஆகவே நிலைமையின் ஆபத்தை உணர்ந்து கால்நடை வளர்ப்போர் தமது கால்நடைகளைக் கட்டி வளர்க்குமாறு பலதரப்பினரும் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (க-421)

# அக்கராயன் மருத்துவமனை மீள இயங்குவது எப்போது?

கடந்த மாதம் 31 ஆம் திகதி அக்கராயன் மருத்துவமனையில் மருத்துவமனையின் 47 வயது நிரம்பிய பணியாளர் யா.பாக்கியராஜ் உயிரிழந்ததையடுத்து அக்கராயன் பிரதேச மருத்துவமனை செயலிழந்துள்ளது.

மருத்துவமனையின் பணியாளரின் உயிரிழப்பு தொடர்பான விசாரணைகளை கிளிநொச்சிப் பொலிஸார் மேற்கொண்டு பணியில் இருந்த மருத்துவரையும் இரு ஊழியர்களையும் விசாரணைக்கு அழைத்துச் சென்றனர்.

உயிரிழப்பும் பொலிஸ் விசாரணையென்பதும் ஒரு புறம் இருக்க பல உயிர்களை இழக்க வேண்டிய அவலம் தற்போது அக்கராயனில் உருவாகியுள்ளது.

மருத்துவமனையின் பணியாளரின் உயிரிழப்புடன் ஏற்பட்ட பதற்றத்துடன் மருத்துவமனை மீது தாக்குதல் நடத்தப்படலாம் என்ற நிலையில் மருத்துவமனையின் அம்புலன்ஸ் வண்டிகள் கிளிநொச்சிக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளன.

ஒரு முக்கிய மருத்துவமனையில் மருத்துவர் இல்லை. அம்புலன்ஸ் இல்லை. நோயாளர்கள் அனைவரும் கிளிநொச்சி மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்படுகின்றனர்.

மீள்குடியமர்வு நடைபெற்ற கிராமங்களில் மக்களின் உயிர் நாடியாக விளங்கிய மருத்துவமனை இன்று செயலிழந்துள்ளது.

அக்கராயன் மருத்துவமனைக்குள் நடைபெற்ற பணியாளரின் உயிரிழப்பினை விசாரிப்பதற்கு பொலிஸ் மற்றும் நீதிமன்றம் உள்ளது. இதை விடுத்து மருத்துவமனையினை செயலிழக்க வைப்பதன் மூலம் பாதிக்கப்படுவது போரினால் பாதிக்கப்பட்டு நலன்புரி நிலையங்களில் அவலப்பட்டு மீள்குடியமர்த்தப்பட்ட அப்பாவி மக்கள்தான். எந்த நெருக்கடி வந்தாலும் மக்களைக் காக்க வேண்டிய பொறுப்பு மருத்துவர்களுக்கு உள்ளது.

நெருக்கடியான நிலைமையினைக் கருத்தில் எடுத்து கிளிநொச்சிப் பிராந்திய சுகாதாரத் திணைக்களம் அக்கராயன் மருத்துவமனைக்கு மருத்துவர் ஒருவரைப் பணிக்கு நியமிக்கும்படி மீளக் குடியமர்ந்துள்ள மக்கள் வேண்டுகோள் விடுத்த வண்ணம் உள்ளனர்.

அக்கராயன் பிரதேச மருத்துவமனையை நம்பி வன்னேரிக்குளம், ஆனைவிழுந்தான், ஆரோக்கியபுரம், மணியங்குளம், ஸ்கந்தபுரம், கண்ணகைபுரம், முக்கொம்பன், கோணாவில், யூனியன்குளம், அமைதிபுரம் ஆகிய கிராமங்களைச் சேர்ந்த 3000 க்கும் மேற்பட்ட குடும்பங்கள் உள்ள நிலையில் அக்கராயன் பிரதேச மருத்துவமனை செயலிழந்துள்ளது.

அக்கராயன் பிரதேச மருத்துவமனையின் தற்போதைய நிலையை அறிந்து கொள்ள மக்கள் நலன் கொண்ட அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாவட்ட அரச அதிபர்,

**கி.பிருதிவி**

உதவி அரச அதிபர், சுகாதாரப் பணிப்பாளர் ஆகியோர் நேரில் வரவேண்டுமென மக்கள் வேண்டி நிற்கின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## STUDY IN UK last chance
## WITH O/L, WITHOUT IELTS



BEng Civil Engineering
BA Business Management
Bsc/Msc Biotechnology
Msc Financial Management
Msc Bioinformatics
MA English Language Teaching
LLM General
Msc Information Technology
Bsc Computing
Bsc Multimedia

**11 months English Course**
**Age - 19 to 25**
**6 Months Student visitor**

## NO NEED IELTS
### STUDY IN EUROPE
### CYPRUS, UKRAINE, POLAND

வெளிநாடு செல்லவுள்ள மாணவ மாணவிகளுக்கான அனைத்து ஏற்பாடுகளையும் மிக குறுகிய காலத்தில் செய்து கொடுப்பதுடன் புதிய சட்டதிட்டத்தின்படி VISA மறுக்கப்பட்ட மாணவர்களின் VISA க்களையும் எங்களது பிரசித்தி பெற்ற வழக்கறிஞர்களால் வெற்றிகரமாக உடனடியாக செய்து கொடுக்கப்படும்.

**INTERNATIONAL CITY COLLEGE**
No-07,2nd floor, W,A,Silva Mawatta,wellawatha, Colombo-06
Tel: 0114 594104 - Fax:-0112 2582722 Hot:- 0771250789 - 0772953963
E-mail: citycollegelanka@gmail.com Web: citycollegelanka.com

- தபால் மூலம் -

## ஆறு மாத கால டிப்ளோமா
**Course Length - Six Month**

20

JUNE 2011 TO NOVEMBER 2011

*தமிழ் மொழி மூலம்*

| | |
|---|---|
| Dip. in Psychology | - உளவியல் டிப்ளோமா |
| Dip. in Office Administration | - காரியாலய நிர்வாக டிப்ளோமா |
| Dip. in Human Resources Management | - மனிதவள முகாமைத்துவ டிப்ளோமா |
| Dip. in Civil Engineering | - சிவில் எஞ்ஜினியரிங் டிப்ளோமா |
| Dip. in Business Management | - வியாபார முகாமைத்துவ டிப்ளோமா |
| Dip. in Banking Management | - வங்கி முகாமைத்துவ டிப்ளோமா |
| Dip. in Sales & Marketing Management | - விற்பனை மற்றும் சந்தைப்படுத்தல் மு. டி. |
| Dip. in Health & Hospital Management | - சுகாதாரம் மற்றும் வைத்தியசாலை மு. டி. |
| Dip. in Nursing Administration | - தாதியர் நிர்வாக டிப்ளோமா |
| Dip. in Educational Management | - கல்வி முகாமைத்துவ டிப்ளோமா |
| Dip. in Montessori | - மொண்டிசூரி டிப்ளோமா |

**கற்கை முடிவில் பரீட்சை நடைபெறும் பிராந்திய நிலையங்கள்**

- கல்முனை • மட்டக்களப்பு • திருகோணமலை • புத்தளம்
- வவுனியா • மன்னார் • யாழ்ப்பாணம் • கண்டி • கொழும்பு
- ஹட்டன் • அனுராதபுரம் • நுவரெலியா

மேலதிக விபரங்கள் மற்றும் விண்ணப்பப்படிவம் பெற உங்களது பெயர், முகவரி, தெரிவுசெய்த கற்கைநெறி என்பனவற்றை கீழ் உள்ள கையடக்க தொலைபேசிக்கு SMS செய்து பெற்றுக்கொள்ளலாம்.

**Mobile: 0777 140 844, 071 803 48 48**

விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி

Country Co-ordinator
MARUTHUR . A. HASSEN
*(B.Sc. Psychology. M.Sc. Psychology)*

**ALL INDIA INSTITUTE OF MANAGEMENT STUDIES**
24, 1st FLOOR, SUPERMARKET COMPLEX, MAIN STREET, SAINTHAMARUTHU-07.
Web: www.aiimas.com, www.iimat.com, www.aicomas.org
Tel: 067 2222917, 067 3671749, 067 3679688, 071 803 4848

விண்ணப்ப முடிவுத் திகதி : 28.06.2011

## SALES REP

- 25-30 வயதுக்கிடைப்பட்டவர்கள்.
- சந்தைப்படுத்தலில் 2-3 வருட தொழில்சார் தகைமை.
- குறைந்தது க.பொ.த சாதாரண பரீட்சையில் சித்தியெய்தியிருத்தல் வேண்டும்.
- தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் பேசும் ஆற்றல்.
- [illegible]தி அனுமதிப்பத்திரம் இருத்தல் வேண்டும்.
- [illegible]ம்பளம் + விற்பனை தரகு ரூ.50,000 +
- [illegible]றுவன பராமரிப்பு மோட்டார் சைக்கிள் வழங்கப்படும்.
- மருத்துவ வசதி வழங்கப்படும்.

APPLY TO
E-mail : carrer@tradesmann.com
Fax: 011 5565610
PO Box: 168, Jaffna.

FOR FURTHER DETAILS
Contact: 077 756 7147

The TRADESMANN 1956

*Tradesmann is a diversified business model in Manufacturing, Trading & Distribution sectors since 1956*

THE TRADESMANN SL (PVT) LTD
40, Borupana Ferry Road, Ratmalana.
www.tradesmann.com

## ஓட்டுமடம் வரை 'காப்பெற்' வீதி

நல்லூர், அரசடிச் சந்திப் பகுதியில் இருந்து யாழ். பிறவுண் வீதிச் சந்தியை ஊடறுத்து தட்டாதெரு ஐயனார் கோயில் வீதியையும் கடந்து மானிப்பாய் வீதி ஆலடிச் சந்திவரையிலும் 'காப்பெற்' போடப்பட்டுள்ளது.

ஏற்கனவே 'காப்பெற்' போடப்பட்டுள்ள ஓட்டுமடம் சந்திவரையிலும் இந்தப் பணி நடைபெறும் என்று தெரிவிக்கப்பட்டது.

(ஒ-160)

### கடை வாடகைக்கு

ஆனைப்பந்தி சந்திக்கு அருகில் பருத்தித்துறை வீதியில் 80 அடி நீளமும், 34 அடி அகல மும்கொண்ட கடைக் கட்டடம் வாடகைக்கு உண்டு.

(தனியார் நிறுவனம், அரசசார்பற்ற நிறுவனம் விரும்பத்தக்கது)

தொடர்பு: 0750404258

### காணி குத்தகைக்கு

யாழ்.மாநகரசபை எல்லைக்குள்சிறுகைத்தொழில் களஞ்சியம், தனியார் கல்வியகம் அமைப்பதற்கு உகந்த 2 பரப்பு வெற்றுக் காணி உண்டு.

தொடர்பு: 0750735255

### திருமண சேவை

உள்நாட்டு/வெளிநாட்டில் வாழும் தமிழ்ச் சமூகத்தவரின் நலன்கருதிப் பொருத்தமான வரன்களின் பெற்றோருக்கு நேரடித் தொடர்பு ஏற்படுத்திக் கொடுக்கப்படும்.

தொடர்பு: 0750735255
காலை 9 மணி - 12 மணி

### வீடு விற்பனைக்கு

சுண்டிக்குளி, விதானையார் வீதியில் 1½ பரப்புக் காணியுடன் கூடிய வீடு விற்பனைக்குண்டு.

தொடர்பு: எஸ்.எஸ். நாதன், 16/3, விதானையார் வீதி, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.தொ.பே: 0776146434

### கார் விற்பனைக்குண்டு

TOYOTA Carina At 150, 15 Sri கார் விற்பனைக்குண்டு.

தொடர்பு: 021 321 9888, 0759825282

### டயானா பிளாஸ்ரிக் தொழிலகம்

சகல விதமான மோட்டார் சைக்கிள், வாகன உடைந்த பிளாஸ்ரிக் மீள் திருத்தம் செய்துதரப்படும்.

06, கனகசபை லேன்,
சிவலிங்கப்புளியடி,
K.K.S. Road.
021 222 8680, 077 5925088

### House And Property For Sale

யாழ்ப்பாண நகரிலிருந்து 6 மைல் தூரத்தில் 20 நிமிட வேகத்தில் கைதடி ஏ-9 றோட்டில் சித்தவைத்தியக் கல்லூரி, முதியோர் இல்லம், Nuffield School, அரசாங்க டிஸ்பென்சரிக்கு முன்பக்கத்தில் உள்ள 2 ஆவது வீடு கண்டி வீதிக்கு அருகில் நான்கு விசாலமான அறைகள் விசாலமான சாலை நல்ல தண்ணீர் கிணற்றுடன் 4 பரப்புக் காணியில் [illegible] விற்பனைக்குண்டு. தரகர் வேண்டாம்.

தொடர்பு: 0777667011

### காணிகள் விற்பனைக்கு

மண்டைதீவில் உள்ள கம்பன் புலம் வயற்காணி, குடியிருப்பு பனங்காணி, மணலுவயல் (சிறுப்புலத்தடி) பண்டகசாலை (குடியிருப்பு), காரைவயல் (வயற்காணி), காரைப் புலம் (பனைவளவு - ஆஸ்பத்திரியடி), பனடிமுக்கம் (கிழக்குப் பாடசாலையடி) ஆகிய காணிகள் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு: திருமதி தேவி நடராசா
21, விபுலானந்தர் வீதி, கொழும்புத்துறை.
T.P: 0771825261

### சாவகச்சேரி நகரில் காணி விற்பனைக்கு

சாவகச்சேரி நகரில் 19 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. சர்வதேசப் பாடசாலை அமைத்தல், திருமண மண்டபம், தனியார் வைத்தியசாலை, ரியூசன் சென்ரர், கிறிஸ்தவ ஆலயங்கள், நேர்சிங்ஹோம், களஞ்சியசாலை, சிறுவர் பூங்கா, முதியோர் பராமரிப்பு நிலையம் போன்றவற்றுக்குச் சிறந்தது.

தொடர்பு: 021 321 2850, 0776145305, 0773614283

## Hatton National Bank
### அடகுப் பொருள்களை ஏல விற்பனைக்கான அறிவித்தல்

ஹற்றன் நஷனல் வங்கி யாழ்ப்பாணம், சுன்னாகம், நெல்லியடி, ஸ்ரான்லி வீதி, மானிப்பாய் ஆகிய கிளைகளில் 31.03.2010 இற்கு முன்னர் அடகு வைத்து இதுவரை மீட்கப்படாத, காலாவதித் திகதியை நீடிக்க ஆவன செய்யாத வாடிக்கையாளரின் அடகு நகைகள் 18.06.2011 சனிக்கிழமை காலை 9 மணிக்கு இல.212, 214, ஆஸ்பத்திரி வீதியில் அமைந்துள்ள யாழ்.கிளையில் ஏலத்தில் விடப்படும் என்பதை அறியத்தருகின்றோம்.

உங்களின் பெறுமதி மிக்க பொருள்களை உடனே மீட்க முடியாவிட்டால்...

- கடனுக்குரிய வட்டியையும் கடனின் ஒரு பகுதியையும் (ரூபா.500) செலுத்தி

அல்லது

- தற்போதைய சந்தைப் பெறுமதிக்கும் அதிகரித்த கடன் தொகைக்கும் ஏற்ப உங்கள் அடகுப் பொருள்களை மீள அடகு வைத்து காலாவதித் திகதியை நீடித்துக் கொள்ளலாம்.

ஏல விற்பனைத் திகதியைப் பிற்போடும் மற்றும் ஏலத்தை இரத்துச் செய்யும் உரிமை வங்கிக்கு உண்டு.

- ஹற்றன் நஷனல் வங்கி

### 12ஆம் ஆண்டு நினைவுகளுடன்
## சோதிநாதன் சோபநாத்



பிறப்பு 13.12.1980
இறப்பு 12.06.1999

உன் உருவம் கலைந்து ஆண்டுகள்
பன்னிரண்டு சென்றாலும்
உன் விம்பத்தைக் காணும் கணமெல்லாம்
அன்னையும் அன்பு உடன் பிறப்புக்களும்
கண்ணீர் மழை சொரிகின்றோம் - சோபா
இன்றும் - என்றும் உன்
நினைவுகள் மட்டும் நிரந்தரமாகுமடா.

உரும்பிராய் மேற்கு,
சிவகுலவீதி, உரும்பிராய். (1838-19-25-43)

தகவல்:
குடும்பத்தினர்

### 31 ஆம் நாள் நினைவஞ்சலி



தோற்றம்
23.03.1923

மறைவு
13.05.2011

## அமரர் வல்லிபுரம் நாகம்மா

எங்கள் இதய தெய்வத்தின் இறுதிக்கிரியைகளில்
கலந்து கொண்ட அனைவருக்கும் எமது
குடும்பத்தாரின் நன்றிகள்.
இல்லத்தின் பெருந்தலைவியாய் இணைபிரியா
தெய்வமாய் அல்லல் நிறை உலகில்
அரனடி மேலே ஏற பிரிந்தாயே
எல்லாம் வல்ல அம்பாளின் துணையுடன் ஆத்மா
சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

சாத்தா கலட்டி,
அளவெட்டி வடக்கு.

குடும்பத்தினர்.

தகவல்:
மகன்- வ.சுப்பிரமணியம் (லண்டன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரந்து சென்றவர்களை ஈயும் வள்ளல் ஆக்கிய குமணவள்ளல்

இலக்கியக் காட்சி – 81

பாருக்குள்ளே நல்லநாடு என்று பாரதியார் மட்டுமன்றி வேற்று நாட்டவரும் போற்றிய பாரத நாட்டில், அறத்தின் வழி ஆட்சிசெய்த மன்னர்கள் வாழ்ந்த 'சங்ககாலம்' என்னும் பொற்காலம் பல புலவர்களையும் வள்ளல்களையும் கொண்டிருந்தது தமிழ்நாடு. யாழ் இசையில் வல்ல பாணரும் ஆடல் பாடல்களில் வல்ல விறலியர்களும் தம் இன்னிசையால், முத்தமிழை முக்கனியின் சுவைபோல மிளரச் செய்திருந்தனர்.

அந்த நாட்டில் ஈகை அறத்தினால் புகழ்பெற்ற வள்ளல்கள் பலர் வாழ்ந்திருந்தனர். பறம்பு மலையிலிருந்து ஆண்ட பாரியும் மஞ்ஞைக்குக் கலிங்கம் நல்கிய பெருமகன் பேகனும், இரவலர்க்கீந்த தடக்கைக் காரியும், ஆர்வ நன்மொழி ஆயும், அமுதென விளைந்த நெல்லியின் கனியை ஔவைக்கு ஈந்த அதியமானும், நளிமலை நாடன் நள்ளியும், குறும்பொறை நன்னாடு கோடியர்க்கு ஈந்த ஓரியும் ஆகிய ஏழு வள்ளல்கள் தமிழ்நாட்டில் புகழ்பெற்றிருந்தனர்.

இவர்கள் எல்லோரும் காலப்போக்கில் மறைந்துபோன பின், கற்றறிந்த புலவரும் பாணரும் பாடினியரும் தங்கள் வறுமையைப் போக்குவாரின்றித் தவித்திருந்த வேளையில், நற்றமிழ் அறிவும், நற்குணப் பண்பும் வள்ளற்தன்மையும் கொண்ட குமணன், முதிரமலையை ஆண்டுவந்தான்.

அந்தக் காலத்தில் பெருஞ்சித்திரனார் என்னும் நல்லிசைப் புலவர் ஒருவர் இருந்தார். அவர் வறுமையில் நலிவுற்று அதிலிருந்து மீளும் வகையறியாது இடர்ப்பட்டவராய், தமது வறுமைநிலை தீர வழியின்றியிருந்தார். அந்த வேளையில் குமணவள்ளலைப் பற்றிக் கேள்விப்பட்டார். ஒருநாள் அந்த அரசனிடம் சென்றார் பெருஞ்சித்திரனார்.

கூர்வேற் குமணனே, பார்வை குறைந்து, கோல்காலாக முற்றத்திற்கும் போகாமல், என் உயிர் இன்னும் போகவில்லையே என ஏங்கித் துன்புறும் எனது தாயும், பாலில்லாத மார்பைச் சுவைத்துப் பார்த்துக் குழந்தை ஏமாந்துபோகக் கண்டு, குப்பைக் கீரையை உப்பின்றி அவித்துப் பிறருக்குக் கொடுத்துத் தானும் சிறிது உண்ணும் எனது துணைவியும், என்னைச் சேர்ந்தோரும் மகிழும் வண்ணம் ஈவாய் என எண்ணி, மழை காணாது வாடும் நெற்பயிர், மழைபெற்று மகிழ்ந்தது போன்று, இரவலர்க்குத் தந்த நின் ஈகைத் திறன் கேட்டு வந்தேன். ஆயினும், நின் மனம் மாறுபட்டு யானையைக் கொடுத்தாலும் அதை



வேண்டேன். மாறாக நீ மகிழ்ந்து குன்றிமணி அளவு சிறிது கொடுத்தாலும் அதை ஏற்றுக்கொள்வேன். என்றவாறு பெருஞ்சித்திரனார் பாடினார்.

*''வாழும் நாளோடு யாண்டுபல உண்மையில்*
*தீர்த்தல் செல்லாது என் உயிர் எனப்பல புலந்து*
*கோல்காலாகக் குறும்பல ஒதுங்கி*
*நூல் விரித்தன்ன கதுப்பினள் கண்துயின்று*
*முன்றிற்போகா முதிர்வினள் யாயும்,*
*பசந்த மேனியொடு படர்அட வருந்தி*
*மருங்கிற் கொண்ட பல்குறுமாக்கள் பெரிதழிந்து*
*குப்பைக் கீரை கொய்கண் ணகைத்த*
*முற்றா இளந்தளிர் கொய்து கொண்டு உப்பின்றி*
*நீருலையாக ஏற்றி, மோரின்றி*
*அவிழ்ப்பதம் மறந்து பாசடகு மிசைந்து*
*மாசொடு குறைந்த உடுக்கையள் அறம்பழியாத்*
*துவ்வா ளாகிய என்வெய் யோளும்*
*என்றாங்கு, இருவர் நெஞ்சமும் உவப்ப*

.................................................

*உயர்ந் தேந்து மருப்பிற் கொல்கயிறு பெறினும்*
*தவிர்ந்துவிடு பரிசில் கொள்ளலென் உவந்துநீ*
*இன்புற விடுதியாயின் சிறிது*
*குன்றியும் கொள்ளல் கூர்வேற் குமண!''*

*[புறநானூறு]*

எனப் பாடக்கேட்ட குமணவள்ளலின் நெஞ்சம் அனலிடை மெழுகாய் உருகியது.

குமணனின் உளப்பாங்கை உணர்ந்துகொண்ட பெருஞ்சித்தனார், மேலும் தன் வறுமை நிலையை விளக்கினார். நல்லிசைக் குமணனிடம் செல்வாயாகில் நின்வறுமை நீங்க வழங்குவான் எனப் பலரும் கூறக் கேட்டு இவன் வந்தேன். ஆதலால் என் வறுமை தீரப் பொருள் பெற்றுச்செல்வதை விரும்புகிறேன் என்றார்.

குமணவள்ளலும் உளம் நெகிழ்ந்து புலவருக்குப் பொன்னும் மணியும் தேரும் குதிரையும் வழங்கி அனுப்பி வைத்தான். தான் விரும்பிய வண்ணம் கிடைத்த செல்வத்தோடு இல்லஞ்சென்ற புலவர், இல்லக்கிழத்தியை நோக்கி இவையெல்லாம் குமணவள்ளல் அன்புடன் தந்த செல்வம். நீயும் இன்னார் இனியார் எனப்பாராது என்னையும் கேளாது சுற்றத்தாருக்கு ஈந்து உவப்பாயாக என்றார்.

*இன்னார்க் கென்னாது என்னோடும் சூழாது*
*வல்லாங்கு வாழ்த்தும் என்னாது நீயும்*
*எல்லோர்க்கும் கொடுமதி மனைகிழ வோயே!*
*பழந்தூங்கு முதிரத்துக் கிழவன்*
*திருந்துவேற் குமணன் நல்கிய வளனே. [புறம்)*

இவ்வாறு, ஈகவென இரந்து சென்ற பெருஞ்சித்திரனார்,

ஈயும் புரவலனாகக் காட்சிப்படுத்துவதையும்
*இன்னாது இரக்கப்படுதல், இரந்தவர்*
*இன்முகம் காணும் அளவு.* என்ற குறளுக்கு இலக்கியமாகி, இரந்தவர் இன்முகம் காணுமளவு ஈந்த குமண வள்ளலையும் அன்னார் பெருமையையும்,

குமணவள்ளல் தந்த செல்வத்தைத் தானும் மனைவி மக்களும் மாத்திரம் அனுபவிக்காமல், தன்னைக் கேளாமலே பிறருக்கும் ஈந்து உவக்குமாறு தனது கற்புடை மனையாளுக்குக் கொடுக்கும் உரிமையையும் ஒருங்கே தந்த இலக்கிய நயத்தையும் காண்கின்றோம்.

மட்டுவில் நா. நல்லதம்பி

இவ்வாறு புகழ்பெற்ற குமணவள்ளலுக்கு ஒரு தம்பி; இளங்குமணன் அவனது பெயர். அண்ணனுக்கு எதிர்மாறான குணமுள்ளவன்.

குமணன் பார்புகழ் அரசனாக, வள்ளலாக விளக்கம் பெற்றமை இந்த இளங்குமணனுக்குப் பொறாமையை ஏற்படுத்தியது. தீயவர் சிலரோடு சேர்ந்து சதிசெய்து ஆட்சியைக் கைப்பற்றியது மட்டுமன்றி அண்ணனைக் கானக வாழ்க்கை செய்யும் நிலைக்கும் தள்ளியும் விட்டான்.

அரசியலைத் தனக்குத் தரும்படி கேட்டால் குமணன் மறுவார்த்தையின்றி அவனிடம் கொடுத்திருப்பான். இவ்வாறு சதிசெய்தாலும், தம்பிதானே என்று குமணன் காடேகி வாழ்க்கை நடத்தினான் பெருந்தன்மையோடு. புரவலனைப் பாடிப் பரிசில் பெற்று வறுமை நீங்கிய பாணரும் பாடினியாரும் மனம் நொந்து வாடினர். முதிரமலை நாடு மாரி இல்லாத பாலை வனம் போல் ஆனது.

(20 ஆம் பக்கம் பார்க்க)

# இரத்தம்

சிறுகதை

ஏறத்தாழ ஐம்பது வயதாவது அந்தப் பனை மரங்களுக்கு இருக்கலாம். ஏனெனில் எனது மாமியார் அடிக்கடி கூறுவார் ''நானும் அப்புவும் தான் இந்த நாலு பக்க வேலிகளுக்கும் பனங்கொட்டை போட்டோம்'' என்று. அப்போதெல்லாம் எனக்கு அது வெறும் தம்பட்டமாகவே தோன்றியது. ஆனால், கண் எதிரில் பார்க்கையில் அவை உண்மையில் ஆச்சரியப்பட வைக்கின்றன. நேற்றுத்தான் பூந்தோட்ட முகாமிலிருந்து கூலியாள்கள் சிலரை பனையோலை வெட்ட மாமா அழைத்து வந்தார். அவர்கள் மரங்களில் ஏறியதும் பலமாகக் காற்று வீசத்தொடங்கிவிட்டது.

''உவங்கள் எங்கை உந்தக் காத்துக்கை ஓலை வெட்டப் போறாங்கள்'' என்றபடி மாமனார் பெருமூச்சு விட்டார். இருந்தாலும் சுமார் இருபது பனைகள் வரை அவர்கள் ஓலை வெட்டித்தள்ளி விட்டார்கள். எல்லாம் அனுபவம் போலும்.

நான் இப்போது பார்க்கையில் உச்சியில் நான்கு மயிர் என்பதுபோல வெறுமனே நான்கு, ஐந்து குருத்தோலைகளை மட்டும் சுமந்தபடி பனைகள் மெல்ல அசைகின்றன. நேற்று வெட்டப்பட்ட அந்த ஓலைகளை இன்றும் நாளையும் லீவு நாள்கள் என்பதால் மிதித்து வேலி போட்டுவிட வேண்டும் எனக் கணவரும், மாம னாரும் திட்டமிட்டிருந்தனர்.

ஆங்காங்கு சிதறிக்கிடந்த ஓலைகளைப் பொறுக்கி ஒழுங்குபடுத்தத் தொடங்கினர்.

போரால் சிவந்த மண்ணின் நினைவுகளுடன் ஓடி மனம் ஒரு கணம் மயங்கியது. சிதறிக் கிடந்த ஓலைகளுக்குள் விரியும் அந்த செழிப்பிழந்த பனைகளின் தோற்றம் மனதை உறுத்தியது.

அவர்களுக்கு ஓலை மிதிக்க உதவியாக மாமியாரும் காணிக்குள் இறங்கிவிட்டார். என் இரண்டு குஞ்சுகளும் முற்றத்தில் மண் விளையாடிக் கொண்டிருந்தார்கள். காணிக்குள் ஏதோ கொண்டாட்டம் என்பதைப் புரிந்துகொண்டு, பெரியவர்களின் பின்னாலேயே காணிக்குள் ஓடிச்செல்கிறார்கள்.

மூத்தவளுக்கு போன மாசியுடன் மூன்று வயது முடிந்துவிட்டது. இளையவளுக்கு வருகிற செம்ரெம்பர் வந்தால் இரண்டு வயது பூர்த்தியாகும். நினைவில் வந்து போனது காலம் எழுதிய நீட்டுச் சோக வரிகள். குழந்தைகள் விரும்பிச் சாப்பிடும் உருளைக்கிழங்குப் பிரட்டல் கறியை முடித்து விட்டு அவர்களுக்கு நீராட்ட வேண்டும் என்று எண்ணியபடி அடுக்களைக்குள் நுழைந்தேன். உலையில் அரிசி ''குளுக் குளுக்'' என நர்த்தனமாடியது. கறிக்குரிய அடுக்கு களை செய்துகொண்டிருந்தேன். அப்போது தூரத்தில் ஒரு சத்தம்... ஏதோ அழுகை ஒலி போலக் கேட்டது. தேங்காய் புழிந்த கைகளை அவசரமாகக் கழுவிக்கொண்டு காதைக் கூர்மையாக்குகிறேன். சந்தேகமே இல்லாமல் அது என் குழந்தைகளின் அழுகுரல்கள் என்பதைப் புரிந்துகொண்டு எனது கால்கள் வீட்டுக்கு வெளியே விரைந்தன.

காணியும் வீடுமாக மொத்தம் நான்கு ஏக்கர்கள். எல்லாம் முன்பு காடாகக் கிடந்தவைதான். என்னுடைய மாமியாரின் பேரன் அரச அனுமதி பெற்று இந்தக் காட்டுப்பகுதியைச் செப்பனிட்டு களனியையும் வீட்டையும் உருவாக்கினாராம்.

எல்லாம் மாமியார் சொல்லக்கேட்டவைதான். மனுஷன் அப்பவே நான்கு புறத்து வேலிகளுக்கும் தன்னு உரிமையைப் பெற்றுவிட்டதால் இப்போது வேலிச்சண்டைகள் எதுவும் ஏற்படவில்லை.

அந்த ஒற்றையடிப் பாதைவழியாகத் தான் இருவரும் ஓடி வருகிறார்கள். முன்னே பெரியவள் அழுகையொலி முழங்க பின்னே சிறியவள் ''அக்காச்சி.... அக்காச்சி...'' எனக் கூவி அழுதபடி சிறிய கால்களால் ஓடி வருகின்றாள்.

மனதில் எழுந்த பதற்றத்தை மறைத்தபடி அவர்களை நோக்கி விரைகிறேன். ''என்னடா என்ன நடந்தது? ஏன் அழுறீங்கள்? குளப்படி செய்த தெண்டு அப்பா அடிச்சவரே'' எனக்கேள்விக் கணைகளை அடுக்கியபடி சிறியவளைத் தூக்கிக் கொண்டேன்.

''இல்லையம்மா தங்கச்சியின்ர காலில கருக்கு வெட்டிப்போட்டுது'' சொல்லி முடிக்கும் முன்னர் மீண்டும் அழுகிறாள். போன மாதம் தான் அது நடந்தது. பெரியவளின் நெற்றி யில் சூட்டுப்பரு வொன்று பெரிதாகத் திரட்டியிருந்தது. அவள் கொதிவேதனையால் இரவிரவாகத் தூங்கவில்லை. மறுநாள் வைத்தியரிடம் கொண்டுபோனபோது அவர் கத்தி வைத்துக்கண்டல்

திருமதி மா.அருள்சுகந்தன்,
சமளங்குளம்,வவுனியா.

இரத்தம், சிதலை அகற்றினார். இரத்தம் தோய்ந்த வெள்ளைப் பஞ்சை அந்த நேஸ் டஸ்பின்னில் போட்டதையும் தனக்கு ஏற்பட்ட வலியையும் இணைத்துப் பார்த்தவளுக்குச் சிவப்பு நிறத்தை இன்னும் உடம்பில் கண்டால் பயத்தில் அழத் தவறுவதில்லை. ஆனால் சிறியவள்? அவளுக்கு இந்த அனுபவம் புதிது. அவளது அழுகையின் காரணம் காயமோ அல்லது இரத்தமோ அல்ல. அக்காள் அழுகிறாளே என்ற ஏக்கம் தான் அவளையும் உடன் அழ வைக்கிறது.

(20 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 13 ஆவது ஆண்டு நினைவஞ்சலி

அன்னை மடியில்:
10.03.1942

அநியாய அழிப்பில்:
05.06.1998

திதி: 12.06.2011



## அமரர் சின்னத்தம்பி நமசிவாயம் (J.P)

(உரிமையாளர் - சிவகுமார் ஸ்ரோர்ஸ், ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்)

அலை கடல் அன்று மௌனித்தது
ஆர்ப்பரித்த அலை ஓய்ந்தது
குல விளக்கு ஒளி இழந்தது
பதின்மூன்றாண்டுகள் பறந்தன
பார்த்திருக்கின்றோம் உங்கள் வரவுக்காய்
பாசத் திருவுருவே ஒளியேற்றி
இருள் அகற்ற வாருங்கள்

'சிவசக்தி வாசம்',
20/11, வைரவர் கோயில் ஒழுங்கை,
ஆஸ்பத்திரி வீதி, கொட்டடி,
யாழ்ப்பாணம். 021 222 7687

உங்கள் ஆத்ம சாந்தியை
வேண்டிப் பிரார்த்திக்கும்:
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

(48,19,50)

### வீதி புனரமைக்க ஏற்பாடு

புலோலி வட மேற்கு மந்திகை முருகன் கோயில் வீதி 'கமநெகும' திட்டத்தின் ஊடாக வெகு விரைவில் புனரமைப்புச் செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. (ம-236)

## கண்ணீர் அஞ்சலி

எமது தொழிலகத்தின் முன்னாள் களஞ்சியப் பொறுப்பாளராகக் கடமையாற்றிய **ஏஸ்.மாரிமுத்து** அவர்கள் 28.05.2011 இறைபதம் அடைந்துவிட்டார் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

மில்க்வைற் தொழிலகம்,
த.பெ.இல.77, யாழ்ப்பாணம். (49,27)

சிவநேயர்.இ.தவகோபால்.ஜே.பி
தொழிலதிபர்.

◆ வீட்டிலிருந்தவாறே தொழில் புரிய விரும்பும் நங்கையரே!
◆ வெளிநாடு செல்லவிருக்கும் மங்கையரே!
◆ இல்லத்தரசிகளே! மற்றும் ஆர்வமுள்ள மகளிரே!

எமது 26 வருடகால சேவையில் எம்மிடம் பயிற்சிபெற்ற ஆயிரக்கணக்கானோர் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் இத்துறையில் முன்னணியில் திகழ்கின்றனர். நீங்களும் அவ்வாறே ஆகவேண்டுமா?

**இதோ உங்களுக்கான 3 மாத பயன்மிகு பயிற்சிகள்**

**ஆரம்பம்: 15-06-2011 (புதன்) காலை 10.00 மணிக்கு**

- கேக் ஐசிங், உணவு தயாரித்தல்
- கைவேலை
- கூந்தல் வடிவமைப்புகளும் முடி சீராக்குதலும் (Hair Dressing & Styling)
- பூவேலை
- பப்றிக் வர்ணம் தீட்டுதல்
- Saree Work

மேற்குறித்த பயிற்சிகளின் நடுப்பகுதியில் Facials, மணப்பெண் அலங்காரம், Pedicure, Manicure பயிற்சிகளும் நடைபெறும்.

- தையல் அறிவு அற்றவர்களுக்கான **6** மாத தையல் (உடை தயாரித்தல்) பயிற்சிகள்.


**மேற்படி அனைத்துப் பயிற்சிகளின் முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்.**

தையல் தெரிந்தவர்களுக்கான 10 நாள் சான்றிதழ் அற்ற சாறி பிளவுஸ் சுரிதார், சட்டை, Skirt தைக்கும் பயிற்சிகளும் ஆரம்பமாகின்றன.

மேலும் விபரங்களை தினமும் பி.ப 2.00 மணி வரை நேரில் அறிந்து கொள்ளலாம்.

**கலாலயா**
பயிற்சியகம்
பெருமாள் கோயிலுக்கு அண்மையில் – யாழ்ப்பாணம்

# கால் நூற்றாண்டின் நிறைவில் உனது ஐந்தாம் ஆண்டின் இறுதியில்



அம்மாவிற்காக:
04.04.1960

அம்மாவுடன்:
12.06.1986

## சதாசிவம் தமிழரசுவரன்
(குட்டியா)



அம்மாவிற்காக:
04.04.1972

அம்மாவுடன்:
29.06.2006

## சதாசிவம் நவலெட்சுமி
(மதுரி)

ஆரம்பமும் முடிவும் ஒன்றில்தான் முடிகிறது மனித வாழ்வு
நாமும் எமது உடன் உறவுகளும் ஒன்று என்றிருந்தோம்
இன்று அவை வேறு என்று உணர்ந்து கொண்டேன்
எமது முடிவுகள் முடிந்தவை
முற்றும் முற்றுகளின் முடிவுகளுடன் முடிக்கின்றேன்

நல்லூர். (48,20,50) உங்களது அம்மா

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மெரினாக் கடற்கரைக்குச் சென்ற அனுபவம்

தமிழ் நாட்டின் தலைநகரான சென்னையில் அமைந்துள்ள மெரினாக் கடற்கரை உலகிலுள்ள இரண்டாவது மிகப்பெரிய கடற்கரை என அழைக்கப்படுகிறது. இந்தக் கடற்கரைக்குப் பல தடவைகள் நான் சென்றுள்ளேன். இது பார்ப்பதற்கு மிகவும் அழகாகக் காட்சி அளிப்பதோடு சிறுவர்களுக்கும், பெரியவர்களுக்கும் மிகவும் பிடித்தமான




இடமாகவும் காணப்படுகிறது.

இந்தக் கடற்கரைக்கு மாலை நேரமானதும் பலர் வந்து இளைப்பாறித் தமது பொழுதைக் கழித்துவிட்டுச் செல்வார்கள். அங்கே பூட்டப்பட்டுள்ள பல வண்ணங்களினாலான மின்விளக்குகள் அனைவரையும் கண்குளிர வைக்கின்றன. அதனை நானும் பார்த்து ரசித்ததோடு கடற்கரை மணலில் இருந்து அதன் சுத்தமான காற்றைச் சுவாசித்து கடலின் அழகைக் கண்டு மகிழ்ந்தேன்.

அங்கே கிளியோசியரும், கைரேகை பார்ப்பவர்களும் கடற்கரைக்கு வருபவர்களை அழைத்து அவர்களுக்குரிய பலனைக் கூறிக்கொண்டிருந்தனர். நாமும் அவர்களிடம் சென்று யோசியம் பார்த்துவிட்டுக் கடலில் இறங்கிக் குளிக்க முயன்றோம். ஆனால் அது மிகவும் ஆழமாக இருந்ததால் எமது கால்களை மட்டுமே அங்கே நனைக்க முடிந்தது.

பின்னர் நாங்கள் அங்குள்ள குதிரைகளின் மேல் ஏறிச் சவாரி செய்துவிட்டு வரும்போது அங்கிருந்த பலர் பலூன்களைத் துவக்கினால் சுட்டு விளையாடிக்கொண்டிருந்தனர். நாமும் அந்த இடத்துக்குச் சென்று சிறிதுநேரம் விளையாடிவிட்டுச் சுழரும் சுழலின் மேல் ஏறிச் சுற்றி விளையாடி மகிழ்ந்தோம். அங்கே நின்ற சாதனையாளர்கள் கயிற்றில் ஏறுவது, நெருப்புப் பந்தத்தைச் சுற்றுவது போன்ற பல சாதனைகளைச் செய்து காட்டினார்கள். பின்னர் அங்கி ருந்து புறப்பட்டுச் செல்லும்போது அண்ணா நினைவுத் தூபியையும், எம்.ஜி.ஆர் நினைவுத் தூபியில் உள்ள அணையா விளக்கையும் பார்த்துவிட்டு மிக்க மகிழ்ச்சியில் புகையிரத வண்டியில் ஏறி வீடு திரும்பினோம்.



**தே.அபிராம்,**
தரம் 4 E, யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலை.

## விடை தெரியுமா? 111

1. யார்க் பல்கலைக் கழகத்தின் தொல்லியல் துறை பேராசிரியரின் பெயர் என்ன?
2. ஆண்டுதோறும் ஜூன் 06 ஆம் திகதி எத்தினமாக அனுஷ்டிக்க வேண்டுமென ரஷ்ய நாட்டு அதிபர் டிமெல்ரி மித்த தேவ் புதிய சட்டம் ஒன்றைக் கொண்டுவந்துள்ளார்?
3. நமீபியா நாட்டின் அதிபர் பெயர் என்ன?
4. அதிகளவான சொத்துக்களைச் சேர்த்துப் புதிய பணக்காரர்கள் உருவாகும் உலக நாடுகளில் இந்தியா எத்தனையாம் இடத்தில் உள்ளது?
5. இலங்கையில் ஆண்கள் ஆடைத் துறையில் நிபுணத்துவம் பெற்ற முன்னணி நிறுவனம் எது?

**விடை தெரியுமா?**
தெரிந்தால் 18.06.2011 இற்கு முன்னர் சரியான விடைகள் அனுப்பும் 6 மாணவர்களுக்குப் பரிசில்கள் வழங்கப்படும். முதல் மூவருக்கும் முறையே ரூபா 150, ரூபா 125 மற்றும் ரூபா 100 வீதமும் ஏனைய மூவருக்கும் தலா ரூபா 75 வீதமும் பரிசில்கள் நூல்களாக வழங்கப்படும்.

### விடைகள் 109

1. பியூனஸ் அயர்ஸ்
2. கிறிஸ் நோரிஸ்
3. செ.கு.தமிழரசன்
4. ஹம்மிங்
5. பண்டிதை பத்மாசனி அம்மா

### வெற்றி பெற்றவர் விவரம்

1. தே.வானுஷன்,
தரம் 9, யா/புனித பத்திரிசியார் கல்லூரி.
2. ஸ்ரீ.அம்பிகா,
யா/வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை
3. சோ.நிவேதிகா
யா/மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை.
4. சி.நிறோஜன்
தரம் 6, யா/நெல்லியடி ம.ம.வித்தியாலயம்.


**உங்களுக்கும் பரிசில்கள்**

## பொது அறிவு

01. அமெரிக்கா எத்தனையாம் ஆண்டு சுதந்திரம் பெற்றது? 1776
02. இலங்கையின் தேசியக் கொடியில் உள்ள இலை எது? வெள்ளரசு இலை
03. இலங்கையின் தலைசிறந்த விஞ்ஞானி யார்? • ஆதர்சி கிளாக்
04. எமது நாட்டில் மண்ணரிப்பு கூடுதலாக இடம் பெறும் மாவட்டம் எது? கண்டி
05. மூக்குக்கண்ணாடி முதலில் அறிமுகமான நாடு எது? இத்தாலி

**யா.பானுஷா, 5ஏ,**
சுண்டுக்குளி மகளிர் கல்லூரி.



கபில்ஜா,தரம் 2ஈ,
யா/புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலயம்.



அ.சோபிகன்,
நுணாவில் சந்தி, சாவகச்சேரி.



வி.ஜானுகா, தரம்9 ஏ ,
யா/வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை.



கு.மாதங்கி, தரம் 3ஏ,
யா/இணுவில் இந்துக் கல்லூரி.

## வறுமை

கடவுள் தந்த திறமை அதிகம்
அதை வெளிப்படுத்த எனக்கோ வறுமை
பலருக்கு நன்மை செய்ய வேண்டும் என்று ஆசை
ஆனால் அது என் வறுமையால் நிராசை ஆனது

நாடு முழுவதும் பணக்காரனின் ஆட்சி
எனது வீட்டில் உள்ளதடா வறுமையாட்சி
வறுமை என்னும் கொடுமையில்
நான் சிறுமை ஆகிவிட்டேன்

பா.ஜெயவினோதன்,
தரம் 9 ஏ,
யா/டிறிபேக் கல்லூரி.

## நட்பு

தோல்வியிலும் தோள் கொடுக்க
வேண்டும் ஒரு தோழன்
துயரத்திலும் தேற்றி விட
வேண்டும் ஒரு தோழன்
அவன் பிரிவில் நான் துயர்கொண்டால்
துறந்திடுவான் உயிரை
அவன் உயிர் பிரிந்தாலும்
என்றுமே மறந்திடான் என் நட்பை

ஜோ.நிக்ஷனா,
திருகோணமலை.

## ஊருடன் பகைத்தால்...

ஓர் ஊரிலே செல்வந்தர் ஒருவர் வாழ்ந்து வந்தார். அவருடைய கிராமத்தில் நடைபெறும் கிராம அபிவிருத்திக் கூட்டம், கோயில் சிரமதானம், நூலகம் அமைத்தல், சிறு வீதிகளைப் புனரமைத்தல் போன்ற பொதுப் பணிகளுக்கு இவர் செல்லாது ஊரவர்களுடன் எந்நேரமும் சண்டை பிடித்துக் கொண்டிருப்பார்.



ஒருநாள் அவரது பக்கத்து வீட்டில் தீப்பிடித்து எரிந்து கொண்டிருந்த போது அந்த வீட்டுக்காரர் காப்பாற்றுங்கள், காப்பாற்றுங்கள் என்று கூச்சலிட்டனர். இவரோ காது கேட்காத மாதிரி இருந்து விட்டார். ஆனால் அயலிலுள்ள ஏனைய வீட்டுக்காரர்கள் ஒன்றுசேர்ந்து உதவி புரிந்து தீயை அணைத்து விட்டனர்.

இதேபோல வேறொரு நாள் இவருடைய களஞ்சியமும் வீடும் தீப்பற்றிக்கொண்டது. இவர் எல்லோரையும் கூப்பிட்டுத் தீயை அணைக்க உதவி செய்யுமாறு கேட்டார். ஆனால் எவருமே அந்தப்பக்கம் வராததால் இவருடைய எல்லாச் சொத்துக்களும் எரிந்து நாசமாகி விட்டன. இதைத்தான் ஔவையார் '' ஊருடன் பகைக்கின் வேருடன் கெடும்'' என்று கொன்றை வேந்தனில் அழகாகக் கூறியுள்ளார்.

**நே. வித்தியாசாகர்,**
தரம் 7 சி,
கிளிநொச்சி மகா வித்தியாலயம்.

புத்தகங்கள், சஞ்சிகைகள் படிப்பதன் முக்கிய நோக்கம் அறிவை வளர்த்துக் கொள்வது மட்டுமல்ல வளர்த்துக் கொண்ட அறிவை உரிய வேளையில் சரியாகப் பயன்படுத்திக் கொள்வதுமாகும்.
-ஹேர்பேர்ட் ஸ்பென்சர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்லறையில் தேடல்...



காதலனே!
ஏன் தயங்குகிறாய்
சாதிகள் நம் கண்
சாடைகளிற்கு தடை போடுகிறது.
மதங்கள் நமக்கு
மணக்கோலம் வேண்டாம்
என மன்றாடுகிறது!
வா அன்பே
மரணம் ஒன்றுதானே!
நாம் கல்லறையில்
ஒன்றிப்போம்! உணர்வற்ற
மானிட சடங்களிற்கு
நம் கல்லறைகள் உண்மைக்
காதலை புகட்டட்டும்!
மானிடர்களே! நாம்
இறந்தபின்பு ஏன்
உங்களின் போலிக்
கண்ணீர் துளிகள் எம்
கல்லறைகளிற்கு?
சாதி, மதம் கடந்த காதலை
வாழவிடுங்கள், வாழ்த்துங்கள்
அதுவே எம் காதலையும்
கல்லறையையும் புனிதப்படுத்தும்
அர்த்தப்படுத்தும்



வி.மீரா,
திருநெல்வேலி.

# தொப்பிக் குளறல்

முன்னால் அமர்ந்திருக்கும் என் கையில்
"பேனா" இல்லை
"குறிப்பேட்டை" எறிந்து விட்டுத்தான்
வந்தேன்
"ஒளிப்படக்கருவியை" ஒப்படைகின்றேன்.
"கைபேசி" தற்கொலை செய்தது- என்
சட்டைப்பையினுள்
ஏன் கண்களைக் கூட இறுகப்
பொத்திக் கொள்கிறேனே
தயவு செய்து "மனச்சாட்சி"மட்டும்
பேசுக நின் உதடுகள்??
".... மன்னித்து விடுங்கள்,
மன்றாடுகிறோம்...."
உண்மையில் இவை உம் வார்த்தைகள் தானா
"சோறும் சீலையும் " மட்டும் தானா
சீக்கிரத்தேவை எமக்கிப்போது?
"மணக்கோலத் தோழனாய் "
"மரணமொன்றமர்ந்து அளாவும் பொழுதுமாய்"
இருமுறை மட்டும் பார்த்த பழைய முகம்!
"தேசியத் தோலுரிந்த" தொப்பியுடன்,
அதி இலகுவாய் 'அகப்பட்ட' போதே
சுதாகரித்திருக்க வேண்டாமா நாம்?

ஊரெங்கும் "சோற்றில் இறங்கும்" கைகளுக்காய்
"சேற்றில் புதைந்த" வன்னியர் கால்களில்
'சுரணை நரம்பு' சூன்டிப் போனதென்றா
அபயம் சொல்லி அபஸ்வரத்தில் முனகினாய்?
பொருதி வீழ்ந்தவன் எதிரியே ஆனாலும்
"ஆடை கூடக் கசங்காமல்" மரபு காத்தவருக்கா
மானம் போகுதென்று 'துணி''கேட்டாய் இன்று?
வரலாறு வலியது 'கு'ன்றிருக்கும் 'ப'ரமா

இன்றிரவு...... உணவின் பின்,
இரவல் கட்டிலில் உறங்கு முன், விழி மூடி ஒருமுறை
தொண்டை வரை எச்சில் கூட்டி
உரக்கக் கேள், "உன் இருப்பை'?
பதில் நிச்சயம்- 'வெறிது, வெறிது"
'காற்றுக் குறைத்தும்மை" கழற்றி விட்ட சேதி
காற்றில் மலிந்து கன காலம் இப்போது!
இம்முறை 'வேகவில்லை' கொஞ்சமும்!
வெளியூர் சுகவாசிக்கு 'உள்ளூர்
சந்தைகளில்' அனுபவம் போதவில்லையோ?
அடுத்த முறை "... நல்ல பருப்பா பாத்து வாங்குங்கோ!!"

செந்தூரி

# எல்லைகள் தூரங்களாகின்றன

வாழ்வின் மேம்பாட்டுக்கான
தேவையின் அதீதங்கள்
என்னை விரட்டி
மன துள்
வேகநிலை தந்தாலும்
ஆக்க முயற்சியின் பாதைகளில்
தடக்குற்று வீழ்கிறேன்

பத்ம வியூகத்துள்
அபிமன்யுவைப் போல்
கால வியூகத்துள்
என் வாழ்வின் மீட்சிக்காக
போரடுகிறேன்
அதன் எதிர்பார்ப்பு
ஏக்கத்துள் சங்கமிக்கின்றது

நேர்மை பூரணிக்கும் முகத்தைத்
மன அருவருப்போடு பார்க்கும்
முக தரிசனங்கள் என்
பார்வைப் பரப்புக்குள்
பவனிக்கின்றன
பொய்கள் பெருமைப்பட்டு
உய்வதைக் காண்கிறேன்
இவை உணர்த்தும் பாதையில்
பயணிக்க முடியாது
ஸ்தம்பித்துப் போகிறேன்

சூழ்ச்சியின் வலைக்குள்
சிறைப்படும் ஐஸ்வரியங்களை கண்டு
என் நேர்மைத் தெரிவுகள்
அங்கலாய்க்கின்றன
விரக்தியும் சலிப்புமாக
விக்கித்து விம்முகின்றன
பொய் மூலம் காணும்
பகட்டு வாழ்வு
பார்ப்பதற்கு பரவசமானலும்
ஆடுகின்ற பம்பரம்
கடை நிலையில் வீழ்தலின்
எதிர்வினை கொள்வதால்
"நேர்மையுற வாழ்"
என்னும் நியதிக்குள்
என் வாழ்வின்
மேம்பாட்டை நோக்கும்
பயணத்தின் எல்லைகள்
தூரங்களாகின்றனவோ?

அல்வாயூர் சீ.சிவநேசன்

# ஆய்வு




பெண் ஒருத்தியின்
ஒப்புதலின்றி
காளை
அவளை
மணத்தல்
மனித உரிமை
மீறலாம்
நல்ல வேளை
நம் வீட்டில்
வசிப்பவர்கள்
பற்றி
எந்தப்
பத்திரிகைக்கும்
எதுவும்
தெரியவில்லை

சி.சுஜிதா,
பிரம்படி லேன்,
கொக்குவில்

# புன்னகை



எனக்குத் தெரிந்த புன்னகையுடன்
யார் பேசிக் கொண்டிருக்கிறார்கள்
எங்கேயும்
எப்போது
விலகிப்போகாத அதனுடன் யாரவது பொய்யாய் பேசுவது
மனிதருக்குள்ளும் வெளியிலும் காவிச்செல்லும்
நம்மிருப்புக்களை
யார் எண்ணிக் கொண்டிருக்கிறார்கள்
என்னவோ
ஏதுவோ
காத்திரமில்லாமல் வற்றிய பிறகும்
ஏதாவது பேசிக் கொண்டிருப்பது தான் புன்னகையா?
கிட்டவும் தூரவும்இடை நடுவிலும்
கண்கள் காண
வாய் புன்னகைக்கிறது
சில புன்னகைகள் கண்டவுடன் பேசும்
சில புன்னகைகள் யோசித்துப் பேசும்
சில புன்னகைகள் போய் விட்டாலும் அது போவதில்லை
அதன் கால் தடங்கள்
புன்னகைத்துப் புன்னகைத்துப்
பேசிக் கொண்டிருக்கிறோம்
நாங்கள்
சில நாளாய்



-சத்திய மலரவன்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தென்னிலங்கை நோக்கி விரியும் அடக்குமுறைகள்



ஞாயிறு காரம்

சந்திரசேகர ஆசாத்

இலங்கை சுதந்திரம் பெற்ற காலம் தொடக்கம் இன்றுவரை தமிழ் மக்களின் உரிமைகள் பறிக்கப்படுவதும் அதற்கெதிரான குமுறல்கள் எழும் போதோ, போராட்டங்கள் வெடிக்கும் போதோ இன ரீதியான கொடிய அடக்கு முறைகள் கட்டவிழ்த்து விடப்படுவதும் தமிழ் மக்களின் அனுபவமாக நிலை பெற்றுவிட்டது.

மலையக மக்களின் வாக்குரிமை பறிப்பு, தமிழ் பிரதேசங்களில் சிங்களக்குடியேற்றத் திட்டங்கள், தனிச்சிங்களச் சட்டம், 1972, 1978 அரசியலமைப்புச் சட்டங்கள் எனத் தமிழ் மக்களை இரண்டாம் தரப் பிரஜைகளாக்கும் நடவடிக்கைகள் காலம் காலமாக இடம்பெற்று வருகின்றன. இப்படியான ஒடுக்குமுறைகளுக்கு எதிராக தமிழ் மக்கள் சாத்வீக வழிகளில் போராடிய போதெல்லாம் இனக் கலவரங்கள் என்ற பேரில் மேற்கொள்ளப்பட்ட இன அழிப்பு நடவடிக்கைகள் மூலமும், இராணுவ வன்முறைகள் மூலமும் அவை முறியடிக்கப்பட்டன. அப்படியான ஒரு நிலையிலே தமிழ்மக்கள் ஆயுதம் ஏந்திப் பேராட நிர்ப்பந்திக்கப் பட்டனர். அதுவே பெரும் போராக விரிவடைந்தது.

2001 செப்ரெம்பர் 11 இல் உலக வர்த்தக மையத்தின் மீதும் பென்ரகன் தலைமை செயலகத்தில் மேலும் நடத்தப்பட்ட தாக்குதலை அடிப்படையாக வைத்து அமெரிக்காவும் அதன் நேச நாடுகளும் பயங்கரவாதத்துக்கு எதிரான போர் எனப் பிரகடனம் செய்து விடுதலைப் போராட்டங்களுக்கு எதிரான ஒரு நிலைப்பாட்டை எடுத்தன. அதைச் சரியாகப் பயன்படுத்திய இலங்கையின் அரச தரப்பு தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டத்தைப் பயங்கரவாதமாகச் சித்தரித்து உலகநாடுகளின் உதவியுடன் போரை விரிவுபடுத்தியது. இறுதியில் 2009 மே 19 ஆம் திகதியுடன் போர் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டது.

போர் இடம்பெற்ற காலப்பகுதியில் சிங்கள மக்கள் வாழ்க்கைச் செலவு உயர்வு, ஊதிய உயர்வின்மை, வேலையில்லாத் திண்டாட்டம், வறுமை போன்ற பல நெருக்கடிகளுக்கு முகம் கொடுத்தனர். எல்லாவற்றுக்கும் போர் காரணம் காட்டப்பட்டதுடன் சிங்கள மக்களின் கோபத்தைத் தமிழ் மக்கள் மேல் திருப்பிவிடும் வகையில் இனவெறி ஊட்டியும் வரப் பட்டது.

இந்தப் போர் முடிவடைந்து இரு வருடங்கள் கடந்துவிட்டன. இந்த இரு வருடங்களில் போர் வெற்றி பற்றிய மாயையை நிலைநிறுத்தும் விழாக்களும் அபிவிருத்தி பற்றிய 'பிரசாரங்களுமே மேலோங்கி நிற்கின்றன. மக்கள் அவற்றில் மயங்கி நிற்க உணவு உட்பட அத்தியாவசியப் பொருள்களின் விலைகள் மலை போல் உயர்ந்தன. வாக்களிக்கப்பட்ட ஊதிய உயர்வுகள் மறுக்கப்பட்டன. வேலையற்றோர் தொகை அதிகரிக்க ஆரம்பித்தது. இவற்றுக்கு எதிரான போராட்டங்கள் எழாமல் இல்லை. ஆனால் அவை ஆயுதப்படைகள் மூலம் அரசின் குண்டர்களாலும் வன்முறை மூலம் அடக்கப்பட்டன. அந்தப் போராட்டங்கள் நாட்டின் அபிவிருத்தியைக் குழப்ப ஐக்கிய தேசியக் கட்சியும் ஜே.வி.பியும் மேற்கொள்ளும் சதி நடவடிக்கைகள் எனப் பிரசாரம் செய்யப்பட்டன. சிங்கள மக்களில் ஒரு பகுதியினரும் அதை நம்பினர். ஆனால் தனியார் துறையினருக்கு ஒய்வூதியம் வழங்குவது என்ற பேரில் ஊழியர்களின் சேவைக்காலம் சேமிப்பு நிதியான ஊழியர் சேமலாப நிதி, ஊழியர் நம்பிக்கை நிதியம் என்பவற்றை அரசு அபகரிக்க முயன்றபோது பெரும் எதிப்புணர்வு எழும்பியது.

கட்டுநாயக்க சுதந்திர வர்த்தக வலய ஊழியர்கள் போராட்டக் களத்தில் இறங்கினர். அவர்கள் நடத்திய ஆர்பாட்டப் பேரணி மீது பொலிஸாரும் காடையர்களும் இணைந்து தாக்குதல் நடத்தினர். இதில் ஒரு தொழிலாளி கொல்லப்பட்டார். 240 இற்கு மேற்பட்ட தொழிலாளர்கள் காயமடைந்தனர்.

இது தென்னிலங்கையில் பெரும் கொந்தளிப்பை ஏற்படுத்தியது. இந்தத் தாக்குதலைக் கண்டித்துப் பல ஆர்பாட்டங்கள் இடம்பெற்றன. நிலைமை மோசமடையவே தாக்குதலை முன்னின்று நடத்திய இரு பொலிஸ் அதிகாரிகள் கைது செய்யப்பட்டனர். பொலிஸ்மா அதிபர் மஹிந்த பாலசூரிய சம்பவத்துக்குப் பொறுப்பேற்று தான் பதவி விலகிக் கொண்டார். உத்தேச ஓய்வூதியத் திட்டமும் கைவிடப்பட்டது.

மேலோட்டமாகப் பார்க்கும் போது அரசு நடத்தி முடித்த சம்பவங்களுக்காக மனம் வருந்துவது போலவும் தவறு செய்தவர்கள் தனிப்பட்ட பொலிஸ் அதிகாரிகள் என்பது போலவும், அரசு அவர்களைத் தண்டிக்கிறது போலவும் தோன்றும்.

ஆனால் ஆழ்ந்து கவனிக்கும் போது இப்படியான போராட்டங்கள் இனி எழ முடியாதவாறு ஒரு இறுக்கமான நிலையை உருவாக்குவதற்காகவே இந்தத் தற்காலிகப் பின்வாங்கல் என்பதை புரிந்து கொள்ள முடியும். இதற்கான அடித்தளங்கள் உருவாக்க இப்போதே நடவடிக்கைகளும் பிரசாரங்களும் தொடங்கிவிட்டன.

இந்தப் போராட்டத்தை ஜே.வி.பியே பின்னணியில் நின்று நடத்தியதாகவும் இது மீண்டும் நாட்டில் 1988, 1989ஆம் காலப்பகுதிகளில் இடம்பெற்ற இரத்தக்களரி போன்று ஏற்படுத்த முயல்வதாகவும் குற்றம் சுமத்தப்பட்டது. அது மட்டும்மன்றி அனைத்து இலங்கை மாணவர் அமைப்பின் தலைவரான சஞ்சீவ் பண்டாரவே பின்னணியில் நின்று வன்முறைகளைத் தூண்டி விட்டவர் எனவும் கூடப் பிரசாரம் செய்யப்படுகிறது. இதேவேளையில் கட்டுநாயக்க சம்பவம் தொடர்பாக விசாரித்த ஒரு ஜனாதிபதி ஆணைக்குழு நியமிக்கப்பட்டுள்ளது. இது தன் விசாரணையில் சஞ்சீவ் பண்டார உட்பட சில தொழிலாளர் அமைப்பின் முக்கியஸ்தர்கள் குற்றம் காணப்படலாம். சில சமயங்களில் கலவரங்களைத் தூண்டியது, அமைதியைக் குலைத்தது போன்ற காரணங்கள் கூறப்பட்டு அவர்கள் கைதுசெய்யவும் படலாம். மேலும் சிறிலங்கா சுதந்திரக் கட்சி தொழிற்சங்கத்தினர் மூலம் தொழிலாளர்களின் ஐக்கியத்தை சீர்குலைக்கவும் தொழிலாளர்கள் மத்தியில் மோதல்களை உருவாக்கவும் திட்டமிட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படலாம். எல்லாவற்றுக்கும் மேலாக தொழிலாளர்களின் உரிமைகளுக்காக உரத்துக் குரல்கொடுப்பவர்கள் மீது பயங்கரவாத முத்திரையும் குத்தப்படலாம். இன்று தென்னிலங்கையில் வாழ்க்கைச் செலவு உயர்வுக்கு எதிரான போராட்டங்கள், மாணவர் போராட்டங் கள், மருத்துவத் துறையினரின் போராட்டங்கள், தனியார்துறை ஊழியர்களின் போராட்டங்கள் என்பன ஆங்காங்கே வெடித்து வருகின்றன.

இன்று இலங்கை அரசு உலக வங்கி, சர்வதேச நாணய நிதியம் என்பவற்றைத் திருப்திப்படுத்தும் வகையில் அரச செலவினங்களைக் குறைத்தல் என்ற பெயரில் ஊதிய உயர்வு வழங்காமை, மருத்துவம் கல்வி போன்றவற்றுக்கான செலவினங்களைக் குறைத்தல் போன்ற நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது. இது மேலும் மேலும் மக்களுக்கு நெருக்கடிகளை ஏற்படுத்தவே செய்யும். இப்படியான நிலைமையில் போராட்டங்கள் எழுச்சி பெறுவது தவிர்க்க முடியாத நியதி ஆகிவிடும். இதன் வளர்ச்சி எகிப்து, டுனிஷியா போன்ற ஒரு நிலைமைக்கு இட்டுச் சென்றாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

இதேவேளையில் அரசு இந்த நிலைமைகளை உணரவில்லை என்று சொல்லிவிட முடியாது. அதற்கமைவாகவே வியூகங்களை வகுத்து செயற்பட்டு வருகிறது. அவ் வியூகத்தை விட்டு கை மீறிப் போன ஒரு விடயமாகவே கட்டுநாயக்க சம்பவம் பார்க்கப்படுகிறது. ஆனால் அரசு இதிலிருந்து பாடங்களைக் கற்றுக் கொண்டு இன்னொரு முறை இப்படியான சம்பவம் இடம் பெறா வண்ணம் அவதானமாக இருக்கும்.

ஆனால் இங்குள்ள துரதிஷ்ட வசமான நிலை என்னவென்றால் அரசு பிரச்சினைகளை தீர்ப்பதை விட அவற்றைத் திசை திருப்புவதையே பிரதான தந்திரோபாயமாகக் கையாள்கிறது. அது வெற்றி பெறாத போது அடுத்த கட்டமாக அடக்குமுறையை கையிலெடுக்கத் தயார் நிலைமையையும் ஏற்படுத்தி வைக்கிறது.

போர் வெற்றி தமிழினத்துக்கு எதிரான நடவடிக்கைகள், அபிவிருத்தி பற்றிய மாயை என்பன போன்ற திசை திருப்பல்கள் நீண்ட காலத்துக்குச் செல்லுபடியாகப் போவதில்லை என்பதற்கு கட்டுநாயக்க சம்பவம் ஒரு ஆரம்பமாகவே தென்படுகிறது. இவை எவையுமே பசி, வறுமை என்பன அதிகரிக்கும் போது நலிவடைவது தவிர்க்க முடியததாகும். இந்த நிலையில் போராட்டங்கள் எழுச்சி பெறுவதை எந்த ஒரு பொய்மானையும் காட்டித் தடுத்து விட முடியாது.

அபிவிருத்தியை விரும்பாதவர்கள்,அந்நிய சக்திகளின் கையாள்கள், தேச விரோத சக்திகள் போன்ற கோஷங்களின் நிழலில் நின்று அரசு தனது அடக்குமுறையை மேற்கொள்ளும். எனினும் அடக்குமுறைகள் கூட நீண்ட நாள்களுக்குத் தாக்குப்பிடிக்க முடியாது.

வடக்கு, கிழக்கு இன்று முழுமையிலும் இராணுவமயமாக்கப்பட்டுவிட்டது. காணுமிடமெங்கும் இராணுவ முகாம்களும் காவலரண்களுமே தென்படுகின்றன. இடம்பெறும் ஒவ்வொரு சம்பவத்திலும் இராணுவ தலையீடு கட்டாயமாகி விட்டது.

தென்னிலங்கையிலும் இதே நிலைமையை உருவாக்குவதற்கான தயாரிப்புகள் ஆரம்பிக்கப்பட்டு விட்டன. நாடு முழுவதும் முந்நூறுக்கு மேற்பட்ட இராணுவ மையங்கள் அமைக்கப்படவுள்ளன. இவை போராட்டம் ஆரம்பிக்கும் இடங்களிலேயே முளை விடும் நேரத்திலேயே அடக்கி விடுவதை நோக்கமாகக் கொண்டவை என்றே நம்பப்படுகிறது. பெரும் போராட்டங்கள் உருவாவதைத் தடுக்கும் ஒரு உத்தியாகவே இது கருதப்படுகிறது.

இனிவரும் நாள்களில் சிங்கள மக்கள் சந்திக்கப் போகும் நிலைமைகள் நடந்த காலத்திலே தாம் இனவெறியூட்டி எப்படி ஏமாற்றப்பட்டவர்கள் என்பதைப் புரிந்து கொள்ளும் நாள்களாகவே அமையும். தாம் அடக்கு முறையின் கொடுமையை அனுபவிக்கும் போது தமிழ் மக்கள் அடக்குமுறை நெருப்பில் வெந்து கொண்டிருப்பதைப் புரியமுடியும்.

அப்படி உணரும்போது மட்டுமே தமிழ் மக்கள் தங்கள் உரிமைகளுடனும் சிங்கள மக்கள் தங்கள் உரிமைகளுடனும் வாழ அடக்கு முறைகளுக்கு எதிராக ஒன்றிணைந்து போராடும் காலம் மலரும். *

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
12 ஜூன் 2011 ஞாயிற்றுக்கிழமை


## Kalaimagal International College
## ஆங்கில மொழிமூல ஆசிரிய பயிற்சிக் கல்லூரி, கொக்குவில்

எமது கலைமகள் சர்வதேச கல்லூரியின் ஆசிரியர் தேவையைப் பூர்த்தி செய்யும் வகையில் எம்மால் நிர்வகிக்கப்படும் கலைமகள் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் இணைந்து ஒருவருட கற்கை நெறியை வெற்றிகரமாகப் பூர்த்தி செய்தவர்கள் தற்போது எமது சர்வதேச பாடசாலையில் ஆசிரியராகப் பணியாற்றுகிறார்கள் என்பதைப் பெருமையுடன் அறியத்தருகின்றோம்.

எமது கல்லூரியின் 2ஆம் தொகுதி மாணவர்கள் ஜூன் மாதத்துடன் அவர்களது கற்கை நெறியை வெற்றிகரமாக முடித்து, எமது ஆசிரியர் குழாமுடன் இணைகிறார்கள். எமது தேவை சுமார் 300இற்கும் மேற்பட்ட ஆசிரியர்கள் என்பதால் 4ஆம் தொகுதி மாணவர்களுக்கான நேர்முகத்தேர்வு 13.6.2011, 14.06.2011 ஆகிய திகதிகளில் காலை 9மணிமுதல் நடைபெற உள்ளதால் ஆற்றலும் தகுதியுடைய மாணவர்கள் நேர்முகத் தேர்வுக்கு உங்களுடைய ஆவணங்களுடன் நேரில் சமுகம் தரவும்.



(49)

தகுதி:-
★ க.பொ.த (உ/த) சித்தியெய்தியவராக இருக்க வேண்டும்
★ க.பொ.த (உ/த) அல்லது (சா/த) ஆங்கிலப் பாடத்தில் சித்தியடைந்தவராக இருக்க வேண்டும்.
★ 2011இல் 30வயதுக்கு மேற்படாதவராக இருக்க வேண்டும்

மேலதிகவிவரங்களுக்கு....

**KALAIMAGAL INTERNATIONAL COLLEGE**
Church Road (குளப்பிட்டிச் சந்தி) Kokuvil.
**T.P: 0778834592, 0774904286.**

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் முதலாவது பெண் துணைவேந்தர்



தென்மராட்சியின் புதல்வி
பேராசிரியர்
**வசந்தி அரசரட்ணம்**
அவர்களின்
**கௌரவிப்பு விழா அழைப்பு**

காலம்: *இன்று பி.ப. 2 மணி*

இடம்:
தென்மராட்சிக் கலைமன்றக்
கலாசார மண்டபம்
(சிவன்கோயில் வீதி, சாவகச்சேரி)

தலைவர்: *அ.கயிலாயபிள்ளை*
(அதிபர்,
சாவகச்சேரி இந்துக் கல்லூரி)

நிகழ்வுகள்
★ சாவகச்சேரி வாரிவனம் முத்துமாரி அம்பாள் ஆலயத்தில் இருந்து வரவேற்பு ஊர்வலம்
★ ஆசியுரைகள்
★ வாழ்த்துரைகள்
★ வசந்தம் சிறப்பு மலர் வெளியீடு
வெளியிட்டு வைப்பவர்: *திருமதி இமெல்டா சுகுமார்* (யாழ்.மாவட்ட அரச அதிபர்)
★ கௌரவிப்புக் கேடயம் வழங்கல்
வழங்கிக் கௌரவிப்பவர்: *பேராசிரியர் க.கந்தசாமி* (பீடாதிபதி, விஞ்ஞானபீடம், யாழ்.பல்கலைக்கழகம்)
★ அவையோர் கௌரவிப்பு

*பேராசிரியரின் அபிமானிகள் இந்த அழைப்பையே தனிப்பட்ட அழைப்பாக ஏற்று வருகை தந்து சிறப்பிக்குமாறு பணிவாக வேண்டுகின்றோம்.*

விழாக் குழுவினர்

*எம் மண்ணின் புதல்வியை வாழ்த்துவதில் மகிழ்வடைகின்றோம்.*
**அம்பிகா மருந்தகம்**
கண்டி வீதி, சாவகச்சேரி.

(48,20,21)

உ

## புதுக்கடைத் திறப்புவிழா

இன்று (12.06.2011) ஞாயிற்றுக்கிழமை காலை 8.52 தொடக்கம் 10.22 வரை உள்ள சுபமுகூர்த்தத்தில் யாழ்.என்ரப்பிறைசஸ் என்னும் ஸ்தாபனத்தை ஆரம்பிக்கவுள்ளோம். இந்நிகழ்வில் எமது அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள், அனைவரையும் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

- உரிமையாளர்.

## யாழ்.என்ரபிறைசஸ்

*(உடற்பயிற்சி சாதன கிளிநொச்சி முகவர்)*

**இல.40, டிப்போ வீதி,
உதயநகர் மேற்கு, கிளிநொச்சி.**



வெற்றிக்கேடயங்கள், கல்வியியற் கல்லூரிக்கான சீருடைகள், விளையாட்டுக் கழகங்களுக்கான விளையாட்டுச் சீருடைகள், பாடசாலை விளையாட்டு உபகரணங்கள், காலணிகள் மற்றும் உடல் வலுவூட்டல் உபகரணங்கள் என்பவற்றைப் பெற்றுக்கொள்ள விரையுங்கள்.

**ESER MARKETING
DYNAMIC FITNESS**



(48,19,22)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மற்றவன் நன்றாக வாழ்வது உனக்குப் பிடித்தமானதா...?

"மனித இனத்தின் வரலாற்றில் ஒரு பெரும் சிக்கல் நிறைந்த திருப்பு மையத்தில் நாம் நிற்கிறோம். அச்சம்,ஏக்கம், இருள் என்ற துன்ப உணர்வுகளால் மூடப்பட்டு ஒரு புதிய வாழ்க்கைக் கோலத்தைச் சித்திரித்து புத்தூக்கத்துடன் புதிய அத்தியாயத்தைத் தொடங்க ஆசைப்படுகிறோம். இந்தியப் பண்பாடு மிக்க மாற்றங்களைக் கண்டுவிட்டது. ஆனால் பல்லாயிரம் ஆண்டுகளாக நிலைத்துள்ள அறிவு நெறி (வேதநெறி)உலகுக்கு வழிகாட்டும் அண்டம் அளாவிய ஆன்மீக நெறியாகப் புதிய குருத்து விட்டு வளரும்"

இச்சாரப்பட்ட அறிமுகவுரையைத் தத்துவ ஞானி இராதாகிருஷ்ணன் தமது "பிரம்மசூத்திரம்"என்ற நூலில் ஆன்மீக வாழ்வுத் தத்துவமாக முன்வைக்கிறார்.

ஔவைப் பிராட்டியின் ஞானமொழி என முதிய தலைமுறையினர் படித்த வெண்பாவில் தேவர் குறள், நான்மறை முடிவாகிய உபநிடதங்கள், மூவர் தேவார முதலிகள் அருளிய திருமுறைகள், மாணிக்கவாசகரின் திருக்கோவையார் , திருவாசகம், திருமந்திரம் ஆகிய வற்றோடு வரிசைப்படுத்திய நூல் பிரம்ம சூத்திரம்.

அதற்கு உரையாசிரியர்கள் அலங்கார உரைகளைச் செய்து அதன் உண்மையை மறைத்து விட்டார்கள். அவர்களில் உள்ள வெறுப்பால் சிவஞான முனிவர் "மாயாவாத நூல் செய்தான் வியாகன்" என்று சங்கரர் உரையையும் மூல நூல் ஆகிய வியாசர் என்ற பாதராயனர் அருளிச் செய்த பிரம்ம சூத்திரத்தையும் சேர்த்துத் தள்ளிவிட்டார்.

யாழ்ப்பாணத்தின் மிகப் பெரும் வேதாகம அறிஞர் ஆகிய செந்தி நாதையர் பிரம்ம சூத்திர நீலகண்டர் பாடியதை சிவாத்துவித சைவ உரையிலுள்ள ஓரிரு குறைகளை நீக்கி மொழி பெயர்த்து அச்சிட்டார். 1907ஆம் ஆண்டின் பின் இப்போது அதன் மறுபதிப்பு வந்ததாக அறிகிறோம். எம்மவருடைய கவனம் எல்லாம் சமயத்தின் புற விடயங்களைத் தொடும் ஆடம்பரங்களைத்தான் சொல்கிறது.

பிரம்ம சூத்திரம் அருளிய வியர்சருக்கே சித்தாந்தம் எட்டும். சித்தாந்தம் ஏட்டில் எழுதிய நூல் மட்டுமல்ல அது உயர் வாழ்க்கை நெறி. ஆரம்ப நிலையில் உள்ளவர்களுக்கும், ஞானஉச்ச நிலையை நோக்கு பவர்களுக்கும் அதில் வழி உண்டு. வழியில் உள்ள பள்ளங்கள், பொறி கிடங்குகளில் விழாது சிவகதி, செல்நெறியில் தடங்கலின்றிப் போவதற்கு அதில் வழி உண்டு என்கிறார் மௌன தவமுனிவர் பொ.கைலாசபதி.

அவருடைய பழைமைக்குப் பழைமையாயும் புதுமைக் குப் புதுமையாயும் உள்ள கருத்துக்கள் 1994 இல் யாழ். பல் கலைக் கழகத்தால் 700 பக்க நூலாக வெளிவந்தது. 50 பிரதிகளைத் தட்டச்சுப் படிவேட்டில் வந்தபடியால் அதைப் பலர் படித்திருக்கமாட்டார்கள். அதிலிருந்து சில நிலைத்து நிற்கக்கூடிய கருத்துக்கள்ள கீழே தருகின்றோம்.



**பொ.கைலாசபதியின் சிந்தனைகள்**

ஒருவன் முதலில் வஞ்சகத்தை விடவேண்டும். நோக்கம் சுத்தமாதல் வேண்டும். ஒருவனிடம் நன்மை இருக்கிறது (தீமை மிகக் குறைந்தே உள்ளது) எனக்கண்டால் அவனை மதிக்கப்பழக வேண்டும்.

பொறாமையை விட வேண்டும். பெறாமை பஞ்சுப் பொதியினுள் வைத்துக் கட்டிய சிறு பொறி போல ஆளை உள்ளே எரித்து அழித்து விடும்.

பிழையான பிடிகளை உதறி விட வேண்டும். ஆனால் அபிமானம் காரணமாக "நான் இத்தனை காலம் அது என் கொள்கை என்று பிடித்துக் கொண்டு இருந்து விட்டு அதை விட்டால் உலகம் என்னை மதிக் காதே" என்று நினைப்பவன் பிடிவாதத்தை விடான், திருந்த வும் மாட்டான் .

இந்த மூன்றையும் விட்ட வழியே,**சித்தாந்தம் சித்திக்கும்.** (சித்தாந்தம் பட்டங்களைப் பெயருக்கு பின்னும் முன்னும் ஒட்டுவதால் வந்து விடமாட்டாது.

சமயம் மனிதனுடன் பிறந்த இயல்பு ஊக்கங்களை உண்மையாகவே சீர்படுத்துவது. உளவியலாளர் 18 இயல்பூக்கம் உண்டு என்பர். நம்மவர் அவற்றை அறுவகை என்று சுருக்குவர். வள்ளுவர் காமம், வெகுளி, மயக்கம் என்ற மூன்றுக்குள் அடக்கி விட்டார். அவற்றைச் சீர்படுத்தாமல் மூடி வைத்து விட்டுச் சமயம் பேசுவது வெறும் வாய்வாதமே. சமயம் கதி பற்றியது. "கதிப்பாற் செல்ல யாது நெறி" என்பார்க்கு உரியது.

சமயத்துறையின் பூரணம் சித்தாந்தம்.

சமயத்துறைகள் அவரவர் பக்குவத்துக்கு ஏற்ப அவருக்குக் கிடைக்கின்றன. (லபிக்கின்றன)

தீமைக்குக் காரணம் அறியாமை மாத்திரம் அன்று. புத்தக அறிவு கூடக்கூட, தீமை நாட்டில் குறைய வேண்டுமே!ஏன் குறையவில்லை? நன்மையை விரும்பாமைதான் பிரதான காரணம். மற்றவன் வாழ்வது உனக்கு விருப்பமா? அவன் உன்னிலும் கீழ் நிலையில் துன்பப்பட்டால்,'ஐயோ பாவம்,நான் அவனுக்கு உதவுவேன்' என்கிறாய். அவன் உனக்குச் சமனாக உயர்ந்தால் 'என்னால்தானே உயர்ந்தான்' என்று பெருமைப்படுகிறாய் அவன் உன்னிலும் உயர்ந்து விட்டாலோ "சீ அந்த நாயை நான்தான் தூக்கி மெத்தையில் வைத்தேன். இப்போ அது பகட்டில் திரிகிறது" என்கிறாய். ஏன் உனக்கு அவன் உயர்வதில் விருப்பம் இல்லை?

"எல்லோரும் வாழ வேண்டும" என்பது நல்ல கருத்து.நீரில் மூழ்குகிறவனைக் காப்பாற்ற நினை. அதற்காக உன் நீச்சல் திறமையைக் கருதாமல் அவனைக் கட்டிக்காப்பாற்றப் போய் அவனுடன் மூழ்கிவிடாதே.

அந்தணர்கள் முத்திச் செல்வர்கள். காலை மாலை ஓமம் வளர்த்து, அதில் தங்கள் குறை, குற்றங்களை எல்லாம் ஓமஞ் செய்கிறார்கள். தங்கள் குற்றம் சாம்பலானால் மட்டும் போதாது. தங்களைப் போல் பிறரும் நன்றாக வாழ விரும்புகிறார்கள். அதனால் "எல்லா உயரிணங்களும் சுகமாக வாழ்க" என வாழ்த்துகிறார்கள். ஐயர் பூசை முடிவில்"எல்லா மனிதர்களும் வாழ்க"எனக் கூற வில்லை.'சர்வேஜனா(ஹா) சுகினே(ஹ)பவந்து'- 'பிறவி எடுத்த ,அனைத்து உயிர்களும் நலமுடன் வாழ்க' என்றே வாழ்த்துகிறார்.

"மற்றவன் வாழ்வதில் உனக்கு விருப்பமா?" ஒவ்வொருவரும் தம் நெஞ்சில் கை வைத்துச் சொல்லட்டும் " தன் நெஞ்சறிவது பொய்யற்க" உன் பிள்ளையுடன் படிக்கும் பையன் கூடிய புள்ளிகள் எடுக்கும் போது, உனக்கு.... சிந்தி....

**மூதறிஞர் ஆ.சபாரத்தினம்**

# தொண்டைப் புண், வரட்டு இருமலுக்குச் சிறந்தது மிளகு


**மிளகு**

**வேறு பெயர்-** மரீசம் கறி மிரியல்
**தாவரவியற் பெயர்-** (Piper nigrum)
(பைபர் நைகிறம்)
**குடும்பம்-** (Piperaceae) (பைபரேசியே)
**சிங்களப்பெயர்-**கம்மீரிஸ்
**சமஸ்கிருதப் பெயர்-** மரீச்ச
**ஆங்கிலப் பெயர்-** (Black Peper)

பண்டைத் தமிழனுக்குப் பணவருவாய் தேடித் தந்த பெருமை மிளகுக்குண்டு. மிளகாய் அறிமுகமாகாத காலத்தில் கறிக்கு சுவையையும் உறைப்பையும் உண்டுபண்ணுவதற்கு மிளகு பயன்படுத்தப்பட்டுள்ளது. பின்னாளில் மிளகின் உறைப்பிலும் பார்க்கக் காரமான உறைப்புள்ள நீண்ட காயாக (மிளகு+ காய்) மிளகாய் அறிமுகமானதும் மிளகின் பயன் வெகுவாகக் குறைந்துவிட்டது. ஆனால் மிளகாயிலும் பார்க்க மிளகு பல மடங்கு உடலுக்கு நன்மை பயக்க வல்லது. "பத்து மிளகிருந்தால் பகை வீட்டிலும் விருந்துண்ணலாம்" என்றொரு மருத்துவப் பழமொழியும் உண்டு. உணவுடன் வழங்கப்படும் எந்தவிதமான நஞ்சுகளையும் மிளகு செயலற்றதாக்கவிடும் என்பதே இதன் பொருள். சித்த மருத்துவத்தில் பயன்படும் பலவித பாஷாண நஞ்சுகளை நீக்குவதில் மிளகு பயன்படுகிறது. பசும்பால் கெட்டுப் போகாமலிருத்தற் பொருட்டு பாலில் மிளகு போட்டு வைப்பது இன்றுவரை கிராமங்களில் காணப்படும் வழக்கம். மேலும் மிளகாய் மிகுதியாகச் சாப்பிடும்போது அதன் காரத்தன்மை காரணமாக இரைப்பைக் குடற்புண் முதலிய கெடுதிகள் ஏற்படும் ஆனால் மிளகால் அவ்வித கெடுதிகள் ஏற்படமாட்டாது என்பதுடன் உண்ணும் உணவு நன்கு சீரணமடையவும் அது உதவும்.

இத்தகு பெருமை வாய்ந்த மிளகு கொடி வகுப்புக்குரியது. மலைப்பிரதேசத்தில் அதிகம் பயிராகும். இலைகள் கரும் பச்சை நிறம். வெற்றிலை போலிருக்கும். தனியிலைகள் பளபளப்பானவை. காய் பச்சை நிறம். விதை கறுப்பு.

மிளகை வாதமடக்கி இலை, கருநொச்சியிலை, சேர்த்தவித்த நீரால் மூட்டுவீக்கம், அடிபட்ட வீக்கம், வலியுள்ள இடங்களைக் கழுவி, அவ்விலைகளால் ஒத்தடம் கொடுத்துவர விரைவில் சுகம் ஏற்படும்.



**நலம்தரும் தெய்வீக மூலிகைகள்**

மிளகைப் பொடித்து 250- 500 மி.கி. அளவில் சுடுநீரில் சாப்பாட்டுக்கு முன் சாப்பிட்டு வர பசியைத் தூண்டும். மிளகைப் பொடித்துச் சுடுநீரில் ஊற வைத்து வடிகட்டி அந்த நீரை 2-3 தேக்கரண்டி வீதம் கல்கண்டு சேர்த்துப் பருகி வர தொண்டைக் கம்மல், தொண்டைப் புண், வரட்டிருமல் என்பன நீங்கும்.

சுக்கு, மிளகு, திப்பலி ஆகிய மூன்றும் சேர்ந்ததற்கு திரிகடுகு என்று பெயர். இந்தக் கூட்டு மருந்து சங்கமருவிய காலத்தில் கூடச் சிறப்புற்று விளங்கியதால் அந்தக் காலத்தில் எழுந்த ஒரு தமிழ் நூலுக்கே திரிகடுகம் என்று பெயர் சூட்டியுள்ளார்கள். மேற்படி சுக்கு, மிளகு, திப்பலி ஆகிய மூன்றையும் பொடி செய்து 500 மி.கி - 1 கி அளவில் காலை, மாலை சாப்பிட்டு வர பசியின்மை, அசீரணம், வயிற்றுப் பொருமல், இருமல், நாச்சுவையின்மை முதலியன நீங்கும். இந்த மூன்று மருந்துச் சரக்குகளையும் சமவளவில் எடுத்துக் குடிநீர் செய்தும் பருகிவரலாம்.

**ஏழிலைப் பாலை**

**வேறு பெயர்-** சப்தபர்ணி
**தாவரவியற் பெயர்-** Alstonia scholaris
(அல்ஸ்ரோனியா சொலாரிஸ்)
**குடும்பம்-** Apocyanaceae
(அப்போசைனேசியே)
**சிங்களப்பெயர்-**ருக் அத்தன
**சமஸ்கிருதப்பெயர்-** சப்தபர்ணி
**ஆங்கிலப்பெயர்-** Devil Tree

ஏழு இலைகளைக் கொண்டதால் இந்தத் தாவரம் ஸப்தசாதா என்று இராமாயணத்தில் குறிப்பிடப் பெற்றுள்ளது. இது பெருமர வகுப்புக்குரியது. தனியிலைகள் கிளையில் ஒரு சுற்றாகக் காணப்படுவதால் கூட்டிலை போல் தோற்றமளிக்கும். இலைகள், மாவிலை போன்றிருக்கும். பூக்கள் பச்சை, வெள்ளை நிறம்.

ஆவணி- பங்குனி மாதங்களில் பூக்கும். இதன் மரப்பட்டை உட்புறம் மஞ்சள் நிறமாகவும் பஞ்சு போன்று இருக்கும். இப்பட்டையை இடித்து எடுத்து நீர் விட்டு முறைப்படி குடிநீர் செய்து காலை, மாலை குடித்து வர மூளைக்காய்ச்சல், வயிற்றோட்டம், சீத பேதி என்பன மாறும். நாள்பட்ட வயிற்றுப் போக்குள்ளவர்களுக்கும் இது நல்ல குடிநீராகும். இதன் வேரை உலர்த்திப் பொடித்து 500 மி.கி. அளவில் சுடுநீரில் சாப்பிட்டுவர குன்மம், சூலை, வயிற்றுவலி என்பன மாறும்



(தொடரும்...)

Dr. சே.சிவசண்முகராஜா M.D (S),
சிரேஷ்ட விரிவுரையாளர், சித்த மருத்துவத்துறை, யாழ்.பல்கலைக்கழகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சொற்சிலம்பம் - போட்டி இல: 166

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | | 3 | 4 | | 5 | 6 |
| 7 | | | 8 | | 9 | | |
| | 10 | 11 | | | 12 | | |
| 13 | | | | 14 | | | 15 |
| 16 | | | 17 | | | | |
| | | 18 | | | | 19 | |
| 20 | 21 | | | | 22 | | |
| | 23 | | | | | | |

அனுப்புபவர் பெயர்:..............................................

விலாசம்:..............................................

..............................................

கையொப்பம்:..............................................

### இடமிருந்து வலம்

1.ஓட்ட வீராங்கனை
5.எந்நேரமும்
7.தமிழ்நாட்டிலிருந்து இலங்கைத் தமிழருக்காக குரல் கொடுப்பவர்.
8.பார்த்து அறிய நடத்தும் நிகழ்ச்சி
10.ஒன்றுக்குரிய திறமை
12.ஒரு திசையின் சுருக்கம்
13.ஒரு வகைப் பூமரம்
14.கண்ணகி கையில் எடுத்தது
16.சாப்பிடு/ உண்
17.உயர்திணை, ஆண்பால், ஒருமை, படர்க்கை, இடத்துப் பெயர்ச் சுட்டு.
18.நோக்கம்
19.அநாதி அல்ல
20.கொடை/ஈகை/ ஈகம்
22.அன்னை
23.இன்புறல் இன்றிப் போதல்

### மேலிருந்து கீழ்

1.ருசி
2.உடன் பிறந்தவன்
3.தினசரி மாறுவது
4.பார்
5.இது ஒரு கழுதை என்பர்
6.கணிகை
9.பாதுகாப்புத் தருபவன்
11.நீராடு
13.தலைவன்
14.சித்தம் போக்கு, இந்தப் போக்கு என்பர்.
15.இவன் பலவான்
17.முகை
18.யானை பணிவது இவனுக்கு
19.பால்பகா உயர்திணை தன்மைப் பன்மை
21.எது?
22.இரவு

★ வாசகர்கள் மத்தியில் குறிப்பாக மாணவ, மாணவியர் மத்தியில் பொது உளச்சார்பு மற்றும் மொழி அறிவை வளர்த்து விடத் தூண்டுவதே இப்போட்டி நடத்தப்படுவதன் முக்கிய குறிக்கோள்.

★ ஒவ்வொரு போட்டியிலும் ஏராளமான வாசகர்கள் ஆர்வத்துடன் கலந்துகொள்வதுடன், அவர்களில் பெரும்பாலானோர் முற்றிலும் சரியான விடைகளை அனுப்பி வருவதால் பரிசுக்கும் பாராட்டுக்கும் உரிய அதிஷ்டசாலிகள் குலுக் கல் முறைமூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

★ சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 164 இற்கான சரியான விடைகள் வருமாறு:

### இடமிருந்து வலம்

(1)பலவிதம்(5)சுமை (7)கத்திரி. (8)பயல் (9)வாதி (10)சபலம். (12) கனல் (13)வகு (15)குலம். (16) புரளி. (17)அரிவை (18)தலம் (19) நாசி (20)கடும் (22)தில்லானா (23)புதன்

### மேலிருந்து கீழ்

(1) பகவான்(2)லத்தி. (3)விதி. (4)தரிசனம் (5)சுயம்வரம் (6)மைல் (8)பல. (11)பல் (12)கலவை (13)வரம் (14) குளி (15)குரிசில் (16)புலம்பு (18)தடு (20)கனா (21)நான்.

★ சொற்சிலம்பம் போட்டி தொடர்பான வாசகர்களது ஆலோசனைகளும் கருத்தில் எடுக்கப்படும்.

★ சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 164 இற்கான சரியானவிடைகளை எழுதி அனுப்பியவர்களில் குலுக்கல்மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளது பெயர் விவரங்கள் வருமாறு:

1 ஆம் பரிசு — **ப.சிவசூரியர்,** அரியநாயகம் கமம், D.4. கிளிநொச்சி.

2 ஆம் பரிசு — **ப.வி.சுபாகர்,** 31, புதுவீதி, 1ஆம் ஒழுங்கை, கொய்யாத்தோட்டம், யாழ்ப்பாணம்.

3 ஆம் பரிசு — **கா.வேலுப்பிள்ளை,** 407,ஹொறவப் பொத்தான வீதி, இறம்பைக் குளம், வவுனியா.

4 ஆம் பரிசு — **கோ.நரேந்திரன்,** நளஞ்சியப் பகுதி, யாழ்.மாநகர சபை.

5 ஆம் பரிசு — **திருமதி ச.சொர்ணமலர்,** 'சொர்னமகால்',17/13 மன்னார் வீதி, வவுனியா.

### பாராட்டுப் பெறுவோர்

**சீ.சிவரம்பா,** 24/4,1/1 பிரான்சிஸ் வீதி, வெள்ளவத்தை, கொழும்பு- 6

**ந.பொன்னம்பலம்,** உபதபாலகம், மல்லாகம்.

**செல்வி.ச.கஸ்தூரிகா,** 30/14 இலந்தைக்குளம் வீதி, கொழும்புத்துறை.

பரிசுக்கு உரியோராகத் தேர்ந்தெடுக்கப்படுவோர் ஒரு வாரத்தின் பின்னர் ஞாயிற்றுக்கிழமை தவிர்ந்த அலுவலக நாள்களில் காலை 9.00 மணிமுதல் பிற்பகல் 2.00 மணிவரை தமக்குரிய பணப் பரிசில்களைத் தமது அடையாளத்தைச் சரியான வகையில் உறுதிப்படுத்தி 'உதயன்' அலுவலகத்தில் நேரில் வந்து பெற்றுக்கொள்ளலாம்.

யாழ். மாவட்டத்தைத் தவிர்ந்த ஏனைய மாவட்டங்களிலிருந்து பரிசுக்கு உரியோராகத் தேர்ந்தெடுக்கப்பட்டோருக்கான பணப்பரிசில்கள் காசோலை மூலம் காலக்கிரமத்தில் அவர்களது விலாசத்துக்குப் பதிவுத் தபால்மூலம் அனுப்பிவைக்கப்படும்.

### போட்டி விதிகள்

*1. வாசகர் எவரும் சொற்சிலம்பம் போட்டியில் கலந்து கொள்ளலாம்.*
*2. ஒருவர் எத்தனை கூப்பன்களையும் நிரப்பி அனுப்பலாம்*
*3. உதயனில் பிரசுரமாகும் கூப்பன்களே போட்டிக்கு ஏற்கப்படும்.*
*4. போட்டி தொடர்பாக ஆசிரியரின் தீர்ப்பே முடிவானதாகும்.*
*5. வெற்றி பெறும் முதல் ஐந்து பேர்களுக்கு முறையே ரூபா 300/=, ரூபா 250/=, ரூபா 200/=, ரூபா150/= ரூபா 100/= பணப் பரிசில்கள் வழங்கப்படும். அத்துடன் பாராட்டுப் பெறும் மூன்று அதிஷ்டசாலிகளது பெயர் விவரங்களும் உதயனில் பிரசுரிக்கப்படும்.*
*6. பூர்த்தி செய்யப்பட்ட கூப்பன்கள்,*

**சொற்சிலம்பம் போட்டி இல. 166**
*நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்)லிமிட்டெட்,*
இலக்கம் 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

என்னும் முகவரிக்கு எதிர்வரும் புதன்கிழமைக்கு அடுத்து வரும் புதன் கிழமைக்கு முன்னர், 22.06.2011 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கத்தக்கதாகத் தபாலட்டையில்ஒட்டி அனுப்பிவைக்கப்படவேண்டும்.

7. சொற்சிலம்பம் போட்டி இல.166 இல் வெற்றி பெறுவோர்களது விவரம் 26.06.2011 ஞாயிறு உதயனில் பிரசுரிக் கப்படும்.

# இரந்து ......

(13 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இவற்றையெல்லாம் அறியாத பெருந்தலைச் சாத்தனார் என்ற புலவர் தம் வறுமை தீர்ப்பான் என எண்ணி குமண வள்ளலைத்தேடி அவன் அரண்மனை நாடி வந்தார். குமணவள்ளல் கானகஞ்சென்ற கதையை ஊர்மக்கள் கூறக்கேட்டு, குமணனைத் தேடிக் காட்டுக்குச் சென்றார்.

இதற்கிடையில், குமணவள்ளல் உயிரோடு இருக்கும் வரை உனக்குப் புகழும் வராது; உயிருக்கும் ஆபத்தும் நேரலாம் என இளங்குமணனுக்குக் கூடா நட்பினர் யோசனை கூறினர். அதனால் குமணனின் தலையைக் கொய்து கொண்டு வருபவர்களுக்குக் கோடி பொன் பரிசளிப்பதாகத் தம்பி முரசறைவித்தான்.

இது, குமணன் செவிக்கும் போய்ச்சேர்ந்து விட்டது. ஒன்றுக்கும் உதவாத தனது தலைக்கு ஒருகோடிபொன் பெறுமதி கிடைத்ததே என்று குமணன் மகிழ்ச்சி கொண்டிருந்த வேளையில்....

''தனது வறுமையை எப்படியும் நீவிர் நீக்க வேண்டும்'' எனவேண்டிப் பெருந்தலைச் சாத்தனார் பாடி நின்றார்.

அப்பொழுது குமணன், தனது தலையைக் கொய்துகொண்டுபோய்த் தம்பியிடம் கொடுத்தால் அவன் ஒருகோடி பொன் பரிசில் வழங்குவான். உங்கள் வறுமையும் நீங்கும் எனக்கூறித் தனது வாளை உருவிப் புலவர் கையிற்கொடுத்தான்.

புலவர், கண்கள் குளமாக வாயடைத்து நின்றார். இவன் மனிதன் அன்றித் தெய்வமா? ஒருகணம் யோசனையில் ஆழ்ந்தார். மறுகணம் வாளைக் கையில் ஏந்தியபடி இளங்குமணனைத் தேடி நடக்கலானார்.

ஏடும் எழுத்தாணியும் ஏந்தும் புலவர், வாளேந்திய கையோடு நிற்கின்றார் எனக் காவலன் கூறக்கேட்ட இளங்குமணன் சிந்தனையில் ஆழ்ந்தான்.

இந்தப் புலவருக்கு வாளேந்தும் நிலை எப்படி வந்தது? ஒருவேளை அண்ணனின் தலையோடு வந்திருப்பாரோ? புலவரை வரவழைத்தான்.

வறுமையில் வாழும் புலவர், வாளும் கையுமாய் வந்தார். அரச கட்டிலுக்கு ஆசைப்பட்டு அண்ணனைக் காட்டுக்கு அனுப்பியது மட்டுமன்றி அவன் தலைக்கு விலைபேசிய தம்பி இளங்குமணனைக் கண்டார்; பாடினார்.

''நிலையில்லாத இவ்வுலகத்தில் நிலையான அன்பும் அருளும் உடையவர் தம்புகழை நிறுவித் தாம் மாய்ந்து போவர். அப்படி உயர்வான செல்வர் அருளாளர் இல்லாமையால் வறுமையால் வாடும் என் போன்றவர்களுக்கு ஈய்ந்து முன்னோர் புகழ்பெற்றதை அறியமாட்டார். பாடிவந்தவருக்கு யானையும் குதிரையும் கொடுத்த தலைவன் ஒருவனை யான்பாடி நின்றேன். அவன் அப்பொழுது தன்னிடம் கிடைக்கக் கூடியது இந்தத் தலைதான். இதைக்கொண்டுபோய் அரசனிடம் (தம்பி) கொடுத்தால் கோடி பொன் கிடைக்கும் என இந்த வாளைத் தந்தான் நின் அண்ணன். அந்த உவகையோடு வந்தேன் எனப்பாடி நின்றார் புலவர்.

*''மன்னா உலகத்து மன்னுதல் குறித்தோர்*
*தம்புகழ் நிறீஇத் தாம் மாய்ந் தனரே*
*துன்னருஞ் சிறப்பின் உயர்ந்த செல்வர்*
*இன்மையின், இரப்போர்க்கு ஈயாமையினால்*
*தொன்மை மாக்களின் தொடர்பறி யலரே;*
*தாள் பாழ் படுமணி யிரட்டும் பூநுதல்*
*ஆடியல் யானை பாடுநர்க் கருகாக்*
*கேடில் நல்லிசை வயமான் தோன்றலைப்*
*பாடி நின்றனெனாகக் கொன்னே*
*பாடுபெறு பரிசிலன் வாடினன் பெயர்தலென்*
*நாடிழந் ததனினும் நனியின்னாதென*
*வாள் தந்தனனே தலை எனக்கீயத்*
*தன்னிற் சிறந்தது பிறிதொன் றின்மையின்*
*ஆடுமலி உவகையோடு வருவல்*
*ஓடாப் பூட்கை நின் கிழமையோற் கண்டே [புறம்]*

என்ற துன்பப்பாடலைக் கேட்ட இளங்குமணன் செய்வதறியாது திகைத்தான். அண்ணனை எண்ணிப் பதறி அரியணையிலிருந்து மயங்கி விழுந்தான். மயக்கந் தெளிந்து புலவரைப் பார்த்தான். குமணனுக்குத் தம்பியாகப் பிறந்த ஒருவன் இயல்பிலே தீயவனாக இருக்க முடியாது என்பதை அவன் முகத்தைப் பார்த்து அறிந்து கொண்டார் புலவர்.

பின்னர் இளங்குமணன் புலவரோடு கானகஞ் சென்றான். அண்ணனைக் கண்டு நாணங்கொண்டு நின்றான். புலவர் இருவரையும் அமைதிப்படுத்தினார். குமணனிடம் வாளைக்கொடுத்து நாடு திரும்பி ஆட்சியில் அமர வரும்படி அழைத்தார்.

குமணன் நாடு திரும்ப உடன்பட்டது கண்டு இளங்குமணன் மனங்குளிர்ந்தான். மக்கள் எல்லோரும் விழா எடுத்துக் கொண்டாடினர். பாணர் யாழ் இசைத்தனர். விறலியர் ஆடினர். நாடு திரும்பிய குமணனின் பெருமையையும், பெருந்தலைச் சாத்தனாரின் அரிய செயலும் என்றும் அழியாத இலக்கியமாயிற்று.

# ரத்தம்......

(13 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ரத்தைஜ.... ரத்தைஜ.... என்ற புதிய சொல் சிறியவளின் மழலையிலிருந்து உதிர்ந்தது. அவளது காலை ஆராய்கிறேன். அவளது கீழ்க் காலில் மெல்லிய கருக்குக் கீறலும் அதிலிருந்து கசிந்திருந்த புதிய இரத்தமும் கண்ணிற்பட்டது. நான் அதைத்தொட்டுப் பார்க்க அவளது அழுகை ஓங்கிவிட்டது. இருவரையும் சமாதானம் செய்வதற்காக அணைத்துக்கொண்டு உள்ளே வருகிறேன். காலையில் கணிப்பீட்டுக் கருவி தயாரித்துவிட்டு மேசையின் மேல் வைத்திருந்த சிவப்பு மாக்கர், பென் கண்ணில்பட்டது. எடுத்துக் கொண்டு அவர்கள் அருகில் அமர்ந்தேன். பேனையால் கையில் நீளமான அடையாளத்தை இட்டு அவர்கள் முன் நீட்டினேன். ''இப்ப பாருங்கோ அம்மாவுக்கும் ரத்தம்... அம்மா அழேல்லப் பாத்தியளோ...'' கூறியபடி நான் சிரிக்க அவர்களும் என்னுடன் சிரிக்கிறார்கள்.

அவர்கள் இப்போது தமது சிறிய பொம்மையைக் குளிப்பாட்டி விளையாட முற்படுகின்றனர். நான் மெதுவாகக் கண்களை மூடினேன். மூடிய விழிகளுக்குள் அவள் வந்தாள். எறிகணை வீழ்ந்து வெடித்ததில் சிதறிப்போன அவளின் உடலிலிருந்து மண்ணில் பரவிக் கிடந்த இரத்தம். அவற்றை மறந்துபோகச் சொல்லுகிறார்கள். ஆனால், என்னால் அதை மறக்க முடியவில்லை. எல்லா மரணங்களிலும் வடியும் சிவப்பு இரத்தம் என் நினைவிலாடியது .என்னையறியாமல் விழிகள் நனைய ''தங்கச்சி'' என விம்முகிறேன்.

(யாவும் கற்பனை)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நித்தியசுகத்தை நோக்கி... உதயன் வைத்தியமலர் 22

# சலரோக நோயால் ஏற்படும் பாதிப்புக்களை குறைக்க கையாள வேண்டியவை

### கால்களைக் கழுவுதல்

தினந்தோறும் பாதங்களைக் காரத்தன்மை குறைந்த சவர்க்காரத்தைப் பயன்படுத்தி நன்றாகக் கழுவவும். பின்னர் மென்மையான துவாயினால் துடைக்கவும். துடைக்கும்போது விசேடமாகப் பெருவிரல் பகுதி, விரல் இடைவெளிகளில் கவனம் செலுத்தவும். பாதங்களை உலர்வான நிலையில் பேணவும். ஆயினும் அதிகம் உலர்வான நிலை காணப்படுமாயின் வெடிப்புக்கள் ஏற்பட்டு பற்றீரியாக்கள் பரவலாம்.

இவ்வாறான சந்தர்ப்பத்தில் அதிக உலர்தலைத் தடுக்க lanolin or vaseline பாவிக்கவும். களிம்புகள் படுக்கை விரிப்பில் படுவதைத் தடுப்பதற்காகப் பழைய காலுறையை அணிந்துகொள்ளவும்.

இயல்பாகவே கால்களில் அதிக வியர்வை உள்ளவர்களின் பாதங்கள் அதிகம் ஈரலிப்புத்தன்மை உடையவையாகக் காணப்படும். அவ்வாறான சந்தர்ப்பத்தில் முகத்துக்குப் பாவிக்கும் முகப்பவுடரைப் பாவித்து பாதங்களை உலர்வாகப் பேணவும்

மேலும் நகங்கள் வெட்டும்போது நேராக வெட்டவும். மூலைப்பகுதியில் வளைவானதாகக் காணப்பட்டால் நகங்கள் உள்நோக்கி வளரக்கூடிய சந்தர்ப்பங்கள் அதிகமாக ஏற்படுகிறது. இவ்வாறான சந்தர்ப்பத்தில் மூலைப் பகுதியில் சிறு பஞ்சை உயர்த்தி வைப்பதன் மூலம் நகத்தை வெளிநோக்கி வளரச்செய்யலாம்.

மிகவும் கடுமையான, உடையக்கூடிய நகங்கள் எனின் அவற்றை மென்மையாக்குவதற்குப் பஞ்சுத் துண்டுகளில் தோய்க்கப்பட்ட கனிய எண்ணெய்களை நகங்களை வெட்டுவதற்கு 20 நிமிடங்களுக்கு முன்னர் இடவும். இதன்பின்னர் இலகுவாக நகங்களை வெட்டலாம்.

ஒவ்வொருநாளும் பெருவிரல் பகுதியில் சிவப்பு புள்ளிகள், புண்கள், கொப்பளங்கள், கண்டல்கள் என்பன காணப்படுகின்றனவா எனப் பரிசோதிக்கவும். மேலும் கால் பகுதியின் நிறம், வெப்பநிலை என்பவற்றையும் அவதானிக்கவும். காலின் அடிப் பகுதியை அவதானிப்பதற்குச் சிறிய தளவாடியை உபயோகிக்கவும். பாதப்பகுதியில் வெடிப்புக்கள் காணப்படுமாயின் அடிக்கடி இளஞ்சூட்டு நீரினால் காரத்தன்மை குறைந்த சவர்க்காரத்தைப் பாவித்துக் கழுவவும்.

பாதணிகளைத் தெரிவு செய்யும்போது அதிகம் இறுக்கம் இல்லாமலும், அதிகம் தளர்வில்லாமலும் சரியான அளவில் தெரிவு செய்யவும். மேலும் பாதணிகளைத் தெரிவு செய்வதற்கு மாலை நேரங்களையே பயன் படுத்துவது சிறந்தது. பாதப்பகுதியில் அதி களவு அமுக்கம் ஏற்படுத்தப்படுவதைத் தவிர்ப் பதற்கு அதற்கென விசேட மாகத் தயாரிக்கப்பட்ட சப் பாத்தை (shoe) பாவிக்கவும்.

பாதப்பகுதியில் கண்டல்கள், ஆணிக்கூடு, நோ, வீக்கம் என்பன காணப்படின் தகுந்த வைத்திய ஆலோசனை பெறவும். புதிதாக வாங்கிய சப்பாத்தை அணியும்போது முதல்நாள் ஒரு மணித்தியாலத்துக்கும் மறுநாள் இரண்டு மணித்தியாலத்திற்கும் என படிப்படியாக அணியும் நேரத்தை அதிகரித்துச் செல்லவும். கூரான முனையுள்ள சப்பாத்துக்களை அணிவதைத் தவிர்க்கவும். சப்பாத்துக்களை மாற்றி மாற்றி அணிவது சிறந்தது.

முதல்நாள் பாவித்த சப்பாத்தை நன்கு உலர விட்டு மறுநாள் அணியலாம். சப்பாத்துக்களை பகல் நேரங்களில் அடிக்கடி கழற்றி மீளவும் அணிந்து கொள்ளவும். இதன்மூலம் பாதங்கள் சௌகரியமாக இருப்பதுடன் போதிய குருதி விநி யோகத்தையும் பெறும்.

உட்புறம் உள்ள மென்மையான போர்வைகள் பழைய சப்பாத்துக்கள் அணிவதைத் தவிர்க்கவும்.

எக்காரணம் கொண்டும் சப்பாத்துக்களோ அல்லது பாதணிகள் இன்றி வெறும் காலுடனோ நடப்பதை தவிர்க்கவும்.

மேலும் சப்பாத்துக்களை அணிய முன்னர் அதன் உட்பகுதியில் முள், சிறு கற்கள் போன்றன காணப் படுகின்றனவா என்பதை பரிசீலிக்க வேண்டும். காலுறைகளைத் தெரிவுசெய்யும் போது பருத்தியி னால் அல்லது கம்பளித் தன்மையானதாகக் காணப்படின் அது விரைவாக ஈரத்தன்மையை உறிஞ்சக் கூடியதாக காணப்படும்.

ஒவ்வெரு நாள்களும் வெவ்வேறு காலுறைகளை மாற்றிமாற்றி அணிவதன் மூலம் பற்றீரியாக்களின் பெருக்கத்தைக் கட்டுப்படுத்தலாம்.

அடிக்கடி இருக்கும் நிலையில் மாற்றம் ஏற்படுத்த வேண்டும். நீண்டநேரம் காலின் மேல் கால் போட்டிருப்பதனால் (cross legs) காலின் கீழ் பகுதிக்கான குருதி விநியோகம் தடைப்படும்.

இவ்வாறான நிலையில் கீழ்ப்பகுதி விறைப்புத் தன்மையாக மாறி காயங்கள் ஏற்படுவது தெரியாமல் நிகழலாம்.

காலின் எப்பகுதியிலும் குருதி விநியோகம் குறைந்து நீலநிறமாக மாறினால் அல்லது கறுப்பு நிறமாக மாறினால், அதிகளவு குளிர்வாகக் காணப்பட்டால் உடனடியாக வைத்திய ஆலோசனை பெறவேண்டும்.

உங்களது பாதங்களை நீங்கள் வாங்கி வைத்திருக்கும் ஒரு வசதி நிறைந்த நவீன (car) காரைக் கவனிப்பதைப் போன்று கவனிக்க வேண் டும். கால்களுக்கு ஒவ்வொருநாளும் 20-30 நிமிடம் வரை அப்பியாசம் கொடுத்தல் வேண்டும்.

இதன்மூலம் குருதி விநியோகத்தை அதிகரிக்க முடியும். சரியான உணவுப் பழக்கத்தையும், நீரிழிவு நோய்க்குரிய மருந்துகள், இன்சுலின் என்பவற்றையும் ஒழுங்காக எடுப்பதன் மூலமும் , சீரான வாழ்க்கை முறையை அமைத்துக்கொள்வதன்மூலமும் சலரோகத்தை கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கலாம். எனவே பாதங்களைச் சீரான முறையில் பேணி எமது ஆயுட் காலத்தை அதிகரித்துக்கொள்வோமாக.

**கோ.நந்தகுமார்,** விரிவுரையாளர்
தாதியர் பயிற்சிக் கல்லூரி,
யாழ்ப்பாணம்.

*உதயனின் இந்த வைத்திய மலர் யாழ்.போதனா வைத்தியசாலையின் நீரிழிவுச் சிகிச்சைப் பிரிவினால் தொகுத்து வழங்கப்படுகிறது. மலர் சம்பந்தமான உங்கள் அபிப்பிராயங்களையும் மருத்துவம் சம்பந்தமான உங்கள் சந்தேகங்களையும் - நித்திய சுகத்தை நோக்கி... நீரிழிவு சிகிச்சை நிலையம், போதனா வைத்திய சாலை,யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பிவையுங்கள். உங்கள் வினாக்களும் அதற்கான பதில்களும் இந்தப் பகுதியில் பிரசுரமாகும்.*

# மதம் ஒரு மருத்துவப் பெருஞ்சுடர் 7

மத வழிபாட்டு முறைகளால் மனிதன் உண்மையிலேயே சுகம் பெறுகிறானா? இது சம்பந்தமாக விஞ்ஞானம் என்ன சொல்கிறது?ஆராய்ச்சிகள் என்ன சொல்கின்றன? நவீன மருத்துவம் என்ன சொல்கிறது என்பதைப் பார்ப்போம்.

ஒருவனுக்கு கடுமையான கஷ்ரங்களும் மனத் தாக்கங்களும் மன அழுத்தமும் ஏற்படும்பொழுது அது சம்பந்தமாக இறைவனிடம் முறையிட்டு அழும் மரபு வேதகாலத்திலிருந்தே அதாவது கி.மு 1500 வருடங்களுக்கு முன்பிருந்தே இருந்து வருகிறது. சங்ககாலப் பகுதியிலேயே(கி.பி3ஆம் நூற்றாண்டு) தோன்றிய திருமுறைகளில் இந்த மரபை நாம் தெளிவாக அவதானிக்கக் கூடியதாக இருக்கிறது.

கிறிஸ்தவ மதத்திலும் தமது கஷ்ரங்களையும் உள்ளக்கிடக்கைகளையும் இறைவனிடம் முறையிட்டு வழிபடும் மரபு 2000 ஆண்டுகளுக்கு மேலாக இருந்து வருகிறது.

ஒருவன் தனது மனச்சுமைகள் அனைத்தையும் இறைவனிடம் பாரப்படுத்தி, பயந்துகொண்டு மனம் விட்டு மனமுருகி வழிபடும்பொழுது பக்தர்களின் மனக்கஷ்ரங்கள் நீங்கும். பலநன்மைகள் உண்டாகும். மனம் அமைதி பெறும் என்று மதங்கள் கூறுகின்றன. இது தற்போழுது ஆராய்சிகள் மூலம் உண்மை என்று நிரூபிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் இந்த முறையின் ஒரு வடிவம் நவீன மருத்துவ சிகிச்சை முறையிலே உலகெங்கும் பயன் படுத்தப்பட்டு வருகின்றது. இதனை (counselling) அல்லது உளவளத்துணை என்று சொல்லுவர்.

உளவளத்துணை (counselling)என்று சொல்லப் படுகின்ற இந்தச் சிகிச்சை முறையின் அடிப்படை என்னவென்று நோக்குவோம். இது ஒரு வர் மன அழுத்தத்திற்கு அல்லது மனக்கஷ்ரத்திற்கு உட்பட்டு இருக்கும்போது பயன்படுத்தப்படும் ஒரு சிகிச்சை முறையாகும்.

இந்தச் சிகிச்சை முறையிலேயே மனக்கஷ்ரத்திற்கும் வேதனைக்கும் உட்பட்டிருப்பவர் தனது மன உணர்வுகளை ஒரு அனுபவஸ்தர்(counsellor) ஒருவருடன் அப்படியே முழுமையாகப் பகிர்ந்து கொள்வார்.

இதன்பொழுது அவரின் உள்ளக்கிடக்கைகள் அனைத்தும் வெளிப்பட்டுத் தெளிவாக சிந்திக்கக்கூடிய நிலையை அடைந்து மனம் தெளிவுபெறும். தனது பிரச்சினைகளுக்குத் தானாகவே தீர்வுகளைக் கண்டு தீர்மானம் எடுக்கும் நிலைக்கு அவர் வருவார். இந்த சிகிச்சை முறை உலகளாவிய ரீதியிலே மிகவும் பிரபல்யம் பெற்று விளங்குகிறது. இங்கு counsellor ஆகப் பணியாற்றுபவர் நோயாளியின் பிரச்சினைகளின் இரகசியத் தன்மையைப் பாதுகாப்பார்.

எமது வழிபாட்டு முறையிலேயே அந்த அனுபவஸ்தர் அல்லது counsellor இன் ஸ்தானத்திலேயே கடவுள் இருக்கிறார். அவர் பலரினுடைய மனச் சுமையை நீக்குவதற்கு உதவியாக இருக்கிறார்.

*மதம் ஒரு மருத்துவப் பெருஞ்சுடர் என்ற இந்தத் தொடர் கட்டுரையின் கருத்தோட்டங்களுடன் நீங்கள் பூரணமாக உடன்பட்டால் "A" எனவும் ஒரளவு உடன்பாட்டால் "B" எனவும் உடன்படவில்லை எனில் "C" எனவும் இக்கருத்துக்களை எதிர்ப்பதாயின் "D" எனவும் ரைப் செய்து 0773604094 என்ற இலக்கத்துக்கு SMS செய்துவிடுங்கள்.*

நாம் வழிபடும் பொழுது முறையிடும் எமது மனக் குறையினை இறைவன் உன்னிப்பாகக் கிரகித்துக் கொண்டிருக்கிறார் என்ற நம்பிக்கை எமக்கு இருக் கிறது. இதனால் நாம் எமது கஷ்ரங்களை இறைவனிடம் பகிர்ந்துகொண்டு தெளிவுபெறுகிறோம்.

அத்துடன் இறைவனும் counsellor போன்று தன்னைத் தேடிவரும் அன்பர்களின் மனக்குறைகள் சம்மந்தமான இரகசியத்தன்மையைப் பேணிக்கொள்கிறார். மதங்களிலே பல மருத்துவக் கருத்துக்கள் இருந்தும்கூட அன்றாட வாழ்வில் அதன் பயன்பாடு மட்டுப்படுத்தப்பட்டதாக இருப்பதற்கு காரணம் என்ன? எமது அடுத்த சந்ததியினருக்கு மத நம்பிக்கைகளும் அதிலிருக்கும் பற்றுறுதியும் குறைவடைந்து செல்வதற்கு காரணம் என்ன?

மதம் சம்பந்தமான நூல்களிலே பல பிழையான தகவல்களும் தற்போதைய காலத்திற்குப் பொருந்தாத எமது பகுத்தறிவால் ஏற்றுக்கொள்ளப்பட முடியாத பல தகவல்களும் சேர்ந்திருப்பதையே இவற்றுக்கு ஒரு காரணமாகக் குறிப்பிடமுடியும். சாதிகள் சம்பந்தமாகவும் மனித உரிமைகள் சம்பந்தமாகவும் விலங்கு உரிமைகள் சம்பந்தமாகவும் குறிபிடப்பட்டிருக்கும் சில தகவல்கள் பொதுநீதிக்கு முரணாக இருப்பது போல் தோன்றுகின்றன.

**சி.சிவன்சுதன்,** வைத்திய நிபுணர்,
யாழ்.போதனா வைத்தியசாலை.

கடவுள் உண்மையானவர். அதிலே எந்த விதமான சந்தேகமும் இல்லை.

ஆனால் அவர் சம்பந்தமான விடயங்களை சமய நூல்களாகவும் இலக்கியங்களாகவும் பதித்து வைத்திருப்பவர்கள் மனிதர்களே. மனிதர்கள் தவறு விடுவது இயற்கை. உதாரணத்திற்கு சிறுதொண்ட நாயனாரின் கதயை எடுத்துக் கொண்டால் அவர் தனது 5 வயது பிள்ளையை வெட்டி ஒரு துறவிக்கு கறி சமைக்கிறார்.

அந்தப் பிள்ளையைக் கொல்லும் உரிமையை அவருக்கு யார் கொடுத்தது.

மனித உரிமைகள் பற்றியும் சிறுவர் துஷ்பிரயோகம் பற்றியும் பேசப்படும் இந்தக் காலத்தில் இந்தக் கதையை எவரது மனம் ஏற்றுக்கொள்ளும்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
12 ஜூன் 2011 ஞாயிற்றுக்கிழமை

# தமிழ் இலக்கியத்தில் இருந்து நாம் கற்க வேண்டிய அரசியல்

தமிழ் மக்களுக்கு அரசியல் தீர்வு இன்றியமையாதது என்பதனைக் கம்பராமாயணத்தின் (அயோத்தி - ஆற்று 7) இருந்து உறுதி கொள்ள லாம்.

''வள் உறு வயிரவாள் அரசு இல் லையகம்
நள் உறு கதிர் இலாப் பகலும் நாள் ஓடும்
தெள் உறு மதியிலா இரவும் தேர்தரின்
உள் உறை உயிர் இலா உடலும் ஒக்குமே''

அதாவது எமது சமூகத்துக்கு என அரசியல் தீர்வு இல்லாமை சூரியன் இல்லாப்பகல் போல் உள்ளது.

அடுத்து எவரோடும் பகை கொள்ளாது அரசாட்சி அமைய வேண்டும் என்பதை வசிட்டர் இராமபிரானுக்குக் கூறுவதாக கம்பர் கூறுகிறார்.

'' யாரொடும் பகை கொள்கிலன் என்றபின்
போர் ஓங்கும் புகழ் ஓங்காது : தன்
தார் ஒடுங்கல் செல்லாது : அது தந்த பின்
வேரொடும் கெடல் வேண்டல் உண்பாடுமே!''

2009 ஆம் ஆண்டுத் தமிழ் அழிவுகள் எமக்கு அறநெறி நிற்றலைக் கடிந்து கூறுகின்றது. பல சிவாலயங்கள் அழிந்து காணப்படும் காட்சி,

'' வாடுக இறைவரின் கண்ணி ஒன்னார்
நாடு சுடு கமழ் புகை எறிந்தலாளே''

என்ற பாடலை மீள நிறுத்துகின்றது

ஐ.நா. அறிக்கை என்பதற்கு மேலாகப் போர் அறம் என்பது என்ன என்பதை புறநானூற்றின் 9 ஆவது பாடல் கூறுகிறது.

'' ஆவும் ஆண் இயல் பார்ப்பன மாக்களும்
பெண்டிரும் பிணியுடை யீரும் பேணித் தென்புலம் வாழ்நர்க்கு, அரும்கடன் இறுக்கும்
பொன்போல் புதல்வர்ப் பெறா அதீரும்
எம் அன்பு கடிவிடுதும், நும் அரண் சேர்மின்!''

தமிழ் தெரிந்தோர்க்கு மட்டுமே எமக்கு எவ்வளவு தூரம் போர் அறம் மறுக்கப்பட்டுள்ளது என்பது புரியும். சமாதானத்துக்கான யுத்தம், மனிதநேய மீட்பு நடவடிக்கை என்ற பெயர்களுக்குள் போர் அறம் எவ்வாறு காவு கொள்ளப்பட்டது என்பதை நவீன விஞ்ஞானத் தொழில் நுட்பச் சான்றுகள் துல்லியமாகக் காட்சிப்படுத்தி உள்ளன. ஆனால் இவை நீரின்மேற் தோன்றும் பனிக்கட்டி போன்றதே.

தமிழர்களின் வரலாற்றின் பெரும்பகுதி எம்மினத்தக்க அழிவுகளின் கதையாகவே உள்ளது. இதனைப் புறநானூற்றின் 49 ஆவது செய்யுளிலும் காணலாம்.

''ஒருவீர் தோற்பினும் தோற்பது உம்குடியே
இருவீர் வேறல் இயற்கையும் அன்றே, ஆனால்
முடிப்பொருள் அன்ற நும் செய்தி...''

தமிழர்களாக இருந்து முரண்படும் தன்மை இனத்தின் அழிவுக்கு ஏதுவாகும் என்று அன்று உரைக்க மெய்மை இன்றும் சாலவும் பொருந்துமே.

அறநெறி முக்கியமானது என்பதை அரசுடன் இணைந்துள்ள தமிழ் அரசியல் கட்சிகள் அறிதல் அவசியமானது. இதனைப் புறநானூற்றுப் பாடல் 55 இல் காணலாம்.

''கடும் சினத்த கொல்களிறும்
கதழ் பரிய கலிமாவும்
நெடும் கொடிய நிமிர் தேரும்
நெஞ்சுடைய புகல் மறவரும் என்
நான்குடன் மாண்டது ஆயினும், மாண்ட
அறநெறி முதற்றே அரசின் கொற்றம்''

மேலும் நீதி என்பது என்ன என்பதை மதுரைக் காஞ்சி 484-492 இல் கூறப்பட்டுள்ளது.

''அச்சமும் அவலமும், ஆர்வமும் நீக்கிச்
செற்றமும், உவகையும் செய்யாது காத்து
எஞமன் கோல் அன்ன செம்மைந்து ஆகிச்
சிறந்த கொள்கை அறம் கூறு அவையமும்''

இத்தகைய நிலையில் மக்களின் ஏக்கத்தை திருவள்ளுவரின் வரிகளினாலேயே அறியலாம்.

''முறை செய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்டு
இறை என்று வைக்கப்படும்''
குறள் 388

அடுத்து

''இடிப்பாரை இல்லாத ஏமரா மன்னன்
கெடுப்பார் இலாறும் கெடும்''
(குறள் 448)

சிறந்த அறிவுரை இல்லாத அரசு தானாகவே அழியும் என்பது இதன் பொருள்.

இறுதியாக எமது சமூகத்தைக் கொல் ஆயுதத்தினால் அடிபணிய வைக்கும் முயற்சியை முற்றாகத் துறத்தல் அவசியம்.

''அரங்கினில் படைகொண்டு உயிர்கொலை புரியும்
அறக்கடையவரினும் கடையேன்''

என்ற வரிகள் இதனை வலியுறுத்துகின்றன.

இவ்வாறாகத் தமிழில் உள்ள அறநெறிகளை தமிழ் அரசியல்வாதிகள் கருதுவார்களானால் தமிழ் மக்கள்க்கு மீண்டும் ஓர் அழிவு ஏற்படாது என்பது உறுதி.

டாக்டர் எஸ்.யமுனாநந்தா

# நஞ்சுபுரம்



விமர்சனம்

பாம்புகளைப் பார்த்தால் படையே நடுங்கும் என்று சொல்வார்கள். அப்படிப்பட்ட பாம்பு படையே இருக்கும் ஒரு ஊரில் நடக்கும் கதையே இந்தப் படத்தின் கதையாகும். நஞ்சுபுரம் எனும் மலையால் சூழப்பட்ட கிராமத்தில் பாம்புகளின் நடமாட்டம் அதிகமாக இருக்கும்.

ஒரு நாள் அந்த கிராமத்தைச் சேர்ந்த பண்ணையார் மகன் ராகவ் பண்ணையில் இருக்கும்போது அங்கே பண்ணையில் வேலை பார்த்துக்கொண்டு இருந்த ஒரு தாயின் குழந்தையை பாம்பு ஒன்று அருகில் சென்று தீண்டுவதற்கு தயாராகும் போது அதனைக் கண்ட ராகவ் உடனடியாக பாம்பை அடித்துக் கொள்கிறார். அவரை நாக தோஷம் பற்றிக் கொண்டதாக அந்த ஊர் மக்கள் ராகவ்வைப் பயமுறுத்துகிறார்கள். ஆனால் அதற்கு ராகவ் கொஞ்சம் கூடப் பயப்படவில்லை. எந்த விதப் பயமும் இல்லாமல் ராகவ் நட மாடுகிறான். இதற்கிடையில் மோனிகா மீது காதல் அரும்புகிறது. மோனிகாவோ தான் தாழ்த்தப்பட்டவள் என்று சொல்லி தன்னை ராகவ் ஏமாற்றினாலும் என்று முதலில் மறுக்கிறாள். பின்பு ராகவ்வை விரும்புகிறாள். மோனிகாவை கொத்தவந்த பாம்பை ராகவ் காலால் மிதித்து நசுக்குகிறான். அவனிடம் இருந்து தப்பித்த அந்தப் பாம்பு ஓடி மறைந்து விடுகிறது.

அடிபட்ட பாம்பு நாற்பது நாள்களுக்குள் அடித்தவனை கடிக்காமல் விடாது என்று அந்த ஊர் மக்கள் இவனை பயமுறுத்துகிறார்கள். பாம்புக் கடி வைத்தியர் ஆலோசனையின் பேரில் உயரமாக நான்கு தூண்கள் எழுப்பி அதன் மேல் குடில் அமைத்து. ராகவை பாதுகாப்பாக வைக்கிறார்கள். இதற்கிடையில் மோனிகாவுக்கு வேறு மாப்பிள்ளையைத் தாயார் பார்க்கிறார். நிச்சயதார்த்தமும் நடந்து முடிகிறது. மோனிகாவே இந்த செய்தியை ராகவிற்கு சொல்லுவதற்கு வந்து பரணில் இருக்கும் ராகவிடம் சைகை மூலம் சொல்லுகிறாள். அதனை விளங்காத ராகவ் அவளிடம் தான் எப்படி இறங்கிவர முடியும் என சைகையில் சொல்கிறான். மோனிகாவோ பல தடவைகள் ராகவ்விடம் வந்து சைகை மூலம் தனது நிலமையை தெரிவித்தும் எந்த வித பலனும் இல்லாமல் திரும்பி அழுதுகொண்டு செல்லுகிறாள். பரணுக்கு கீழே காவலாளர்கள் கண் விழித்துக் காவல் காத்துக்கொண்டு நிற்கிறார்கள். விடிந்தால் மோனிகாவுக்கு திருமணம் என்ற நிலையில் ராகவுக்கு அது நாற்பதாவது நாள் ஆகும். அன்று இரவு கழிந்துவிட்டால் பாம்பிடம் இருந்து ராகவ் தப்பி விடலாம். மோனிகாவுக்கு திருமணம் நடக்கப்போவதை அறிந்த ராகவ் 40 நாள் முடிய முதலே பரணைவிட்டு இறங்கி மோனிகாவைத் தேடி ஓடுகிறான். அங்கே மோனிகாவைக் கூட்டிக்கொண்டு அந்த மலைக் காட்டு வழியே அந்த ஊரைவிட்டு ஓடுகிறான். அந்த காட்டுப் பகுதியில் தடக்கி விழும் இடமெல்லாம் பாம்புகள். இரவானதால் இருவரும் பயத்துடன் ஒவ்வொரு கால் பாத அடியையும் அளந்து அளந்து எடுத்து வைக்கிறார்கள். இதற்கிடையில் பண்ணையார் தனது மகன் மோனிகாவைக் கூட்டிக்கொண்டு ஓடுகிற செய்தியை அறிந்து தனது ஊரையே கூட்டினார். மகனை மீட்டு வரும் படியும் மோனிகாவைக் கொன்று விட்டுவரும் படியும் அடி ஆள்களை அனுப்பிவைக்கிறார். காட்டில் ஒரு பாம்பு ராகவினையும் மோனிகாவையும் துரத்துகிறது. அந்தப் பாம்பினை ராகவ் உற்றுப் பார்க்கிறான். தன்னால் அடிபட்ட பாம்பு என்று தெரிந்து கொள்கிறான். அதன் பின் இருவரும் வேகமாக ஓடுகிறார்கள். விடிந்தால் பாம்பு நாக தோஷம் முடிந்துவிடும் என்று இன்னும் வேகமாக ஓடுகிறார்கள். பைய பைய விடிகிறது. அதனைக் கண்ட இருவரும் சந்தோஷத்தில் மிதக்கிறார்கள். துரத்திய பாம்பு திரும்பிச் செல்கிறது. பாம்பில் இருந்து மீண்டனர். ஆனால் நடந்தது என்ன? அங்கே இவர்களை தேடிவந்த பண்ணையாளரின் அடி ஆள்கள் மோனிகாவை வாளால் வெட்ட முற்படுகிறார்கள். இதைக் கண்ட ராகவ் கத்திக் கொண்டு ஓடிச்சென்று மோனிகாவின் முன் நிற்கிறான். வெட்டு ராகவின் கழுத்தில் விழுகிறது. ராகவ் தரையில் விழுந்து இறக்கிறான். பாம்பால் சாகப்போவதாக அந்த ஊர்ச் சனம் சொன்னதுகளால் நடந்தது என்ன? அன்ரனியின் ஒளிப்பதியில் ஒவ்வொரு காட்சிகளும் நம்மை பயமுறுத்துகின்றன. அதுவும் பாம்பின் ஆக்ரோஷமான தாக்குதல் காட்சியைக் குளோஷப்பில் காண்பித்து நல்ல பாம்பைக் கூட *அனகோண்டா* பாம்பாக மாற்றியிருக்கிறார்கள் தயாரிப்பாளர்கள். அன்ரனியின் கமெரா, திரைக்கதை அமைத்து இயக்கி இருப்பவர் சார்ள்ஸ். பயம்தான் விஷம் என்கிற கருத்தை மையமாகக்கொண்டு படத்தின் காட்சிகள் ஒவ்வொன்றும் நகருகிறது. ஐந்தறிவு உள்ள மிருகம் கூட சத்தியத்துக்குக் கட்டுப்பட்டு இருக்கிறது. ஆனால், மனிதனுக்குள் இருக்கும் மிருகம்? இதுதான் படம் எழுப்பும் அடிப்படைக் கேள்வி? நஞ்சுபுரம் ஒரு திகில் புரம் ஆகும்.

- குமார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண்களின் பொறுப்பு, கடமைக்கு மதிப்பளிப்போம்




இன்று நமது பிரதேசங்களில் பெண்களின் பொறுப்புக்களும் கடமைகளும் அதிகரித்துக் கொண்டே செல்கின்றன.

இதற்குக் காரணம் தற்போது அதிகரித்துவரும் வாழ்க்கைச் செலவுகளும் அடிப்படைத் தேவைகளும், பொதுத் தேவைகளுமே என்பது நாமறிந்த உண்மைகள்.

இதனால் இளம் பெண்கள் உட்பட குடும்பத்தைப் பொறுப்பேற்று வருகின்ற பெண்கள் தொழிலுக்குச் செல்லவேண்டிய கட்டாயத்தில் உள்ளனர்.

குறிப்பாக இன்று இளம் பெண்கள் தொழிலுக்குச் சென்று வருமானத்தைத் தேடுவதில் பல சிரமங்களை எதிர்கொள்ள வேண்டியுள்ளது. இதற்கு நமது பிரதேசத்தின் கலாசார முறைமையும் முன்னோர் வகுத்து வைத்த மூடநம்பிக்கைகளுமே முக்கிய காரணங்களாக இருக்கின்றன.

இளம் பெண்களின் பாதுகாப்புகள், தொழில் செய்யும் இடங்களில் ஏற்படும் இன்னல்கள் தொடர்பாகவும் எமது சமுதாயம் தனது பார்வையைச் செலுத்த வேண்டியுள்ளது.

தற்போதைய காலகட்டத்தில் தொழில் செய்யக் கூடிய தகுதியும் வல்லமையும் இளம் பெண்களிடம் இருக்கும் போது அவற்றுக்கு ஊக்கம் கொடுத்து மேலதிக திறமைகளை வளர்ப்பதற்கு சமூகம் ஒத்துழைப்பு வழங்க வேண்டியது அவசியமாகின்றது.

குடும்பரீதியாகவும் வேலை செய்யும் இடத்தின் வளத்தையும், பொருளாதாரத்தையும் உயர்த்துவ தற்கு இளம் பெண்களின் திறமைகளைப் பயன்ப டுத்தும் சமுதாயம் ஏன் அவர்களது உரிமைக்கு மதிப்புக் கொடுப்பதில்லை.

பெண்ணைப் பெண்ணாக மதிக்க வேண்டும். அதைவிடுத்து பெண்ணைப் பேரம்பேசி ஏலம் போடுவதில் எந்த நியாயமும் இல்லை என்பதை சமூகத்தில் உள்ள ஒவ்வொரு வரும் சிந்திக்க வேண்டும்.

இளம் பெண்கள் தொழிலுக்குச் செல்வதில் கிடைக்கும் நன்மைகள் குடும்பத்துக்குப் பயனுள்ளதாக அமையும்போது அதன் தார்ப்பரியத்தையும் தொழில் செய்ய வேண்டிய கட்டாயத் தேவைகளையும் அனைவரும் உணர வேண்டும்.

# தினமும் கடைப்பிடிக்க வேண்டியவை



★ பெண்ணாகப் பிறந்தால் எந்த நேரமும் நல்லதையே நினைத்து நல்லதையே செய்ய வேண்டும் அதனால் குடும்பம் மேன்மை பெறும்.
★ பெண்களைச் சார்ந்திருப்பவர்களையும் சந்தோஷமாக வைத்திருக்க முயற்சி செய்.
★ மற்றவர்களின் குறைகளைப் பார்ப்பதைவிட தம்மிடம் உள்ள குறைகளை தடைகளை விலக்க முயற்சி செய்ய வேண்டும்.
★ இல்லை என்று மூலையில் இருக்காது உனது வெற்றிக்காக உழைக்க வேண்டும்.
★ வஞ்சனையை விலக்கி எப்போதும் நல்ல நட்புறவுடன் பழகவேண்டும்.

-நிலா
அச்சுவேலி.

# ஆடம்பரத்தை விடக் கல்வியும் திறமையுமே அழகையும் மகிழ்ச்சியையும் கொடுக்கிறது




ஆடம்பரமான பகட்டான வாழ்க்கை முறைதான் எமக்குப் பெருமை தேடித்தரும் என்று நினைப்பதெல்லாம் முட்டாள்தனமான விடயம் என்பதை நாம் ஒவ்வொருவரும் எந்த நேரத்திலும் கருத்தில்கொள்ள வேண்டியது அவசியமாகும். இவை கூடுதலாக பெண்களைத்தான் குறிக்கிறது.

ஏனெனில் ஆடம்பரமாக நகைகள், ஆடைகள் அணிந்து கொண்டாட்டங்களிலும், விழாக்களிலும் பங்குபற்ற வேண்டும் என்பது எமது கலாசாரம் என நினைக்கிறார்கள்.

இவ்வாறான பாதைகள் சரியானவை என்றே கருதுகின்றனர்.

மற்றவர்களைப் போல் எம்மாலும் ஆடம்பரமாக வாழ முடியவில்லையே என்ற எண்ணம் குடும்பத்தில் சண்டை சச்சரவுகள் ஏற்படுவதற்கு மூல காரணமாக இருக்கின்றது.

ஆனால் எப்போதும் பெண்களை நல்வழிப்படுத்தக் கூடியதும் பெருமை தேடிக் கொடுக்கக்கூடியதும் அவளுடைய சிறந்த நற்பண்புகள் மட்டுமே என்று கூறினால் மிகையாகாது.

பெண்கள் தமது கல்வியாலும் நம்பிக்கையாலும் தமக்குள் இருக்கும் திறமைகளையும், சிறந்த பண்புகளையும் வெளிக்கொணர்வதற்கு முன்வர வேண்டும். இவைதான் பெண்களுக்குப் பெருமைதரக்கூடிய விடயம் என்பது உண்மை.

அத்துடன் சமூகத்தில் உள்ள ஏனைய பெண்களுக்கும் இவர்கள் சிறந்த வழிகாட்டிகளாகவும் இருப்பார்கள்.

பொதுவாகப் பெண்கள் ஆடம்பர வாழ்க்கையில் அதிக ஈடுபாடு கொண்டவர்கள் என்று எல்லோரும் கூறுவதுண்டு. எனவே மனிதப் பண்புகளை இயற்கை யாகவே எமக்குள் வளர்த்துக் கொள்வதில் நாம் தயக்கம் காட்டக் கூடாது. அதுமட்டுமன்றி எளிமையான வாழ்க்கை முறைகளில் எமது வாழ்வைப் பின்பற்ற வேண்டியதும் அவசியமானது என் பதை நாம் ஒவ்வொருவரும் நினைவில் வைத்துக் கொள்வது அவசியமாகும்.

# பெண்களின் பங்களிப்பு கலாசாரத்துக்குப் பாதிப்பா...?




நடைபெற்று முடிந்த போர்ச் சூழல் தற்போதைய வாழ்க்கை முறைகள் போன்றவற்றால் குடும்பத்தில் உள்ள பெண்களின் பங்களிப்புகள் சமூகத்துக்குத் தேவையான ஒன்றாகிவிட்டது.

இந்த நிலையில் பெண்கள் இந்தப் பங்களிப்பான சேவையை எந்தளவிற்கு சாதகமாகப் பயன்படுத்துகிறார்கள் என்பது பற்றி சற்று சிந்தித்து பார்க்க வேணடியுளளது.

இவ்வாறு இக்கட்டான சூழலில் பெண்கள் தள்ளப்பட்டுள்ளனர். சமூகம் சார்ந்த விடயங்களில் பெண்கள் ஈடுபடும்போது உளரீதியாகப் பல்வேறு நெருக்கடிகளையும் வேதனைகளையும் எதிர்கொண்டு வருகின்றனர்.

இதனால் அவர்கள் மனம் உடைந்துபோக வேண்டிய நிலைக்குத் தள்ளபபடுகின்றனர். அதுமட்டுமன்றி வெளியிடங்களில் தம்மை அர்ப்பணித்துப் பணியாற்றும் பெண்கள் சமூகம் சார்ந்த பல்வேறு பிரச்சனைகளுக்கும் முகம் கொடுக்க வேண்டிய கட்டாயத்தில் உள்ளனர்.

இதனால் தற்போது நிலவுகின்ற வாழ்க்கை முறையும் பெண்களுக்குப் பெரிதும் சாதகமாக அமைந்து விட்டது என்றே கூறலாம்.

காலங்கள் மாறினாலும் பெண்களின் கலாசாரமான வாழ்க்கை முறைகளில் மாற்றம் ஏற்பட அனுமதிக்கக் கூடாது. பெண்களின் அடிமை வாழ்வு கட்டவிழ்க்கப்பட்டு தற்போது சுதந்திரமாக நடமாடக் கிடைத்த இந்த வாய்ப்பைத் தவறான வகையில் பயன்படுத்தக்கூடாது.

பெண்கள் இதுபற்றி சிந்திக்க வேண்டும் சாதகமான கலாச்சாரத்தைப் பாதிக்காத வகையில் எமது ஒவ்வொரு நடவடிக்கைகளையும் அமைப்பதோடு ஏனையவர்களை நல்வழிப்படுத்தக் கூடிய வகையில் எமது ஒவ்வொரு செயற்பாடுகளும் இருக்க வேண்டும். இவ்வாறான எமது பண்பாடு, கலாசாரத்தை மீறாது செயற்பட்டால் நிச்சயம் வெற்றிகரமாக வாழ்க்கையைக் கொண்டு செல்லலாம்.

# குறை சொல்லாச் செல்வம்

ஈரைந்து மாதம்
ஈன்றெடுத்த தாயவள்
அவனியில் நல்லவராய் வாழ
அம்சமாய் என்னை
வளர்த்தெடுத்தாள்
குறைசொல்ல ஒன்றுமில்லை
குறைவில்லாச் செல்வம் அவள்
இறைவன் பாதம் தொழவில்லை
அன்னையவள் இருப்பதால்.

-சோபனா



# தேடுகிறேன்...!



உள்ளன்பு கொண்டாடி
ஊமைதனை உசுப்பிவிட்டு
என் மௌனங்களை-பகிர்ந்து
மகிழ்ச்சியில் கலந்து
கற்பனைகளை வளர்த்து
கனவுகளில் மிதந்து
கண்களுக்கு இமையாகிய
என் கனவு தேவதையைத்
தேடுகிறேன்!

வி.சிவா, மானிப்பாய்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 25 ஆம் நாள் நினைவலையும் 39 ஆவது பிறந்தநாள் நினைவும்



## சிவரத்தினம் சிவரஞ்சன்

(உரிமையாளர் ரெஜி ரெஸ்ரோறன்ட் - திருநெல்வேலி கிழக்கு)

பிறப்பு : 12.06.1973
இறப்பு: 17.05.2011

விழிகள் கரைகிறது
வேதனை நெஞ்சை முட்டுகிறதே...
ஓடி ஓடி திரிந்து உலாவிய இதயம்
நிரந்தரமாய் உறங்கியதேன்
உம் பிரிவின் துயரச் செய்தி கேட்டு
காற்று வீச மறுக்கிறதே
வாய் பேச மறுக்கிறதே
உம் பாசத்தால் கவர்ந்த உள்ளங்கள்
கண்ணீரில் மிதப்பதை தவிர்க்க
ஒரு கணம் மீண்டும் கண் திறக்கமாட்டீரோ ரஞ்சனே

குடும்பத்தினர்.

(40)(1883)

### ஆசிரியர்களுக்கான செயலமர்வு

தென்மராட்சிப் பாடசாலைகளில் தரம் 12,13 ஆம் வகுப்புக்களில் இந்து நாகரிகம், இந்து சமயம் ஆகிய பாடங்கள் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான கருத்தரங்கும் செயலமர்வும் இன்று ஞாயிற்றுக்கிழமையும் நாளை திங்கட்கிழமையும் யாழ்.மத்திய கல்லூரியில் நடைபெறவுள்ளன.

மகரகம தேசிய கல்வி நிறுவனத்தால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இந்தச் செயலமர்வில் கலந்துகொள்ளுமாறு ஆசிரியர்களுக்கு வலயக் கல்விப் பணிப்பாளர் கு.பிரேமகாந்தன் அறிவித்துள்ளார்.(த-207)

### கலை நிகழ்வு

வலிகாமம் மேற்கு கலாசாரப் பேரவையின் ஏற்பாட்டில் மாபெரும் கலை நிகழ்வுகள் இன்று சங்கானை கலாசாரப் பேரவை மண்டபத்தில் நடைபெறவுள்ளன. வலிகாமம் மேற்குப் பிரதேச கலாசாரப் பேரவை அபிவிருத்திப் பணிகள் மற்றும் கலாசாரப் பேரவை மேம்படுத்தும் நோக்கில் இந்தக் கலை நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. (த-313)


### வீடு விற்பனைக்கு

கந்தர்மடம், மணற்தரை ஒழுங்கையில் 3½ பரப்புக் காணியில் அமைந்துள்ள சகல வசதிகளும் கொண்ட வீடு விற்பனைக்குண்டு.

தொடர்பு: 0777 979226

(1791)

## Shashika Driving School Grade A

ஆண்/பெண் இருபாலாருக்கும்

அலுவலகம் நடைபெறும் நேரங்கள்

- கிழமை நாட்களில் காலை 5 - 7 மணி வரை
- சனிக்கிழமையில் காலை 6 - 4 மணி வரை
- போயாதினங்கள் மற்றும் ஞாயிறுதினங்களில் மூடப்படும்.

வழங்கப்படும் சலுகைகள்

- நன்றாக வாகனம் ஓட்டக்கூடிய வரைக்கும் பழக்கி கொடுக்கப்படும்.
- வேரகற R.M.V காரியாலயம் வரையிலான போக்குவரத்து வசதிகள் வழங்கப்படும்.
- எழுத்துப்பரீட்சைக்கு ஆயத்தம் செய்யும் முகமாக இலவச வீதி ஒழுங்கு நூல்,மாதிரி வினாத்தாள்,நிபுணத்துவம் நிறைந்த ஆசிரியர்களினால் வீதி ஒழுங்கு வகுப்புகள் ஒழுங்கு செய்து கொடுக்கப்படும்.
- பாடத்திட்ட கட்டணங்களை தவணை முறையில் செலுத்தும் வசதி செய்து கொடுக்கப்படும்.
- உங்கள் இருப்பிடத்திற்கு வந்து பாடத்திட்டத்தை தொடரும் வசதிகள் செய்து கொடுக்கப்படும்
- உங்களுக்கு அவசியமானது திறமையான சட்ட ஒழுங்குள்ள, ஒழுக்கமுள்ள, சூழலை நேசிக்கும் சாரதியாக வேண்டும் என்றால் சசிக சாரதி பயிற்சி பாடசாலையை நாடுங்கள். உங்கள் தேவை உங்களின் தேவைக்கேற்ப நிறைவேற்றப்படும்.

Head Office :
67/B4, Katuwawala,
Borelasgamuwa.
Tel: 0114303662

Branches
332, Elvitigala Mw,
Narahenpita,Colombo - 05
Tel : 011 4512705




107/1, Vivekananda Hill,
Colombo - 13.
Tel : 011 4617325

Hot Line: 0777 341808


# மரண அறிவித்தல்

## ஆனந்தராசா மரியநாயகி (நவமணி)



கிளாலியைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணத்தை வதிவிடமாகவும் கொண்ட ஆனந்தராசா மரியநாயகி (நவமணி) 08.06.2011 புதன் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வஸ்தியாம் பிள்ளை செபமாலை-எலிசம்மா தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான வஸ்தியாம்பிள்ளை சவரிமுத்து- மரியநாயகி தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற ஆனந்தராசாவின் (இளைப்பாறிய படவரைஞர்) அன்பு மனைவியும், ரூபீனா ரஜிதமணி (ராஜி-ஜேர்மனி), மறினா ரஜிதராணி (ராணி-டென்மார்க்) பிரிட்சுவிட் (ரதி- பிரான்ஸ்) டெனிஷியா (பாமா-இலங்கை), மக்லோரியஸ் ரெங்கிலராஜ் (ராஜன்-பிரான்ஸ்),ஜெரல் (பிரான்ஸ்), மெலனியஸ் நிர்மலராஜ் (நிம்மா, பிரான்ஸ்) ஆகியவர்களின் அன்புத் தாயும் மனுவேல் பிள்ளை சேவியர் (ஜேர்மனி), லோறன்ஸ் இந்திரன் (டென்மார்க்), அன்ரன் சேவியர் (பிரான்ஸ்), தனபாலசிங்கம் (BOC Staff, Jaffna, இலங்கை), தர்மபூபதி (பிரான்ஸ்), ஹேமா (பிரான்ஸ்), டொறின் (பிரான்ஸ்), ஆகியோரின் அன்பு மாமியும், காலஞ்சென்ற மேரி றோசம்மா மற்றும் M.S பேரின்பநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான P.N.R அமிர்தவாசகம், திறேசா மற்றும் யோய்ஸ் ஆகியோரின் அன்பு மைத்துனியும் டிலூசியா (பிரான்ஸ்), டினேஸ் (ஜேர்மனி), பிலிஸியா (ஜேர்மனி), சப்ரினா (டென்மார்க்), டிலான் (டென்மார்க்), ரீனா (டென்மார்க்), மக்சீம் (பிரான்ஸ்), யுடித்தா (பிரான்ஸ்), யூலியா (பிரான்ஸ்), தேவப்பிரியன் (இலங்கை), கனுசியா (இலங்கை), மயிஸ்டர் (பிரான்ஸ்), மேவின் (பிரான்ஸ்), மார்சல் (பிரான்ஸ்), இவாணி (பிரான்ஸ்), அஞ்சலோ (பிரான்ஸ்), சுவேனியா (பிரான்ஸ்), ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் சாள்ஸ் ஜெயரூபன் (பிரான்ஸ்), யுஸ்ரின் (பிரான்ஸ்) ஆகியோரின் பேர்த்தியும் எட்வின் (பிரான்ஸ்), மெலினா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (13.06.2011) திங்கட்கிழமை முற்பகல் 11.00 மணிக்கு புனித அடைக்கல மாதா ஆலயத்தில் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு புனித கொஞ்செஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளு மாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்;
பிள்ளைகள், மருமக்கள்.


6/1, மாட்டின் ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.

0094-21-222-5500 (பாமா)
0033-62-016-5026 (ஜெரல்)
0033-95-243-4130 (நிம்மா)
0033-[illegible]

(1881)

# மரண அறிவித்தல்

## திருமதி சசிரேகா உகந்தவனிதாஸ்



இல.37,3 ஆம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த திருமதி சசிரேகா உகந்தவனிதாஸ் கடந்த (09.06.2011) வியாழக்கிழமை காலை 7.30 மணியளவில் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் காலமாகி விட்டார்.

அன்னார் கிருஸ்ணன்- அருளம்மா தம்பதியரின் அன்பு மகளும் உகந்தவனிதாஸின் (பீற்றர்) அன்பு மனைவியும் சறோன், வர்ஷா ஆகியோரின் அன்புத் தாயும் சுதாகர், சுதர்சன், சுவிட்சன் (இத்தாலி) ஆகியோரின் அன்புச் சகோதரியும் உகந்தநாதன் - சரஸ்வதி தம்பதியரின் அன்பு மருமகளும் சுரேஸ்குமார், ஜெகன் ஆகியோரின் அண்ணியும் தபோ, யூடி ஆகியோரின் மச்சினியும் ஜெரினா, ஜெஸ்ரிக்கா ஆகியோரின் அன்புப் பெரியம்மாவும் ஆவார்.

அன்னாரது நல்லடக்க ஆராதனைகள் இன்று (12.06.2011) ஞாயிற்றுக்கிழமை பி.ப. 2.30 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் நல்லடக்கத்துக்காகக் கொட்டடி சேமக் காலைக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.37,3 ஆம் குறுக்குத் தெரு,
யாழ்ப்பாணம்.

தகவல்;
குடும்பத்தினர்.

(1882)(40)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர்களால் தெரிவானோர் தெரிவிக்கும் நன்றிக்கடன்...?

யாழ்ப்பாண 'மாநகர சபையின் மாதாந்தக் கூட்டம் வழமைபோல் மே மாதம் 26 ஆம் திகதி மாநகர சபையில் நடைபெற்றது.

அன்றைய தினம் வன்னியில் நடைபெற்ற யுத்தத்தில் இறந்த மக்களுக்கான அஞ்சலி நிகழ்வும் நடைபெறும் என்று முற்கூட்டியே அறிவிக்கப்பட்டது.

அதில் யாழ். மாநகர மக்களால் தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்கள் பலர் மாநகர சபையின் உறுப்பினர்கள் என்ற நிலையை மறந்து அஞ்சலி நிகழ்வைக் குழப்பும் வகையில் செயற்பட்டமை மிகவும் கவலையளிப்பதாக உள்ளது.

கடந்த இரண்டு வருடங்களுக்கு முன்பு தமிழ்ப் பிரதேசமான வன்னியில் புதுமாத்தளன், முள்ளிவாய்க்கால் போன்ற பல்வேறு இடங்களில் தமிழ் மக்கள் கொடூரமாக வயதுவேறுபாடின்றி ஆண், பெண் என்ற நிலை மறந்து கொல்லப்பட்ட சம்பவங்கள் உலகம் தெரிந்த விடயம்.

உலக நாடுகளே அன்றைய தினத்தைத் தமிழ் மக்களின் துக்கதினம் என்று அங்கீகரித்து துக்கம் அனுஷ்டித்தனர்.

இதனைப் பத்திரிகைகள் மட்டுமன்றி இணையத் தளங்களும் நிரூபிக்கின்றன.

இந்த நிலையில் முழுக்க முழுக்க தமிழ் பேசும் மக்களைக் கொண்டியங்கும் யாழ். மாநகர சபையில் மக்களின் சார்பாக அஞ்சலி செலுத்துவதற்கு மக்களால் தெரிவுசெய்யப்பட்ட பிரதிநிதிகள் முன் வந்தபோதும், அதே இனத்தைச் சேர்ந்த ஒரு பகுதி உறுப்பினர்கள் அஞ்சலியைச் செலுத்த விடாது தடுத்து நிறுத்த முற்பட்டுள்ளனர்.

அது மட்டுமன்றித் தேவையற்ற விவாதங்களும் சொற்பதங்களும் இங்கு பிரயோகிக்கப்பட்டிருப்பது மிகவும் கவலைக்குரிய விடயமாகவும் வெட்கித் தலைகுனிவை ஏற்படுத்தியுள்ள விடயமாகவும் உள்ளது.

மாநகர சபை மக்களின் சபை. மக்களின் கோரிக்கைகள் முன்மொழியப்படும் இடம். மாநகர சபை மக்கள் நிதானத்துடன் கௌரவமாக வாழும் ஓர் இடம். இறந்தவர்களுக்கு அஞ்சலி செலுத்துவது என்பது இன, மத வேறுபாடின்றி செய்யப்படும் ஒரு நிகழ்வு. அஞ்சலியின் அர்த்தம் புரியாதவர்களை மாநகர சபை உறுப்பினராகத் தெரிவுசெய்தமையையிட்டு மக்கள் கவலையும் மனவேதனையும் அடையும் நிலை ஏற்பட்டுள்ளது.

யாழ். மாநகர சபையில் பல்வேறு பிரச்சினைகள் நடைபெற்று முடிந்துள்ள நிலையில் அவற்றில் முக்கியமான பல விடயங்கள் ஆளும் தரப்பு உறுப்பினரால் மக்களின் கவனத்துக்கு வெளிக்கொண்டுவரப்பட்டுள்ளன.

அவற்றையும் மக்கள் இதுவரை பெரிதுபடுத்தாமல் இருந்தார்கள்.

ஆனால் இன்று இறந்தவர்களுக்கு மௌன அஞ்சலி நிகழ்வு ஒரு சில நிமிடம் செய்வதற்கு ஆளும் தரப்பு உறுப்பினர்கள் எதிர்ப்புத் தெரிவித்திருந்தது மட்டுமன்றி அவர்களின் அமைதியான அந்த சில நிமிட மௌன அஞ்சலியை கொச்சைப்படுத்தும் விதத்தில் நடந்துகொண்டமை தகாத வார்த்தைகள் பிரயோகித்து இடையூறு விளைவித்தமைக்குத் தகுந்த காரணம் தெரியப்படுத்த வேண்டும் என்று மக்கள் எதிர்பார்க்கின்றார்கள்.

இதற்கு முதல்வரும் உடந்தையாக இருந்துள்ளார். அவர் இதனை ஊக்குவித்துள்ளதாக அவர் நடந்துகொண்ட விதம் வெளிக்காட்டுகிறது.

அவர் படித்தவர், ஆசிரிய சேவையில் இருந்தவர். மாணவர்கள் எல்லோரும் சமன் என்ற கொள்கையை ஏற்று நீண்ட கால ஆசிரிய சேவையை ஏற்றுக் கொண்டவர்.

இந்த நிலையில் தலைமை வகிக்கும் இந்த சபையில் அவரே முன் மாதிரியாக எழுந்து நின்று அஞ்சலிக்கான முழு ஏற்பாட்டையும் பொறுப்பு எடுத்து நடத்த வேண்டும்.

இந்த நிலையில் அவரே அந்தக் கூட்டத்தை நடத்தாது எழுந்து சென்றமை, அந்த அஞ்சலியின் அர்த்தம் அவருக்குப் புரியவில்லை என்பதையே எண்ணத் தோன்றுகின்றது.

அல்லது அதனைத் தாங்கள் ஏற்பாடு செய்வதற்கிடையில் எதிர்க்கட்சி முந்திவிட்டது என்ற கோபாவேசத்தின் வெளிப்பாடா என்றும் எண்ணத் தோன்றுகின்றது.

இதில் எந்த உள் நோக்கத்தில் இந்த அஞ்சலி நிகழ்வைக் குழப்ப வேண்டும் என்று அவர்கள் செயற்பட்டுள்ளார்கள் என்பது புரியாத புதிராகவே உள்ளது.

எது எப்படியிருந்தாலும் அங்கு செயற்படும் உறுப்பினர்கள் அனைவரும் தமிழ் பேசும் மக்களே. அவர்கள் அனைவருக்கும் இந்த மரணங்கள் எப்படி நிகழ்ந்தன என்ற விடயங்கள் தெரியும்.

அதனை அரசியல்படுத்தித் தமிழ் பேசும் மக்களை அவமானப்படுத்தும் விதத்தில் நடந்துகொண்டமை ஏற்றுக் கொள்ள முடியாது.

இதில் முன்னின்று செயற்பட்ட மங்களநேசன், ஸ்ரீகாந்தன், திருமதி பற்குணராசா யோகேஸ்வரி போன்றோர் இந்த நிகழ்வு நடத்தப்படகூடாது என்பதற்கான காரணங்களை ஆதாரபூர்மாக மக்களின் கவனத்துக்கு தனித் தனியாக தெளிவுபடுத்த வேண்டும் என்று எதிர்பார்க்கின்றார்கள்.

**நாகராசா**

அவ்வாறு செய்யமுடியாது எனில் பொதுமன்னிப்புக் கேட்கவேண்டும் என்று தங்களைக் கோர விரும்பவில்லை. இந்த அஞ்சலி நிகழ்வை ஜூன் மாதம் 19ஆம் திகதிக்கிடையில் மன ஒற்றுமையுடன் மக்களின் சார்பாக மக்களின் பிரதிநிதிகள் என்ற ரீதியில் தமிழ் பற்றாளர்கள் என்ற உரிமையுடன் நடத்த வேண்டும் என்பதை முன்வைக்கின்றேன்.

இறந்தவர்கள் அனைவரும் தமிழர்கள் என்பதை மீண்டும் ஞாபகப்படுத்த விரும்புகின்றேன்.

அமெரிக்காவின் முதலாவது எதிரியெனக் காணப்பட்ட ஒசாமா பின்லேடன் அமெரிக்க இராணுவத்தால் கொல்லப்பட்டபோதும் அவரது இறந்த உடலை மதித்து முஸ்லிம் கலாசாரப்படி அமெரிக்கா அடக்கம் செய்ததை இவர்கள் அறிந்து கொள்வார்களா?

# மரணத்தை அறிவிக்கும் காலமாற்றங்கள்

பிறப்பு என்பதும் மனிதனுக்கு நிச்சயமென்றால் இறப்பு என்பதும் தானே. சாகிற நாள் தெரிந்து போனால் வாழ்கின்ற நாள் நரகமாகி விடும் அல்லவா. அதனால் பெரும்பாலானோருக்கு சாகிற நாள் தெரியாமலே வாழ்ந்து மரணிக்கின்றார்கள்.

மனிதன் மரணித்தால் அவை வெளி உலகத்துக்கு எவ்விதம் தெரியப்படுத்துகின்றார்கள். எமது பிரதேசத்தில் இதன் நடைமுறைகள் பெருமளவு மாற்றங்களைக் கண்டு விட்டது.

யுத்தத்தால் ஏற்பட்ட இடப்பெயர்வுகள் குடும்பங்களின் பரவலாக்கம், பண வசதிகளின் அதிகரிப்பு, தகவல் தொழில் நுட்ப வசதிகள் அதிநவீன முன்னேற்றம் என்பவை மரணத்தை அறிவிக்கும் முறைகளில் பல மாற்றங்களைக் கொண்டு வந்துவிட்டது.

முன்னைய காலத்தில் வீட்டில் இயற்கை மரணம் நிகழ்ந்து விட்டால் அறிவிக்கும் வழக்கம் பிரதேசத்துக்குப் பிரதேசம் மாறுபட்ட முறையில் இருந்துள்ளன.

சில பிரதேசங்களில் மரணம் நிகழ்ந்த வீட்டில் பறை மேளமடிக்கும் சத்தம் கேட்கும். அது வந்த திசையை நோக்கி யார் எவரென விசாரித்து அறிவார்கள். இன்னும் சில கிராமங்களில் அதிகாலை 4 மணிக்கும் 6 மணிக்கும் இடையில் இருவரோ, மூவரோ கால்நடையாகச் சென்று வீட்டு வாசல்களில் உரத்தகுரலில் இன்னார் இறந்துவிட்டதாக அறிவிப்பார்கள்.

இழவு சொல்லுதல்,சாவுசெல்லுதல் என்று இது இடத்துக்கு இடம் மாறுபடும். சற்று பொருளாதார வசதி வந்த காலத்தில் சைக்கிளில் திரிந்து மரணத்தை அறிவிக்கும் வழக்கம் வந்ததாகக் கூறுகின்றனர். ஊருக்கு ஊர் மாறுபட்ட முறைகளிலான அறிவிப்புக்கள் இவ்வாறு செய்யப்பட்டன. உறவுகள் ஓரிடத்தில் செறிந்திருந்த அக்காலத்தில் இந்த அறிவிப்பு முறைகள் சாத்தியமானதாக இருந்தது.

உத்தியோகம்,வியாபாரம் கருதி தூர இருந்தாலும் பதிவுசெய்யப்பட்டுப் பெறப்பட்ட தொலைபேசி அழைப்பொன்றின் மூலம் தகவல் எப்படியோ தெரிவிக்கப்பட்டு விடும். இரவோடு இரவாக உறவை நாடி வந்து விடுவார்கள்.

அக்காலத்தில் வானொலியில் மரண அறிவித்தல் சொல்லும் வழக்கமோ, பத்திரிகையில் மரண அறிவித்தல் தெரிவிக்கும் பழக்கமோ அரிதாகவே நிகழும். ஜே.வி.பி.எனும் மக்கள் விடுதலை முன்னணி இயக்கம் 1971 ஏப்ரல் 5 இல் நாடளாவிய ரீதியில் நடத்திய ஆயுதப் போராட்டத்தில் பொலிஸ் நிலையங்களை தாக்குவதற்கு வானொலி மரண அறிவித்தலொன்று தகவலை பூடகமாகத் தெரிவிக்கப் பயன்படுத்தினர்.

அதன் விளைவு இலங்கை வானொலியில் சில வருடங்கள் மரண அறிவித்தல் தெரிவிக்கும் முறைக்குத் தடையிருந்தது.

காலமாற்றம் மரண அறிவித்தல் முறைகளிலும் மாற்றத்தைக் கொண்டு வந்தது.

இன்றோ இவ்வழக்கம் ஏறத்தாழ எல்லா இடங்களுமே வந்துவிட்டது. இது புதினமல்ல.

பத்திரிகைகளில் மரண அறிவித்தல், கண்ணீர் அஞ்சலி, துயர்பகிர்தல், நினைவு கூரல் பிரசுரிக்கும் வழக்கம் அண்மைய இருபது வருடங்களில் தான் பிரசித்தமானது. 1990 ஜூனில் ஆரம்பித்த 3 ஆம் ஈழப்போரைத் தொடர்ந்து யாழ். மாவட்டத்தின் பல பிரதேசங்களிலும் உறவுகள் நாலா திசைக்கும் சிதறிப் போயினர்.

ஒரு பிரதேசத்தில் செறிந்து வாழ்ந்த சமூகக் கட்டமைப்பில் உடைவு வர இறப்பை அறிவிக்கத் தகவல் தொடர்பு சாதனத்தின் தேவை உருவானது. குறிப்பாக 1990,1991 இல் நிகழ்ந்த தீவக இடப்பெயர்வு காரணமாக வேலணை, ஊர்காவற்றுறை, காரைநகர் ஆகிய பிரதேச செயலகப் பிரிவுகளின் மக்கள் நாலா திசைக்கும் சிதறினார்கள்.

இவர்களுக்குத் தான் தமது உறவுகளின் மரணத்தைத் தெரிவிக்க தகவல் தொடர்பு சாதனம் கூடுதலாகத் தேவைப்பட்டது.

பத்திரிகை என்ற ஒன்று மட்டுமே தகவல் தொடர்பு சாதனமாக இருந்த தகவல் யுகத்தின் இருண்ட காலம் அது. தீவக மக்களால் தான் பத்திரிகை ஊடாக மரண அறிவித்தல் முறை பிரபலமடையத் தொடங்கியது எனலாம்.

நாளாவட்டத்தில் ஏனைய பிரதேச மக்களுக்கும் இது இலகுவான முறையாகத் தோன்ற பின்பற்றத் தொடங்கினார்கள். 1990 ஜூன் மாதத்துக்குப் பின்னர் மின்சாரம், தொலைபேசி யாவும் செயலற்றுப் போன காலகட்டத்தில் தூர இடத்திலுள்ள தமது உறவுகளுக்கு தகவல் தெரிவிக்க சைக்கிள், மோட்டார் சைக்கிள் மூலமாகச் சென்றனர்.

1990-1996 முற்பகுதி வரையான கால கட்டத்தில் யாழ். குடாநாட்டின் பெரும் பகுதியும், வன்னிப் பெரு நிலப்பரப்பின் பெரும் பகுதியும் புலிகளின் கட்டுப்பாட்டினுள் இருந்தது. இவர்கள் தமது தொலைத் தொடர்புச் சாதனங்கள் பெற்றுக்கொண்டு மரணங்களை அறிவித்தார்கள்.

இக்காலப் பகுதியில் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கக் குழு வெளிமாவட்டங்களில் கட்டணமின்றி அறிவித்து உதவினார்கள்.

1996இல் கொழும்பில் உள்ள இலங்கை வானொலியின் ஊடாக மரண அறிவித்தலைக் கொடுத்து நாட்டின் நாலா பாகங்களுக்கும் தெரியப்படுத்தினார்கள்.

அதற்கு உள்ளூர் ஊடகங்களைப் பத்திரிகைகளில் பயன்படுத்தினார்கள் அரச, தனியார், கூட்டுறவு, அரசசார்பற்ற நிறுவனங்கள், சமூக மட்ட அமைப்புக்கள், பொது மக்கள் துயர் பகிர்கின்றோம், கண்ணீர்அஞ்சலி ஆகியவற்றைத் தெரிவிக்கும் முறைகளும் மெல்ல மெல்ல ஒரு மரபாக உருவாகத் தொடங்கியது.

**வே.தபேந்திரன்**

மரண நிகழ்விற்கு நேரில் வர முடியாதோர் தொலைபேசி, தந்தி, குறுந்தகவல், மின்னஞ்சல் மூலமாக துயர் பகிரும் நிகழ்வுகளும் வந்து விட்டன. மரண நிகழ்வை 'ஸ்கைப்' மூலமாக நாள்டினதோ, உலகினதோ எப் பாகத்திற்கும் காண்பிக்கும் நடைமுறையும் சாதாரணமாகி விட்டது.

பறைமேளம் அடிப்பது சில இடங்களிலும், பாண்ட் அடிப்பது சில இடங்களிலுமாக நிகழ்கின்றது. துண்டுப்பிரசுரம் வெளியிடுவது, டிஜிற்றல் பனர் கட்டுவது, சுவரொட்டி ஒட்டுவது சர்வ சாதாரணமாகி விட்டது.

பாடைகட்டும் வழக்கமும் பெருமளவில் காணாமல் போய் காரில் உடலத்தை எடுத்துச் செல்வது, காரில் பாடை அமைப்பைக் கட்டுவது போன்றவை எல்லாம் வந்து விட்டன.

காலமாற்றம் மனிதனின் வாழ்வுத் தளத்தையும் அசைத்தே வருகின்றது என்பதில் இரு வேறுபட்ட கருத்துக்கு இடமில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**காணி விற்பனைக்கு**

யாழ். பாஷையூர் கடற்கரை வீதியில் கடற்பக்கமாக உள்ள 2 பரப்பு (20 பேர்ச்) காணி உடன் விற்பனைக் குள்ளது.
தொடர்பு-கிறிஸ்ரி- 0777-967083

**வீட்டு வேலையாள் தேவை**

வெள்ளவத்தையில் வசிக்கும் இளம் தம்பதியினர் வீட்டில் தங்கி, வீட்டு வேலை செய்ய (சமையல் தெரிந்திருத்தல் நல்லது) பெண் தேவை. தங்குமிட வசதி, சாப்பாடு இலவசம். சம்பளம் 8000/= குடும்ப உறுப்பினர் விதம் நன்கு கவனிக்கப்படும். (45 வயதுக்கு உட்பட்டவர்கள்) தொடர்பு: 071 5350914, 0773470788 (C/671)

## பாஷையூர் அந்தோனியார் திருவிழா

பாஷையூர் புனித அந்தோனியார் ஆலய வருடாந்த திருவிழாவில் நற்கருணை விழாவும் திருவிழாத் திருப்பலியும் இன்றும் நாளையும் நடைபெறவுள்ளன. தேர்ப்பவனி நாளை மாலை நடைபெறும். இன்று மாலை 4.45 மணிக்கு நற்கருணைப் பெருவிழாவும் பவனியும் இடம்பெறும். நாளை காலை 5.15 மணிக்கு முதல் திருப்பலியும் காலை 6.30 மணிக்கு யாழ். ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை தலைமையில் திருவிழாத் திருப்பலியும் இடம்பெறும். நாளை மாலை 4.30 மணிக்குத் தேர்ப்பவனி ஆரம்பமாகும். தேர்ப்பவனி நிறைவடைந்ததும் திருச்சொரூப ஆசீர் வழங்கப்படுமென பங்குத் தந்தை தெரிவித்துள்ளார். (த-135)

## 16 ஆம் நாள் மோட்ஷதீப அழைப்பு



### திருமதி கனகாம்பிகை வைரவநாதன்

தோற்றம்
21 ★ 03★ 1933

மறைவு
29 ★ 05★ 2011

கடந்த 29.05.2011 அன்று சிவபதமடைந்த எங்கள் குடும்ப விளக்கு திருமதி கனகாம்பிகை வைரவநாதன் அவர்களின் 16 ஆம் நாள் மோட்ஷதீப கிரிகைகள் நாளை (13.06.2011) திங்கட்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும். இந்த நிகழ்வில் தாங்களும் வருகைதந்து கிரியைகளில் கலந்து அன்னாரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திப்பதோடு தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

★ இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்.

மலைவேம்படி,
அளவெட்டி மேற்கு.

பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.
தகவல்: சிவஸ்ரீ ஜெகேந்திரக் குருக்கள் (மகன்)
(ஜெயாஜயா)
(1888)




**i7 Computers**

Model:-
HUAWEI E153

Model:-
ZTE MF112



மொத்த விலை- 3900.00
சில்லறை விலை- 4100.00
1வருட உத்தரவாதம்
வேகம் -7.2 mbps

கிடைக்கப்பெறும் இடங்கள்

i7Computers
124B,பலாலி வீதி,
(இலுப்பையடி சந்தி அருகில்)
யாழ்ப்பாணம்
Tel:0212224959,0777683676

இஷா ரெக்
கொடிகாமம் வீதி,
நெல்லியடி
Tel:0213216939,
0775711146

**காணி விற்பனைக்கு**

1 1/2 பரப்பு காணி கிணற்றுடன் விற்பனை.
- 8/3 கற்பக விநாயகர் வீதி.
தொடர்பு: 55, கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 0771 591322 (C/671)

**காணி விற்பனைக்குண்டு**

திருநெல்வேலிச் சந்திக்கு அருகாமையில் பலாலி விதியில் சம்பத் வங்கிக்கு (Sampath Bank) அருகில், பெற்றோல் நிலையத்திற்கு முன்பாக மடத்தடி ஒழுங்கையில்(கராஜ் (Garage) ஒழுங்கையில்) 2-2/3 பரப்புக் காணி, உடன் விற்பனைக்குண்டு
தொடர்பு 0112366175, 0777 268668

**வீடு வாடகைக்கு உண்டு**

யாழ்நகர். முதலாம்குறுக்குத் தெருவில் [2400]சதுர அடியில் மாடி வீடு வாடகைக்கு உண்டு. நிறுவனங்கள் விரும்பப்படும்.
தொடர்பு: 075 6541877 8a.m- 6 p.m (C/670)

## மரண அறிவித்தல்

### கந்தையா தங்கம்



கோப்பாய் தெற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா தங்கம் (10.06.2011) வெள்ளிக்கிழமை காலமாகி விட்டார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

ஆதித்தன்வளவு, கோப்பாய் தெற்கு,
கோப்பாய். (1891)

தகவல்
ச.திருஞானம் (மருமகன்)

## நன்றி நவிலல்



### பாமதி பரமேஸ்வரநாதன்

(சேவைக்காலப் பயிற்சி ஆலோசகர், வலயக் கல்வி அலுவலகம், களனி முன்னைநாள் ஆசிரியை யா/வயாவிளான் மத்திய மகா வித்தியாலயம், கொ/விபுலானந்த மகா வித்தியாலயம்)

01-06-2011ம் திகதி சிவபதமடைந்த எனது மகள் பாமதி பரமேஸ்வரநாதனின் இறுதிக் கிரிகைகளில் நேரில் வந்து கலந்து கொண்டும், மலர்வளையம் வைத்தும், அனுதாபச் செய்திகள் அனுப்பியும் துயரில் பகிர்ந்து கொண்ட உற்றார், உறவினர்கள், நண்பர்கள், களனி, நீர்கொழும்பு கல்வி வலயங்களைச் சேர்ந்த கல்வியியலாளர்கள், அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் அனைவருக்கும் எனது இதய பூர்வமான நன்றிகளையும், வணக்கத்தையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

அன்னார் ரோயல் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டபோது அவருக்கு சிகிச்சையளித்த வைத்திய நிபுணர்கள், மருத்துவப் பணியாளர்கள் ஆகியோருக்கும் எனது இதயபூர்வமான நன்றிகளையும் வணக்கத்தையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

அவரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றேன்.


104 ½ மனிங்பிளேஸ்,
கொழும்பு - 06.

திருமதி. தேவமலர் பரமேஸ்வரநாதன்
- தாயார்.

## மரண அறிவித்தல்

### சிவப்பிரகாசம் ஜெகராஜசிங்கம் (ஜெகா)

(வீடியோ புளொசம்ஸ் ஸ்தாபகரும் உரிமையாளரும்)



யாழ்ப்பாணம், வண்ணார்பண்ணை இல.30, சிவப்பிரகாசம் வீதியை பிறப்பிடமாகவும் கொழும்பு 06, இல.32-5/1, றோகினி வீதியை வசிப்பிடமாகவும் கொண்டவரான திரு. சி.ஜெகராஜசிங்கம் (குட்டி) 10.06.2011 அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் திருமதி முத்துராணியின் அன்புக் கணவரும் திரு.திருமதி சிவப்பிரகாசம் தம்பதிகளின் புதல்வனும் திருநெல்வேலியைச் சேர்ந்த திரு திருமதி மதியாபரணம் தம்பதியரின் மருமகனும் பரமநாதனின் (சிவன் ஸ்ரோர்ஸ் - கம்பஸ் சந்தி) சகோதரரும் சந்திரகலா, ராகுலன் ஆகியோரின் பாசமுள்ள தந்தையும் சிவகுமார், தர்மினி ஆகியோரின் மாமனும் காயத்திரி, பவித்திரா, மைத்திரி, மயூரி ஆகியோரின் பேரனும் நிரோசன், விசாகன், துவாரகன், பகிரேகா ஆகியோரின் பெரியப்பாவும் ராஜமனோ (ராஜி), சுகிர்தலஷ்மி, செல்வராஜா, முத்துலிங்கம், ராஜபூபதி, காலஞ்சென்றவர்களான மகாலஷ்மி, நவநீதநாயகி, இந்திராணி ஆகியோரின் மைத்துனரும் சண்முகவடிவு, மகேஸ்வரி, சாம்பசிவம், காலஞ்சென்றவர்களான மூத்ததம்பி, நடராஜா, செந்திவேல், செந்திலிங்கம் ஆகியோரின் சகலனும் காலஞ்சென்றவர்களான கொட்டடியைச் சேர்ந்த திரு. திருமதி இரத்தினசபாபதி- சரஸ்வதி, சாவகச்சேரியைச் சேர்ந்த திரு.திருமதி பாலச்சந்திரன்- சுமங்கலாதேவி (சாரதா) ஆகியோரின் சம்பந்தியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (12.06.2011) ஞாயிற்றுக்கிழமை பொரளை ஜெயரட்ண மலர்ச்சாலையில் முற்பகல் 10 மணிமுதல் மாலை 6 மணிவரையும் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு திங்கட்கிழமை மீண்டும் அஞ்சலிக்காக காலை 9 மணி தொடக்கம் நண்பகல் 2 மணிவரை வைக்கப்படும்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை (13.06.2011) திங்கட்கிழமை அன்று பிற்பகல் 2 மணிக்கு ஆரம்பமாகி பின்னர் பொரளை இந்து மயானத்தில் 4 மணியளவில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

'சிவன் ஸ்ரோர்ஸ்',
பரமேஸ்வராச் சந்தி, யாழ்ப்பாணம்.

தகவல்:
சி.பரமநாதன் (சகோதரன்)
சிவன் ஸ்ரோர்ஸ்.
(/819)

## HSBC வங்கி மற்றும் IDM Affiliated Jaffna Campus உம் இணைந்து

### செயற்படுத்தும் மாபெரும் புலமைப்பரிசில் திட்டம்

வடபகுதி இளைஞர், யுவதிகளுக்கான தொழிற்தகைமையினை உறுதிப்படுத்துவதற்கான புலமைப்பரிசில் திட்டத்துக்கமைய தொழில் வாய்ப்பினை எதிர்பார்க்கும் 149 இளைஞர், யுவதிகள் வடபகுதி மாவட்டங்களிலிருந்து அரச அதிபர்களின் சிபார்சின் அடிப்படையில் பயிலுனர்களாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர் என்பதை மகிழ்ச்சியுடன் அறியத் தருகின்றோம். தெரிவு செய்யப்பட்ட அனைத்துப் பயிலுனர்களுக்குமான புலமைப்பரிசில் வழங்கும் நிகழ்வு எதிர்வரும் 14.06.2011 செவ்வாய்க்கிழமை காலை 9 மணியளவில் தியாகி அறக்கொடை நிதிய (TCT) வளாகத்தில் அமைந்துள்ள ''சொர்ணாம்பிகை'' மண்டபத்தில் HSBCயின் தென்னாசியப் பிராந்திய நிறைவேற்று அதிகாரி Mr.Nick Nicilaou வினாலும் IDM Affiliated Campus இன் சர்வதேச பணிப்பாளர் விநாயகமூர்த்தி- ஜனகன் அவர்களினாலும் வழங்கப்படவுள்ளமையால் புலமைப்பரிசில் திட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட அனைவரையும் தவறாது சமுகமளிக்குமாறு அன்புடன் அழைக்கன்றோம். புலமைப்பரிசில் திட்டத்துக்கு அனைத்து மாவட்டங்களில் இருந்தும் விண்ணப்பித்தவர்கள் தங்கள் தெரிவு, பங்குபற்றல் தொடர்பாகவும் உறுதிப்படுத்துவதற்கு சங்கரப்பிள்ளை ரவி -0775449833 அல்லது 0212229901 (துறைத் தலைவர், வியாபார முகாமைத்துவ பீடம், IDM Affiliated Jaffna Campus), இணைப்பாளர், புலமைப்பரிசில் திட்டம் என்பவருடன் திங்கட்கிழமை (13.06.2011) இற்கு முன்னதாகத் தொடர்பு கொண்டு உறுதிப்படுத்துமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

IDM Affiliated.
Jaffna Campus.

(சி/821)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மாற்றம் என்று வாக்களித்த மக்களுக்கு ஏமாற்றம்.....!



*"கல்லறைகள் திறந்துகொண்டன. மடிந்தவர்கள் வருகிறார்கள். மாவீரர்களின் ஆவிகள் யுத்தத்துக்கு வந்துவிட்டன. புகழ் மலர்களோடும் உருவிய வாளோடும் வருகிறார்கள்...". கல்லறைகள் திறந்து கொண்டன. மடிந்தவர்கள் வருகிறார்கள். மாவீரர்களின் ஆவிகள் யுத்தத்துக்கு வந்துவிட்டன. புகழ் மலர்களோடும் உருவிய வாளோடும் வருகிறார்கள். இதயத்தில் ஈழத்தின் விடுதலையை ஏந்தி வருகிறார்கள். ஈழ விடுதலை முரசு ஒலிக்கட்டும். ஈழம் உதயமாகட்டும். சுதந்திர ஈழக் கொடி பட்டொளி வீசிப் பறக்கட்டும். ஆம்; ஐ.நா.சபைக்கு முன் சுதந்திர தேசங்களின் கொடிகளோடு... எங்கள் தமிழ் ஈழத் தேசக் கொடியும் பறக்கட்டும்!"*

-பிரஸ்ஸல்ஸ் மாநாட்டில் வைகோ பீறிட்டுக் கிளம்ப... அரங்கம் அதிர்ந்தது!

இந்திய நாடாளுமன்றத்துக்குள் வைகோவை அனுப்ப இயலாமல், விருதுநகர் மக்கள் சிக்கனத்தைக் கடைப்பிடித்தாலும்... ஐரோப்பிய ஒன்றிய நாடாளுமன்றக் கூட்ட அரங்குக்குள் அவரை அழைத்துச் சென்றுவிட்டார்கள், ஈழத் தமிழர்கள்.

தென் தீவில் தமிழர் படும் துயரங்களை உலகத்தின் பார்வைக்குப் படையல் விரித்துத் திரும்ப இருக்கிறார் வைகோ.

**பிரஸ்ஸல்ஸ் மாநாட்டின் நோக்கம் என்ன?"**

"உலக நாடுகளைப் பொறுத்த வரை... ஈழப் பிரச்சினையில் அவர்களின் கண்கள் இப்போதுதான் திறக்க ஆரம்பித்துள்ளன.

2009 ஆம் ஆண்டு மே மாதம் நடந்த கொடுமைகளை, உலகம் இதுவரை முழுமையாக உணரவில்லை. இரண்டு ஆண்டுகள் கழித்து இப்போதுதான் அவர்களுக்கு உறைக்கிறது. அதன் வெளிப்பாடுதான் பெல்ஜியம் நாட்டில் நடந்த பிரஸ்ஸல்ஸ் மாநாடு!

ஐரோப்பிய ஒன்றிய நாடாளுமன்ற உறுப்பினர்களும், முக்கியமாக இடதுசாரிப் பசுமைக் கட்சிகளும், தமிழ் ஈழ மக்கள் அவையின் அனைத்து உலகச் செயலகமும் இணைந்து, இந்த மாநாட்டை ஏற்பாடு செய்திருந்தன.

ஐரோப்பிய ஒன்றிய நாடாளுமன்றக் கட்டடத்தில் இது நடந்தது. இலங்கைக்குப் பொருளாதாரத் தடை விதிக்கிறோம் என்று ஐரோப்பிய ஒன்றிய நாடுகள் முடிவு எடுத்ததும் இந்தக் கட்டடத்தில்தான். இதில் ஐரோப்பிய ஒன்றிய நாடாளுமன்ற உறுப்பினர்களும், பல நாடுகளைச் சேர்ந்த மனித உரிமை ஆர்வலர்களும் கலந்துகொண்டனர். அயர்லாந்து நாட்டைச் சேர்ந்த எம்.பியான பால் மர்ஃபி இதற்கான ஏற்பாட்டைச் செய்து இருந்தார்.

"இலங்கையில் நடந்து இருப்பது போர்க் குற்றம். அதையும் தாண்டிய இனப்படுகொலை என்பதை ஐக்கிய நாடுகள் அவை அமைத்த விசாரணைக் குழுவே ஒப்புக்கொண்ட நிலையில், ராஜபக்ஷவைப் போர்க் குற்றவாளியாகக் குற்றவாளிக் கூண்டில் நிறுத்தி ஆக வேண்டும். இந்த நடவடிக்கைகளின் தொடக்கமே இந்த மாநாடு!"

**உங்களது பேச்சின் வழியாக நீங்கள் வழங்கிய ஆலோசனைகள் என்ன?**

"உலகம் முழுவதும் பரவிக் கிடக்கும் லட்சக்கணக்கான ஈழத் தமிழர்களின் நெஞ்சில் இருக்கும் சிந்தனைகளையே நானும் அந்த மாநாட்டில் சொன்னேன். 'ஈழப் பிரச்சினையை அடுத்த கட்டத்துக்குக் கொண்டு செல்லக் கூடியதாக உங்கள் ஆலோசனைகள் அமைய வேண்டும் அண்ணா என்று பலரும் என்னைக் கேட்டுக் கொண்டார்கள்.

சத்தியத்துக்கு சாட்சியங்கள் தேவை இல்லை. ஈழத் தமிழர் அனுபவித்த இன்னல்கள் சந்தேகத்துக்கு இடம் இல்லாமல் நிரூபிக்கப்பட்டு இருக்கின்றன. ஈழத்தில் மருத்துவமனைகள் மீது குண்டுகள் வீசப்பட்டன. படுகாயம் அடைந்தவர்களுக்கு மருந்துகளே இல்லை. மருத்துவமனைகளில் அறுவை சிகிச்சை செய்ய மயக்க மருந்துகள் இல்லை. பட்டாக்கத்திகளைக் கொண்டு உறுப்புகளை வெட்டினார்கள்.

குழந்தைகளுக்கு பால் பவுடர் வாங்க வரிசையில் நின்ற தாய்மார்கள், குண்டு வீச்சில் கொல்லப்பட்டார்கள். தமிழ்ப் பெண்கள் தனியாக இழுத்துச் செல்லப்பட்டு நிர்வாணம் ஆக்கப்பட்டு பாலியல் கொடுமைகளுக்கு ஆளாக்கப் பட்டு,




கொடூரமாகக் கொல்லப்பட்டனர்.

எல்லா சாலைகளிலும் தமிழர் பணங்கள் சிதறிக்கிடந்தன. அழுகிப் போன உடல்களின் நாற்றம் காற்று மண் டலத்தையே நிறைத்தது.

"ஆயுதங்களை மௌனித்துவிட்டோம் என்று அறிவித்து, வெள்ளைக் கொடி ஏந்தி வந்த நடேசன், புலித்தேவன் போன்றவர்களைச் சுட்டுப் படுகொலை செய்தது கொடுமையிலும் கொடுமை.

இதை எல்லாம் தமிழ்நாட்டுத் தெருக்களில் நாங்கள் சொன்னபோது, பலரும் நம்ப மறுத்தார்கள். ஆனால், இன்று ஐ.நா. அறிக்கையே அத்தனையையும் ஒப்புக் கொண்டு உள்ளது.

" ஐ.நா. அவை தனது கடமையைச் செய்யவில்லை என்றும் அந்த அறிக்கை குற்றம்சாட்டுகிறது. அதாவது, தமிழனாகப் பிறந்தான் என்ற ஒரே காரணத்துக்காக, இலங்கைத் தீவில் தமிழர்கள் கொல்லப்பட்டார்கள். தமிழ்ப் பெண்கள் சீரழிக்கப்பட்டு சிதறடிக்கப்பட்டனர் என்பதை உலகம் ஒப்புக்கொண்டது. இந்தச் சூழலில் இத்தனை அநியாயங்களையும் செய்த சிங்களவர்களோடு, இனியும் தமிழர்கள் ஒன்றாக வாழ முடியுமா? இதுதான் தமிழர்களின் உள்ளங்களில் உள்ள ஒரே ஒரு கேள்வி.

"சுதந்திரத் தமிழ் ஈழத்தை முன்வைத்து ஒரு வெகுஜன வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும். இதில், ஈழத்தில் வாழும் தமிழர்கள், வெளிநாடுகளில் வாழும் தமிழர்கள் வாக்குகளை அளிக்க வேண்டும் என்ற கருத்தை நான் முன்வைத்தேன்!"

**இப்படி ஒரு வாக்கெடுப்பு நடத்துவதற்கு இலங்கை அரசு ஒப்புக்கொள்ளாதே?**

" இலங்கையின் ஒப்புதல் யாருக்கு வேண்டும்? இதைச் செய்ய வேண்டியது ஐக்கிய நாடுகள் அவை. கிழக்குத் திமோர் தனி நாடாக வாக்கெடுப்பு நடத்திய ஐ.நா. மன்றம், தெற்கு சூடான் தனி நாடாக வாக்கெடுப்பு நடத்திய ஐ.நா. மன்றம், கொசோவா தனி நாடாக அனுமதித்த ஐ.நா. மன்றம், தமிழ் ஈழம் சுதந்திர தேசமாக ஆவதற்கு வாக்கெடுப்பு நடத்த வேண்டாமா?

"நிச்சயமாக, வாக்கெடுப்பு வேண்டும். அனைத்து நாடுகளின் பார்வையாளர்கள் கண்காணிப்பில் அது நடத்தப்பட வேண்டும். போர் நடந்தபோதும், கொடூரங்கள் தொடர்ந்த போதும் வேடிக்கை பார்த்த ஐ.நா. மன்றம் இனியும் அப்படி இருக்க முடியாது என்பதை, இந்த மாநாட்டில் பங்கேற்ற பலரும் சொன்னார்கள்.

"சுதந்திரத் தமிழ் ஈழத்துக்கான வாக்கெடுப்பு நடத்துவதும், ராஜபக்ஷவைப் போர்க் குற்றவாளியாக நிறுத்தித் தண்டனை வாங்கித் தருவதும்தான், இந்த மாநாட்டின் இரண்டு நோக்கங்களாக இருக்க முடியும் என்று சொன்னேன்!

2010 ஜனவரியில் கூடிய டப்ளின் தீர்ப்பாயம், சிங்கள அரசின் போர்க் குற்றங்களை விசாரிக்க வேண்டும் என்று அறிவுறுத்தியதைச் சுட்டிக் காட்டிய நான், ராஜபக்ஷவையும், அவரது சகோதரர்களையும், அவர்களின் கொலைகாரக் கூட்டாளிகளையும் சர்வதேசக் குற்றவியல் நீதிமன்றத்தில் ஏன் நிறுத்தக் கூடாது? என்று கேட்டபோது, ஆதரவு தெரிவித்தார்கள் ஐரோப்பிய நாடாளுமன்ற உறுப்பனர்கள் அனைவரும். இதைப் பார்க்கும்போது, ராஜபக்ஷவுக்கு நாள் நெருங்கிக்கொண்டு இருப்பது தெரிகிறது!"

**ஈழத் தமிழர்கள் பல்வேறு குழுக்களாகச் சிதறி இருக்கும் நிலையில், இது சாத்தியமா?**

இது திட்டமிட்டுப் பரப்பப்படும் பொய்ச் செய்தி! புலம் பெயர்ந்து வாழும் ஈழத் தமிழர்கள், ஒன்றுபட்ட சிந்தனையுடன்தான் இருக்கிறார்கள். ராஜபக்ஷ தண்டிக்கப்பட வேண்டியவர். தனித் தமிழ் ஈழம் மலர வேண்டும் என்றே நினைக்கிறார்கள். குமரன்பத்மநாதனின் ஆதரவாளர்கள் சிலர்தான், குழப்பங்கள் விளைவிக்கிறார்கள். நாங்கள் புதிய உணர்வுடன் ஒற்றுமையாக இருக்கிறோம் அண்ணா. இதை தமிழ் நாட்டுக்குச் சொல்லுங்கள் என்று என்னைச் சந்தித்த அனைவருமே சொன்னார்கள்!"

**இந்தத் தேர்தலில் பங்கேற்காத நீங்கள், தேர்தல் முடிவுகளை எப்படிப் பார்க்கிறீர்கள்?**

தி.மு.க. அரசை வீழ்த்தியே ஆக வேண்டும் என்ற ஆவேசத்தில் கிளம்பிய எதிர்ப்பு அலை இது. அ.தி.மு.கவுக்கான ஆதரவு வாக்குகள் என்று சொல்லவே முடியாது. கடந்த ஐந்து ஆண்டு காலமாக தி.மு.க. எதிர்ப்பு விதையை மக்கள் மன்றத்தில் விதைத்து வந்த இயக்கம் ம.தி.மு.க. அதை அறுவடை செய்து இருக்கிறது அ.தி.மு.க!"

**அ.தி.மு.க. வெற்றி பெற்றுள்ளது. அந்தக் கூட்டணியில் அங்கம் வகித்து, இறுதியில் விலகிய உங்களுக்கு மன வருத்தம் இல்லையா?**

அ.தி.மு.க. கூட்டணிக்கு முழு ஒத்துழைப்பை, சந்தேகத்துக்கு இடம் இல்லாத பங்களிப்பைக் கொடுத்து வந்தோம். ஆனால், அ.தி.மு.க. தலைமையின் உள் மனதுக்குள் ஒரு ரகசியமான நிகழ்ச்சி நிரல் இருந்தது. நானோ அல்லது என்னைச் சார்ந்தவர்களோ, தமிழ்நாடு சட்டமன்றத்துக்குள் நுழைந்துவிடக் கூடாது என்று அவர்கள் நினைத்தார்கள். இப்போது, அ.தி.மு.க. கூட்டணியில் இருந்து விலகியது நல்லதாகிப் போய்விட்டது என்றுதான் நினைக்கிறேன். முதல்வரின் செயல்பாடுகள் அப்படித்தானே இருக்கின்றன?

கடந்த வாரம் சைதை தேரடியில் நடந்த பொதுக் கூட்டத்துக்கு நான் வந்த போது, ஏராளமான பொதுமக்கள் முக மலர்ச்சியோடு என்னை வரவேற்றார்கள். எங்கள் முடிவுகள், அவர்கள் மனதில் நல்லெண்ணத்தை விதைத்துள்ளதையே இது காட்டுகிறது. சட்ட மன்றத்துக்குள் பங்கேற்க முடியாவிட்டாலும், மக்கள் மன்றத்தில் ம.தி.மு.க. வலுவாகப் பதிந்து உள்ளது. இது வரும் காலத்தில் எங்களது வளர்ச்சிக்கு அடித்தளமாக அமையும்!"

**புதிய ஆட்சி எப்படி இருக்கிறது?**

" இன்னும் ஒரு மாதம்கூட ஆகாத நிலையில் பதில் சொல்வது சரியாக இருக்காது. சட்டம் - ஒழுங்குச் சீரமைப்பு போன்றவை வரவேற்க வேண்டியவை. ஆனால், புதிய தலைமைச் செயலகக் கட்டடத்தை அறவே பயன்படுத்த மாட்டோம்! என்ற அறிவிப்பும், சமச்சீர்க் கல்வியை உதாசீனப் படுத்துவதும் முதலமைச்சருக்கு அழகு அல்ல.

"கடந்த ஆட்சி மீது மக்களுக்கு ஏற்பட்ட வெறுப்பே, விலைவாசியைக் கட்டுப்படுத்தாததும் மின்வெட்டும்தான். இந்த இரண்டுக்கும் ஆக்க பூர்வமான திட்டம் எதுவும் இதுவரை இந்த ஆட்சியிடம் இல்லை. மெட்ரோ ரயிலை முடிக்காமல், மோனோ ரயில் பக்கம் தாவுவதும் சரியானது அல்ல.

"எனக்கு வாக்களித்தால், தமிழ் ஈழம் வாங்கித் தருவேன் என்று கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் முழங்கியவர், இன்றைய முதலமைச்சர். ராஜபக்ஷவின் போர்க் குற்றங்கள் குறித்து அறிக்கையும்விட்டார். ஆனால், இன்று அதுபற்றிப் பெரிதாகப் பேசுவதாகத் தெரியவில்லை. போர்க் குற்றங்களுக்குத் துணை போன காங்கிரஸ் அரசைக் கண்டிப்பது இல்லை. இது வெளிநாட்டுப் பிரச்சினை என்று கருணாநிதி எதைச் சொல்லித் தப்பித்தாரோ... அதையே இப்போது இவரும் சொல்ல ஆரம்பித்து இருக்கிறார்.

மாற்றம் வேண்டும் என்று வாக்களித்த மக்களுக்கு மன நிறைவைத் தர ஜெயலலிதா முயற்சிக்கவில்லை என்பதே இப்போதைய நிலவரம்!"

***நன்றி: தமிழ்வின்***

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
12 ஜூன் 2011 ஞாயிற்றுக்கிழமை

# அரியாலையில் சர்வதேச மைதானம் அங்குரார்ப்பண நிகழ்வு நேற்று

யாழ்ப்பாணம்,ஜூன்12

யாழ்.உதைபந்தாட்ட லீக்குக்கு என அரியாலையில் அமைக்கப்படவுள்ள சர்வதேச உதைபந்தாட்ட மைதானத்துக்கான அங்குரார்ப்பண நிகழ்வு நேற்றுக் காலை 10 மணியளவில் அரியாலை பகுதியில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வுக்குப் பிரதம விருந்தினராகப் பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறு கைத்தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா கலந்துகொண்டார்

சிறப்பு விருந்தினர்களாக இலங்கைக்கான ஜேர்மன் தூதரகத்தின் பிரதிநிதி டெனிஸ் ஸ்கொரிடர், கொல்சிம் நிறுவனத்தின் நிர்வாக அதிகாரி ஸ்ரீபன் கியூபர், இலங்கை உதைபந்தாட்டச் சம்மேளனத்தின் தலைவர் சரத் வீரசேகர, சர்வதேச உதைபந்தாட்ட சம்மேளனத்தின் நிர்வாக சபை உறுப்பினரும் இலங்கை உதைபந்தாட்டச் சம்மேளனத்தின் நிறைவேற்றுக் குழுத் தலைவருமான மணிலால் பெர்னாண்டோ,



யாழ்.மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா, யாழ்.மாவட்ட விளையாட்டு அதிகாரி திருமதி ஏ.எவ் ஜே.ரூபசிங்கம் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இந்த சர்வதேச மைதானத்தை அமைப்பதற்கு 4 கோடி யூரோ ரூபா நிதியை ஜேர்மனி வழங்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (த-23-86)

## இன்றைய போட்டிகள்

வலி.வடக்கு,ஜூன்12

புத்தூர் கலைமதி சனசமூக நிலையமும் கலைமதி விளையாட்டுக் கழகமும் இணைந்து நடத்தும் 37 ஆவது ஆண்டு நிறைவு விழாவையொட்டிய விளையாட்டுப் போட்டித் தொடரில் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 7 மணி முதல் போட்டிகள் நடைபெறவுள்ளன.

இன்று காலையில் ஆண்கள், பெண்களுக்கான சைக்கிள் ஓட்டப் போட்டியைத் தொடர்ந்து இல்ல மெய்வன்மைப் போட்டிகள் நடைபெறவுள்ளன.

கலைமதி விளையாட்டுக் கழகத் தலைவர் ச.தவராசா தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வுகளில் பிரதம விருந்தினராகக் கோப்பாய் பிரதேச செயலர் ம.பிரதீபனும், கௌரவ விருந்தினர்களாக இலங்கை வங்கி அச்சுவேலி கிளை முகாமையாளர் சி.புவனேந்திரன், புதிய ஜனநாயக மார்க்சிச லெனினிசக் கட்சியின் பொதுச் செயலாளர் சி.கா.செந்திவேல் உட்படப் பலர் கலந்துகொள்வார்கள்.

(த-86)

## தடகளப் போட்டிகள் புதன்கிழமை ஆரம்பம்

வலி.வடக்கு,ஜூன்12

வடமாகாண விளையாட்டுத் திணைக்களத்தின் ஆதரவுடன் யாழ். மாவட்ட செயலக விளையாட்டுப் பிரிவு யாழ். மாவட்ட பிரதேச செயலகங்கள், உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளுக்கு இடையே நடத்தும் தடகளப் போட்டித் தொடரில் முதல் கட்டமாக எதிர்வரும் 15ஆம் திகதி புதன் கிழமை யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டரங்கில் காலை 7.30 மணிக்குப் போட்டிகள் ஆரம்பமாகவுள்ளன.

காலை இடம்பெறும் ஆண்கள் பெண்களுக்கான 10ஆயிரம் மீற்றர் ஓட்டப் போட்டியைத் தொடர்ந்து ஆண்கள், பெண்களுக்கான கோலூன்றிப் பாய்தல் நிகழ்வும் இடம்பெறவுள்ளது. (த-86)

## யாழ்ப்பாண வீரர்களுக்கு மேலும் இரு பதக்கங்கள்

வலி.வடக்கு,ஜூன்12

இலங்கை மெய்வன்மைச் சங்கத்தின் ஏற்பாட்டில் கொழும்பு திலகமவில் அமைந்துள்ள மகிந்த ராஜபக்ஷ சர்வதேச விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றுவரும் கனிஷ்ட பிரிவினருக்கான தடகள விளையாட்டுப் போட்டிகளில் யாழ். மாவட்ட வீர, வீராங்கனைகள் மேலும் இரண்டு பதக்கங்களைப் பெற்றுள்ளார்கள்.

பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி வீரனும் இலங்கை விமானப் படையைச் சேர்ந்தவருமான வடிவேற்கரசன் ஹரிகரன் 23 வயதுப் பிரிவு ஆண்களுக்கான தட்டெறிதல் போட்டியில் இரண்டாம் இடத்தைப் பெற்றுள்ளார்.

அளவெட்டி அருணோதையக் கல்லூரி வீராங்கனையும் யாழ்.மாவட்ட மெய்வன்மைச் சங்கத்தின் சார்பில் கலந்துகொண்டவருமான க.தனுஜா 20 வயதுப் பிரிவு பெண்களுக்கான உயரம் பாய்தல் போட்டியில் மூன்றாம் இடத்தைப் பெற்றுள்ளார்.

(த-86)

## தெல்லிப்பழை யூனியன் சம்பியன்

யாழ்ப்பாணம்,ஜூன்12

நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தின் 90 ஆவது ஆண்டு நிறைவை ஒட்டி அழைக்கப்பட்ட யாழ்.மாவட்ட பாடசாலைகளுக்கு இடையிலான பெண்களுக்கான வலைப்பந்தாட்டச் சுற்றுப்போட்டியில் தெல்லிப்பழை யூனியன் கல்லூரி சம்பியன் ஆனது.

கடந்த வியாழக்கிழமை கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற இறுதியாட்டத்தில் தெல்லிப்பழை யூனியன் கல்லூரியை எதிர்த்து வடமராட்சி இந்துக் கல்லூரி அணி மோதியது.

இதில் தெல்லிப்பழை யூனியன் கல்லூரி அணி 40:18 என்ற புள்ளி அடிப்படையில் வடமராட்சி இந்துக் கல்லூரியை வெற்றிகொண்டது. (த-23)



யாழ்.மாவட்ட பாடசாலைகளுக்கு இடையே அண்மையில் யாழ். துரையப்பா விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்ற மெய்வன்மைப் போட்டியில் 19 வயதுப் பிரிவு ஆண்களுக்கான முப்பாய்ச்சல் நிகழ்வில் 750 புள்ளிகளைப் பெற்று சிறந்த வீரனாகத் தெரிவுசெய்யப்பட்ட யாழ்.இந்துக்கல்லூரியைச் சேர்ந்த வ.ஜஸ்மினனுக்கு பிரதம விருந்தினராக கலந்துகொண்ட ஓய்வுபெற்ற உதவிக் கல்விப் பணிப்பாளர் பாலசிங்கத்தின் பாரியார் திருமதி செல்வராணி பாலசிங்கம் வெற்றிக் கிண்ணம் வழங்கினார். (த-23)

## மன்னார் பிரதேச செயலகம் சம்பியன்

மன்னார் மாவட்டப் பிரதேச செயலகங்களுக்கு இடையிலான வலைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் இறுதியாட்டத்தில் மன்னார் பிரதேச செயலக அணி சம்பியனானது.

கடந்த வாரம் மன்னார் பொது விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்ற வலைப்பந்தாட்ட இறுதியாட்டத்தில் மன்னார் பிரதேச செயலக அணியை எதிர்த்து மடு பிரதேச செயலக அணி மோதிக் கொண்டது.

இதில் மன்னார் பிரதேச செயலக அணி 31:21 என்ற புள்ளி அடிப்படையில் மடு பிரதேச செயலக அணியை வெற்றி கொண்டது.

(த-23)

# குருநாகலில் கூட்டுறவு விளையாட்டு விழா; யாழ். வீரர்கள் 47 பேர் பங்கேற்கின்றனர்

யாழ்ப்பாணம், ஜூன் 12

குருநாகலில் நடைபெறும் 89 ஆவது கூட்டுறவு தினவிழா தேசியமட்டப் போட்டிகளில் யாழ். மாவட்டத்தில் இருந்து 47 வீர, வீராங்கனைகள் பங்கேற்கின்றனர். யாழ்.மத்திய கல்லூரி மைதானத்தில் கடந்த 14, 15 ஆம் திகதிகளில் நடைபெற்ற போட்டிகளில் 47 வீர, வீராங்கனைகள் தெரிவாகியுள்ளனர்.

இந்தப் போட்டி, கூட்டுறவுச் சங்கம் மற்றும் போட்டியாளர்களின் விவரங்கள் வருமாறு:-

✱ கரபந்தாட்டம் - அச்சுவேலி பனை - தென்னை வள அ.கூ. சங்கம் - செ.செல்வகரன், பொ.தார்மீகன், ஜே. மொறன் சஜிஸ், ப.நிதர்சன், ச. கபிலஞ்சன், ஆ.தமிழ்குமரன், சி.சிவசொரூபன், பா.பிரதாபன், சி.ஜெருசாந், க.கிருபானந்தன், ர.அபிநயன், க.கருணேந்திரன், இ.பபிதரன்.

✱ 100 மீற்றர்- ஆண்கள் (40 வயதுக்கு மேல்)- சுன்னாகம் தென்னை வள அ.கூ.சங்கம்- திருச்செல்வம் சுரேஸ்.

✱ 100 மீற்றர்- பெண்கள்- (40 வயதுக்கு மேல்) - பண்டத்தரிப்பு ப.நோ. கூட்டுறவுச் சங்கம்- செல்வி சு.சர்மிளா.

✱ 200 மீற்றர் (40 வயதுக்கு மேல்)- சுன்னாகம் பனை தென்னை வள அ.கூ.ச - தி.சுரேஸ்.

✱ 800 மீற்றர் - ஆண் - கொடிகாமம் ப.நோ. கூ.சங்கம் சி.சிவதீபன்.

✱ 1500 மீற்றர்- ஆண் - பண்டத்தரிப்பு பனை தென்னை வள அ.கூ .சங்கம் - கி.ஜெயந்தன்.

✱ 1500 மீற்றர் - பண்டத்தரிப்பு பலநோக்கு கூ.சங்கம்- செல்வி ந.சுமதி.

✱ 4x100 மீற்றர் அஞ்சல்- (ஆண்) - கொடிகாமம் ப.நோ. கூ.சங்கம் - அ.சிறினிவாசன், இ.கஜேந்திரன், சி.சிவதீபன், இ.கதீஸ்வரன்.

✱ 4x 200 மீற்றர் அஞ்சல் - (ஆண்கள் ) - கொடிகாமம் பல நோக்கு கூ.சங்கம்- ம.ரஜிகரன், இ.கஜேந்திரன், சி.சிவதீபன், இ.கதீஸ்வரன்.

✱ 4x 400 மீற்றர் அஞ்சல் - ( ஆண்கள்) - கொடிகாமம் பல நோக்குக் கூ.சங்கம்- சி.சிவதீபன், செ.விநோதன், இ.கதீஸ்வரன், இ.கஜேந்திரன்.

✱ பலூன் உடைத்தல் (பெண்) - மானிப்பாய் பனை தென்னை வள கூட்டுறவுச் சங்கம்- து.கார்மேல்பபிலோலா.

✱ சைக்கிள் ஓட்டம் (ஆண் 40 வயதுக்கு மேல்) - பண்டத்தரிப்பு ப.தெ.வ.அ.கூ.சங்கம், தி.இந்திரசித்து, கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களம் - வை. கைலைநாதன், மானிப்பாய் ப.நோ. கூ.சங்கம்- த.ராசசேகரம்.

✱ சைக்கிள் ஓட்டம்- ( ஆண் 40 வயதுக்குக் கீழ்)- பண்டத்தரிப்பு ப.தெ.வ.அ.கூ.சங்கம், து.ரகீம், ந.டினேஸ்வரன், த.பிரசாந்த், தி.பற்பராசா.

✱ சைக்கிள் ஓட்டம்- பெண் - சிவலிங்கம் பத்மசத்தியா - சுன்னாகம் ப.தெ.வ. கூ.சங்கம், அ.பருவநிலா - தெல்லிப்பழை பலநோக்கு கூட்டுறவுச் சங்கம், கே.யனுசா - பண்டத்தரிப்பு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்.

✱ மரதன் ஓட்டம் - ஆண்- கி.ஜெயந்தன் (பண்டத்தரிப்பு ப.தெ.வள. அ.கூ.சங்கம், சி. ஞானேஸ்வரன் (நெடுந்தீவு ப.நோக்குக் கூட்டுறவுச் சங்கம், த.தனுசன் (பண்டத்தரிப்பு ப. தெ.வ.அ. கூ.சங்கம்).

✱ மரதன் ஓட்டம் (பெண்)- பண்டத்தரிப்பு ப.நோ.கூ. சங்கம் - ஞா.சுமதி, கு.ஜனுசா. (ஐ-311)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சகீர் 'அவுட்'


மேற்கிந்தியத்தீவுகளுக்கு எதிரான டெஸ்ட் தொடரில் இருந்து இந்திய வீரர்கள் சகிர்கான், ஸ்ரீசாந்த் அதிரடியாக நீக்கப்பட்டுள்ளனர். இந்தியா, மேற்கிந்தியத்தீவுகள் அணிகள் 3 ஆட்டங்கள் கொண்ட டெஸ்ட் தொடரில் மோத உள்ளன. முதல் டெஸ்ட் எதிர்வரும் ஜூன் 20 ஆம் திகதி ஜமைக்காவில் ஆரம்பமாகின்றது.

இந்தத் தொடரில் டோனி தலைமையிலான இந்திய அணி பங்கேற்கின்றது. இதில் காயம் காரணமாக சேவாக், யுவராஜ், காம்பீர் இடம் பெறவில்லை. சச்சின் தானாகவே விலகி விட்டார். இப்படி முன்னணி வீரர்கள் இடம் பெறாத நிலையில் இந்திய அணிக்கு தற்போது இரட்டை அடி விழுந்துள்ளது. வேகப்பந்துவீச்சாளர்களான சகிர்கான், ஸ்ரீசாந்த் ஆகியோர் காயம் காரணமாக நீக்கப்பட்டுள்ளனர். இவர்களுக்கு பதில் பிரவீண் குமார், அபிமன்யு மிதுன் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இது குறித்து இந்திய கிரிக்கெட் சபை வெளியிட்டுள்ள அறிக்கையில் வலது கணுக்கால் காயத்தால் சகிர்கான் அவதிப்படுகின்றார். ஸ்ரீசாந்துக்கு வலது முழங்கையில் காயம் ஏற்பட்டுள்ளது. இதனால் மேற்கிந்தியத்தீவுகளுக்கு எதிரான டெஸ்ட் தொடரில் இருந்து நீக்கப்படுகின்றனர். இவர்கள் காயத்தில் இருந்து மீண்டு வர சிறிது காலம் தேவைப்படும். மிதுன், பிரவீண் குமாருக்கு வாய்ப்பு அளிக்கப்படுகிறது - என்றுள்ளது.

முக்கிய டெஸ்ட் தொடர்களுக்கு முன் சகிர்கான் காயம் அடைவது தொடர்கின்றது. சமீபத்திய இலங்கை, நியூசிலாந்து, தென்னாபிரிக்காவுக்கு எதிரான தொடரில் தோள்பட்டை காயம் காரணமாக பங்கேற்கவில்லை. இதே போல தொடையில் ஏற்பட்ட காயத்தால் பங்களாதேஷ், இலங்கை தொடரில் ஸ்ரீசாந்த் விளையாடவில்லை. ஆனால், ஐ.பி.எல் தொடரில் இவர்கள் கலந்து கொண்டனர். இது, தேசத்தை காட்டிலும் பணம் கொழிக்கும் ஐ.பி.எல் தொடருக்கு வீரர்கள் முன்னுரிமை அளிக்கின்றனர் என்ற சர்ச்சையை மீண்டும் கிளப்பியுள்ளது. (15)

# சாய்னா தோல்வி


சாய்னா நேவல்

தாய்லாந்து ஓபன் பட்மின்ரன் தொடரின் ஒற்றையர் பிரிவு காலிறுதியில் இந்திய வீராங்கனை சாய்னா நேவல் தோல்வி அடைந்தார். தாய்லாந்து தலைநகர் பாங்கொக்கில் தாய்லாந்து கிராண்ட் பிரிக்ஸ் கோல்ட் பாட்மின்ரன் தொடர் நடக்கின்றது. நேற்று முன்தினம் நடந்த பெண்கள் ஒற்றையர் காலிறுதி சுற்றில் இந்தியாவின் சாய்னா நேவல், சீனாவின் சுயுருலியைச் சந்தித்தார்.

இதில் சாய்னா 13-21, 12-21 என்ற செட் கணக்கில் அதிர்ச்சி தோல்வி அடைந்து அடுத்த சுற்றுக்கு முன்னேறும் வாய்ப்பினை இழந்து வெளியேறினார். ஆண்கள் ஒற்றையர் காலிறுதியில் இந்தியாவின் காஷ்யப், சீனாவின் லாங் சென்னை சந்தித்தார். இதில் காஷ்யப் 18-21, 5-21 என்ற செட் கணக்கில் தோல்வி அடைந்து அரையிறுதி வாய்ப்பினை இழந்தார்.

மற்றொரு போட்டியில் இந்தியாவின் சவுரப் வர்மா, கொரியாவின் சங் ஹவானை எதிர் கொண்டார். இதில் சவுரப் வர்மா 21-16, 16-21, 11-12 என்ற செட் கணக்கில் தோல்வி அடைந்தார். (15)

# நடுவரின் முடிவுகளுக்கு மீள்பரிசீலனை வேண்டாம்

இந்தியா-இங்கிலாந்து இடையிலான கிரிக்கெட் போட்டியின் போது நடுவர்களின் தீர்ப்பை மறுபரிசீலனை செய்யும் விதியை கடைபிடிக்க வேண்டாமென்று இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபை கூறியுள்ளது. ஜூலை மாதத்தில் இங்கிலாந்துக்கு சுற்றுப் பயணம் மேற்கொள்ளும் இந்திய அணி 4 டெஸ்ட் போட்டிகளில் விளையாட உள்ளது.


இது குறித்து பிரிட்டனில் வெளியாகும் 'தி டெய்லி டெலிகிராப்' பத்திரிகை வெளியிட்டுள்ள செய்தியில் இங்கிலாந்து - இந்தியா பயிற்சி போட்டி தொடர்பாக பி.சி.சி.ஐ இங்கிலாந்து கிரிக்கெட் சபை, வேல்ஸ் கிரிக்கெட் சபைக்கு அதிகாரப்பூர்வமாக ஒரு கடிதம் எழுதியுள்ளது.

அதில் இந்தியா - இங்கிலாந்து டெஸ்ட் தொடரில் யு.டி.ஆர்.எஸ் முறையைப் பயன்படுத்த வேண்டாம் என்று கேட்டுக் கொண்டுள்ளது. போட்டியில் பங்கேற்கும் இரு அணிகளின் சபையும் ஏற்றுக் கொண்டால்தான் யு.டி.ஆர்.எஸ் முறையை கைவிட முடியும் என்பதால் இந்தக் கடிதம் எழுதப்பட்டுள்ளது.

முன்னதாக உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டியின் போது யு.டி.ஆர்.எஸ் முறை பெரும் சர்ச்சைக்கு உள்ளானது. இந்திய அணியில் சச்சின் டெண்டுல்கர், டோனி ஆகியோர் யு.டி.ஆர்.எஸ் முறையை குறை கூறியிருந்தனர்.

ஆனால் இங்கிலாந்து சுழற்பந்து வீச்சாளர்கள், முக்கியமாக கிரேம் ஸ்வான் யு.டி.ஆர்.எஸ் முறைக்கு ஆதரவு தெரிவித்திருந்தார். நவீன தொழில்நுட்பத்தின் உதவியுடன் நடுவரின் தீர்ப்பு சரியானது தானா என்பதை உறுதி செய்துகொள்ளவதில் தவறில்லை என்று அவர் கருத்துத் தெரிவித்திருந்தார். (15)

# ஆஸ்திரேலிய அணியும் சப்பலின் ஆட்டமும்


சப்பல்

ஆஸ்திரேலியா வீரர்கள் ஒப்பந்தத்திலிருந்து ஆரம்பத்துடுப்பாட்ட வீரர் சைமன் கட்டிச்சை நீக்கியது ஆஸ்திரேலிய கிரிக்கெட் வட்டாரத்தில் புயலைக் கிளப்பியுள்ளது.

அதுவும் சைமன் கட்டிச் நேற்று முன்தினம் காரசாரமாக கொடுத்த பேட்டிக்குப் பிறகு சந்தேகம் பலதரப்பிலிருந்தும் எழுப்பப்பட்டு வருகின்றது. கிரேக் சப்பல் சமீபத்தில் தான் ஆஸ்திரேலிய அணியின் தேர்வுக் குழுவில் திறமை அடையாளம் காணும் பிரிவில் தலைமை தேர்வாளராக இணைந்தார். சப்பல் பயிற்சியாளராக இந்தியாவைக் காலி செய்த வரலாற்றுப் பின்னணி இருக்க அவரைத் தேர்வாளர் பொறுப்பில் விட்டால் சும்மாவா இருப்பார்? ஆனால் கட்டிச் நீக்கத்தில் தேர்வுக் குழுத் தலைவர் அண்ட்ரூ ஹில்டிச், வெளியே செல்லவுள்ள டேவிட் பூன், ஜேமி கோக்ஸ் ஆகிய பெயர்களும் அடிபடுகின்றன.

ஆஷஸ் தொடருக்கான அணியை இப்போதே தேர்வு செய்வதில் கிரிக்கெட் சபை ஒப்பந்தகாரர்கள் விரும்புவதால் உள்நாட்டுக் கிரிக்கெட் தொடர்கள் ஆரம்பிக்கும் முன்பே ஒப்பந்த வீரர்களை அறிவிக்கும் நிலைமை ஏற்பட்டுள்ளதாகவும் இதுவே சைமன் கட்டிச்சை நீக்குவதற்குக் காரணமாகவும் இருக்கலாம் என்று கூறப்படுகிறது. இருப்பினும் ஏதாவது சாதனை செய்யத் துடிக்கும் கிரேக் சப்பலும் இதில் இருப்பதால் சந்தேகம் அவர் மீது எழுவது நியாயமே.

அதுவும் அவரது பயிற்சியில் ஏற்பட்ட இந்திய அணியின் அனுபவத்திற்குப் பிறகு நாம் கட்டிச்சின் நீக்கத்தில் அவரது பங்கு இருக்காது என்று உறுதியாகக் கூறமுடியாது என்றே தோன்றுகின்றது. 2008 ஆம் ஆண்டு அணிக்குள் மீண்டும் அழைக்கப்பட்ட சைமன் கட்டிச் முன்பு நடுக்கள வீரராக களமிறங்கி நிறைய ஓட்டங்களை குவித்தவர்தான், அதன் பிறகு ஒருமுறை நீக்கப்பட்டு அவர் உள்நாட்டு கிரிக்கெட்டில் நியூ சவுத்வேல்ஸ் அணித்தலைவராகக் களமிறங்கி அணியை தனது தலைமையின் கீழ் இறுதி வரை நகர்த்தியதோடு, முச்சதம் ஒன்றை எடுத்து தன்னை ஆஸ்திரேலிய அணியில் தேர்வு செய்யப் பணித்தார்.

மீண்டும் 2008 ஆம் ஆண்டு ஆரம்ப வீரராக களமிறங்கிய சைமன் கட்டிச் அதன் பிறகு எடுத்துள்ள சராசரி 50 ஓட்டங்களுக்கும் மேல் என்பது குறிப்பிடத்தக்கது. மேலும் இந்த 3 ஆண்டுகளில் ஆஸ்திரேலிய அணியின் சரிவிலும் அதிக பட்ச ஓட்டங்களை எடுத்த இரண்டாம் வீரராகத் திகழவும் செய்தார்.

சப்பல் போன்றவர்கள் எப்போதும் நன்றாக விளையாடுபவர்களை அணியிலிருந்து நீக்கி அதிலிருந்து எழும் சர்ச்சைகளில் தனது புகழைத் தக்க வைக்கும் குறுகிய மனோபாவம் கொண்டவர் (15)

# கட்டிச்சுக்கு காலம் சரியில்லை


கட்டிச்சுடன் பொண்டிங்

2011 - 12 கிரிக்கெட் பருவத்திற்கான கிரிக்கெட் ஆஸ்திரேலியாவின் முதன்மை வீரர்கள் ஒப்பந்தத்தில் டெஸ்ட் ஆரம்பநிலை வீரர் சைமன் கட்டிச்சிற்கு இடம் இல்லை. 25 ஒப்பந்த வீரர்கள் பட்டியலில் கட்டிச் பெயர் இடம்பெறாதது அங்கு அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. மைக்கல் ஹஸி (36), சைமன் கட்டிச் (35) ஆகியோர் வயது காரணமாக ஒப்பந்தத்தில் இடமளிக்கப்படமாட்டார்கள் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் ஹஸி பிழைத்தார். கட்டிச் வெளியேற்றப்பட்டார். பிலிப் ஹியூஸ், டேவிட் வோர்னர் உள்நாட்டுக் கிரிக்கெட் போட்டிகளில் அபாரமாக விளையாடியதால் கட்டிச் பெயர் நீக்கப்பட்டிருக்கலாம் என்று தெரிகின்றது. 2008 ஆம் ஆண்டு கட்டிச் மீண்டும் டெஸ்ட் அணியில் தேர்வு செய்யப்பட்டார். அன்று முதல் கட்டிச் 2,928 ஓட்டங்களை 50.48 என்ற சராசரியில் எடுத்து நல்ல முறையில் ஆடி வந்தார். இருப்பினும் அவருக்கு தேசிய ஒப்பந்தம் வழங்கப்படவில்லை.

ஆனால் இந்த ஒப்பந்தம் அளிக்கப்பட்டுள்ள பட்டியலில் பிரெட் லீ இடம்பெற்றுள்ளார். (15)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 08 - 05 - 1930
மறைவு 04 - 06 - 2009



**அமரர் அப்புக்குட்டி இராசையா (சேனாதி)**

திதி- 12.06.2011

*அன்பின் திருவுருவாய் பாசத்தின் பிறப்பிடமாய்*
*தரணியில் எம்மை ஆளாக்கிய தெய்வமே*
*எம்மை விட்டு இரு ஆண்டுகள் சென்றாலும்*
*எம் உள்ளத்தில் என்றும் நிலைத்திருப்பீர்*

கீரிமலை வீதி,
சித்தன்கேணி.

ஸ்ரீ நாககன்னி அம்மன்
இந்திரன் ஐயா

## மரண அறிவித்தல்

### இராசையா ஜெகதீஸ்வரன் (ஜெகன்)

வீமன்காமம், தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும் லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட இ.ஜெகதீஸ்வரன் கடந்த 05.06.2011 ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்காளான இராசையா -பொன்னம்மா தம்பதியரின், மூத்த மகனும் காலஞ்சென்றவர்களான தங்கராஜா- மனோன்மணி தம்பதியரின் மருமகனும், செல்வ ராணியின் (பவா) அன்புக் கணவரும், ஜலஜா, ஜனார்த்தனன் ஆகியோரின் அன்புத் தந்தையும், சபேசனின் மாமனும், அஸ்விதா, ஜெயசாந்தன் ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்றவர்களான சரஸ்வதி, பத்மாவதி மற்றும் மனோகரன் (தெல்லிப்பழை,M.P.C.S), கருணாகரன் (கனடா), பாலச்சந்திரன் (கொழும்பு) ஆகியோரின் சகோதரருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 14.06.2011 செவ்வாய்க் கிழமை லண்டனில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

14,Sandpit Road,
Bromley,
Kent, U.K.

தகவல்:
இ.மனோகரன் (சகோதரன்)
26/1, பிரம்படி லேன் கொக்குவில்.

## மரண அறிவித்தல்

### இளையதம்பி குணசேகரம்



சூராவத்தை, சுன்னாகத்தைப் பிறப்பிடமாகவும் தற்பொழுது வேப்பங்குளம், வவுனியாவை வாழ்விடமாகவும் கொண்ட இளையதம்பி குணசேகரம் நேற்றுமுன்தினம் (10.06.2011) வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற இளையதம்பி-சரஸ்வதி தம்பதியரின் அன்பு மகனும் பாலசிங்கம்-சிந்தாமணி தம்பதியரின் அன்பு மருமகனும் ஜெயலட்சுமியின் (கலா) அன்புக் கணவரும் குஜின்சிகா, ஜெகின்சன் ஆகியோரின் அன்புத் தந்தையும் பாலசுப்பிரமணியம், செல்வரத்தினம் (அல்லா), விலாசமதி (வவா) ஆகியோரின் அன்புச் சகோதரனும் செல்வமலர், கமலாவதி, கண்ணன், ரஞ்சன், நிறைஞ்சன், ஜெகதீஸ்வரன், வரதலட்சுமி, மகாலட்சுமி (ஜெயா) ஆகியோரின் மைத்துனரும் நெடுஞ்செழியன், விக்னேஸ்வரன், கஜிபா, தர்சிகா ஆகியோரின் சகலனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் சூராவத்தை, சுன்னாகத்தில் நாளை (13.06.2011) திங்கட்கிழமை மு.ப. 10 மணிக்கு நடைபெற்று தகனக் கிரியைக்காக பூதவுடல் சுன்னாகம் கொத்தியாலடி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
(சி/327) (34) குடும்பத்தினர்.

**SAN INTERNATIONAL PVT (LTD)**


***NEW ENGLISH CLASSES***
***for***

* School Students (Grade 1 to A/L)
* School Leavers
* Professionals
* ஒவ்வொரு மாணவர் மீதும் தனிப்பட்ட கவனம் செலுத்தப்படும்.
* முக்கிமாக A/L மாணவர்களுக்கு உகந்தது.
* வெளிநாடு செல்பவர்களுக்கு விசேட வகுப்புக்களும் நடைபெறுகின்றன.

*No. 69, Arasady Road, Jaffna.*
Contact Us- 0774745642 or 0212223440

## மரண அறிவித்தல்

### செல்லன் சின்னராசா (ஹிப்பி)



மருதங்கேணி தெற்கு, தாளையடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்லன் சின்னராசா (ஹிப்பி- வினோ பல்பொருள் வாணிப உரிமையாளர்) கடந்த (10.06.2011) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லன் -லட்சுமி தம்பதியரின் கனிஷ்ட புதல்வனும் காலஞ்சென்ற கிருஸ்ணன் (முறிவு நெரிவுவைத்தியர்) மற்றும் அன்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும், ஈஸ்வரியின் (பவி) அன்புக் கணவரும், அனுராஜ் (A/L மாணவன், யா/மீசாலை வீரசிங்கம் ம.வி),சிந்துஜா, வினோராஜ் (A/L மாணவன், யா/மீசாலை வீரசிங்கம் ம.வி) ஆகியோரின் அன்புத் தந்தையும், திருமதி ந.கனகரத்தினம், திருமதி சி.நாகம்மா, திருமதி சி.வள்ளிப்பிள்ளை, திருமதி த.ஜீவரத்தினம், செ.இராசதுரை ஆகியோரின் அன்புச் சகோதரரும், செ.நவரத்தினம் (ஜேர்மனி), கி. சிவராசா, சின்னராசா, கி.தங்கராசா, கி.சின்னராசா, திருமதி ப.பரமேஸ்வரி, திருமதி வ.ராதா (பிரான்ஸ்), கி.பிரபாகரன், சி.கமலாதேவி ஆகியோரின் அன்பு மைத்துனரும், திருமதி சி.தர்மசகுந்தலாதேவி (இலண்டன்), பவனேந்திரன் (அதிபர், யா/மந்துவில் றோ.க.த. பாடசாலை), க.வசந்தன் (பிரான்ஸ்), திருமதி பி.மாலினி (ஹொலன்ட்) ஆகியோரின் அன்பு சகலனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.06.2011) ஞாயிற்றுக் கிழமை மு.ப 10 மணிக்கு அவரது இல்லத்தில் இடம்பெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைக்காக மருதங்கேணி தெற்கு இந்துமயானத்துக்கு எடுத்துச் செலப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்வும்.

தகவல்:
மருதங்கேணி தெற்கு. ஈஸ்வரி சின்னராசா(மனைவி),பிள்ளைகள். (1975)

# வீட்டுக்கிருத்திய அழைப்பும் நாவெழா நன்றி நவிலலும்



## திருமதி பராசக்தி இராஜரட்ணம்

கடந்த 13.05.2011 அன்று சிவபதமடைந்த எங்கள் குடும்பத் தலைவி திருமதி பராசக்தி இராஜரட்ணம் அவர்களின் பிரிவுத்துயரைக் கேட்டு அறிந்தவுடன் நேரில் வந்து வேண்டிய பல உதவிகளைச் செய்தவர்களுக்கும், தொலைபேசி, தந்தி, கடிதம் மூலம் தங்கள் அனுதாபங்களைத் தெரிவித்தவர்களுக்கும், மரணச் செய்திகளை விளம்பரம் செய்த உதயன், தினக்குரல் பத்திரிகைகளுக்கும், கண்ணீர் அஞ்சலிகளை வெளியிட்ட அனைத்து அன்பு உள்ளங்களுக்கும் , பிடாரி அம்பாள் ஆலய இந்து இளைஞர் மன்ற இளைஞர்களுக்கும் , மலர் வளையங்களை வைத்து மலரஞ்சலி செலுத்தியவர்களுக்கும் , பரமன் புகழ் பாடி அனைத்துக் கிரியைகளையும் நடத்தியவர்களுக்கும், இறுதி ஊர்வலத்தை சிறப்புற நடத்தியவர்கள், பங்கு கொண்டவர்கள் அனைவருக்கும் எங்கள் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

அன்னாரின் வீட்டுக்கிருத்திய நிகழ்வு இன்று (12.06.2011) ஞாயிற்றுக்கிழமை மு.ப 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறும். அதனைத் தொடர்ந்து நடைபெறும் ஆத்ம சாந்திப்பிரார்த்தனையிலும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இராஜசக்தி," வண்-வடமேற்கு, ஆனைக்கோட்டை.

குடும்பத்தினர்.

# இராணுவ அணி இறுதிக்கு

வலி.வடக்கு, ஜூன் 12

இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனத்தினால் ஹொல்சிம் நிசான வெற்றிக்கிண்ணத்துக்கான அகில இலங்கை உதைபந்தாட்ட லீக் அணிகளுக்கு இடையே நடைபெற்ற அரையிறுதிப் போட்டியில் வெற்றிபெற்று இலங்கை இராணுவ அணி இறுதிப் போட்டியில் விளையாடத் தகுதி பெற்றுள்ளது.

யாழ்ப்பாணம் சென்.ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற அரையிறுதி ஆட்டத்தில் இலங்கைப் பொலிஸ் அணியும், இலங்கை இராணுவ அணியும் மோதிக் கொண்டன.

போட்டியில் இலங்கை இராணுவ அணி 5:0 என்ற கோல் கணக்கில் இலங்கைப் பொலிஸ் அணியை வெற்றிபெற்று இறுதிப் போட்டியில் விளையாடத் தகுதி பெற்றுள்ளது.

(ஐ-86-23)

# தென்மராட்சியில் பால் மா விநியோகம்

பளை, ஜூன் 12

பச்சிலைப்பள்ளிப் பிரதேசத்தில் மீளக்குடியமர்ந்த குடும்பங்களில் தந்தையை இழந்த ஐந்து வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்குப் பால்மா விநியோகிக்கப்படவுள்ளது.

வெளிநாட்டில் உள்ள ஆச்சிதுணை பயிலகத்தின் அனுசரணையுடன் பச்சிலைப்பள்ளி அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தினால் பால்மா விநியோகிக்கப்படவுள்ளது.

எதிர்வரும் 15ஆம் திகதி புதன்கிழமை மு.ப.9.30 மணிக்கு சங்க மண்டபத்தில் பால் மா விநியோகம் இடம்பெறுமெனவும், பால்மா பெறுவதற்குத் தகைமையுள்ள குடும்பங்கள் தமது பங்கீட்டு அட்டையுடன் வருகை தருமாறும் சங்கத் தலைவர் சி.இராமலிங்கம் அறிவித்துள்ளார். (207)

## காணி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாகாண சபைகளுக்கு எந்தெந்த அதிகாரங்களைப் பகிர்ந்தளிக்கப் போகிறீர்கள் என்று இந்தியத் தூதுக்குழுவினர் கேட்டபோதே இலங்கைத் தரப்பு மேற்கண்டவாறு தெரிவித்ததாக அறியவந்தது.

இதேவேளை-

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணுமாறும் தமிழர்களுடனான பேச்சை விரைந்து நடத்துமாறும் தமது தரப்பு வற்புறுத்தியதாகவும் இந்திய அரசின் பாதுகாப்பு ஆலோசகர் சிவ் சங்கர் மேனன் இந்திய ஊடகவியலாளருக்குத் தெரிவித்திருக்கிறார்.

அரசு, தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் பேச்சுக்களை ஆரம்பித்திருப்பதாகவும், எல்லாத் தரப்புகளுக்கும் ஏற்புடைய தீர்வு ஒன்றைக் காண்பதற்குத் திட்டமிட்டுள்ளதாகவும் இலங்கைத் தரப்பில் அறிவிக்கப்பட்டது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் நடத்திய பேச்சுக்களின்போது, அரசுடன் பேசி ஓர் இணக்கப்பாட்டுக்கு வருமாறும், தான் ஒரு வெளிநாடு என்ற வகையில் அதனையே அரசிடமும் கூறமுடியும். அதற்கு அதிகமாக எதனையும் செய்ய முடியாது என்று தெரிவித்ததாகவும் சிவ் சங்கர் மேனன் கூறியுள்ளார். (அ-ஐ)

## பொருளாதார..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்த விடயத்தை இலங்கை பிரஸ்தாபித்ததாகக் குழுவின் தலைவர் சிவ் சங்கர் மேனன் தெரிவித்தார்.

கச்சதீவு விவகாரம் குறித்தும் இலங்கை இந்தியாவிடம் தெரிவித்துள்ளது.

இந்த விடயங்கள் குறித்து இந்தியத் தரப்பினர் அளித்த பதில் தொடர்பாக நேற்றிரவு வரை தகவல் எதுவும் வெளியாகவில்லை.

இதேவேளை-

இலங்கையில் பேச்சை முடித்துக் கொண்டு திரும்பும் வழியில் தமிழக முதலமைச்சர் செல்வி ஜெயலலிதாவைச் சந்தித்து பேச்சின் விவரங்கள் அவருக்கு விவரிக்கப்படும் என்று சிவ் சங்கர் மேனன் தெரிவித்திருந்த போதும் கொழும்புப் பேச்சுக்கள் முடிந்த கையோடு அவர்கள் டில்லி புறப்பட்டுச் சென்றனர். (ஒ-ஐ)

## கொல்லப்பட்டவர்களை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முதலில், 1981 ஆம் ஆண்டின் போர் நடைபெற்ற பிரதேசத்தில் குடிசன மதிப்பீடு நடத்தப்படவில்லை.

இரண்டாவதாக, கொல்லப்பட்டவர்களின் எண்ணிக்கையைக் கணக்கெடுப்பதற்கு இந்தியா போர்ப் பிரதேசத்தில் பிரசன்னமாக இருக்க வில்லையே - என்று சற்றுச் சீற்றத்துடன் பதில் அளித் திருக்கிறார் மேனன்.

இந்திய ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே மேனன் இவற்றைக் கூறினார்.

ஐ.நா.செயலாளர் நாயகத்தின் நிபுணர் குழு இலங்கை அரசு போர்க்குற்றங்களை இழைத்திருப்பதாகக் குற்றஞ்சாட்டியுள்ளமை பற்றிக் கேட்டதற்கு-

ஐ.நா.மனித உரிமை அவையில் எந்த ஒரு நாட்டையும் "தனிமைப்படுத்தி" குற்றஞ்சாட்டுவதை இந்தியா விரும்பவில்லை - என்றும் மேனன் தெரிவித்தார். (அ)

## நிலைத்து...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எதிர்காலத்தில் மோசமாகப் பாதிக்கக் கூடிய வணக்கஸ்தலங்கள், கலாசார மையங்கள், காணிகள் ஆகியவற்றைச் சுவீகரிக்கும் - கையகப்படுத்தும் நடவடிக்கை நிறுத்தப்பட வேண்டும் என்று தெரிவித்தோம்.

ஏற்றுக்கொள்ளக் கூடியதும் நிலைத்து நிற்கக் கூடியதுமான தமிழ்பேசும் மக்களின் கௌரவத்தையும் பாதுகாப்பையும் உறுதி செய்யக் கூடியதுமான அரசியல் தீர்வு விரைவாக அடையப்பட்டு தமிழ்பேசும் மக்களும் இந்த நாட்டுக்கு உரித்துடையவர்கள் என்ற நம்பிக்கை ஏற்பட வேண்டும் என்றும் தெரிவித்தோம்.

இந்த மூன்று கோரிக்கையையும் அடையப் பெறுவதே உண்மையான நல்லிணக்கத்துக்கு வழிவகுக்கும்.

இந்தப் பேச்சுக்கள் வெளிப்படையாகவும் ஒளிவு மறைவு இன்றியும் அமைந்திருந்தன - என்றுள்ளது.

இந்தச் சந்திப்புக் குறித்து சுரேஷ் பிரேமச் சந்திரன் உதயனுக்குத் தெரிவித்தவை வருமாறு:-

### நம்பிக்கை தரக்கூடியனவாக அமைந்த பேச்சுக்கள்

இந்தியத் தரப்புடன் நடத்திய பேச்சுக்கள் நம்பிக்கை தரக்கூடியனவாக அமைந்திருந்தன. தமிழ் பேசும் மக்களின் முக்கிய விடயங்கள் குறித்து மூன்று கோரிக்கைகளை முன்வைத் தோம். அந்தக் கோரிக்கைகள் சரியானவை என்றும் ஏற்றுக்கொள்ளக்கூடியவை என்றும் இந்தியத் தரப்புத் தெரிவித்தது.

இனப்பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு ஒன்றை எட்ட இந்தியா தொடர்ந்தும் உதவும்; ஒத்துழைப்பு வழங்கும் என்றும் இந்தியத் தரப்பு திட்டவட்டமாகத் தெரிவித்தது.

### ஆறு கட்டப் பேச்சுக்களில் முன்னேற்றம் ஏதுமில்லை

இலங்கை அரசுடன் ஆறுகட்டப் பேச்சுக்கள் நடந்து முடிந்த போதும் எந்த முன்னேற்றத்தையும் காண முடியவில்லை. இழுத்தடிக்கும் போக்கே இலங்கை அரசுத் தரப்பில் காணப்படுகின்றது என்றும்-

தமிழ் பேசும் மக்களின் காணிகளை கையகப்படுத்துவதும் தமிழ்ப் பிரதேசங்களை இராணுவ மயப்படுத்துவதும் தொடர்கின்றன என்றும் இந்தியத் தரப்பிடம் தெரிவித்தோம்.

தமிழ்பேசும் மக்களின் நியாயமான கோரிக்கைகளுக்கு இந்தியா ஆதரவாக நிற்பதுடன், நிலைத்து நீடிக்கக் கூடிய தீர்வைக்காண ஒத்துழைப்பு வழங்குவோம் என்று இந்தியத் தரப்பு உறுதியளித்தது.

போரின் இறுதிக்கட்டத்தில் இராணுவத்திடம் சரண் அடைந்த விடுதலைப் புலிகள் அமைப்பின் உறுப்பினர்களின் விவரங்களை விரைவில் வெளியிட விருப்பதாக இலங்கைத் தரப்பு தங்களிடம் தெரிவித்ததாக இந்தியக் குழுவினர் எம்மிடம் தெரிவித்தனர் - என்றார் சுரேஷ். (ஒ-ஐ)

**வாடகைக்கு**

மருதடி றோட், நல்லூர் (பொஸ்கோ பாடசாலை அருகில்) யாழ்ப்பாணம் எனும் முகவரியில் அமைந்துள்ள வீடு வாடகைக்கு உண்டு. உத்தியோகத்தர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

தொடர்பு-0759656565

**வீடு வாடகைக்கு**

துரை வீதிக்கு அருகில் கே.கே.எஸ் வீதியில் அமைந்துள்ள மேல்மாடி வீடு வாடகைக்கு விடப்படும். நிறுவனங்கள் விரும்பத்தக்கது.

தொடர்பு-0212241533

பாலகிருஷ்ணன் சத்தியபாமா,

கே.கே.எஸ் வீதி, கோண்டாவில்.

**விற்பனைக்குண்டு**

நல்ல நிலையிலுள்ள Jialing Motor Bike (90cc) விற்பனைக்குண்டு.

T.P- 0214911351, 0773889976

**பிற்போடப்பட்டுள்ளது**

பண்டத்தரிப்பு விளான் சவாரித்திடலில் இன்று (12.06.2011) ஞாயிற்றுக்கிழமை நடைபெறவிருந்த மாட்டு வண்டிச் சவாரிப் போட்டி தவிர்க்க முடியாத காரணத்தினால் பிற்போடப்பட்டுள்ளது என்பதை அறியத்தருகின்றோம். சவாரி நடைபெறும் திகதி பின்னர் அறிவிக்கப்படும்.

ஏற்பாட்டாளர்கள்.

## 'ஹெல்மட்'..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தவர் படுகாயமடைந்தார்.

தலைக்கவசம் அணியா மல் மோட்டார் சைக்கிள் ஓட்டி வந்தவர் முன்னால் வந்த காருடன் மோதி பின்னர் வீட்டு மதிலுடன் மோதி தலையில் படுகாயமடைந்த நிலையில் அந்த இடத்திலேயே மரணமானார் என்று தெரிவிக்கப்பட்டது.

இந்தச் சம்பவத்தில் சாவ கச்சேரி மீனாட்சி அம்மன் கோயிலடி பெரியமாவடியைச் சேர்ந்த 5 பிள்ளைகளின் தந் தையான விஸ்வலிங்கம் சுந் தரலிங்கம் (வயது 50) என்பவரே உயிரிழந்தவர் ஆவார்.

இவருடன் சென்ற மோட்டார் சைக்கிளில் பின்னால் அமர்ந்திருந்து பயணித்த சங்காத்தானை சாரதா வீதியைச் சேர்ந்த எஸ். கிரிகரன் (வயது -31) என்பவர் சிகிச்சைக்கென சாவகச்சேரி ஆதாரவைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைகாக யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார்.

விபத்தை அடுத்து சம்பவ இடத்துக்குச் சென்ற சாவகச்சேரிப் பொலிஸார் விசாரணைகளை நடத்தினர். குறித்த இரண்டு வாகனங்களையும் பொலிஸ் நிலையத்துக்குக் கொண்டு சென்றனர். கார்ச்சாரதி கைது செய்யப்பட்டு, விசாரணை தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

விபத்தில் உயிரிழந்தவர் தனியார் பஸ் சாரதி என்றும் சம்பவத்தின் போது அவர் மது அருந்தி இருந்தார் என்றும் கூறப்பட்டது. (ஒ-ஐ-4-207-131)

# மரண அறிவித்தல்கள்

## வைத்திலிங்கம் சுப்பிரமணியம்

(ஓய்வுபெற்ற பொறியியலாளர், சிமெந்துக் கூட்டுத்தாபனம்)



மாவிட்டபுரத்தைப் பிறப்பிடமாகவும், அச்சுவேலி, பத்தைமேனியை வசிப்பிடமாகவும் கொண்ட வைத்திலிங்கம் சுப்பிரமணியம் (பாலா) கடந்த 10.06.2011 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வைத்திலிங்கம்- தெய்வானைப்பிள்ளை தம்பதியரின் மூத்த மகனும், காலஞ்சென்றவர்களான துரைஐயா- தங்கம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், திவ்வியமணியின் அன்புக் கணவரும், மணிமாறன் (லண்டன்), துசித்தா, துசாந்தினி, மணிவண்ணன்(லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும், இனோகா, கிருபாகரன், இளங்கீரன், அனுஷா ஆகியோரின் மாமனும், கமலாதேவி, சிறிஸ்கந்தராஜா, மகாலிங்கம், சிவலிங்கம், சாந்தலட்சுமி ஆகியோரின் சகோதரரும், துரைசிங்கம், தங்கத்துரை, பஞ்சலிங்கம், துரைராஜசிங்கம், இரத்தினசிங்கம், ஜெயமணி ஆகியோரின் மைதுனரும், சந்தோஷ், ஜெயராம், கிறிஷ், சாயினி, ஜனனி, மதுவினி, ஜெய்ஷ் ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (13.06.2011) திங்கட்கிழமை மு.ப 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காகப் பூதவுடல் அச்சுவேலி தீர்த்தாங்குளம் இந்துமயானதுக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

துரை ஐயா அவெனியூ,
சந்நிதி வீதி,
பத்தைமேனி, அச்சுவேலி. (1916)

தகவல்:
குடும்பத்தினர்.

## கதிரவேலு ஐயாத்துரை



புங்குடுதீவு 5ஆம் வட்டாரத்தைப் பிறப் பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கதிரவேலு ஐயாத்துரை 09.06.2011 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கதிரவேலு- சின்னாச்சி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை- தெய்வானை தம்பதியரின் அன்பு மருமகனும், கோமளத்தின் பாசமிகு கணவரும், கார்த்திகேசு, சின் னத்தம்பி, நாகம்மா, தில்லைநாதன், பாக்கியம், மகாலிங்கம் (ஜேர்மனி), சுப்பிரமணியம், மகேந்திரன் ஆகியோரின் பாசமிகு சகோதரனும், ஜெகதீஸ்வரன் (அமெரிக்கா), ஜெயலட்சுமி(சுவிஸ்), ஜெகநாதன் ஆகியோரின்பாசமிகுதந்தையும் மோகனதாஸ் (சுவிஸ்), கிருஸ்ண வேணி(அமெரிக்கா), பர்வதகுமாரி ஆகியோரின் மாமனும், அனுசிகா, அபிசிகா, சானுகா (அமெரிக்கா), நிவாஸ், நிரோஸ்(சுவிஸ்), விதுசன், சானுஜன் ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.06.2011) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் மு.ப 10 மணிக்கு கேரதீவு மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

5ஆம் வட்டாரம்,
புங்குடுதீவு.

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீனவர் பிரச்சினை குறித்தும் ஆராய்வு

கொழும்பு, ஜூன் 12

இந்திய - இலங்கை மீனவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் தொடர்பாக முதலில் இருநாட்டு மீனவர்களின் பிரதிநிதிகளும் கலந்துரையாடி தீர்மானம் ஒன்றுக்கு வரவேண்டும்.

அந்தத் தீர்மானத்தின் அடிப்படையில் இருநாடுகளின் பிரதிநிதிகள் கலந்துரையாடி முடிவுகளை எட்டலாம்.

கொழும்பு வந்த இந்திய உயர் மட்டக்குழுவுக்கும் இலங்கை அரசு பிரதிநிதிகளுக்கும் இடையில் நடந்த பேச்சுக்களில் இந்த இணக்கம் ஏற்பட்டுள்ளது.

இலங்கை - இந்திய மீனவர்களுக்கு இடையில் தொடரும் பிரச்சினைகளுக்கு எந்த வகையான தீர்வைக்காணலாம் என்பது குறித்து இரு தரப்புக்குழுக்களும் விரிவாக நேற்று ஆராய்ந்தன. அப்போதே மேற்கண்ட இணக்கம் ஏற்பட்டதாக இந்தியக் குழுவின் தலைவர் சிவ்சங்கர் மேனன் தெரிவித்திருந்தார். (ஒ-ஐ)

## பாம்பு தீண்டியவர் மரணம்

பாம்புக் கடிக்கு இலக்காகி சிகிச்சைக்கென யாழ். போதனா வைத்தியசாலையில் அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டிருந்த நபர் சிகிச்சை பயனளிக்காது ஒன்பதாவது நாளான நேற்று மரணமானார். மானிப்பாய், சோதிவேம்படி ஒழுங்கையைச் சேர்ந்த க.மகாலிங்கம் (வயது 59) என்பவரே மரணமானவர் ஆவார்.

மானிப்பாயிலுள்ள அவரது வீட்டுக்கு அருகிலுள்ள காணியில் அவர் கடந்த 3 ஆம் திகதி பாம்புக் கடிக்கு இலக்கானார். உடனடியாக யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட போதும் சிகிச்சை பயனளிக்காது நேற்று மரணமானார். (ஒ-4)

## அடுத்தடுத்து இருவரை பதம் பார்த்தது தெரு நாய்!

சிறுமியையும், யுவதியையும் அடுத்தடுத்து கடித்துக் குதறியது தெரு நாய். இதனால் கைகளிலும், கால்களிலும் படுகாயமடைந்த நிலையில் இருவரும் மந்திகை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ். ஆஸ்பத்திரிக்கு மாற்றப்பட்டனர்.

இந்தச் சம்பவம் வடமராட்சி மணற்காடு, குடத்தனையில் நேற்று முற்பகல் இடம்பெற்றது. இந்தச் சம்பவத்தில் முதலில் கடியுண்ட 3 வயதுச் சிறுமி சிகிச்சைக்கென வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டார். சுமார் 30 நிமிடங்கள் கழித்து குறித்த தெரு நாய் பிரஸ்தாப யுவதியையும் கடித்துக்குதறியது. (ஒ-4)

**விற்பனைக்கு**

வங்கிகள், தனியார் நிறுவனங்கள், விருந்தினர் விடுதி (Guest House & Restaurant) மற்றும் வேறு தேவைகளுக்கும் உகந்த, வாகனத்தரிப்பிட வசதிகளுடன், பாவனைக்குத் தயார்நிலையில் சகல வசதிகளுடன் கூடிய விசாலமான கட்டடம் ஆஸ்பத்திரி வீதியில் விற்பனைக்குண்டு. தரகர் தேவையில்லை.

தொடர்பு:- தொ.பே: 0774528818

**வேலை ஆள் தேவை**

எலக்றோ பிளேற்றிங் - மொப்பிங் வேலையில் அனுபவமுள்ள வேலை ஆள்கள் தேவை.
தொடர்பு: செல்வா மோட்டோர்ஸ்
217, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம். 021-2229793

**பாதுகாப்பு உத்தியோகத்தர் தேவை**



எமது நிறுவனத்தில் பாதுகாப்புச் சேவையில் கடமையாற்றுவதற்கு 25-60 வயதுக்கு உட்பட்ட ஆண் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் தேவை.

தகைமையுள்ளவர்கள் நற்சான்றுப் பத்திரங்களுடன் நேரில் உடன் வரவும்.

பொது முகாமையாளர்
உதயன்
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

**Deutsch, Dutch, French, Italian**

கொழும்பு விவேகானந்தா அக்கடமியின் யாழ். கிளையில் தற்பொழுது ஜேர்மன் எம்பஸி பரீட் சைக்கான Deutsch மற்றும் நெதர்லாந்து Dutch, Italian, French வகுப்புக்களும் நடைபெறுகின்றன.

Vivekananda Academy
(Centre For International Language Studies)
No.3, 2nd Lane, Palaly Road, Jaffna.
(அப்போலோ ஆஸ்பத்திரிக்கு எதிரில்)

அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட ஒரே யொரு வெளிநாட்டு மொழிக்கல்வி நிறுவனம்.

GOV.Reg.No W/A 76795 T.P: 0774842464, 0213216928, 0779927117

**வாடகைக்கு**

மருதனார்மடம் ஆஞ்சநேயர் கோயிலுக்கு அருகில் K.K.S. றோட்டோடு மாடி வீடு வாடகைக்கு உண்டு. நிறுவனங்கள் விரும்பத்தக்கது.

தொடர்பு: 0777626241

**விக்னா கல்வி நிறுவனம்**

52, ஸ்ரான்லி வீதி, யாழ்.
புவியியல்
திரு.P.S.V.தினேஸ்
A/L 2012 => சூழல் -முகாமைத்துவம் (பாலைபரவல்)
மானிடப் புவியியல் (பெருந்தோட்டப் பயிர்கள்)
ஆரம்பம்: Sat, Sun - (1-2 pm)
A/L 2013 => செய்முறைப் புவியியல் (இடவிளக்கவியல்)
சூழல் மூலகங்கள்
(துரித மீட்டலும் 2 ஆம் வகை நில்வுருவங்களும்)
மானிடப் புவியியல் - (அறிமுகம் சனத்தொகை)
ஆரம்பம்: சனி, ஞாயிறு (12 - 1 pm)

**கும்பம் திருமண சேவை - இலவச பதிவு**

**www.kumbam.com / 0774813232**

எம்மிடம் 5500 இற்கு மேற்பட்ட 22 நாடுகளைச் சேர்ந்த கோர்ப்புக்கள் உள்ளன




வீட்டில் இருந்த படியே வாழ்க்கைத் துணையைத் தேடுவதற்கு முதன் முறையாக இலங்கைத் தமிழருக்கு மட்டும் வெளிவரும் இணையத்தளம் www.kumbam.com ஆகும். நீங்களே கும்பம் மூலம் வயதின் படி, நாடு ரீதியாக, தொழில் ரீதியாக, மதம் மற்றும் உயரம் அடிப்படையில் தேடலாம்; தேரியலாம். நீங்களும் இன்றே இலவசமாகப் பதிவு செய்யுங்கள்

இலவச பதிவு
இன்றே அழையுங்கள்
077 481 3232 (24 மணிநேர சேவை) / 021 320 1111
(எமக்கு ஆஸ்திரேலியா,கனடா,லண்டனில் கிளைகள் உண்டு)

மணமகள் தேவை Ref No: M101506 | Call 077 481 3232 (யாழ்) 0044 208 133 9224 (லண்டன்)

யாழ் இந்து கௌரவ குடும்பம், 1978 ஆம் ஆண்டு பிறந்த, 33 வயதுடைய, செவ்வாய் குற்றமற்ற (இடபராசி - ரோகினி 3ம் பாதம்) இலங்கையில் B.Sc. Eng First Class மற்றும் M.Sc. பட்டம் பெற்று தற்பொழுது ஐரோப்பாவில் பொறியியலாளராக பணிபுரியும் மணமகனுக்கு மணமகள் தேவை. வைத்தியர்,பொறியியலாளர்,கணக்காளர், மற்றும் பட்டதாரிகள் விரும்பத்தக்கது.மேலதிக விபரங்களுக்கு அழைக்கவும்.

மணமகன் தேவை | Ref No:F101509 | Call 021 320 1111 , 077 481 3232

யாழ் இந்து கௌரவ குடும்பம் 1982 ஆம் ஆண்டு பிறந்த 29 வயதுடைய 4 இல் செவ்வாய் உள்ள 24 கிரகபாவமும் மீனராசி (ரேவதி 3 ஆம் பாதம் உள்ள) இலங்கையில் வங்கியில் பணிபுரியும் அழகிய பட்டதாரி பெண்ணுக்கு மணமகன் தேவை.

மணமகள் தேவை Ref No: M102029 | Call 0044 208 133 9224 (லண்டன்), 077 481 3232 (யாழ்)

யாழ் இந்து கௌரவ குடும்பம் 1976 ஆம் ஆண்டு பிறந்த 35 வயதுடைய செவ்வாய் குற்றமற்ற (பரணி நட்சத்திர மேட ராசி; லண்டனில் M.Sc. முடித்து தற்பொழுது லண்டனில் மென்பொருள் பொறியியலாளராக பணிபுரியும் மணமகனுக்கு மணமகள் தேவை. வைத்தியர்,பொறியியலாளர்,கணக்காளர்,மற்றும் பட்டதாரிகள் விரும்பத்தக்கது.

இலங்கை(யாழ்) தொடர்பு: 021 320 1111 , 077 481 3232 admin@kumbam.com | www. Kumbam.Com
ஆஸ்திரேலியா: 0061 2 8005 8223 லண்டன்: 0044 208 133 9224 கனடா: 001 416 273 8075

**மாபெரும் இரசாயனவியல் கருத்தரங்கு**

By: அன்பு

- பரீட்சை வினாக்களை எதிர்கொள்வது எப்படி.
- எதிர்பார்ப்பு வினாக்கள்
- முக்கிய விடயங்களின் மீட்டல்
- ஆரம்பம் 13.06.2011 (திங்கள்)
- நேர அட்டவணையை நிறுவனத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

NEW SCIENCE CENTRE
யாழ். நகர்.

**புதிய முதலீடு**

**50,000/- க்கு மேல்**
மாத வருமானம்

வின்ரிச் ஐஸ் கிரீம் இயந்திரம்




கூல்பார், ஸ்நெக் பார், ஹோட்டல், பாடசாலை, கெண்டின், பேக்கரி, பார்மசி, சுப்பர் மார்க்கட், குரோசரி போன்ற விற்பனை நிலையங்களுக்கு உகந்தது.

- ஒரே இயந்திரத்தில் மூன்று வெவ்வேறு வகையான ஐஸ்கிரீம் வகைகளை விற்பனை செய்யலாம். சோயா / வெனிலா / சொக்கலேட்
- சுயமாகவே தயாரிக்கும் திறன்.
- இலவச பயிற்சி
- உத்தரவாதத்துடன் / விற்பனையின் பின் சேவை

WINRICH INTERNATIONAL (PVT) LTD.
No.18, Ground Floor, Lucky Plaza, St. Anthony's Mawatha, Kollupitiya, Colombo 03.
Hotlines: 077 3918870 / 077 1066902

**விற்பனையாளர்கள் தேவை**

கண்ணாடி, புடைவை வியாபாரத்தில் அனுபவமுள்ளவர்கள், பழக விரும்புபவர்கள் தேவை. (ஆண், பெண் இருபாலாரும்)

த.குமாரசாமி அன் சன்ஸ்
248/1, K.K.S. வீதி, யாழ்ப்பாணம்.

**தேவை**

10½ அடி அலுமினிய Body வாகனமும் அனுபவமுள்ள 20 - 25 வயதுக்கு உட்பட்ட விநியோக உதவியாளரும் தேவை.

தொடர்பு: கந்தவேலன் ரேடர்ஸ்,
110, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்.
T.P. 021 222 2822, 0772250377

DHL உத்தரவு பெற்ற முகவர்


உள்நாடு,வெளிநாடுகளில் உள்ள உறவுகளுக்கான துரித கடிதங்கள் பொதிகள் சேவை

10Kg மேற்பட்ட பொதிகளுக்கு விசேட விலைக்கழிவு

24 மணி நேரத்தில் உள்நாட்டிற்கான துரித கடிதங்கள் பொதிகள் சேவையினைப் பெற்றுக்கொள்ளலாம்

London -Rs750
Canada, U.S.A, France, Denmark, Germany, Italy, Norway, Swiss
Rs900

உள்நாடு,வெளிநாடுகளில் உள்ள உங்கள் உறவுகளுக்கு கடிதங்கள்,அன்பளிப்புபொருட்கள்,DVD,CD போன்ற பொருட்களை மிகவிரைவாகவும் பாதுகாப்பாகவும்அனுப்பிட



திருமுருகன் கொம்நெற்

TCN Express,
2B,Nelsan place,COlombo-06.
Customer service No.021 222 7835

இல.259,கே.கே.எஸ் வீதி,யாழ்ப்பாணம். இல.18,பிரதானவீதி,நெல்லியடி. இல.05,திருநகர் பிரதான வீதி, கிளிநொச்சி இல.46,ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி.

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிடெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 12.06.2011 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புலோலி மத்தி

# ஆத்தியடிப் பிள்ளையார் கோயில்

## புனராவர்த்தன நவகுண்டபக்ஷ அஷ்டபந்தன மகா கும்பாபிஷேகம்-12.06.2011

### வாழ்த்துச் செய்தி



புலோலி மத்தி, ஆத்தியடிப் பிள்ளையார் ஆலயத்தில் நடைபெறவுள்ள அஷ்டபந்தன மகாகும்பாபிஷேகத்துக்கும் அதனையிட்டு வெளியிடப்படும் சிறப்பு மலருக்கு எனது நல் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

ஆன்மாக்கள் லயிக்கும் இடமாக ஆலயங்கள் விளங்குகின்றன. இங்கு இறைவன் வீற்றிருந்து ஆன்மாக்களுக்கு அருள்பாலிக்கின்றான். மக்களின் பண்பாட்டு அடிப்படையில் அமைந்த ஆன்மீக வாழ்வுக்குத் தளமாக அமைவன ஆலயங்களாகும். இத்தகைய ஆலயங்களின் வரலாற்றிலும் விருத்தியிலும் அவ்வூர்மக்களின் வரலாறும் விருத்தியும் தங்கியிருந்ததுடன் அவற்றை வெளிக்காட்டும் இடமாகவும் இருந்தன, இருக்கின்றன எனலாம். ஆகவே இவ்வரிய பணிபுரியும் ஆலயங்கள் புனரமைக்கப்பட்டு கும்பாபிஷேகம் செய்து பேணிப் பராமரித்தல் அவசியமானதாகும்.

அந்த வகையில், புலோலி மத்தி ஆத்தியடிப் பிள்ளையார் ஆலயத்தின் மகா கும்பாபிஷேகம் சிறப்புடன் அமைய எனது வாழ்த்துக்களைத் தெரிவிக்கின்றேன். மேலும் கும்பாபிஷேக நிகழ்வை சிறப்பாக நடத்தி வைக்கவுள்ள ஆச்சாரியப் பெருமக்களுக்கும் இந்நிகழ்வை முறையாக ஒழுங்கமைத்த பரிபாலன சபையினருக்கும் எனது பாராட்டுக்களும் நல்வாழ்த்துக்களும் உரித்தாகட்டும்.

இந்த வைபவத்தில் சாந்தியும் சமாதானமும் நிலவி எல்லோரும் இன்பமாக வாழ எல்லாம் வல்ல விநாயகப் பெருமான் அருள்புரிய வேண்டுமெனப் பிரார்த்தின்றேன்.

சாந்தி நாவுக்கரசன்
*பணிப்பாளர்,*
*இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம்.*

### ஆசியுரை



திருவருள் சுரந்து விளங்கும் ஆத்தியடிப் பிள்ளையாருடைய கோயில் புதுப்பிக்கப்பட்டு இன்று கும்பாபிஷேகப் பெருஞ்சாந்தி காணும் இந்த வேளையிலே, எல்லாம் வல்ல விநாயகப்பெருமானுடைய அருட்கடாச்சத்தினால் ஆத்தியடி மக்கள் எப்பெருமானுடைய கோயிலை மிகக் கண்கவரும் விதத்தில், ஆகமவிதி வழுவாமல் தேவர்களின் ஆசியுடனும், பெரியோர்களின் துணையுடனும் அமைத்து, அதில் பெருமானை இருத்தி நவகுண்ட பக்ஷ மகா கும்பாபிஷேகத்தைச் செய்வித்திருக்கிறார்கள். இந்த இறை கைங்கரியங்களை எம்பெருமான் என்னைக் கொண்டு நடத்துவதற்கு அனுமதி அளித்தமையை யான் பெரும்பேறாகவே கருதுகின்றேன், மேலும் இந்த ஊர் மக்களும், விநாயகப்பெருமானை நாடி வரும் அடியவர் அனைவரும் சகல செல்வங்களும் பெற்று பெருவாழ்வு வாழ எல்லாம் வல்ல விநாயகப் பெருமான், பசுவதீஸ்வரப்பெருமானின் பாதாரவிந்தங்களை தியானித்து ஆசிகூறுகின்றேன்.

சிவஸ்ரீ க. சிவனேசக்குருக்கள்
*(பிரதிஸ்டாபிரதம குரு)*
*(பிரதமகுரு, புலோலி பசுபதீஸ்வரர் தேவஸ்தானம்)*

### ஊர்மக்கள் நன்மை பெறட்டும்



'ஐந்தொழில் புரியும் ஐங்கரக் கடவுளை, பூக்கொண்டு, தப்பாமல் தொழுவோர்க்கு எச்செயலும் சித்தியாகும்' என்ற ஆன்றோர் வாக்கிற்கிணங்க, ஆத்தியடிப் பதியிலே கோயில் கொண்டு எழுந்தருளியிருந்து வாழ்வளிக்கும் பிள்ளையாரின் திருக்கோயில் ஊர் மக்களால் புனர்நிர்மாணம் செய்யப்பட்டுக் குடமுழுக்கு அபிஷேகம் இன்று நடைபெறுகின்றது.

கும்பாபிஷேகத்தைத் தரிசித்தல் என்பது தமது வாழ்விற் கிடைத்தற்கரிய பேறாகும். ஏனெனில் இது அடிக்கடி நிகழும் நிகழ்வல்ல; பிரபஞ்சம் முழுவதும் வியாபித்திருக்கும் இயற்கைச் சக்தியாகிய இறை சக்தியை மந்திர, யாகம் அஞ்சலி, பூசை, சாந்திப் பரிகாரம் போன்ற கிரியைகளினால் வசப்படுத்தி ஒடுக்கி ஓர் இடத்தில் சாந்தித்தியப்படுத்தல் இந்த பெருஞ்சாந்தி விழாவின் உள்ளடக்கமாகும்,

மேலும் கும்பாபிஷேக கிரியைகளில் அந்த ஊர் மக்கள் நன்மையடைவது மட்டுமல்லாது, அப்பிரசேதம், நாடு, உலகம் என எல்லா இடங்களிலும் வாழும் உயிரினங்களும் நன்மை அடைகின்றன அத்துடன் இயற்கையின் மாசுக்கள் அகற்றப்படுகின்றன. அப்படிப்பட்ட இந்த இறைபணியை நடத்துகின்ற ஆத்தியடி மக்களின் சமூக, சமயப்பணிகள் மேலும் விருந்தி அடைவதுடன் நாட்டில் சாந்தி, சமாதானம், ஆரோக்கியம் சிறப்புற்று விளங்க எல்லாம் வல்ல விநாயகப் பெருமானை வணங்கி வாழ்த்துகின்றேன்.

இ. வரதீஸ்வரன்
*பிரதேச செயலாளர்,*
*வடமராட்சி வடக்கு,*
*பருத்தித்துறை.*



20/05/2

### ஆலய வரலாறு

பருத்தித்துறை புலோலி மேற்கு(தற்போது புலோலி மத்தி) கட்டாடிச் சீமா என்று அழைக்கப்படும் வளவில் கால வரையறை கூறமுடியாத காலத்தில் பிள்ளையார் வழிபாடு இருந்து வந்தது. அந்நியர் ஆட்சிக்காலத்தில் வழிபாட்டுத் தடை காரணமாக இக்கோயில் அழிக்கப்பட விநாயக திருவுருவம் மட்டும் காவோலைகளால் மறைக்கப்பட்டு வழிபாடு நடந்துவந்தது. பின் சுமார் 1860 ஆம் ஆண்டளவில் வாய்க்காற் கடைப் பரதேசிகளின் வாக்குப்படியும் எம் ஊரவர் கண்டசொற்பனத்தில் விநாயகப் பெருமானின் திருக்குறிப்புப் படியும் எறும்புக் குழியும் கார்வளப் பெருக்கு வாய்க்காலும் திருவாத்தித் தருவும் ஒருங்கே சேரப்பெற்ற இடத்தில் (தற்போதைய மூலஸ்தானம் இருக்கும் இடம்) திருப்பெயர்ச்சி செய்து அக்கால வசதிக்கேற்ப சிறு ஆலயமும் அமைக்கப்பட்டது. அத்துடன் எமது ஊர் ஆத்தியடி என்றும் அழைக்கப்பட்டது. மேலும் வேலாயுத உபாத்தியாயர் திரு.ச.சபாபதிப்பிள்ளை போன்றோரின் முயற்சியால் ஆலயம் வளர்ச்சி கண்டதுடன் 1904.03.31ஆம் திகதி ஆத்தியடிப் பிள்ளையார் கோயில் தரும பரிபாலன சபை அரச பதிவுக்குட்பட்டு செயற்படத் தொடங்கியது. பரிபாலன சபை ஆலயத்தை ஆகம விதிக்கமைய அமைத்து 1913ஆம் ஆண்டு மகா கும்பாபிஷேகத்தை நடத்தியதுடன் ஆலயத்தின் வளர்ச்சிக்கு அரும்பாடுபட்டது. காலத்திற்குக் காலம் புனர்நிர்மாணம், கும்பாபிஷேகம் என்பன நடைபெற்று வந்ததுடன் ஆத்தியடி உள்ளூர், வெளியூர் மக்களின் பங்களிப்புடன் 2008.09.11 பாலஸ்தாபனம் செய்யப்பட்டு மூலஸ்தானம் தவிர்ந்த ஏனைய சுண்ணாம்புச்சுவர் கொண்ட கட்டடங்கள் அகற்றி புதுப்பொலிவுடன் ஆலயம் அமைக்கப்பட்டு பரிவார தேவதைகளாக மகாலட்சுமி, சுப்பிரமணியர், நாகதம்பிரான் வைரவர், சண்டேஸ்வரர் ஆகிய தெய்வ சந்நிதானங்களும் அமைக்கப்பட்டு இன்று (கர வருஷம்) வைகாசி மாதம் 29ஆம் திகதி (12.06.2011) கும்பாபிஷேகம் நடைபெறுகின்றது.

எல்லாம் வல்ல ஆத்தியடி நாயகன் எல்லோருடைய வாழ்விலும் மகிழ்ச்சி ஏற்படுத்துவாராக.

ச.சபாபதிப்பிள்ளை
*திருப்பணித் தலைவர்,*
*தரும பரிபாலன சபை.*

### கும்பாபிஷேகம் சிறக்கட்டும்



"சென்று நாம் சிறு தெய்வம் சேர்வேமல்லோம் பிள்ளையார் திருவடிக்கே சேரப் பெற்றோம்" என்ற வாக்கிற் கிணங்க இற்றைக்கு நூற்று நாற்பது ஆண்டு கால வரலாற்றைக் கொண்ட ஆத்தியடிப் பிள்ளையார் கோயில் தரும பரிபாலன சபை, ஆத்தியடிப் பிள்ளையார் கோயிலை புணர்நிர்மாணம் செய்யபட்டது. கோயிலுக்கு குடமுழுக்கு செய்வித்து வைக்கும் பெரும்பொறுப்பில் உள்ள இந்தத் தருணத்தில், எமது மூதாதையர் வழி, நாமும் இறைபணியில் செல்வத்தைச் சேகரித்து இறைபணிலேயே செலவு செய்து இந்த ஆலயத்தைக் கட்டி முடித்துள்ளோம் என்றால் அது மிகையாகாது.

ஆத்தியடி மக்கள் அனைவரும் ஒன்று கூடி விநாயகருக்கு பெருஞ்சாந்தி விழா எடுக்கும் இந்த வேளையில் இந்தப் பணிக்கு சரீர, பொருள் உதவி வழங்குவதுமல்லாமல், பல் வேறு வழிகளில் ஆலோசனைகள் வழங்கிய அனைத்து பெருந்தகைகள் மற்றும் கும்பாபிஷேகத்தை சிறப்புற நடத்தும் சிவாச்சாரியர்கள், ஆலய குருக்கள், ஆலயத்தை சிறப்புடன் வடிவமைத்த ரூபன்ஸ் கட்டட நிர்மாணிகள் அனைவருக்கும் நன்றி கூறுவதுடன் எம்பெருமானின் அருளாசி என்றும் கிட்டப் பிராத்திக்கின்றேன்.

சி. சதாசிவம்
*தலைவர், ஆத்தியடிப் பிள்ளையார் கோயில்,*
*தரும பரிபாலன சபை.*

(அ/801)

### திருவருள் துணைநிற்க வேண்டுகிறோம்



வேண்டுவார் வேண்டுவதை அருளும் ஆத்தியடிப்பிள்ளையாரின் திருக்கோயில் முற்றுமுழுதாக புனர்நிர்மாணம் செய்யப்பட்டு இன்று குடமுழுக்கு நடைபெறும் நன்நாளில் எம்பெருமானின் திருமேனியை முப்பொழுதும் தீண்டும் பாக்கியம் பெற்றுள்ளவனாய் இருக்கின்ற பெரும் பேறைப் பெற்றமைக்கு யான் என்ன தவம் செய்தேனோ.

ஆத்தியடிப் பிள்ளையாரின் அற்புதங்கள் ஒன்றல்ல இரண்டல்ல சொல்லில் அடங்காதவை, அவற்றை இன்றும் யான் கண்ணூடாகக் காண்கிறேன். நேர்த்தி வைத்துப் பிள்ளையாரிடம் வருபவர்களின் துயரைத் துடைத்து நல்லருள் பாலித்ததன் மூலம் அவர்கள் நேர்த்திக் கடன் செலுத்துவதற்கு கண்ணீர்மல்க கோயிலுக்கு வருவதை ஆலய குருக்கள் என்ற முறையில் அன்றாடம் கண்ணுறுகின்றேன்.

குறுகிய காலத்துக்குள் பாலஸ்தாபனம் செய்யப்பட்டு உள்ளூர், வெளியூர் அடியவர்கள் அன்பளிப்புடன் புதுப்பொலிவு பெற்று மிக்க அழகுடன் காட்சி தரும் சித்தி விநாயகப் பெருமானின் ஆலயம் இன்னும் வளர்ச்சி கண்டு சமூக, சமயப் பணிகளில் சிறந்து விளங்குவதுடன் இந்த இறை பணிக்கு உதவிய அனைத்து மெய்யடியார்களுக்கும் அப்பனின் திருவருள் துணை நிற்கப் பிரார்த்திக்கின்றேன்.

ஆத்தியடியானின் திருவருளை நாடும்
சிவஸ்ரீ அ. மதியாபரணக்குருக்கள்
*(பிரதம குருக்கள் ஆத்தியடிப்பிள்ளையார் கோயில்)*

### சமாதானம் நிலவ பிரார்த்திக்கின்றோம்



ஐந்து கரத்தனை ஏற்றியும், போற்றியும் வழிபடும் ஆத்தியடி மக்கள் ஆகிய எம்மவர் சேர்ந்து திருத்தொண்டின் மூலம் செப்பனிட்ட ஆத்தியடிப் பிள்ளையார் கோயிலின் திருமுழுக்கு வைபவமான இன்று அவரின் துணையுடன் தர்ம கருமங்கள் பலவற்றை செய்யும் பரிபாலன சபையின் செயலாளர் என்ற வகையில் அப்பனின் பாதம் பணிந்து நாட்டில் சாந்தி, சமாதானம் நிலவ அவனருளை நாடுகின்றேன்.

தும்பிக்கையானின் அற்புதப் பெருமைகள் அளப்பரியன. கடந்த காலங்களில் எம்மவர்கு ஏற்பட்ட துயர் துடைத்து காத்தருளிய முழுமுதற் கடவுள் எமது பிள்ளையார். மூர்த்தி, தலம், விருட்சம், தீர்த்தம் என அனைத்து சிறப்பும் பெற்று எமது ஆலயம் அமைந்திருப்பது அவனது அருளே அன்றி வேறேதும் இல்லை. ஆத்தியடி நாயகன் அருள் யாவருக்கும் கிடைக்கப் பிரார்த்திக்கிறேன்.

க.ஸ்ரீதரன் *(செயலாளர்)*
*ஆத்தியடிப் பிள்ளையார் கோயில்*
*தரும பரிபாலன சபை*

### ஆத்தியடியானின் அருளாட்சி அனைவருக்கும் கிடைக்கட்டும்



கஜானனம் பூத கணாதி ஷேவிதம்
கபித்த ஜம்பூ பல சார பக்சிதம்
உமாசுதம் சோக வினாச காரணம்
நமாமி விக்னேஸ்வர பாதபங்கஜம்

புலோலி மத்தி ஆத்தியடியில் குடிகொண்டு எழுந்தருளியிருக்கும் ஆத்தியடி விநாயகனின் குடமுழுக்கு விழா நடைபெறுவதைக் குறித்து மிகவும் மகிழ்ச்சியடைகின்றேன்.

வெளிநாடுகளிலும், உள்நாட்டிலும் உள்ள விநாயகப் பெருமானின் அன்பர்களால் இவ்வாலயம் புனரமைக்கப்பட்டு இன்று குடமுழுக்கு விழா நடைபெறவிருப்பது அனைவருக்கும் மகிழ்ச்சியைத் தரும் ஒரு நிகழ்வாகும். குடமுழுக்கு நிகழ்வு என்பது ஒரு வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த ஒரு நிகழ்வாகும்.

எனவே இப்பெருஞ்சாந்தி நிகழ்வில் அனைத்து அடியார்களும் கலந்து கொண்டு, சித்திவிநாயகனின் திவ்விய கடாச்சத்தினைப் பெற்றுக் கொள்வது இன்றியமையாத ஒன்றாகும். மண்ணிலே பிறந்த நாம் மண்ணில் நல்ல வண்ணம் வாழ்வதற்குக் கிடைத்த அரிய பிறவி மானிடப் பிறவியாகும். விறகில் தீ போலவும், பாலில் படு நெய் போலவும் விளங்கும் இறைவனை ஆன்மாக்கள் ஆலயங்களில் பிரதிட்டை பண்ணியிருக்கும் இறையுருவின் மூலமாகவே பெற்றுக் கொள்ள முடியும் இந்தப் பெருவிழாக்களைக் கண்டு தரும வழியில் சென்று வாழ்தலே மக்களாகப் பிறந்த அனைவரதும் கடமையாகும்.

வெளிநாடுகளில் வாழும் அன்பர்களின் பெரும்பகுதி பண உதவியினால் இந்த ஆலயம் புதுப்பொலிவுடன் விளங்குகின்றது என்றால் மிகையாகாது. எம்பெருமானைத் தரிசிக்க வெளிநாடுகளிலிருந்தும் அன்பர்கள் வருகை தந்துள்ளமை வரவேற்கத்தக்க விடயமாகும்.

எமது ஆலயத்தினைப் புனரமைப்பதற்கு பண உதவி, சரீர உதவிகள், ஆலோசனைகள், வழிகாட்டல்கள் அனைத்தினையும் வழங்கிய உள்ளங்களுக்கு எம்பெருமானின் கும்பாபிஷேகப் பலன்களும், சகல சௌபாக்கியங்களும் நீண்ட நிம்மதியான வாழ்வும் கிடைக்க வேண்டும் என எல்லாம் வல்ல விக்னேஸ்வரப் பெருமானை வேண்டி நிற்கும்.

சோ. தங்கேஸ்வரன்,
*பொருளாளர், ஆத்தியடிப் பிள்ளையார் கோயில்*
*தரும பரிபாலன சபை*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீர்வேலி அருள்மிகு ஸ்ரீ அரசகேசரிப் பிள்ளையா
# மகா கும்பாபிஷேகச் சிறப்



## பிரதிஷ்டா குருவின் ஆசியுரை

அரசகேசரிப்பிள்ளையார் அருள் கிடைப்பதாகச் சரித்திரப் பிரசித்தி பெற்ற ஸ்ரீ அரசகேசரிப்பிள்ளையாருக்கு கும்பாபிஷேகம் சிறப்பாக நடைபெறுகின்றது. இன்று (12.06.2011) ஞாயிற்றுக்கிழமை சுவாதி நட்சத்திரத் தில் எம்பெருமான் பெருஞ்சாந்திவிழா இடம்பெறு கின்றது.

வாலாம்பிகா சமேத வைத்தீஸ்வரப் பெருமான் உடன் உறைய விநாயகப் பெருமான் திருவருள் புரிகின்றான். வாழ்வில் ஒளியும் ஆன்ம முத்தியும் தருவான் எங்கள் விநாயகன். புலவனும் பிரதானியுமாக விளங்கிய அரசகேசரிப் புலவனால் உருவாக்கப்பட்ட ஆலயமாகும். இந்த வருடம் நடைபெறும் திருக் குடமுழுக்கு வைபவத்தில் அரசகேசரிப் புலவன் திருவுருவும் நிறுவப்படுவது. பெருமை உடையதா கின்றது. சீரும் சிறப்பும் மிக்க எம்பெருமான் திருவருள் எல்லோ ருக்கும் கிடைப்பதாக.

சிவஸ்ரீ சா. சோமதேவக் குருக்கள் (பிரதம குரு),
ஸ்ரீ அரசகேசரிப்பிள்ளையார் கோயில், நீர்வேலி.



## யாழ்.மாவட்ட அரச அதிபரின் ஆசியுரை



சிவபூமி எனத் திருமூலரால் சிறப்பித்துக் கூறப்பட்ட இலங்கையின் வடபாலமைந்த யாழ்ப்பாணத்தில் நீர் வளம், நிலவளம் பெருகிய நீர்வேலியில் கோயில் கொண்டு அருள்பாலித்து வரும் தொன்மை மிக்க அருள் மிகு ஸ்ரீ அரசகேசரிப் பிள்ளையார் ஆலயத்தில் நடைபெறவுள்ள கும்பாபிஷேக விழா சிறப்புற அமைய வேண்டும் என எல்லாம் வல்ல விநாயகப் பெருமானைப் பிரார்த்தித்து ஆசிச் செய்தி வழங்குவதில் பெருமகிழ்ச் சியடைகின்றேன்.

வரலாற்றுச் சிறப்பும், வழிபாட்டுச் சிறப்பும் ஆகமச் சிறப்பும் அமைந்த தலம் இதுவாகும். முன்னாள் மன்னன் பரராஜசேகரன் காலத்து முதல் மந்திரியாய் இருந்த அரசகேசரிக்கும், இந்த ஆலயத்துக்கும் இருந்த இறுகிய தொடர்பின் பிரகாரமே இந்த ஆலயம் அரச கேசரி பிள்ளையார் என அழைக்கப்பட்டது வரலாறாகும்.

மனித வாழ்வை மேன்மையடையச் செய்வது இறைவழிபாடாகும். ஆலயங்களில் நடைபெறும் நித்திய, நைமித்திய பூசைகளும் வழிபாடுகளும் தான் மனித வாழ்வை மேன்மையுறச் செய்கின்றன. இந்த ஆலயத்தில் 2011.06.12 ஆம் திகதி நடைபெறவுள்ள கும்பாபிஷேக விழா இனிது நிறைவேற, திருவருள் மணம் வீச வேண்டும், மக்களின் குறைகள் நீங்க தும்பிக்கையானின் பாதார விந்தங்களைப் பணிந்து, தொழுது, மனம் அக மகிழ்ந்து, இறையாசி வேண்டி எனது வாழ்த்துக் களை தெரிவிக்கின்றேன்.

திருமதி இமெல்டா சுகுமார்,
அரச அதிபர், மாவட்டச்செயலர், யாழ்.மாவட்டம்.

## அரசகேசரி கண்ட அருளாளன்



நீர்வையூரின் நடுநாயகமாக அருளாட்சி நல்கும் அரசசேகரிப் பெருமானுக்குத் திருக்குட நன்னீராட்டுப் பெருவிழா நடைபெறுவதையிட்டு பேருவகை அடைகிறோம்.

தமிழில் ரகுவம்சம் செய்த அரசகேசரி பதினாறாம் நூற்றாண்டில் இந்தத் தலத்தில் வழிபாடாற்றி உள்ளார். இவனே இந்தத் திருத்தலத்தை பெருங் கோயிலாக அமைத்து கீர்த்தி பெற்றிருக்கிறான். மஹாராஜனாயும், கவிராஜனாயும் மஹா பக்தனாயும், பேரறிஞனாயும் விளங்கிய ஆரியச் சக்கரவர்த்தி வம்ஸத்தவானான அரசகேசரி பேரால் இந்தத் தலம் விளங்குகிறது.

களிறும் பிடியும் போல பாலாம்பிகா உடனாய வைத்தீஸ்வரர் அருள் சுரக்க, பிரணவ ரூபனாக ராஜ சிம்மனாக பிள்ளையார் இங்கு காட்சி தருகிறார்.

நீரவாடீபுரம் என்ற நீர்வையூரின் ஆன்மீகச் செழுமைக்குச் சான்றாய் இருக்கிற இந்தக் கோயில் சுற்றிலும் அறநிலையங்கள் அமையப் பெற்றுள்ளமையும் பெருமை தருகிறது.

இந்துசமய மறுமலர்ச்சிக்கும் வரலாற்று உணர்வின் எழுச்சிக்கும் இந்தக் குடமுழுக்கு உதவுதல் வேண்டும்.

இந்த ஆலய புனர் நிர்மாணத்திலும், மஹாகும்பாபிஷேகத்திலும் ஈடுபட்டு பணியாற்றும் ஆலய சிவாச்சார்யர்கள், அறங்காவலர் சபையினர், அரசகேசரி அன்பர்கள், அடியார்கள் யாவரும் இறையருள் பெற வேண்டுகிறோம்.

இன்றைய கும்பாபிஷேக விழாவின் மகிழ்ச்சியைப் பகிர்ந்து கொள்வதுடன் எம்பெருமான் எல்லோருக்கும் சகல செல்வயோகம் மிக்க பெருவாழ்வருள பிரார்த்தித்து வாழ்த்துகிறோம்.

*"லோகா ஸமஸ்தா ஸுகினோ பவந்து"*

சிவஸ்ரீ கு.தியாகராஜக் குருக்கள் (நீர்வை மணி)

## இந்தியக் குருமார் ஆசி

எல்லாம் வல்ல அகில உலகத்தின் ஏக நாயகனாக விளங்கக்கூடிய வாலாம்பிகை உடன் ஆகிய வைத்திய நாதப் பெருமானின் தனிப்பெருங் கருணையோடு ஸ்ரீலங்கா புரியில் யாழ்ப்பாண நகரத்தின் பகுதியில் நீர்வேலியில் அருளாட்சி செய்துவரும் அங்குமிங்கும் எனாதபடி எங்கும் பிரகாசமாய் நீக்கமற நிறைந்து இருக்கும் பிரணவ பொருளாய் ஓங்கார ரூபமாய் கருணை உருவெடுத்து கலியுகத்தில் கண்கண்ட தெய்வமாய் அருள் மிகுந்த ஸ்ரீ அரசகேசரிப்பிள்ளையார் என்ற ஸ்ரீ ராஜசிம்ம கணபதி திருக்கோயிலைப் புனரமைப்புச் செய்து நறுமணம் நிறைந்த திருக்குட நன்னீராட்டு பெரும்சாந்திப் பெருவிழா என்று சொல்லக் கூடிய மகத்தான மஹாகும்பாபிஷேக வைபவமானது குருவருளும் திருவருளும் துணைசெய்ய இன்றைய நன்னாளில் மிகச் சிறப்பாக நடைபெறுகிறது. அது சமயம் இறை அடியார்கள் அனைவருக்கும் ஸ்ரீ அரசகேசரி விநாயகப் பெருமானுடைய பரிபூர்ண திருவருள் கூடி கல்விச்செல்வம், அருட்செல்வம், பொருள்செல்வம் கிடைக்கப் பெற்று அனைவரும் மன மகிழ்ச்சியோடு வாழக்கிடைக்கப் பெற்று இந்திய தமிழ்த் திருநாட்டில் இருந்து எங்களை அழைத்த ஆலய பிரதமகுரு சிவஸ்ரீ ச. சோமதேவ குருக்கள் அவர்களுக்கு நன்றி தெரிவித்து எல்லோரும் பேரானந்தப் பெருவாழ்வு வாழப் பிரார்த்தனை செய்து கொள்கிறோம்.

*இறைபணியில்*
சிவஸ்ரீ எஸ். மணிகண்டக் குருக்கள், சிவஸ்ரீ எஸ். சம்பந்த குருக்கள்
சிவஸ்ரீ கே. மணிகண்டக் குருக்கள், சிவஸ்ரீ வீ. குருமூர்த்தி குருக்கள்
(தென்னிந்தியா தமிழ்நாடு - திருச்சி).

## தலைவரின் வாழ்த்து



நீர்வளமும் நிலவளமும் மிக்க நீர்வேலி, வலி.கிழக்கில் அமைந்துள்ள அழகிய கிராமம். இந்தக் கிராமத்தின் மேற்குப் புறத்தில் அமைந்துள்ள சரித்திரப்பிரசித்தி பெற்ற ஆலயம் அரசகேசரிப் பிள்ளையார் கோயிலாகும். இந்த ஆலயத்தில் அருள்பாலிக்கும் பிள்ளையார் மீது எம் மக்கள் அசையாத நம்பிக்கை கொண்டவர்கள். பிள்ளையாரில் நேர்த்திவைத்தால் நினைத்த காரியம் கைகூடும் என்பது நமது ஊர்மக்களின் நம்பிக்கை அப்பேற்பட்ட பிள்ளையாருக்கு இந்த ஆண்டு 12.06.2011 இல் அஷ்ட பந்தன மகா கும்பாபிஷேகம் நடைபெற அருள்பாலித்துள்ளது.

கோயில் புனருத்தாரணம் மகாகும்பாபிஷேகம் இரண்டும் சிறப்பாக நடை பெறுகின்றன. இதற்குரிய செலவை ஊர்மக்கள் விருப்புடன் அளித்துள்ளனர். கோயில் பிரதம குரு சிவஸ்ரீ கார்த்திகேய - சாம்பசதாசிவ சோமதேவக்குருக்கள், கட்டடக் கலைஞர், வர்ணம் தீட்டுவோர் மற்றும் சிற்பிகள், குறுகிய காலத்தில் தம் பணியை முடித்துள்ளனர். மற்றும் நமது ஊர் இளைஞர்களும் உற்சாகமாகப் பல விதத்திலும் உதவி செய்துள்ளனர்.

அறங்காவல்சபை உறுப்பினர் விடா முயற்சியுடன் செயற்பட்டு இந்தத் தெய்வீகப் பணிநிறைவுற உழைத்துள்ளனர். அறங்காவல் சபையின் தலைவர் என்றவகையில் இவர்கள் அனைவருக்கும் விநாயகப் பெருமானின் அருள்கிடைக்கப் பிரார்த்திக்கின்றேன். இவர்கள் வாழ்வு சிறக்க ஊர்மக்கள் சிறப்படைய உலகில் அமைதி, சமாதானம் நிலவ அரசகேசரிப்பிள்ளையார் அருள்புரிவாராக.

இ.தியாகராசா, தலைவர், அரசகேசரிப்பிள்ளையார் தேவஸ்தானம்.

## தேடிக் கண்டு கெ

நாம் எல்லோரும் தேடுகிறோம். பணம், பட்டம், பதவி, புகழ், அது, இது இப்படியே தேடுதல் நீள்கிறது. தேடுவன எல்லாம் கிடைப்பதும் இல்லை. அப்படியே தேடிக் கிடைத்தவை எல்லாம் முழுமையான மன மகிழ்வைத் தருவதும் இ[illegible]ல.

ஆனால், அருளாளர்களும் தேடினர். அவர்களின் [illegible]டல் வித்தியாசமாயிருந்தது. அது சரி கண்டார்களா? கண்டார்கள்.

*"தேடிக் கண்டு கொண்டேன்*
*திருமாலொடு நான்முகனும்*
*தேடித் தேடொணாத் தேவனை*
*என்னுள்ளே தேடிக் கண்டு கொண்டேன்"*

இது இப்படித் தேடிக் கண்ட அருளாளர் ஒருவரின் வாக்கு மூலம்.

அடியவர்களிலும் பல வகையுண்டு. அன்றொருநாள் அரச குடும்பத்தவன் ஒருவனும் தேடினான். தேடினான் எதை?

முந்தநாளிரவு கண்ட கனவை மனதில் வைத்துத் தேடினான். பனை வடலிகளைக் கடந்து பகல் முழுதும் தேடினான். தேடியது கிடைக்க மறுத்தது.

சரி போகட்டும், ஏதோ கனவு தானே. இப்போ, தண்ணீர் தாகம் மீண்டும் தேடினான். எதை? தண்ணீர் தேடினான்.

## வாழ்



எங்கும் நீக்கமற நிறைந்து உலகுயிர்களை இயக்கி அருளும் முழுமுதல் ஆதியும் அந்தமுமில்லாத அருள்பெருஞ் சோதியாம் இறைவனைப் பேரன்பால் வழிபட்டு நலம் பெறக் கருதி வ[illegible] பல்லாயிரம் மக்களது உள்ளத்தை நெகிழ் வித்து ஆன்றோர் உள்ளத்தில் கோயில் கொண்டருளி விளங்கும் மிகப் பழைமை வாய்ந்த தலங்களில் பிரசித்தி பெற்ற தலம் நீர்வேலி அருள்மிகு ஸ்ரீ அரசகேசரிப் பிள்ளையார் கோயில் ஆகும்.

நீர்வேலி பிரதேசம் சைவசமயத்தையும் தமிழையும் பேணுகின்ற தொன்மையான வரலாற்றினைக் கொண்டது யாவரும் அறிந்ததே. இத்தகைய பெருமைமிக்க நீர்வேலி மண்ணிலே புனருத்தாரண கும்பாபிஷேக நிகழ்வானது நடைபெறுவது


பிறவுன்ஸ்
TAFE
EXIDE
CIC
பவானி
கஜமுகா ரேட்சென்ரர்

## திருக்குட முழுக்குப் பெருவிழா சிறக்க வாழ்த்துவோர்:



ந.ஜெயக்குமார்
217, கே.கே.எஸ்.வீதி,
யாழ்ப்பாணம்

அம்பாள் ரேடர்ஸ்
324, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்

ஆர்.ஜி.பிறதர்ஸ்
இல.332, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்

சண்முகன் களஞ்சியம்
இல.308, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்

மலர் ரெக்ஸ்
இல.18, பெரிய
யாழ்ப்பாண

ஹரன் ஜுவெல்லர்ஸ்
இல.205, மின்சாரநிலைய வீதி,
யாழ்ப்பாணம்

ஷாம்பவி பதிப்பகம்
276 B, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்; கன்னாதிட்டி,
கரந்தன் வீதி, நீர்வேலி

கஜமுகன் ஹாட்வெயர்
இல.147, 149,
ஸ்ரான்லி வீதி,யாழ்ப்பாணம்

V.S.B. ரேடிங் கொம்பனி
பிறைவேற் லிமிட்டெட்,
இல.167, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்

வலி.கிழக்கு தென்பகுதி
ப.நோ.கூட்டுறவுச்
சங்கம்,
நீர்வேலி

S.V.M
இல.154, ஆஸ்பத்
யாழ்ப்பாண

சிவா ஸ்ரோர்ஸ்
பருத்தித்துறை வீதி,
நீர்வேலி

சர்மிலன் மரக்காலை
குறுக்கு வீதி,
நீர்வேலிச் சந்தி

அருணா ஸ்ரோர்ஸ்
(அண்ணாகடை)
குறுக்கு வீதி,
நீர்வேலி

சிவா ஸ்ரோர்ஸ்
குறுக்கு வீதி,
நீர்வேலி வடக்கு

சுகந்தன்
பல்பொருள் வாணிபம்
குறுக்கு வீதி,
நீர்வேலி வடக்கு

மயூரி இரும்
குறுக்கு வீ
நீர்வேலி வட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நெஞ்சகலா நினைவஞ்சலி



தோற்றம் 22 . 04 . 1901 — மறைவு 08 . 06 . 1987

**தியாகராஜா இராஜசிங்கம்**
(ஓய்வுபெற்ற புகையிரத நிலைய அதிபர்)



தோற்றம் 07 . 07 . 1934 — மறைவு 25 . 05 . 1991

**இராஜசிங்கம் இராஜமனோகரன்**
(பிறப்பு, இறப்பு விவாகப் பதிவாளர்)

இராஜகிரி
காசிப்பிள்ளையார் கோயிலடி,
தெல்லிப்பழை.

(சி/810)25-54-43)

குடும்பத்தினர்

## காணி விற்பனைக்கு

சாவகச்சேரி நகரின் மத்தியில், சாவகச்சேரி தனங்கிளப்பு வீதியில் விளையாட்டு மைதானத்துக்கு அருகில் குடியிருப்புக் காணி 135 பரப்பு விற்பனைக்கு உள்ளது. தொழிற் சாலை அமைப்பதற்கு சிறந்த இடம்.

தொடர்பு: 0755680218, 021222 8202

## காணி விற்பனை

பளையில் ஏ-9 வீதிக்குச் சமீபமாக கச்சாய்வெளி தோட்டக் காணி 6 ஏக்கர் விற்பனைக் குண்டு.

தொலைபேசி இலக்கம்:
0774346417

## வேலைக்கு ஆள் தேவை

திருகோணமலையில் இயங்கி வரும் அச்சகத்துக்கு OFF - Set machine operator, Book binding இல் அனுபவமுள்ள ஆண் வேலையாள்கள் தேவை. [தங்குமிட வசதி ஒழுங்கு செய்து தரப்படும்]

தொடர்பு:- 0773573072

## தேவை

கட்டட ஒப்பந்த நிறுவனத்துக்கு தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் தேவை. பயிற்சியாளர்களும் விரும்பத்தக்கது. உடன் தொடர்பு கொள்ளவும்

தொடர்பு: 0754161947

## தோட்டக் காணி குத்தகைக்குத் தேவை

யாழ்.மாவட்டத்தில் வலி.வடக்கு தெல்லிப்பழை, மருதனார்மடம், கோண்டாவில், கோப்பாய், உரும்பிராய் போன்ற பகுதிகளில் காணி தேவை. (முற்பணம் கொடுக்கப்படும்)

தொடர்பு: 0775453794

## கார் விற்பனைக்குண்டு

49-30XXசுப்பர் 240 135 எக்ஸ் மொடல் 25sri20XXபொக்ஸ் பேகன்ட் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு: 0773641661

## தேவை

திறமையும் அனுபவமுமுள்ள துடுப்பாட்ட பயிற்றுநர் தேவை.
40 வயதுக்குட்பட்ட ஆண்கள்
(17.06.2011 இற்கு முன் விண்ணப்பிக்கவும்)

இணைச் செயலாளர்,
பழைய மாணவர் சங்கம்,
ஹாட்லிக் கல்லூரி, பருத்தித்துறை.

## பிள்ளையார் சிலை திருடப்பட்டது

யாழ்ப்பாணம், ஜூன்12

வண்ணார் பண்ணையில் உள்ள ஆலயம் ஒன்றில் பிள்ளையார் சிலை நேற்று முன்தினம் நள்ளிரவுவேளை திருடப் போயுள்ளது.

இது தொடர்பாக யாழ்ப்பாணப் பொலிஸ் நிலையத்தில் நேற்று முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

வண்ணார் பண்ணை பி.ஏ. தம்பி லேனிலுள்ள ஞான வைரவர் ஆலயத்தின் பிள்ளையார் சிலையே திருட்டுப் போயுள்ளது.

அந்தச் சிலை கருங்கல்லினால் செய்யப்பட்டது எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்வாறான திருட்டுச் சம்பவங்கள் அண்மைக் காலமாகத் தொடர்ந்து அதிகரித்து வருகின்றமை குறிப்பிடத் தக்கது.

(த-14)

## சாவகச்சேரி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வ-து)

### கூறுவிலை கோரல்

எமது சங்கத்தின் பராமரிப்பில் உள்ள வாகன சுத்திகரிப்பு நிலையம் ஒப்பந்த அடிப்படையில் வழங்குவதற்கான கூறுவிலைகள் கோரப்படுகின்றது. கூறுவிலை சமர்ப்பிக்க விரும்புவோர் தலைமைக்காரியாலயத்துடன் தொடர்பு கொண்டு 30.06.2011 ஆம் திகதிக்கு முன்னர் கூறுவிலைகளைச் சமர்ப்பிக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

சாவகச்சேரி ப.நோ.கூ.சங்கம்
கண்டி வீதி, சாவகச்சேரி.

பொதுமுகாமையாளர்

## இதோ ஓர் அரிய சந்தர்ப்பம்

இளைஞர், யுவதிகளே உங்களுக்கு மாதத்துக்கு 20,000/- இருந்து 50,000/- வரை வருமானம் என்பது உறுதி. 'ஏசியன் மாஸ் மீடியா' மக்கள் நிறுவனத்தினால் சிறந்த மனச் சிந்தனை விழிப்பிதழ் என்ற விருது பெற்ற 'மனச' சஞ்சிகையின் தமிழ்மொழி பெயர்ப்பு 'மனம்' சஞ்சிகைக்கு விநியோகஸ்தர்கள் இலங்கை முழுவதும் அவசியம். கூடிய வருமானத்துடன் இளைஞர்களாகிய உங்கள் வாழ்க்கையில் வெற்றி பெறுவதற்கு நாங்கள் உங்களுக்கு வழி காட்டுவோம்.

அழையுங்கள்: நிரோஷி-0777897097,
சசி- 0779632732

(48,21,24)

## கண்ணீர் அஞ்சலி



எமது கழக உறுப்பினரும், கழக முன்னாள் உள்ளகக் கணக்காய்வாளரும் கணபதி ஸ்ரோர்ஸ் முன்னாள் உரிமையாளருமாகிய

**கணபதிப்பிள்ளை பரஞ்சோதி**

அவர்களின் மறைவைக் கேள்வியுற்றுத் துயரடைகின்றோம். அவரின் இழப்பால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்துக்கு எமது ஆழ்ந்த அனுதாபங் களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

(சி/806)

யாழ்ப்பாணம் வணிகர் கழகம்.

## இலங்கையின் போக்குவரத்து புரட்சியில் ஒரு பங்காளராகுங்கள்.

TVS

யுனைட்டட் மோட்டர்ஸ் PLC மற்றும் TVS இந்தியா ஆகியவற்றின் உறுதிவாய்ந்த பக்கபலத்துடன் TVS லங்கா தேசிய நிறுவனமானது முன்னணியில் திகழ்கின்றது. கடந்த 8 வருடங்களுக்கு மேலாக இலங்கையில் மோட்டார் வாகன துறையில் பங்களிப்பை வழங்கிவருவதுடன் எமது தொழில் திறமை மற்றும் நேர்மையின் நிமித்தம் நாங்கள் எமது வாடிக்கையாளர்களினதும் தொழிலாளர்களினதும் நம்பிக்கையை வென்றெடுத்துள்ளோம்.

நீங்கள் திறமைமிக்க, இலக்கைப் பூர்த்தி செய்யக்கூடிய, ஆற்றல்வாய்ந்த ஒருவராக இருந்தால் எமது TVS குழுவில் இணையலாம்.

### சிரேஷ்ட விற்பனை அதிகாரி ∴ விற்பனை அதிகாரி (வடக்கு, கிழக்கு மற்றும்தென் மாகாணங்களுக்கு)

தொழில் தகைமை

தற்போதுள்ள விற்பனை முகவர்களுக்கு உதவுவதன் மூலம் குறிக்கப்பட்ட விற்பனை எல்லையை அடைதல், புதிய முகவர்களையும் வாடிக்கையாளர்களையும் கண்டுபிடித்தல், விற்பனை பொருளுக்கான மதிப்பையும் சேவைகளையும் உயர்த்துதல், விற்பனை ஊக்குவிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் பிரதேச ரீதியாக பொருளுக்கான சந்தையை விரிவாக்குதல்.

தகமைகள்

- விற்பனை மற்றும் சந்தைப்படுத்தல் துறையில் ஆகக்குறைந்தது 3 வருட அனுபவம்.
- க.பொ.த. உயர்தரத்தில் சித்தியடைந்திருப்பதுடன், க.பொ.த. சாதாரண தரத்தில் ஆங்கிலம் மற்றும் கணிதத்தில் திறமை சித்தியடைந்திருக்க வேண்டும்.
- CIM பகுதியாகவோ அல்லது அதற்கு சமமாக சந்தைப்படுத்தல் துறையில் தகமை பெற்றிருத்தல் மேலதிக தகமையாக கருதப்படும்.
- ஆங்கிலம் மற்றும் சிங்களத்தில் உரையாடக்கூடியவராகவும் எழுதக்கூடியவராகவும் இருத்தல் வேண்டும்.
- சிரேஷ்ட விற்பனை அதிகாரி ∴ விற்பனை அதிகாரி - யாழ்ப்பாணம் மற்றும் திருகோணமலை பகுதியில் வேலை செய்பவர்கள் தமிழில் உரையாடக்கூடியவராகவும் குறிப்பிடப்பட்ட பிரதேசத்தில் வசிக்க விருப்பமுடையவராக இருத்தல் வேண்டும்.
- குறிப்பிடப்பட்ட இடத்தில் தங்கியிருந்து வேலை செய்யக் கூடியவராகவும் இருத்தல் வேண்டும்.
- மோட்டார் சைக்கிள் அனுமதிப் பத்திரம் உடையவராக இருத்தல் வேண்டும்.
- 35 வயதிற்குட்பட்டவராக இருத்தல் வேண்டும்.

### முச்சக்கர வண்டிக் கிளை

- முச்சக்கர வண்டி திருத்துனர் (பயிற்சி உடையோர் / பயிற்சி அற்றோர்)
- முச்சக்கர வண்டி மோட்டார் சைக்கிள் வர்ணம் பூசுவோர்.
- முச்சக்கர வண்டி வெல்டிங் வேலை செய்வோர்.
- முச்சக்கர வண்டி பொருத்துவோர்.
- உதவியாளர்கள்.

### உதிரிப் பாகக் கிளை (கொழும்பு).

- உதிரிப் பாகக் களஞ்சிய உதவியாளர்கள்.
- வாகன உதவியாளர்கள்.

**நேர்முகப்பரீட்சை - ஜூன் 20 முதல் 24 ஆம் திகதி வரை.**

United Motors Lanka Ltd

**TVS லங்கா (பிரைவேட்) லிமிட்டட்**
மனிதவள மற்றும் நிர்வாக முகாமையாளர்.
757, ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க மாவத்தை,
கொழும்பு 14.
மின்னஞ்சல் - career@tvslanka.lk

## ஜீவ வார்த்தை
## WORD OF LIFE

கிறிஸ்தவ வள நிலையமும் புத்தகசாலையும்
25% விற்பனைக் கழிவு

சிறியோர், பெரியோர்களுக்கான கிறிஸ்தவ வேதாகமங்கள் புத்தகங்கள், படங்கள், பாடல்கள்(CD/DVD), பரிசுப் பொருள்கள், வேதவசனங்கள் என்பனவற்றை சில்லறையாகக் கொள்வனவு செய்வோருக்கு 25% கழிவு வழங்கப்படுகின்றது என்பதை மகிழ்ச்சியுடன் அறிவிக்கின்றோம்.

அத்துடன் பாலர் பாடசாலை,பாடசாலை, அலுவலக புத்தகங்கள், காகிதாதிகள், உபகரணங்கள், குழந்தைகளுக்கான பொருள்கள் (Baby Care Products) என்பனவற்றையும் குறைந்தவிலையில் தரமாகப் பெற்றுக் கொள்ள பின்வரும் விலாசத்துக்கு வருகை தரவும் அல்லது தொலைபேசி மூலமோ, மின்னஞ்சல் மூலமோ தொடர்பு கொள்ளவும்.

**674,ஆஸ்பத்திரி வீதி, (2ஆம் குறுக்குத்தெரு அருகில்) யாழ்ப்பாணம்.**
தொலைபேசி : 0776365737, 0783674345,
மின்னஞ்சல் : lifeword23@gmail.com



## யா/ கச்சாய் கண்ணகை அம்பாள் ஆலய வருடாந்த விசாகப் பொங்கல்

கச்சாய் கண்ணகை அம்பாள் ஆலய வருடாந்த பொங்கல் உற்சவம் எதிர்வரும் 13.06.2011 திங்கட்கிழமை நடைபெறவுள்ளது.

அம்பிகைஅடியார்களின்நலன் கருதி கொடிகாமம்,சாவகச் சேரியிலிருந்து போக்குவரத்து வசதிகள் செய்யப்பட்டுள்ள தாக ஆலய பரிபாலன சபையினர் அறிவித்துள்ளார்கள்.

பொ.செல்லப்பா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கொக்குவில் ம
# மகா கும்பா

### ஆலய பிரதம குருவின் ஆசிகள்

தென் கைலாயம் எனப்போற்றப்படும் ஈழ மணித் திருநாட்டின் வடபால் சென்னி என விளங்கும் யாழ்ப்பாணத்திலே சைவமும் தமிழும் சிறந்து விளங்கும் கொக்குவிலில் சிறப்புற்று விளங்கும் மஞ்சவனப்பதியிலே எழுந்தருளி அருளாட்சி புரியும் வள்ளி தேவசேனா சமேத முருகப் பெருமான் ஆலயம் புனர மைக்கப் பெற்று புதிதாக தெட்சணாமூர்த்தி ஆலயம் நிர்மாணிக்கப்பெற்று புதுவர்ணங்கள் தீட்டப்பெற்று நிகழும் மங்களகரமான கரவருடம் வைகாசித் திங்கள் 28 ஆம் நாள் ஞாயிற்றுக்கிழமை மகாகும்பாபிஷேகம் நடைபெற கைகூடியுள்ளது.

மனிதனாகப் பிறந்த ஒவ்வொருவரும் இறைவனை வழிபாடு செய்து வாழ்வதே வாழ்வாகும். மனித வாழ்வை உயர்நிலை அடையச் செய்வதும் இறைவழிபாடாகும். இறைவனை மையமாகக் கொண்டு நம் சமயத்தவர்கள் வாழ்விடம் எல்லாம் ஆலயம் அமைத்து வழிபாடு செய்து தானும் வாழ்ந்து மற்றவரையும் வாழ வைக்கும் மனநிலை கொண்டவர்கள். அவ்வகையில் இச்சா சக்தி கிரியா சக்தி, ஞானா சக்திகளை தன்னகத்தே கொண்டுறையும் முருகப் பெருமானுக்கும் ஏனைய பரிவார மூர்த்திகளுக்கும் புனராவர்த்தன பிரதிஷ்டா மகா கும்பாபிஷேகம் நடைபெறவுள்ளது.

இக்கும்பாபிஷேக நிகழ்வை தரிசிக்கும் மக்கள் எல்லோரும் தர்மம் உள்ளவர்களாக அமைதியாக வாழவும் கும்பாபிஷேகம் செய்யும் அடியவர்களும் கொக்குவில் வாழ் மக்களும் சீரும் சிறப்பும் பெற்று வாழ வள்ளி தேவசேனா சமேத முருகப்பெருமானின் பாதார விந்தங்களை வேண்டி ஆசி கூறி அமைகின்றேன்.

''மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்''

*ஈசான சிவாச்சாரியார் சிவாகம கிரியா சிரோன்மணி*
***சிவப்பிரம்மஸ்ரீ சொ.இ. விக்னேஸ்வர குருக்கள்***
*கும்பாபிஷேக பிரதம குருவும் தேவஸ்தான பிரதம குருவும்.*

### வாசலில் காலடி எடுத்து வைத்தாலே பக்திப் பரவசம் மிளிரும்



கொக்குவில் மஞ்சவனப்பதியில் வீற்றிருந்து அடியார்களுக்கு அருள் பாலித்துவரும் முருகப்பெருமானுக்கு இன்று மகா கும்பாபிஷேகம் இடம்பெறத் திருவருள் பாலித்துள்ளமை முருக அடியார்கள் பெற்றுள்ள பெரும் பேறே.

சமய வழியமைந்த நற்பண்புகளுடனும் நல்லொழுக்கத்துடனும் கூடிய எம் முன்னோரின் வாழ்க்கை நெறிக்கு எடுத்துக் காட்டாக விளங்குவன அவர்கள் அமைத்து வழிபாடியற்றி வந்த ஆலயங்களே. அவை பக்தியை உருவாக்கும் இடங்களாக மட்டுமன்றி எமது கலை, கலாசாரப் பண்பாடுகளைப் பேணி பாதுகாக்க உதவும் இடங்களாகவும் விளங்கி வந்துள்ளன.

ஈழத்தில் ஆங்காங்கே அமைந்துள்ள பல சைவ ஆலயங்கள் சைவ மக்களின் வாழ்க்கையை வளமிக்கதாகவும் அமைதி கொண்டதாகவும் ஆக்கி வருகின்றன.

அந்த வகையில் கொக்குவில் மஞ்சவனப்பதியில் அமைந்துள்ள முருகன் ஆலயமும் பழம் பெருமை வாய்ந்ததொன்று. வணங்கும் அடியார்களுக்கு வேண்டும் வரங்கள் ஈர்ந்தளிக்கும் முருகப்பெருமானின் கருணை தனிப்பெருமை வாய்ந்ததாகும். வாசலில் காலடி எடுத்து வைத்தாலே பக்திப் பரவசம் மிளிரும் மஞ்சவனப்பதியில் வீற்றிருந்து தன் அடியார்களுக்கெல்லாம் அருள் பாலித்துவரும் முருகப்பெருமானுக்கு இன்று இடம்பெறும் கும்பாபிஷேகத்தில் கலந்துகொண்டு அவனருள் வேண்டித் துதிக்க வாய்ப்புக் கிடைத்ததென்பது கிடைத்தற்கரிய பேறாகும். கும்பாபிஷேக விழாவில் நேரில் கலந்துகொண்டும் மனதால் துதித்தும் அவனருள் இறைஞ்சும் அடியார்களுக்கு முருகப்பெருமானின் அருட்கடாட்சம் கிட்டும் என்பதில் அசையா நம்பிக்கை எமக்குண்டு.

ஒரு கோயிலில் நடைபெறும் நித்திய, நைமித்திய கிரியைகளுள் மிக முக்கியமானது கும்பாபிஷேகக் கிரியையே என்பது சாத்திரங்கள் கூறும்செய்தி. அத்தகைய சிறப்புமிக்க மகா கும்பாபிஷேக விழாக் காணும் மஞ்சவனப்பதி முருகப்பெருமான் இன்று பற்பல வழிகளில் இன்னல்களையும் இடர்களையும் சந்தித்து வாழ்க்கையில் மன அமைதியிழந்து அல்லலுறும் தமிழ் மக்களுக்கு - தன் அடியார்களுக்கு கருணையீர்ந்து அவர்தம் துயர் களைந்து அருள்பாலிக்கவேண்டி எம்பெருமானின் பாதார விந்தங்களைப் பணிந்தேத்துகின்றேன்.

**ஈ.சரவணபவன், நாடாளுமன்ற உறுப்பினர், யாழ்.மாவட்டம்.**

வைகாசி மாதம் 29 ஆம் நாள் இன்று (12.06.2011) ஞாயிற்றுக்கிழமை காலை 7 மணி முதல் 8 மணி வரையுள்ள சுபநன்னாளில் அருள்மிகு வள்ளிதேவசேனா சமேத முருகப்பெருமானுக்கும் மற்றும் விநாயகர், சண்முகர், முத்துக் குமாரசாமி, நடேசர், சந்தானகோபாலர், மகாலட்சுமி, நவக்கிரக மூர்த்திகள், வைரவர், சண்டேஸ்வரர் மற்றும் புதிதாக அமைக்கப்பட்ட தட்சணாமூர்த்தி மற்றும் சமய குரவர் வரையான பரிவார மூர்த்திகளுக்கும் மகா கும்பாபிஷேகம் நடைபெறும்.

### பிரதேச செயலரின் வாழ்த்துச் செய்தி

சைவமும் தமிழும் தழைத்தோங்கும் ஈழமணித் திருநாட்டின் வடபால் கந்தபுராண கலாசாரத்தில் சிறப்புற்று விளங்கும் யாழ்ப்பாணத்தின் கொக்குவில் மஞ்சவனப்பதியில் எழுந்தருளியிருக்கும் அருள்மிகு ஸ்ரீ வள்ளி தேவசேனா சமேத சுப்பிரமணிய சுவாமிக்கு கரவருடம் வைகாசித் திங்கள் 29 ஆம் நாள் ஞாயிற்றுக்கிழமை (12.06.2011) இடம்பெறவுள்ள மஹா கும்பாபிஷேக விழாவினை காண்பதையிட்டு பெருமகிழ்ச்சியடைகின்றேன். நல்லூர் பிரதேச பிரிவில் உள்ள ஆலயங்களில் போற்றப்படக்கூடியதும், மிகவும் தொன்மை வாய்ந்ததுமான திருத்தலம் மஞ்சவனப்பதியாகும். இவ்வாலயத்தின் முருகன் அடியார்கள் இன்று உலகளாவிய ரீதியில் பரந்து வாழ்கிறார்கள்.

முருகப் பெருமானின் குடமுழுக்குக் காட்சி காண்பதற்கரிய காட்சியாகும். பூவுலகத்திலே புண்ணியம் செய்தவர்களுக்கே குடமுழுக்கு காணும் பாக்கியம் கிட்டும். கொக்குவில் மக்கள் இப்பெரும் சாந்தி விழாவைக் கண்டு பெரும்பேறு எய்த வேண்டுமென்ற உணர்வு கொண்டு பெருமுயற்சி செய்து இந்த மஹா கும்பாபிஷேகத்தினை நடத்தும் ஆலய பரிபாலன சபையினர் போற்றுதற்குரியவர்கள். மஹாகும்பாபிஷேகம் காணும் பாக்கியம்பெற்ற மக்கள் முருகப் பெருமானின் அருள்பெற்று வாழ்வில் பிணி நீங்கி சகல செல்வமும் பெற்று வாழ வாழ்த்து கிறேன்.

'இன்பமே சூழ்க எல்லோரும் வாழ்க'

*பா.செந்தில்நந்தனன், பிரதேச செயலர், நல்லூ*

**வருவாய் வந்தருள் தருவாய் வேலனே...! வள்ளி மணாளனே புள்ளி மயிலேறி...!!**

மாறாத கருணை எமக்கருள் கந்தா!
பாண், பணிஸ், கேக் வகைகள், மஸ்கற் போன்றவற்றை தரமாக பெற்றிட
**ஸ்ரீ முருகன் வெதுப்பகம்**
ஆடியபாதம் வீதி, கொக்குவில்.
தொ.பே: 0779352748

சேவற் கொடியோனே முருகா சரணம்!
சேவடி காப்பவனே முருகா சரணம்!!
**பராசக்தி அரைக்கும் ஆலை**
ஆடியபாதம் வீதி, கொக்குவில்.

சிங்கப்பூரிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட இலத்திரனியல் பொருள்களைப் பெற்றுக்கொள்ளலாம்.
இலத்திரனியல் பொருள்கள் சிறந்த முறையில் திருத்திக் கொடுக்கப்படும்
**JAYAM ELECTRONICS**
339, K.K.S.Road, Jaffna.
T.P: 0774041910, 021 4921950

பல டிசைன்களில் உங்கள் ஆபரணங்களைப் பெற்றுக்கொ
**மகாநதி ஜூவலறி**
72A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்


கோயில் தேவைக்கேற்ற சகல விதமான உடுபுடைவைகள், வேட்டி, சால்வை, றெடிமேட் ஆடைகளையும் ஒரே கூரையின் கீழ் பெற்றுக்கொள்ள
**வளர்மதி ரெக்ஸ்ரைல்ஸ்**
176, 258, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

தரமான அச்சுப் பதிப்புகளை மேற்கொள்ள நாடவேண்டிய இடம்
**பாரதி பதிப்பகம்**
இல.430, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

அனைத்து வகையான கடிகாரங்கள்,ரி.வி, இலத்திரனியல் பொருள்கள் விற்பனையும் அனுபவமுள்ள திருத்துனரும்
**நாதன் வாச் அன் றேடியோ**
62/34, ஸ்ரான்லி வீதி, (குறுக்குறோட்) யாழ்ப்பாணம்.

22 கரட் தங்க நகைகளை உத்தரவாதத்துடன் பெற்றுக்கொள்ள
**செல்வி நகையகம்**
ஸ்ரீ நதியா கட்டடத் தொகுதி
1/3, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 222 9441

டோகா, டுபாய் அலுமினியம் பிற்றிங்கில் அனுபவமுள்ளவர்களினால் சிறந்த முறையில் வடிவமைத்துக்கொடுக்கப்படும்
**சீலன் அலுமினியம் பிற்றிங்**
இல.54, கே.கே.எஸ்.வீதி, கொக்குவில் சந்தி.
தொ.பே: 0214902561, 0789119220.



கந்தா குமரா கதிர்வேலா...
கௌரி புத்ரா வடிவேலா...
கார்த்திகேயா கருணா சாகரா...
தீன சரண்யா வடிவேலா...

அனைத்து மக்களும் சாந்தி, சமாதானத்துடன் இன்பமாக வாழ வள்ளி தேவசேனாபதி மஞ்சவனப்பதி முருகப்பெருமானைப் பிரார்த்திக்கின்றோம்.

ஒலிபெருக்கி சாதனங்க
AHUJA
**கோபு**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மஞ்சவனப்பதி முருகன் ஆலயம்
# ாபிஷேகம் - 12.06.2011

## தர்மகர்த்தா சபை தலைவரின் ஆசியுரை

"கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்" என்ற ஆன்றோர் வாக்கிற்கமைய ஈழ மணித்திருநாட்டின் வளம் பல கொழிக்கும் யாழ் நகரின் கண்ணே சைவத்தையும் தமிழையும் கலாசார விழுமியங்களையும் போற்றி அறம் வளர்க்கும் அன்பு பேணும் பக்தி மேலோங்கும் நல்லறம் ஆற்றும் நல்லோர் வாழும் கொக்குவிலம் பதியின் மத்தியில் முத்தென வளை கோபுரத்துடன் மிளிரும் அருள்மிகு ஸ்ரீ வள்ளி தேவசேனா சமேத சுப்பிரமணிய சுவாமிகள் ஆலயம் இன்று புனருத்தாரணம் செய்யப் பெற்று புதிதாக தெட்சணாமூர்த்தி ஆலயம் அமைக்கப்பெற்று புது வர்ணங்களுடன் புதுப்பொலிவு பெற்று மகாகும்பாபிஷேக விழாவினை காண்கின்றது.

ஆலய வழிபாடுகளில் மிகவும் தலையாயது குடமுழுக்கு விழா. இவ்விழாவைக் காண்பது மக்களது கடமையாகும்.

*"மண்ணில் பிறந்தார் பெறும் பயன் மதி சூடும் அண்ணலை அடியார்தமை அமுது செய்வித்தல் கண்ணினால் அவர் நல்விழாப் பொலிவு கண்டார் நல்...."*

எனும் பாடல் மூலம் திருஞானசம்பந்தப் பெருமான் இவ்விழாவின் சிறப்பை கூறியுள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

இவ்விழாக் காட்சியைக் காணும் போது கண்கள் குளமாகி மனம் ஒரு வழிப்பட்டு இறைவனுடன் ஐக்கியமாகும் சக்தி ஏற்படுகிறது. காரணம் நாடிவரும் பக்தர்களின் துன்ப துயரங்களை குறைகளை தானே தாங்கி யாவர்க்கும் இன்பம் அளிக்கும் நல் ஆண்டவன் சந்நிதி. இது இவ்வாலயச் சுற்றாடலில் வசிக்கும் பாக்கியமும் ஆலயத்தை நிர்வகிக்கும் பொறுப்பும் எனக்கு கிடைத்தமை சுவாமிகளின் அருள்பாக்கியமே, இவ்வாலயம் மேலும் சிறப்புப் பெற்று எல்லா வளங்களுடன் மிளிரவும் கொக்குவில் பதிவாழ் சிறார்கள் மக்கள் சைவம் கமழும் உத்தமராய் வாழவும் சுவாமிகளின் ஆசிவேண்டி வாழத்துரையை நிறைவு செய்கின்றேன்.

"வாழ்க சைவம் வளர்க நல்லறம்"

கா.பாலசுப்பிரமணியம்
*தலைவர், தர்மகர்த்தா சபை.*

## அருள் நிழலில் அமைதியும் ஆனந்தமும் அடைந்தோர் பலர்

மண்ணில் நல்லவண்ணம் வாழ்வதற்கு கிடைத்த அரிய பிறவி மானிடப்பிறவியாகும். விறகில் தீயினனாகவும், பாலில் படுநெய் போலவும் மறைந்து நின்று அருள் பொழியும் சோதிமயமான இறைவனின் அருளை மானிடப்பிறவியெடுத்த ஆன்மாக்கள் ஆலயங்களில் பிரதிஷ்டை பண்ணியிருக்கும் இறை உருவின் மூலமாகப் பெற்றுக்கொள்கின்றனர்.

அத்தகைய பேரருளை வழங்கும் முருகப் பெருமானுக்கு குட்முழுக்குப் பெருவிழா இன்று நடைபெறுவதையிட்டு பெருமகிழ்வடைகிறோம். மஞ்சவனப்பதியானின் அருள்நிழலில் அமைதியும் ஆனந்தமும் அடைந்தோர் பலர். இந்த ஆலயத்தில் காலத்துக்குக் காலம் பல திருப்பணி வேலைகள் நிறைவுபெற்று மகாகும்பாபிஷேகம் இடம்பெற்றாலும் தீர்த்தவாரி உட்பிரகார மணிமண்டபம் உட்பிரகார நிலத்துக்கு றெறாசோ பதித்தல், அடியவர்களின் நீண்டநாள் பேரவாவால் தெட்சணாமூர்த்திக்கு ஆலயம் அமைத்தல், சந்தான கோபால மூர்த்தியின் எழுந்தருளி உருவம் ஐம்பொன்னால் அமைத்தல் போன்ற திருப்பணிகளுடன் ஆலயம் புதுப்பொலிவுடன் மிளிர்கின்ற முழு நிறைவான மகாகும்பாபிஷேகம் இன்று நடைபெறுகின்ற தென்றால் மிகையாகாது. இந்த ஆலயத்தில் பிரதம குருவாக இருக்கும் சிவப்பிரம்மஸ்ரீ சொ.இ.விக்கினேஸ்வரக் குருக்கள் அவர்களே பிரதம குருவாக இருந்து இந்த அரிய நிகழ்வை நடத்துவதும் குறிப்பிடத்தக்கதாகும்.

இந்த ஆலயம் பாலஸ்தாபனம் செய்யப்பட்டு குறுகிய காலத்தில் மகாகும்பாபிஷேகம் செய்யப்படுவது நாம் எதிர்பாராத ஒன்றாகும். அடியவர்களின் இல்லம் தோறும் நாம் சென்றபோது அவர்களின் மனம் கோணாது மகிழ்வுடன் எமக்கு உதவியது எம்மை மேலும் உற்சாகப்படுத்தியது. தாம் மட்டுமல்லாது புலம்பெயர்ந்து வாழும் தமது உறவுகள் மூலமும் எமக்கு உதவி கிடைக்க ஆவன செய்தார்கள் என்பதையும் குறிப்பிட்டேயாகவேண்டும். இவ்வருட் பணியில் பங்கு கொண்டோர், தரிசித்தோர், அடியவர்கள் யாவரும் குருவருளும் திருவருளும் பெற்றுச் சிறக்கவும் மஞ்சவனப்பதியானின் திருவடித் தாமரைகளை வணங்கி அமைகின்றேன்.

*இ. இராசலிங்கம், செயலாளர்.*

## மகாகும்பாபிஷேகம் கண்டு நற்கதி அடைவோமாக

*உருவாய் அருவாய் உளதாய் இலதாய்*
*மருவாய் மலராய் மணியாய் ஒளியாய்(க்)*
*கருவாய் உயிராய்(க்) கதியாய் விதியாய்(க்)*
*குருவாய் வருவாய் அருள்வாய் குகனே*

உலகம் உய்வதற்குச் சோதிப்பிழம்பென நின்ற பரம்பொருள் கருணையே வடிவமாக அமர்ந்து அருள் வழங்கும் மஞ்சவனப்பதி ஆலய மகா கும்பாபிஷேகம் இன்று (12.06.2011) நடைபெறுவதும் அதனை அடியவர்களாகிய நாம் தரிசிப்பதும் பூர்வ புண்ணியமே.

சுத்த சைதன்னியமாக விளங்கும் இறைவனை நாம் பன்னி ஆதரித்து ஏத்தியும் பாடியும் வணங்குவ்தற்காக அமைக்கப்பெற்றனவே ஆலயங்கள். இவ்வாலயங்கள் எம் முன்னோர்களினால் ஆரம்பிக்கப்பெற்று காலக்கிரமத்தில் ஆகமவிதிகளுக்கமையப் புனருத்தாரணம் செய்யப்பெற்று நித்திய நைமித்தியப் பூசைகள் மகோற்சவங்கள் நடைபெற்றும் குறித்த காலத்தில் மகாகும்பாபிஷேகம் எனும் பெருஞ்சாந்தி செய்யப்படுவதும் ஆகம முறையாகும். ஆலயத்தில் நடைபெறும் கிரியைகள் யாவும் இறைவனை அங்கு சாந்தித்தியமாக எழுந்தருளி அருள்பாலிக்கச் செய்யும் முகமாகவே மேற்கொள்ளப் படுவன.

நித்திய நைமித்தியக் கிரியைகள், மகோற்சவம் என்பவற்றில் ஏற்படும் குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்காகவும், ஆலய புனருத்தாரணங்கள் செய்யப் பெற்ற பின்பும் நடைபெறுவதே மகாகும்பாபிஷேகம்.

ஓர் ஆலயத்தில் குறைந்தது பன்னிரண்டாண்டுக்கு ஒருமுறையாவது மகாகும்பாபிஷேகம் நடைபெறவேண்டும் என்பது ஆகமவிதி.

இவ்வகையில் மஞ்சவனப்பதி முருகன் ஆலயம் இராஜகோபுரம், மணி மண்டபம், உள் சுற்றுப் பிரகார விதானத்தின் முன்பகுதி கொங்கிறீட் பிளேற்போடல், மணிக்கோபுரங்கள், தீர்த்தத் கேணி ஆகியன அமைக்கப்பெற்றபின் 2002.06.13 ஆம் திகதியன்று புனராவர்த்தன மகாகும்பாபிஷேகம் வெகு சிறப்பாக நடந்தேறியது.

தர்மகர்த்தா சபையினரும், திருப்பணிச் சபையினரும் அடியவர்களும் ஆலயத்தில் எஞ்சிய உட்பிரகார விதான வேலையைப் பூர்த்தி செய்யவும், ஆலய மண்டபங்களுக்கும் உட்பிரகாரத் தளத்திற்கும் மாபிள் பதித்து ஆலயத்தைப் புதுப் பொலிவுடன் காணவேண்டும் என கலியுக வரத னாம் கந்தப் பெருமானை அல்லும் பகலும் தொழுது அருள்பாலிக்குமாறு வேண்டிவந்தனர். வேண்டினர் வேண்டியாங்கு அருள் கிடைக் கப்பெற்றது.

இவை எல்லாவற்றிலும் மேலாக ஆலயத்தில் மூலஸ்தானத் தென்புறத்தில் புதிதாகத் தெட்சணாமூர்த்திக்குக் கோட்டம் அமைத்து தெட்சணாமூர்த்தி நூதனமாக (புதிதாக) பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளார். அத்துடன் சந்தான கோபால மூர்த்தியின் எழுந்தருளியுருவமும் ஐம்பொன்னால் அமைத்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

மூர்த்தி, தலம், தீர்த்தம் யாவும் ஒருங்கே மேன்மையுற்று விளங்கும் மஞ்சவனப்பதி முருகன் ஆலயம் பல நூற்றாண்டு பழைமை வாய்ந்தது.

1938 ஆம் ஆண்டிலேயே சைவப் பெரியார் க.வே. சண்முகப்பிள்ளையவர்கள் உபயமாக சித்திரத்தேர் செய்யப்பெற்று எம்பெருமான் அத்தேரில் அமர்ந்து அருள் வழங்க தேரோட்டம் நிகழ்ந்தது. அடியவர்கள் உபயமாக 1948 ஆம் ஆண்டிலேயே இராஜகோபுர அத்திவாரம் இடப்பெற்று வியாழ வரை கட்டப்பெற்றது. நித்திய நைமித்திய பூசைகள், மகோற்சவம் யாவும் எதுவித குறைவுகளும் ஏற்படாமல் ஆகம விதிப்படி இயன்றளவு முருகன் அடியார்களால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அருள் மொழியரசு திருமுருக கிருபானந்தவாரியார் முதல் சைவப் பேரறிஞர் பலர் இவ்வாலயத்தில் பல்லாண்டுகளாகச் சைவப் பிரசங்கங்களை ஆற்றிச் சென்றுள்ளனர்.

அத்தகையோரின் உள்ளங்களிலெல்லாம் முருகன் அருளால் நிறைந்து மகிழ்ந்து இன்புற 2011.06.12 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 7.00 மணி முதல் 8.00 மணிவரையில் நடைபெறும் மகாகும்பாபிஷேக நிகழ்வுகள் யாவையும் முருகன் அருளால் பூரணமாக வழிப்படுத்துவதாக! யாவரும் முருகன் அருள்மழையில் அமிழ்ந்தி இன்புறுவார்களாக! மகா அபிடேகத் தீர்த்தத்தினை உட்கொண்டு வல்வினை நீங்குவார்களாக! முழுமுதற் பொருளாம் முருகப் பெருமான் திருவருளால் மூலநோய் தீர்ந்து முத்தியின்பமாகிய பேரின்பப் பெருவாழ்வினைப் பெறுவார்களாக!

இன்பமே சூழ்க! எல்லோரும் வாழ்க!

*சைவப்புலவர் சித்தாந்த பண்டிதர்,*
மு. திருஞானசம்பந்தபிள்ளை,
*தேவஸ்தான சமய ஆலோசகர்.*

## கும்பாபிஷேகம் சிறப்புறப் பிரார்த்திப்போரும் அனுசரணையாளர்களும்

ற்றுக்கொள்ள
றி
ாணம்

புத்தம் புதிய டிசைன்களில் பாதணிகளை பெற்றிட
**சந்தியா சூ பலஸ்**
கே.கே.எஸ்.வீதி, கொக்குவில் சந்தி.

உள்ளூர், வெளியூர் அழைப்புக்கள் இன்நெற் வசதி,
போட்டோக்கொப்பி போன்றவற்றை பெற்றிட
**கணேசன் கொமினிகேசன்**
கொக்குவில் சந்தி. 021 222 2585

அலுமினியம் பிற்றிங்கில் அனுபவமுள்ளவர்களினால்
சிறந்த முறையில்வடிவமைத்துக்கொடுக்கப்படும்
**சிறி அபிநயா அலுமினியம் பிற்றிங் சென்ரர்**
கொக்குவில் சந்தி.

சைவ, அசைவ உணவு வகைகள்
ஓடருக்கு பெற்றுக்கொள்ளலாம்
**ஆதித்யா உணவகம்**
73, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.
(மக்கள் வங்கி எதிரில்)
T.P: 0776598648

**சாரங்கா நகைமாடம்**
157, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
சிவா நகைமாடம்
இல.14, கண்டி வீதி, நவீன சந்தை, சாவகச்சேரி.
*சாரங்கா ஜூவல்லறி*
இல.55, செட்டித்தெரு, கொழும்பு - 11,

Local Call, Net IDD Calls, Net Browsing,
Photo copy, DVD Writting,
DVD Movies, Mobile Phone Sales & Parts.
**PSB Communication**
337 (555), K.K.S. Road, Jaffna.
T.P: 021 222 7477, Fax: 021 222 4501

புள்ளி மயிலோனே முருகா சரணம்!
வள்ளி மணாளனே முருகா சரணம்!!
**ரமணன்**
*கட்டடப்பொருள் விற்பனை நிலையம்*
525, 528, கே.கே.எஸ்.வீதி,
யாழ்ப்பாணம். 021 222 9296

*இலத்திரனியல் சாதனங்களின் உதிரிப்பாகங்கள்,*
*மற்றும் மின் பொருள்களைப் பெற்றிட*
**செந்தூரன்**
**எலக்ரிக்கல் அன் ஹாட்வெயார்**
கே.கே.எஸ்.வீதி, கொக்குவில் சந்தி.

*யாழ்.மண்ணிலே ரீவிகளின் சாம்ராஜ்யம்*
**மதன்**
**ரீவி விற்பனை நிலையம்**
121, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

*சுவர் மணிக்கூடுகள், கைக்கடிகாரங்கள்,*
*வீட்டுப் பாவனைப் பொருள்கள்*
*அனைத்தையும் பெற்றுக்கொள்ள*
**கரன் வோர்ச் அன் ரேடியோ**
திருத்துநரும் விற்பனையாளரும்
இல.91, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

Browsing, Photo copy, Fax, Net call, Vedio Call,
Computer Typing மற்றும் பல சேவைகள்
**ஹரிணி**
**இன்டநெற் கபே**
கே.கே.எஸ்.வீதி கொக்குவில். 021 7451890

ஙங்களும் அதற்குரிய உதிரிப் பாகங்களும் எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.
**புரம் சவுண்ட்ஸ்**
இல.38, மஞ்சவனப்பதி வீதி,
கொக்குவில் மேற்கு,
கொக்குவில்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# NDB வங்கியின் வேலை வாய்ப்புக்கான தகைமை தேர்வுகள்

## உடனடி நேர்முகப் பரீட்சை

2011 ஜூன் 18ம் திகதி வவுனியா நகர சபை மண்டபத்தில் காலை 9 மணியிலிருந்து நடைபெறும் எமது ஆள்சேர்க்கும் செயற்பாட்டில் நீங்களும் கலந்துகொள்ள உங்கள் சுயவிபரக்கோவை மற்றும் தேசிய அடையாள அட்டையுடன் வாருங்கள்.

NDB வங்கியானது தனது வட மாகாண வலையமைப்பை மென்மேலும் விஸ்தரிப்பதனால், அதற்கேற்ப கிளைகளுக்கான புதிய ஊழியர்களை தெரிவு செய்யவுள்ளது. பின்வரும் பதவிகளுக்கு உரிய நபர்கள் பின்வருமாறு தெரிவு செய்யப்படுவர்:

### பயிற்சி உதவி வங்கியாளர்

**தொழில்**

பயிற்சி உதவி வங்கியாளர்களாக இணைந்து கொள்ளும் உங்களுக்கு வங்கித் துறையில் இது ஓர் ஆரம்பமாக அமையும். எமது கிளைகளில் காணப்படும் நவீன வங்கிச் சூழலில், ஆரம்பத்தில் வங்கிப்பண கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் வாடிக்கையாளர் சேவை தொடர்பாக பயிற்சி வழங்கப்படும். அத்துடன் ஏனைய கிளை வங்கிச் செயற்பாடுகள் தொடர்பாகவும் பயிற்சியளிக்கப்படும். இதன் மூலம் நீங்கள் NDB வங்கியின் தொழில்ரீதியான கிளைக் குழுவின் ஓர் அங்கத்தவராகலாம். உங்களைப் பதவியில் நியமித்த உடன், இலங்கையின் வங்கித் துறையில் முன்னோடியான இலங்கை வங்கியாளர் நிலையத்தால் (IBSL) கிளை வங்கிச் செயற்பாடுகள் தொடர்பாக பயிற்சியளிக்கப்படும். அதுமட்டுமல்லாது வங்கியால் நியமிக்கப்பட்ட பிரசித்திபெற்ற பயிற்சி நிலையத்தின் மூலம் தொழில் ரீதியான ஆங்கில மொழி அறிவினைப் பெற்றுக்கொள்ளும் வாய்ப்பும் உண்டு. IBSL மூலம் வங்கித்தொழில் ரீதியான பயிற்சியினை வடமாகாணத்திற்கு வழங்கும் முதல் வங்கி NDB வங்கியே என்றால் அது மிகையாகாது.

**விண்ணப்பதாரர்**

- க.பொ.த. உ/தரத்தில் முதல் அமர்வில் 3 பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.
- க.பொ.த. சா/தரத்தில் முதல் அமர்வில் கணிதம் மற்றும் ஆங்கிலத்திற்கு ஆகக்குறைந்தது 'B' தரச்சித்தியினைப் பெற்றிருத்தல் வேண்டும்.
- 22 வயதிற்கு குறைந்தவராய் இருத்தல் வேண்டும்.
- மேற்கூறப்பட்ட தகைமைகள் காணப்படின் உங்களுக்கு, ஆங்கில மொழி மற்றும் அறிவுச் சோதனை (IQ) தொடர்பான பரீட்சை காலை 10 - 12 மணிவரை நடைபெறும். இது கணனிமயப்படுத்தப்பட்ட பரீட்சையாகக் காணப்படுவதால், பெறுபேறுகள் உடனடியாக வெளியிடப்படும்.
- பரீட்சையில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்ற விண்ணப்பதாரருக்கு அதன் பின்னர் பி.ப. 1 மணியிலிருந்து நேர்முகப்பரீட்சைகள் நடைபெறும்.

### வங்கிக் கிளை உதவியாளர்

**தொழில்**

நீங்களே சகல கொடுக்கல் வாங்கல் செயல் முறைகள் மற்றும் வாடிக்கையாளர் சேவைச் செயற்பாடுகளுக்கும் பொறுப்பானவர். வியாபார அபிவிருத்திச் செயற்பாடுகளிலும் உங்கள் பங்களிப்பு எதிர்பார்க்கப்படும்.

**விண்ணப்பதாரர்**

- 30 வயதிற்கு குறைந்தவராய் இருத்தல் வேண்டும்.
- வங்கியியலில் பகுதிச் சித்தி இருத்தல் வேண்டும்.
- வர்த்தக வங்கிக் கிளையொன்றில் 2 - 4 வருட வங்கி ரீதியான அனுபவம் கொண்டிருத்தல் வேண்டும்.
- அடகுச் சேவை தொடர்பான அனுபவம் மேலதிக தகைமையாகக் கருதப்படும்.
- குழுவுடன் பணியாற்றக்கூடியவராயும், சிறந்த தொடர்பாடல் திறமைகளையும் கொண்டிருத்தல் வேண்டும்.
- காலை 9 - நண்பகல் 12 வரை நடைபெறும் நேர்முகப்பரீட்சைக்கு தயாராக இருத்தல் வேண்டும்.

### வியாபார அபிவிருத்தி உதவியாளர்

**தொழில்**

பிரத்தியேகக் கடன்கள், குத்தகை, நடைமுறைக் கணக்குகள் மற்றும் நிலையான வைப்புக் கணக்குகள் போன்ற சில்லறை வங்கிப் பொருட்களைச் சந்தைப்படுத்துவதே உங்கள் பொறுப்பாகும். இத்தகைய சேவைகளினால் பலனைப் பெற்றுக்கொள்ளும் வாடிக்கையாளர்களை வங்கிக்கு அறிமுகப்படுத்தும் கடமையும் உங்களதே. வாடிக்கையாளரைச் சந்தித்தல், வலையமைப்பை விருத்தி செய்தல் மற்றும் உங்கள் இலக்குகளை அடைதல் போன்றனவும் உங்கள் கடமைகளாகும். உங்கள் இலக்குகளை அடையும்பொழுது அதற்கு சன்மானமாக பணரீதியான மேலதிகக் கொடுப்பனவும் வழங்கப்படும். இவற்றுக்கும் மேலாக NDB குடும்பத்திற்கு பெறுமதி சேர்க்கும் ஓர் அங்கத்தவராகவும் முடியும்.

**விண்ணப்பதாரர்**

- க.பொ.த. உ/தரத்தில் முதல் அமர்வில் 3 பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.
- 25 வயதிற்கு குறைந்தவராய் இருத்தல் வேண்டும்.
- சிறந்த தொடர்பாடல் திறமைகள் மற்றும் தனிநபருக்கான திறமைகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.
- திறமை மற்றும் துடிப்பு மிக்கவராகக் காணப்படுவதோடு, பயணங்கள் உள்ளடங்கிய வெளிவேலைகளில் ஆர்வம் கொண்டவராய் இருத்தல் வேண்டும்.
- தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரர்கள் ஒப்பந்த அடிப்படையிலே நியமிக்கப்படுவர். அத்துடன் அவர்களுடைய செயற்திறனின் அடிப்படையில் பின்னர் வங்கியின் ஏனைய செயற்பாடுகள் தொடர்பாகவும் கருத்தில் கொள்ளப்படுவர்.
- மேற்கூறப்படும் தகுதிகள் காணப்படின், பி.ப. 1 - பி.ப. 3.15 வரை நடைபெறும் நேர்முகப்பரீட்சைக்கு தயாராக இருத்தல் வேண்டும்.

விண்ணப்பதாரரின் குடும்பப் பெயர் எழுத்து
A-H எனின் பி.ப. 1 - பி.ப. 1.45
I-P எனின் பி.ப. 1.45 - பி.ப. 2.30
Q-Z எனின் பி.ப. 2.30 - பி.ப. 3.15 வரை
இவ்வொழுங்கிற்கேற்ப நேர்முகப்பரீட்சைகள் நடைபெறும்.

கிளை முகாமையாளர்கள், உதவிக் கிளை முகாமையாளர்கள் மற்றும் கிளைக் கடன் அதிகாரிகளின் பதவிகளுக்கும் வெற்றிடம் உண்டு. அவர்கள் பின்வருமாறு தெரிவுசெய்யப்படுவர்:

கீழ்வரும் பதவிகளுக்கு உரிய தகைமைகள் காணப்படின், உங்கள் சுயவிபரக் கோவையை hr@ndbbank.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்புங்கள் அல்லது உப தலைவர், மனிதவள பிரிவு, நஷனல் டிவலப்மென்ட் பாங்க் பிஎல்சி, 40, நவம் மாவத்தை, கொழும்பு 02 என்ற முகவரிக்கு இவ் விளம்பரம் வெளியாகி 10 நாட்களுக்குள் அனுப்பி வையுங்கள். உங்கள் விண்ணப்பங்கள் மிகவும் நம்பகமாக பராமரிக்கப்படுவதுடன், எதிர்காலத்தில் நேர்முகப் பரிட்சைக்கு தெரிவு செய்யப்பட்டவர்களோடு மட்டுமே தொடர்பு ஏற்படுத்தப்படும்.

### கிளை முகாமையாளர்கள்

**தொழில்**

சில்லறை மற்றும் சிறிய, நடுத்தரளவு வியாபார வங்கி நடவடிக்கைகள் பற்றிய பூரண அறிவைக் கொண்டிருப்பதுடன், கடன் தொடர்பான அறிவும் காணப்படல் வேண்டும். பொருள் விற்பனை, இலாபம் மற்றும் வாடிக்கையாளர் தொடர்பு போன்றவற்றிற்கு பொறுப்பாய் இருத்தல் வேண்டும். அத்துடன் கிளைச் செயற்பாடுகள் மற்றும் ஊழியர் தொடர்பான நடவடிக்கைகளும் உங்களது பொறுப்பே.

**விண்ணப்பதாரர்**

- கிளை வங்கிச் செயற்பாடுகளில் 8 வருட அனுபவமும், அதில் 3 வருடங்கள் முகாமையாளராக பணியாற்றிய அனுபவமும் அவசியம்.
- வங்கியியலில் முழுத் தகைமை அல்லது பகுதிச் சித்தி கொண்டிருத்தல் வேண்டும். முழுத் தகைமை இல்லாவிடினும் ஆகக்குறைந்தது வங்கி தொடர்பாக 10 வருட அனுபவம் எதிர்பார்க்கப்படுகின்றது.
- குழுவினை கட்டியெழுப்பும் திறனும், சிறந்த தொடர்பாடல் திறமைகளையும் கொண்டிருத்தல் வேண்டும்.
- எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் வங்கியை பிரநிதிப்படுத்துபவராக செயற்படல் வேண்டும்.

### உதவிக் கிளை முகாமையாளர்கள்

**தொழில்**

கிளைச் செயற்பாடுகளை மேற்பார்வை செய்தலும் வங்கிச் செயல்முறைகளுக்கு சார்பாய் நடத்தலும் வேண்டும். வங்கியில் காணப்படும் பல்வேறு சேவைகளை அறிமுகப்படுத்தி அவற்றை விற்பனை செய்வதன் மூலம் கிளை இலக்குகளை அடைவதற்கான பொறுப்பும் உங்களுடையதே. கிளை முகாமையாளர் இல்லாதவிடத்து கிளைச் செயற்பாடுகளுக்கு தலைமை தாங்குதல் வேண்டும்.

**விண்ணப்பதாரர்**

- மேற்பார்வை பணி மற்றம் வங்கிச் செயற்பாடுகளில் 6 வருட அனுபவம் கொண்டிருத்தல் வேண்டும்.
- ஆகக்குறைந்தது வங்கியியலில் பகுதிச் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.
- வாடிக்கையாளரின் பிரச்சினைகளை கையாளக்கூடியவராய் இருத்தல் வேண்டும்.
- நாளாந்த வங்கிச் செயற்பாடுகள் குறித்தும், வங்கிக் கொள்கைகள் மற்றும் ஏனைய சட்டரீதியான விதிமுறைகள் பற்றியும் அனுபவம் காணப்படல் வேண்டும்.

### கிளை கடன் அதிகாரிகள்

**தொழில்**

கடன் மதிப்பீடு மற்றும் புதிய வாடிக்கையாளர்களுக்கு சந்தைப்படுத்தல் என்பன உங்கள் பொறுப்பாகும். நிதியறிக்கைகளை ஆராய்தல் மற்றும் அவற்றை சரிபார்த்தலும் வேண்டும். அத்துடன் வாடிக்கையாளரது கடன் தேவைகளுக்கு தீர்வுகள் வழங்குவதும் உங்கள் பொறுப்பாகும்.

**விண்ணப்பதாரர்**

- வங்கி தொடர்பான 5 வருட அனுபவத்தில் கடன் தொடர்பாக ஆகக்குறைந்தது 4 வருட அனுபவத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.
- வங்கியியல், நிதி, வியாபாரம் அல்லது வர்த்தகம் தொடர்பான தகைமை கொண்டிருத்தல் வேண்டும்.
- அறிக்கையிடல் தொடர்பான எழுத்துத் திறன் காணப்படல் வேண்டும்.
- வாடிக்கையாளர்களைச் சிறந்த முறையில் கையாளுபவராக இருத்தல் வேண்டும்.

www.ndbbank.com ஏ அ A

வாழ்க்கையை நிதமும் மாற்றும்


NDB வங்கி

PHOENIX O&M

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
ஓம் கணபதி துணை

# ...ளையார் கோயில் புனருத்தாரண அஷ்டபந்தன நவகுண்ட பட்ஷ
# ...ப்பு மலர் - (12.06.2011) ஞாயிற்றுக்கிழமை



## விக்ன விநாயகனைப் பணிவோம்



எங்கும் நீக்கமற நிறைந்திருக்கும் இறை சக்தியை உருவத்திருமேனியிலே ஆவாஹணம் செய்து சூரிய சந்திரர் உள்ளவரை வியாபகமாய் இருந்து அருள் செய்ய வேண்டுமென விண்ணப்பித்துத் திருக்குடம் திருமஞ்சன மாட்டி வேண்டுவதே மஹா கும்பாபிஷேகமாகும்.

சைவமும் தமிழும் கலந்து கமழும் சமயாசார சீலர்கள் வாழும் நீர்வேலி பதியிலே அருளாட்சி புரிகின்ற அருள் மிகு அரசசேகரிப் பிள்ளையார் கோயில் புனருத்தாரண அஷ்டபந்தன நவகுண்ட பட்ஷ மகா கும்பாபிஷேகம் சிறப்புற நிகழ்கின்றது. புனர்நிர்மாணம் செய்யப் பெற்று அவிசொரிந்து ஆகுதி நல்கி வேத திருமுறை கோசங்கள் மங்கள ஒலி முழங்க திருக்குட முழுக்கு பெருஞ்சாந்தி விழா நடைபெறுகிறது.

பழைமையும் பெருமையும் வாய்ந்த இந்த ஆலயத்தில் நடைபெறும் பெருவிழா ஆலயத்துக்கும் ஊருக்கும் மக்களுக்கும் பெருமையைத் தருவதாகும். மனிதப் பிறவியை மாண்புறச் செய்வது ஆலய வழிபாடாகும். இதனைச் செய்வதன் மூலம் இறையின் பெரும் பயனை அனுபவிக்கலாம். இப்பயனை ஊராரும் மற்றும் யாவரும் கண்டு வணங்கிப் பயன் பெற இறை அருளை வேண்டிப் பிரார்த்திக்கின்றேன். அனைவருக்கும் அஷ்ட ஐஸ்வர்யங்களும், ஆரோக்கிய வாழ்வும், நீண்ட ஆயுளும் சித்திக்க விநாயகனைப் பிரார்த்திக்கின்றேன்.

துரைஎங்கரசு
கல்விப் பணிப்பாளர், கல்விக்கோட்டம், சங்கானை.

## வாழ்த்துரை

நீர்வேலியூரின் நாயகமாக எழுந்தருளி அருள் புரியும் அரசகேசரிப் பெருமானுக்கு இன்று கும்பாபிஷேகம் நடக்கிறது. பல ஊர்களிலும் பிள்ளையாருக்கு கோயில்களைப் பார்க்கலாம். சிவபெருமானுக்கும் கோயில்கள் உண்டு. ஆனால், நமது ஆலயத்தில் பிள்ளையாரும் சிவபெருமானும் சேர்ந்ததாக, இரு கோயில் இணைந்து ஒரு கோயிலாக இருக்கப் பார்க்கலாம்.

நமது முன்னோர்களான இராமஸ்வாமிக் குருக்கள் (அப்பாஸ்சுவாமி குருக்கள்), கார்த்திகேச ஐயர், சாம்பசதாசிவக் குருக்கள் வழியில் நாமும் இப்பெருமானைப் பூஜிக்கிற பேறு பெற்றிருக்கிறோம்.

எம்மை ரக்ஷித்துக்கொண்டிருக்கிற அரசகேசரி கணபதி, பாலாம்பிகை சமேத வைத்தீஸ்வர சுவாமி திருவடிகளைப் பணிந்து இந்தக் கும்பாபிஷேக விழாவில் எல்லோரும் பங்கேற்று இக, பர சுகம் பெற வேண்டுகிறோம்.

*'வக்ர துண்ட மஹாகாய சூர்ய கோபீ ஸமப்பிரப*
*நிர்விக்னம் குருமே தேவ ஸர்வ கார்யேஸு ஸர்வதா'*

சிவஸ்ரீ சோ.சிவஜெயக்குருக்கள் (ஆலய சிவாச்சார்யார்).

## மண்ணினில் நல்ல வழி காட்டு

கண்ணினிக்கக் காட்சி தருஞ்செம்பாட் டுப்பிள்ளை
மண்ணினிக்கக் கும்பவிழாக் காண்கின்றார்- எண்ணமெலாம்
நின்னை நிறைத் தோம்நின தன்பே பெரிதென்போம்
மண்ணினின் நல்ல வழிகாட்டு

நீர்க்குமிழி யொத்த நிலையில்லா வாழ்க்கையில்
சீர் குவித்த செல்வங்கள் பெற்றிடுவோம்- பார்மேல்
அரச கேசரியப் பன்துணை பெற்றால்
வரமெல்லாம் நன்றாகும் காண்

ஆண்டு பலவாக அல்லலின்றி வாழ்வதற்கும்
நீண்டநற் சைவத் தழைப்பிற்கும் - யாண்டும்
திருமுறையை ஓதித் தீந்தமிழில் வாழ்த்தப்
பெருகுமவன் நல்லருள்தான்.

'சிவத்தமிழ்ச் சொல்லழகர்' ச.லலீசன், விரிவுரையாளர், கோப்பாய் ஆசிரிய கலாசாலை.

## இறை சக்தி பரவட்டும்



"விநாயகனே வினை தீர்ப்பவனே"

மஹாகும்பாபிஷேகமென்பது ஆலயத்தின் சக்தியை புதுப்பிக்க செய்யப்படும் ஒரு கிரிகை எனப் பொருள்படும். அதாவது தற்போதைய சொல்லில் கூறுவதானால் பற்றி ரீசார்ஜ் செய்வதைப்போன்றது.

அந்த வகையில் 12 வருடங்களுக்கு ஒருமுறையேனும் இவ்விழாவை முன்னெடுக்க வேண்டும் என்பது பெரியோர்களின் வாக்கு.

அந்த வாக்கை பின்பற்றி நீர்வேலி வாழ் மக்கள் எம்பெருமானின் பெரிய திருப்பணிகளை மிக இலகுவாக நிறைவேற்றி இந்த மாபெரும் புண்ணியச் செயலை நிறைவேற்றி யுள்ள இந்நன்னாளில் சகல மக்களுக்கும் நிம்மதி யான சகல யோக சுப வாழ்வு கிடைக்க எல்லாம் வல்ல அரசகேசரியானை நெஞ்சில் இருத்தி இறஞ்சுவோமாக.

க.கிருபாகரன், கும்பாபிஷேகக் குழுத் தலைவர்.

## செயலாளரின் வாழ்த்து



"வேழமுகத்து விநாயகனை தொழ வாழ்வு மிகுந்து வரும். எல்லாம் வல்ல நீர்வேலி அரசகேசரிப் பெருமானுக்கு 16 வருடங்களுக்கு பின்பு நடைபெறும் மஹாகும்பாஷேகப் பெருவிழா விக்ன விநாயகனின் பெரும் அற்புதமெனலாம். ஏனெனில் இவ்விழாவை எடுக்க வேண்டுமென்று தீர்மானம் செய்து மிகக்குறுகிய காலத்தில் இப்பெரும் புண்ணியச் செயல் இன்று நிறைவேறியுள்ளது. அந்த வகையில் நீர்வேலி வாழ் மக்கள் அருள் விநாயகரின் கடைக்கண்பட்டு துன்பதுயரங்களில் இருந்து விடுபட்டு பேரானந்தப் பெருவாழ்வு கிடைக்க இப் பெரு நன்னாளில் ஓர் அடியவனாய் இருந்து பிரார்த்திக்கிறேன்.

ஆலய சேவையில்,
ச.சந்திரகூடி, பரிபாலன சபைச் செயலாளர்.

## தொண்டர் சபை வாழ்த்து



"அரசகேசரியான் கழல் பணிந்தால் வாழ்வு சிறக்கும்" வலி.கிழக்கின் நீர்வளம் நிறைந்ததும் செல்வச் செழிப்பு மிக்கதாயும் கல்வியாளர்களையும் ஒருங்கே கொண்ட நீர்வேலி வாழ் மக்கள் அரசகேசரியானுக்கு மாபெரும் திருக்குட முழுக்கு விழாவினைப் பக்திப் பரவசத்தோடு செய்யும் இன்றைய நன்னாள் அவர்களின் வாழ்வில் ஒளியேற்றும் திருநாளாகும். இந்தப் பெரும் புண்ணியச் செயலில் பிரதேசத்தின் ஒவ்வொரு குடிமகனும் பாலகர்கள் தொடக்கம் முதியவர்கள் வரை தன்னாலான ஒரு சிறு உதவியையேனும் புரிந்துள்ளமை அரசசேகரியானின் திருவருளேயாகும். குறிப்பாக ஆலய இளந்தொண்டர்கள் பாலஸ்தாபன நிகழ்வு ஆரம்பமானது தொடக்கம் இன்றைய திரு நாள் வரை பசி மறந்து கண்துஞ்சாது பக்தி மேலோங்க இந்த அரிய பெரு நிகழ்வை இரவு, பகல் பாராது தொழிற்பட்டு தாமும் ஒரு பெரும் பங்களிப்பை வழங்கிய பெரும் நிறைவோடு உற்ற வேளையில் எல்லா ஜீவ ராசிகளுக்கும் விநாயகரின் அனுக்கிரகம் கிடைக்கப் பிரார்த்திப்போமாக.

தொண்டர் சபை சார்பாக ந.ஜெயகிருஷ்ணன்

## பொருளாளரின் வாழ்த்து



நீர்வேலி மத்தி தட்டுப்பாதி என்னும் புண்ணிய சேத்திரத்தில் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ அரசகேசரிப் பெருமானுக்கும் வாலாம்பிகை சமேத வைத் தீஸ்வரப்பெருமானுக்கும் பரிவாரமூர்த்திகளுக்கும் இன்று 12-06-2011 கும்பாபிஷேகம் நடைபெறத்திருவருள் கூடியுள்ளது. எனவே ஆலயத்தில் நடைபெற்ற திருப்பணிகளுக்கு உதவி புரிந்தவர்களுக்கு கண்ம றாத கருமமே கண்ணா நின்று தொண்டாற்றிய தொண்டர்களுக்கும் சகல அடியார்களுக்கும் எம்பெருமான் விநா யகர் அருள் புரிய வேண்டுகிறேன்.

ச.முருகையா,
பொருளாளர்.

## ...ன்று கொண்டேன்

...டம், பதவி, ...தடுவன எல் ...கிடைத்தவை ... இல்லை. ...ரின் தேடல் ...ண்டார்கள்.

...ரின் வாக்கு

...நநாள் அரச ... எதை? ...த்துத் தேடி ...தேடினான்.

..., தண்ணீர் ...டினான்.

தேடியது கிடைத்தது. தண்ணீர் தான் ஆவா... என்று அள்ளிப் பருகினான். திகைத்துப் போனான்.

கண்ணைக் கசக்கி கனவு தான் காண்கிறேனா? என... திகைத்துச் சுய நினைவு பெற்றான்.

தண்ணீர் பெற்ற இடத்தில் சிவனும் சிவன் மைந்தனும் சிலை வடிவில்...

சிலை வடிவாய் வந்த கடவுளர்க்கு கலைநிறை கோயில் கட்டி குடமுழுக்குச் செய்தான். அதுவே, இன்றைய நீர்வை அரச கேசரிப் பேராலயம்.

2011 இல் மீண்டும் இன்று குடமுழுக்குக் காணும் இத்தல இறைவன் கற்பகமாய் கருணை பொழியப் பிரார்த்திக்கிறோம்.

*'என்னை நினைந்து அடிமை கொண்டென்*
*-இடர்கெடுத்துத்*
*தன்னை நினையத் தருகின்றான்- புன்னை*
*விரசு மகிழ் சோலை வியன் நாரையூர் முக்கண்*
*அரசு மகிழ் அத்தி முகத்தான்'*

தி.மயூரகிரி சர்மா, நீர்வை.

## வாழ்த்துரை

... உலகுயிர் ...ழுமுதல் ...ள்பெருஞ் ...பரன்பால் ...பல் ...த நெகிழ் ... கோயில் ...லங்களில் ...ரசகேசரிப் ...யும் பேணு ... யாவரும் ...ண்ணிலே ...பெறுவது வரலாற்றுச் சிறப்புமிக்க விடயமாகும்.

அரசகேசரி மன்னனால் கட்டப்பட்ட வரலாற்றுச் சிறப்பு மிக்க இந்த ஆலயத்தில் வீற்றிருந்து அருள்பாலிக்கும் எம்பெருமான் தன்னை வணங்கும் அடியவர்களுக்கு எளிமையான... காட்சிகொடுத்துக் கொண்டிருக்கின்றார். இத்தகைய பெருமானுக்கு மகா கும்பாபிஷேகம் நடைபெற இருப்பது மகிழ்ச்சிக்குரியதாகும். ஆலயத்தைப் புனரமைப்பதும் கும்பாபிஷேகம் ஆற்றுவதும் எமது வாழ்க்கைப் பாதையில் மிக முக்கியமானதாகும். இந்தத் திருக்கோயில் எல்லா நலன்களும் பெற்று சிறப்புறத் திகழ வேண்டுமென்று விநாயகப்பெருமான் ஆசி வேண்டிப் பிரார்த்திக்கிறேன்.

ம.பிரதீபன்,
பிரதேச செயலர், பிரதேச செயலகம்,
வலிகாமம் கிழக்கு, கோப்பாய்.

...றவுன்ஸ் அன் கம்பனியின்
... * EXIDE பற்றரி வகைகள், ... வகைகள்
... சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம்.
...வானி களஞ்சியம்
இராசு வீதி, நீர்வேலி வடக்கு, நீர்வேலி.
ஸ்ரீமகாவிஷ்ணு
ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

...ர் ரெக்ஸ்ரைல்ஸ்
...ல.18, பெரியகடை,
யாழ்ப்பாணம்

பசன் ஹவுஸ்
இல.65, கே.கே.எஸ்.வீதி,
யாழ்ப்பாணம்

க.கு.கந்தையாபிள்ளை அன் சன்ஸ்
இல.318, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்

றூபா பன்முக வர்த்தகம்
இல.104, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்

சாரங்கா நகைமாடம்
இல. 157/1, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்
சாரங்கா ஜூவெல்லரி
இல.55, செட்டியார் தெரு,
கொழும்பு- 11.

வினோ நகைப்பூங்கா
இல.185, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்

S.V.M.
...154, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்

ஆனந்தன் பல்பொருள் வாணிபம்
அரசகேசரிப் பிள்ளையார்
கோயிலடி, நீர்வேலி மத்தி

ஐங்கரன் உணவகம்
இராச வீதி, கரந்தன் சந்தி,
நீர்வேலி

திலக்ஷன் சுருட்டுத் தொழிலகம்
கரந்தன் வீதி, நீர்வேலி தெற்கு

திருமுருகன் பல்பொருள் அங்காடியும்
திருமண மண்டபமும்
நீர்வேலி தெற்கு, நீர்வேலி

அபிராமி மருந்தகம்
கந்தசாமி கோயிலடி,
நீர்வேலி தெற்கு.

...ரி இரும்பகம்
...குறுக்கு வீதி,
...ர்வேலி வடக்கு

சண் ஸ்ரோர்ஸ்
குறுக்கு வீதி,
நீர்வேலி வடக்கு

கண்ணன் ஸ்ரோர்ஸ்
அச்செழு, நீர்வேலி

நந்தன் ஸ்ரோர்ஸ்
அச்செழு, நீர்வேலி

தணிகை றேடர்ஸ்
கரந்தன் வீதி,
நீர்வேலி தெற்கு

ஒலிபெருக்கிச் சாதனங்களும் அதற்குரிய உதிரிப்பாகங்களும் எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்
கோபுரம் சவுண்ட்ஸ்
இல.38, மஞ்சவனப்பதி வீதி,
கொக்குவில் மேற்கு, கொக்குவில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# MARSHA SYSTEMS (PVT) LTD

74 Kannathiddy Road,Jaffna. 021 222 1200 , 021 222 9418

## Desk Top PC

| | | |
|---|---|---|
| Intel 3.0 Ghz (2M) Biostar D41D3B 1 GB DDR III 500 GB Sata 16" LCD ASUS Keyboard Mouse ATX Casing DVD Writer LITEON **32000.00** | Intel 3.0 Ghz (2M) Biostar D41D3B 1 GB DDR III 500 GB Sata 19" LCD Dell Keyboard Mouse ATX Casing DVD Writer LITEON **33000.00** | Intel 3.2 Ghz (2M) Biostar D41D3B 2 GB DDR III 500 GB Sata 16" LCD ASUS Keyboard Mouse ATX Casing DVD Writer-LITEON **37250.00** |
| Intel 3.2 Ghz (2M) Biostar D41D3B 2 GB DDR III 500 GB Sata 19" LCD Dell Keyboard Mouse ATX Casing DVD Writer LITEON **38250.00** | | Intel 3.2 Ghz (2M) ASUS P5G41T-MLX 2 GB DDR III 500 GB Sata 19" LCD Dell Keyboard Mouse ATX Casing DVD Writer LITEON **39750.00** |
| Intel i3 3.06Ghz ASUS P7H55-MLX 2 GB DDR III 500 GB Sata 16" LCD ASUS Keyboard Mouse ATX Casing DVD Writer LITEON **49000.00** | Intel i3 3.06Ghz ASUS P7H55-MLX 2 GB DDR III 500 GB Sata 19" LCD Dell Keyboard Mouse ATX Casing DVD Writer LITEON **50000.00** | Intel 3.2 Ghz (2M) ASUS P5G41T-MLX 2 GB DDR III 500 GB Sata 16" LCD ASUS Keyboard Mouse ATX Casing DVD Writer LITEON **38750.00** |



## Lap Tops

| | | |
|---|---|---|
| **HP G62 - 112EE** Intel® Core™ i3-350M Processor 2.26GHz, 15.6" Diagonal High-Definition HP Brightview LED Display(1366x768), 320GB (5400RPM) Hard Drive, 2048MB DDR3 SDRAM (1 Dimm), 802.11b/g/ WLAN & Bluetooth®, LightScribe Super Multi 8x DVD+RW with Double Layer Support, 6-Cell 62WHr Lithium-Ion battery, Intel® HD Graphics with shared graphics memory, 5-in-1 Digital Media Reader, Free DOS, Webcam **65000.00** | **HP G62 - 453TU** Notebook PC, Intel® Core™ i5-460M Processor 2.53GHz with Turbo Boost up to 2.80GHz, 15.6" Diagonal High-Definition HP Brightview LED Display(1366x768), 500GB (7200RPM) Hard Drive, 2048MB DDR3 SDRAM (1 Dimm), 802.11b/g/ WLAN & Bluetooth®, LightScribe Super Multi 8x DVD+RW with Double Layer Support, 6-Cell 62WHr Lithium-Ion battery, Intel® HD Graphics with shared graphics memory, 5-in-1 Digital Media Reader, Free DOS, HP Webcam, **79000.00** | **Compaq 620** Intel Core 2 Duo T74002.10GHz Processor, 2GB Ram, 320GB SATA Hard Disk, 15.1" LED Screen, Web Cam, 6-Cell Lithium Ion Battery, Free DOS **55000.00** |
| **DELL 1014** Intel(R) Core(TM) 2 Duo T6570 (2.10Ghz, 800Mhz, 2M L2 Cache), 2GB DDR2 x 1), 800MHz DDR2 SDRAM Memory, 320GB SATA Hard Drive, 14.0 inch Wide Display HD (1366 x 768) TrueLife, 1.3 mp Web Camera, 8X DVD+/-RW Drive, 65W 3Pin Power Adapter, 6-cell Lithium Ion Primary Battery, Mobile Intel® Graphics Media Accelerator X4500MHD, Integrated 56k modem, Wireless Network Card 802.11 b/g/n, Dell Wireless 380 Bluetooth module **62000.00** | **Pavillion G4-1037TU** Intel® Core™ i5-480M Processor 2.66GHz, 14.0" Diagonal High-Definition HP Brightview LED Display, 500GB Hard Drive, 2048MB DDR3 SDRAM, WLAN & Bluetooth®, LightScribe DVD Optical Drive, Free DOS **75000.00** | **DELL Vostro 5010** Intel® Core™ i3-330M Processor (2.66Ghz Speed), 2GB DDR3 Memory, 320GB Hard Drive, 15.6" WLED Screen, 8x DVDRW Drive, Intergrated Graphic Card, DW 1501 Wireless Card, Intergrated Stereo Sound Card, 65W Adapter, 1.3mp Web Camera, 6-Cell Battery, 10/100 Ethernet Network, Bluetooth, DOS (Black, Pink, Red, Blue) **74000.00** |

**Mother Board**
Asus P5G41T-MLX (DDR-III) - 6600 /=
ASUS P7H55-MLX (I3 ) - 11700 /=
Biostar G31 - 5800 /=
Biostar ( DDR III ) - 5700 /=

**Ram**
512 MB DDR I - 2000 /=
1 GB DDR I - 4000 /=
1GB DDR II - ( Corsair ) - 2600 /=
1 GB DDR II ( Patriot) - 2000 /=
2GB DDR II ( Corsair) - 4800 /=
1 GB DDR III (Patriot) - 1900 /=
2GB DDR III ( Corsair) - 2900 /=

**DVD Writer**
Liteon - 2400 /=
Asus - 3600 /=

**Scaner**
LIDE 110 - 5900 / =

**Monitor**
16' Asus - 9800 /=
19' Asus - 12300 /=
19' Dell - 11100 /=
19' Viewsonic (LED) - 12700 /=

**UPS**
DCP - 3750 /=
Power III - 3600 /=
1KV - 9000 / =

**Router**
Dlink - 2750 / =
TPLink - 2750 /=
4 Port wireless Dlink - 6750 /=
4 Port wireless TPLink- 6750 /=

**Printer (Laser)**
Samsung ML1610 - 8500 /=
HP 1102 - 11250 /=
EPSON ML1200 - 11500 /=

**Toner**
12 A - 5100 /= I Month warranty
85A - 5100 /= I Month warranty
35A - 5100 /= I Month warranty
5A - 5100 /= I Month warranty
11A - 8100 /= I Month warranty
13A - 5100 /= I Month warranty
15A - 5100 /= I Month warranty
49A - 5100 /= I Month warranty

**Canon**
EP22 - 6500 /=
EP25 - 6500 /=
308 - 6500 /=
312 - 6500 /=
315 - 6500 /=
303 - 6500 /=

**HSDPA Dongle**
**3900.00**

அதிரடி விலைக்குறைவு

நம்பகரமான உத்தரவாதம்



## கடைத் தொகுதி வாடகைக்குண்டு

பருத்தித்துறையிலுள்ள நகரின் மத்தியில் மேற் தளத்தில் 1400 சதுர அடி விஸ்தீரணம் உடைய கடைத்தொகுதி வாடகைக்குண்டு.
தொடர்பு:0771298201 க.ராஜா

## கடைகள் வாடகைக்கு

பிறவுண் வீதி, ஆடியபாதம் வீதி ஆகியவைகள் சந்திக்கும் இடத்தில் நல்லூர் பிரதேச சபையின் உப அலுவலகத்துக்குப் பின்னால் யாழ்.தொழில்நுட்பக் கல்லூரி, யாழ்.பல்கலைக்கழகம் ஆகியவற்றுக்கு அருகில் மக்கள் நடமாட்டம் அதிகமுள்ள பகுதியில் 300 சதுர அடி விஸ்தீரணம் கொண்ட இரண்டு கடைகள் வாடகைக்குண்டு.
தொடர்பு: 0770759874,0773502612

## வேலையாள்கள் உடன் தேவை

தொலைபேசி விற்பனை நிலையத்துக்கு
* சிட்டை எழுதுநர்
* கணக்காளர்
* விற்பனையாளர் தேவை

அனுபவம் உள்ளவர்களுக்கு சம்பளம் ரூ.12000 வழங்கப்படும்.
தொடர்பு: யாழ்.போன் சொப்
இல:9 ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
குறிப்பு: இன்று (12.06.2011) ஞாயிற்றுக்கிழமை 10-12 மணிவரை நேரில் வரவும்
T.P.021 222 3817


# நன்றி நவிலலும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



## செல்வன் இரவீந்திரன் பவீசன்

*(சென்ஜோன்ஸ் கல்லூரி 2012 A/L வர்த்தகப் பிரிவு மாணவன்)*

மண்ணில் 16.09.1993
விண்ணில் 25.05.2011

கடந்த 25.05.2011 அன்று இறைவனடி சேர்ந்த எமது அன்புச் செல்வனின் மரணச் செய்தி கேட்டு ஓடி வந்து ஆறுதல் கூறிய உறவுகள், அன்பர்களுக்கும் மின்னஞ்சல், தொலைபேசி,தந்தி மூலம் தொடர்பு கொண்டு எமது துயரில் பங்குகொண்டவர்களுக்கும், அன்பர்களுக்கும், மற்றும் பாடசாலை மாணவர்கள், அதிபர், ஆசிரியர்களுக்கும் மற்றும் பல பல வழிகளில் உதவிய அன்பர்கள், நண்பர்களுக்கும் செல்வனின் மரணச் சடங்கில் பங்கு கொண்டவர்களுக்கும் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.
அத்துடன் இன்று (12.06.2011) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் கலந்கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

*சண்டிலிப்பாய் வடக்கு,*
*சண்டிலிப்பாய்.* *(1894-24-25)* *குடும்பத்தினர்.*


# BBS பாடசாலைகளின் ஆங்கிலமொழி பாடநெறிகள்

## Certificate in English, Diploma in English, Advanced Diploma in English

O/L, A/L கற்ற மாணவர்களுக்கு விசேட வகுப்புக்கள்.
தகுதி வாய்ந்த விரிவுரையாளர்கள்.
வசதிக்கேற்ப நேர அட்டவணை
பரீட்சைக்குப் பதிவு செய்பவர்களுக்கு இலவச கையேடுகள்
பரீட்சை வழிநடத்தல் வகுப்புக்கள்.
இலக்கண வகுப்புக்கள்

## BRITISH COUNCIL IELTS

அங்கிகரிக்கப்பட்ட பரீட்சைப்பதிவு நிலையம்

**Academic, General**

IELTS பரீட்சைக்கு தோற்ற விரும்பும் யாழ்குடாநாட்டு மாணவர்கள்.
BBS நல்லூர் வளாகத்திற்கு நேரில் வருகை தந்து, பரீட்சைக்கட்டணத்தைக்கட்டி பதிவு செய்யலாம்

## SPECIAL ENGLISH CLASSES

For Professionals Including Doctors, Engineers, Nurses & Government Officials

**ENGLISH CLASSES FOR CHILDREN**

சிறுவர்களுக்கான ஆங்கில பாடநெறிகள்

**Pre-Foundation, Foundation- Level 1,2,3,4**
**School Syllabus Covered**

வாரத்தின் எல்லா நாட்களிலும் BBSஇன் அனைத்து வளாகங்களிலும் நடாத்தப்படும்.

# BBS இன் சர்வதேச பாலர் பாடசாலைகள் → Dr.Maria Montessori & Canadian Early Learning Method

ஆங்கில மொழிமூல பாடசாலை செயற்பாடுகள்

### பாலர் பிரிவுகள்

* **Play Group** (2+சிறார்களுக்கு)
  Sensorial Activities
  விளையாட்டுக்களுடன் கூடிய அதிநவீனகற்கை நெறிகள்
  Song, Poems, Drama & Dialogue
* **Montessori** (3+சிறார்களுக்கு)
  மொழி அறிமுகம் - ஆங்கிலம்
  (Speech Skills) - தமிழ்
  எழுத்து அறிமுகம் - ஆங்கிலம்
  (Writing Skills) - தமிழ்
  எண்பயிற்சிகள் (Arithmetical Operations)
  Sensorial Activities
  Song, Poems, Drama & Dialogue
* **Pre-School** (4+சிறார்களுக்கு)
  எண். எழுத்து கருதுகோள்
  ஆங்கில பேச்சுத்திறன் செயற்பாடுகள் Audio, Visual
  Sensorial Activities
  Song, Poems, Nursery Rhumes, Drama & Dialogue
  அடுத்த கல்வியாண்டிற்கான முழுத்தகுதி நிலை

### பாலர பாடவிதானம்

பாடசாலை ஆரம்பம் காலை - 7.30
பாடசாலை முடிவு மதியம் - 12.30

வாரத்தின் 25 மணித்தியாலங்களுக்கான கல்விச்செயற்பாடுகள்

| | |
|---|---|
| Language Skills - English | - 5 hrs |
| Language Skills - Tamil | - 4 hrs |
| - Maths | - 4 hrs |
| Sensorial Activities | - 2 hrs |
| Songs, Poem, Drama, Dialog | - 2 hrs |
| Art and Craft | - 2 hrs |
| Play Activities | - 3 hrs |
| Baratha Natyam | - 1.5 hrs |
| Computing | - 1.5 hrs |

எம் அனைத்து சிறார்களும் பங்குபெற்றும் கல்விசார் நிகழ்வுகள்

English Day & Concert
Sports Day
Bharatham Festival
Art & Craft Exhibition
Muthamilzh Vizhla
Pre-School Graduation and Crol Ceremony

### BBS இன் 10 வளாகங்கள்

| | |
|---|---|
| நல்லூர் | - 140. கோவில் வீதி. நல்லூர் |
| கோப்பாய் | - பருத்தித்துறை வீதி. கோப்பாய் மத்தி |
| நீர்வேலி | - 1ம் கட்டை. இராசவீதி. நீர்வேலி. |
| சாவகச்சேரி | - சாவகச்சேரி இந்து ஆரம்பபாடசாலை அருகாமை |
| மானிப்பாய் 1 | - 252. ஆலடிசந்தி. யாழ்வீதி. மானிப்பாய். |
| மானிப்பாய் 2 | - சங்கரப்பிள்ளை வீதி. மானிப்பாய். |
| சுண்ணாகம் | - Lakshmi (புதியநீதிமன்றம் அருகாமை) K.K.S.வீதி மல்லாகம் |
| புலொலி | - ஸ்ரீ பத்மநாதன் இல்லம். மந்திகை. |
| அச்சுவேலி | - அச்சுவேலி அரசினர் வைத்தியசாலை அருகாமை |
| சங்கானை | - நிகர வைரவர் கோவிலடி. AGA Office அருகாமை |



The Peninsula's Premiere English Acadamy

British BUSINESS SCHOOL
Where Students Come First

# BRITISH BUSINESS SCHOOL

140, கோவில் வீதி நல்லூர்.Contact : 021 2225796, 077 3627055, 0776646357


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மறதி நோய்க்கு மருந்தாகும் மது

ஜேர்மனில் சமீபத்தில் மேற்கொள்ளப்பட்ட மருத்துவ ஆராய்ச்சியில் தினமும் ஒரு குவளை மது அருந்து வதால் மறதி நோய்ப் பாதிப்பிலிருந்து பாதுகாப்புக் கிடைப்பதாகத் தெரிய வந்துள்ளது.

ஆய்வுக்காக மறதி நோயால் அவதிப்படும் சுமார் ஆயிரம் பேர் இரண்டு பிரிவாகப் பிரிக்கப்பட்டு மதுப் பழக்கம் உள்ளவர்கள் முதலாவது பிரிவிலும், இரண்டாவது பிரிவில் மதுப் பழக்கம் இல்லாதவர் களும் இருந்தனர். முதலாவது கட்ட பரிசோத னைகள் மேற்கொள்ளப்பட்டு அனை வரும் ஆய்வுக்கு உட்படுத் தப்பட்டனர்.

சுமார் 6 வார காலம் பரிசோதனை மேற் கொள்ளப்பட்டது. முதல் பிரிவின ருக்கு இயல்பான உணவு, தினமும் ஒரு குவளை மது அருந்துவது, மிதமான உடற் பயிற்சிகள் மற்றும் உறக்கம் என கண்காணிக்கப்பட்டனர். இரண்டாவது பிரிவின ருக்கு மது அல்லாத உணவு பரிமாறப்பட்டு உடற் பயிற்சி, உறக்கம் என்பவை கண்காணிக்கப்பட்டது.

இந்தப் பிரிவினர் இயல்பாகவே முற்றிலும் மதுப்பழக்கம் இல்லாதவர்கள். ஆனால் மறதி நோயால் அவதிப்படுபவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. இரு பிரிவின ருக்கும் தொடர் மருத்துவ கண்காணிப் பும் மேற்கொள்ளப்பட்டது.

ஆய்வு முடிவில் இயல்பாக மதுப் பழக்கம் உள்ள முதல் பிரிவினரின் நினைவாற்றல் திறன் மேம்பட்டு இருந்ததும், மதுப் பழக்கமே இல்லாத இரண்டாவது பிரிவினரின் நினைவாற் றலில் எந்தவித முன்னேற்றமும் இல்லாமல் இருந்ததும் தெரியவந்தது.

இதன் மூலம் அளவான மதுப்பழக்கம் மறதி நோய்க்கு மருந்தாக அமைவது உறுதிப்படுத்தப் பட்டுள்ளது. தினம் ஒருகுவளை அளவான மதுப்பழக்கம் உள்ளவர்களுக்கு 30 முதல் 40 சதவீதம் வரை இந்நோய் தாக்கும் சாத்தியங்கள் குறைவாக உள்ளதாகத் தெரிவிக்கப் பட்டுள்ளது.




## ஞாபக சக்தியை அதிகரிக்கும் எளிய உணவு முறைகள்

*ஞாபக சக்தியை அதிகரிக்கும் இலகுவான உணவு முறைகள் கணினியில் இருப்பது போல மனிதனுக்கும் மூளைக் கலங்கள் உள்ளன. பெரும்பாலும் இந்த நினைவுக் காப்பங்களின் வலிமையும் எண்ணிக்கையும் பரப்புரைத் தன்மை உடலின் ஊட்டம் ஆகியவற்றைப் பொறுத்தே அமைகின்றன. மாச்சத்து விற்றமின்கள், அமினோ அமிலங்கள், தாது உப்புக்கள் முதலியவையே இந்த ஊட்டத்தை நிர்ணயிக்க வல்லவை.*

*மனித மூளையில் 100 பில்லியன் நரம்பணுக்கள் உள்ளன. இவை உணவில் கிடைக்கும் விற்றமின் களைப் பொறுத்து இரசாயன மாற்றங் கள் ஏற்படுத்தியபடி இருக்கின்றன.*

*ஒரு நாளைக்குப் பத்து இலட்சம் தடவைகளுக்கு மேல் நமது சிந்தனை களை வகைப்படுத்தும் வேலையை மூளை செய்து கொண்டிருக்கிறது. தினமும் நாம் உட்கொள்ளும் உணவில் கிடைக்கும் மொத்தக் கலோரியில் முப்பது சதவீதத்தை மூளைதான் பயன்படுத்திக் கொள்கிறது. எனவே வயது வித்தி யாசம் இன்றி மூளை நன்கு செயற்பட வேண்டும் எனில் இனிப்பு மற்றும் மாச்சத்துப் பொருள்களில் உள்ள குளுக்கோஸில் இருந்துதான் தேவை யான சக்தி தொடர்ந்து கிடைக்க வேண்டும். இந்தச் சத்துணவில் குறைவு ஏற்படும் போது ஞாபக சக்தி யிலும் சிக்கல் ஏற்பட்டு விடுகிறது.*

*இது மட்டுமல்ல இரத்த ஓட்டம் தேவையான ஒட்சிசனை மூளைக்கு விநியோகித்துப் புத்துணர்ச்சியை ஏற்படுத்துகின்றது.*

*இதைத் தடுக்க சிறந்த உணவு முறையையே மருந்தைப்போல் பயன் படுத்தினால் புத்திக் கூர்மையும் ஞாபக சக்தியும் அதிகரிக்கும். ஞாபக சக்தியை அதிகரிக்கும் எளிய உணவு முறைகள் தோடை கொய்யா, திராட்சை, அப்பிள், வாழைப் பழம், முலாம்பழம், பேரீச்சம் பழம், கரட், அன்னாசி, முட்டைக் கோவா, முட்டைக்கோஸ், பசளைக் கீரை, கொத்தமல்லி, முருங்கைக்கீரை, பச்சைப் பட்டாணி, பால், தயிர், ஈரல் போன்ற உணவு வகைகளில் உள்ள பீட்டா கரோட்டின் விற்றமின் சி இரும்புச்சத்து முதலியன ஞாபக சக்தியை அதிகரிக்க வல்லவை.*




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ ட ன் செ ய் தி க ளு க் கு : W

Asian Alliance Insurance
Rest Assured
www.asianalliance.lk

Signing away 20 years of your life?
Give us 20 minutes...

0112 33 22 88

Response Marketing
Co. Reg. No. PQ31




LOLC
மிகப் பிரபலமான நிதி நிறைவேற்றுனர்
ORIX

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இதயம் ஆரோக்கியமாக இருப்பதற்கு

மாரடைப்புப் பற்றிக் கேள்விப்படும் போது பயங்கரமாகத் தான் இருக்கின்றது. மாரடைப்பு வந்துவிட்டால், அவற்றோடு எல்லாம் முடிந்து விட்டது என்று நினைத்துக் கொண்டு வாழ்க்கையை வெறுக்க வேண்டிய அவசியமில்லை.

இரண்டு, மூன்று தடவைகள் மாரடைப்பு வந்த பின்னர் அதிக காலம் ஆரோக்கியமாக வாழ்ந்தவர்களும் இருக்கின்றார்கள். அதனைக் கருத்தில் கொண்டு பயப்படாமல் அடுத்து எப்படி வாழ வேண்டும், அதற்கு என்ன உணவு வகைகளை எடுத்துக் கொள்ள வேண்டும் என்று அறிந்து கொள்வது மிகவும் முக்கியம்.

இதயம் சம்பந்தப்பட்ட பிரச்சினைகள் யாருக்கெல்லாம் வர வாய்ப்பு அதிகம் என்று பார்த்தால் நீரிழிவு உள்ளவர்கள், சிறுநீரகக் கோளாறு உள்ளவர்கள், சிகரெட் பழக்கம் உள்ளவர்கள், உடல் பருமன் உடையவர்கள், எப்போதும் மனக் குழப்பம் அடைபவர்கள், எந்த வேலையும் செய்யாமல் உடல் இயக்கமே இல்லாதவர்கள் இவர்கள் அனைவரும் மிகுந்த கவனத்துடன் இருக்க வேண்டியது அவசியம்.

இதய நோய்க்கான அறிகுறி நெஞ்சுவலியாகத் தான் இருக்க வேண்டும் என்ற அவசியமில்லை. அடிக்கடி தலைவலி, தலைச் சுற்று, பார்வைத் தடுமாற்றம், ஞாபகமறதி, மூச்சு விடுவதில் சிரமம், தோள்பட்டை வலி இப்படி எது இருந்தாலும் அது இதய நோய்க்கான அறிகுறியாகவும் இருக்கலாம். உடனே வைத்தியரை அணுகுவது சிறந்தது.

மாரடைப்பு வந்தவர்கள் சிகிச்சை பெறுதல், உடற்பயிற்சி எடுத்துக் கொள்ளுதல் போன்றவற்றைச் செய்வதை விட முக்கியமாக உணவுகளைக் கவனத்தில் கொள்ளுதல் வேண்டும். அமெரிக்காவில் எல்லா உணவு வகைகளிலும் ''டிரான்ஸ்பேட்'' என்று சொல்லப்படுகின்ற அடர்த்தி குறைவான மிதக்கும் கொழுப்பு உள்ளது என்பதைப் பொதிசெய்யும் போது போட வேண்டும் என்ற சட்டம் உள்ளது.

உடலில் கொழுப்பு அதிகமாக இருக்கும் பொழுது கூடவே நச்சுப் பொருளும் சேர்ந்து உண்டாக்குகின்ற கோளாறுகளில் இதய நோயும் ஒன்று. காய்கறிகளும் பழங்களும் எல்லாருக்கும் அவசியம் என்று மருத்துவர்கள் கூறுவதற்கு இதுவும் ஒரு காரணம்.

எனவே இதயம் பலவீனமானவர்கள் தவிர்க்க வேண்டிய உணவுகள்:

ஒரு முட்டையில் 210 மி.கி கொலஸ்ரோல் இருக்கின்ற காரணத்தினால் இதனைத் தவிர்க்க வேண்டியது அவசியம். பேக்கிங் பவுடர் சேர்த்துச் செய்தவை, நெய், வெண்ணெய், சீஸ், தேங்காய், தேனீர், உருளைக்கிழங்கு பொரியல், ரின்னில் அடைக்கப்பட்ட உணவுகள், தக்காளி சோஸ், உறை நிலை உணவுகள், அஜினோமோட்டோ ஆகியவையும் தவிர்க்கப்பட வேண்டும்.

ஊறுகாயும் அப்பளமும் இருந்தால் போதும், வேற எதுவும் தேவையில்லை என்று கூறுபவர்கள் பலர் இருக்கின்றார்கள். இந்த இரண்டையும் போல ஆபத்தானது வேற எதுவும் இல்லை என்றே கூற வேண்டும். காரணம் அதில் சேர்க்கப்படுவது உப்பு.

மாரடைப்பு உள்ளவர்கள் சாப்பிடக் கூடிய உணவுகள்:

கீரை, முழு தானியங்கள், காய்கறிகள், அசைவத்தில் மீன், பூண்டு, சின்ன வெங்காயம், தினசரி சமைக்கும் போது சாதாரண புளிக்குப் பதிலா கொடம்புளி உபயோகிக்கலாம். இவை அனைத்தும் இரத்தத்தில் கொலஸ்ரோலைக் கட்டுப்படுத்தி இதயத்தைப் பாதுகாத்து உடல் எடையையும் குறைக்கும்.



Uthayan
Guest House - II
Spend your Holidays with homely hospitality in Jaffna. Located ½ KM from the Jaffna town. Double, Triple & Family rooms available. A/C and Non A/C with attached bathrooms and TV. Meals provided on request.
T.P: 021 - 2222330, 021 - 5677603, 077 - 7739224.
No. 12, Sivagurunathar Lane, Off Kasthuriyar Road, Jaffna.

கூல் ஒன்று வேண்டுமென்றால்...
COOOL என்றே கேளுங்கள்.




COOOL



இலகுரக ட்ரக் ஒன்றை...
88,888/= ஐ செலுத்தி
☑ குறைந்தபட்ச பத்திரங்கள் ☑ குறைந்தபட்ச வட்டி வீதம் ☑ குறுகிய காலத்தில்
பெற்றுக்கொள்ள...
எசட்லைன் லீசிங் இற்கு வாருங்கள்...

எசட்லைன்
லீசிங் கம்பனி லிமிட்டட்.
உங்கள் முன்னேற்றத்திற்காகவே அர்ப்பணிக்கப்பட்ட கடன் வசதி
இல.282, கடுவலை வீதி, பத்தரமுல்லை.
தொ.பே: 011 4700100 பெக்ஸ்: 011 4700101

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| பத்தரமுல்லை | -077 3609891 | பிலியந்தலை | -077 7264224 | கண்டி | -077 3444676 | மாத்தறை | -077 3688301 | குருநாகல் | -077 3688282 |
| குளியாபிட்டிய | -077 7229742 | மஹறவை | -077 3688297 | சிலாபம் | -077 3100924 | தம்புள்ளை | -077 3688280 | அம்பிலிபிடிய | -077 3615396 |
| காலி | -077 3544616 | புத்தளம் | -077 3056315 | அனுராதபுரம் | -077 7593383 | பதுளை | -077 3404412 | நீர்கொழும்பு | -077 7445460 |
| இரத்தினபுரி | -077 7236293 | மதுகம | -077 3609891 | மொணராகலை | -077 3404413 | பலங்கொடை | -077 3203604 | மட்டக்களப்பு | -077 3544624 |
| யக்கலை | -077 7236297 | பொலன்னறுவை | -077 3544618 | திஸ்ஸமஹாராமை | -077 3106195 | அவிசாவலை | -077 3444679 | களுத்தறை | -077 3688302 |
| நுவரெலியா | -077 3688285 | அம்பாறை | -077 3613694 | அம்பலந்தொட்டை | -077 3497697 | தெஹிஹத்தகண்டிய | -077 3497672 | திருக்கோணமலை | -077 7236301 |
| வவுனியா | -077 3609881 | கேகாலை | -077 3688283 | தபுத்தேகமை | -077 3203601 | யாழ்ப்பாணம் | -077 7723748 | மஹியங்கனை | -077 3661954 |
| அம்பலங்கொடை | [illegible] | [illegible] | -077 3497698 | மன்னார் | -077 3609897 | பொல்பிதிகமை | -077 3106184 | கெபடிகொல்லாவை | -077 3544615 |
| ஹிகுரக்கொடை | [illegible] | [illegible] | [illegible] | | | | | | |

நிபந்தனைகள் உண்டு
tradlanka

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உங்களுக்கு இந்த வாரம் எப்படி.........

## 12.06.2011 முதல் 18.06.2011 வரை

தருபவர் - வித்யா

### மேடம்

ஆதாயமில்லாத அலைச்சல் அதிகரிக்கும். பயணங்கள் சந்தோஷம் தருவதாக அமையும். மற்றவர்கள் பேச்சைக் கேட்டு சில காரியங்களில் இறங்கி விட்டுப் பின்னர் வருத்தம் அடைவீர்கள். கடன் மிகுதிகளைக் கண்டிப்புடன் கேட்டு வாங்குவீர்கள். பிள்ளைகள் வழியிலோ அல்லது வேறு வகையிலோ திடீர் செலவுகளைச் சந்திக்கலாம். திட்டமிட்ட வேலைகளை மாற்றி அமைக்கலாம். பணவரவுகள் வந்தாலும், அதற்கேற்ற செலவுகள் தொடர்ந்து கொண்டிருக்கும். கொடுத்த வாக்கைக் காப்பாற்ற முடியாமல் சில நேரங்களில் தவிக்கலாம். குடும்ப உறுப்பினர்கள் இடையே கோபதாபங்கள் ஏற்படாமல் இருக்க கடும் பேச்சுக்களை, விமர்சனப் பேச்சுக்களைத் தவிர்க்க வேண்டும். உத்தியோகம், விவசாயம், பூமி காரியங்கள், கடன் பிரச்சினை, பொலிஸ் தொடர்பான விடயங்களில் ஓரளவுக்கு அனுகூலம் உண்டு. ஊக்கம், உற்சாகமாகச் செயற்பட முடியாமல் அடிக்கடி மனம் பலவீனம் அடையும்.

### இடபம்

ஊக்கம், உற்சாகமாக செயற்படுவீர்கள். எதிர்பார்த்த உதவிகள் கிடைத்து சந்தோஷம் அடைவீர்கள். பணவரவுகளுக்கும் வாய்ப்பு உண்டு. சந்தோஷமான அனுபவங்களை எதிர்கொள்ளலாம். சுபகாரிய நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ளலாம். ஆதாயமில்லாத அலைச்சல்களுக்கு ஆள்படலாம். உடன் பணிபுரிவோர் விடுமுறையால் கூடுதல் வேலைப்பளுவைச் சந்திக்கலாம். உறவினர் ஒருவர் உங்களை நம்பி முக்கிய வேலைகளை ஒப்படைக்கலாம். வெறுப்பு, விரக்தி ஆள்கொள்ளும். ஊக்கம், உற்சாகத்தைக் குறைக்கும் நிகழ்ச்சிகள் அடிக்கடி நடக்கலாம். உடல் ரீதியான உபாதைகளாலும், அவ்வப்போது அவதிப்படலாம். மற்றவர்களிடம் சொல்ல முடியாத சில பிரச்சினைகளை மனதிற்கு உள்ளேயே வைத்து வேதனைப்பட்டுக் கொண்டிருப்பீர்கள். வேலை நெருக்கடிகளும், அலைக்கழிப்புகளும் அதிகரிக்குமே அன்றி, அதற்கேற்ற பலன் கிடைக்காது. பணமும் வந்த வேகத்தில் கரைந்து கொண்டிருக்கும். குறைந்த செலவில் திட்டமிட்ட வேலைகளுக்கு எல்லாம், பணம் அதிகமாகச் செலவாகி பற்றாக்குறை நிலவரத்தை உண்டாக்கலாம். தண்டச் செலவு உண்டு.

### மிதுனம்

குடும்பச் செலவுகள் அதிகரிக்கும். திட்டமிட்ட காரியங்களில் தடை ஏற்பட்டு, மனக்குழப்பத்தை உண்டாக்கலாம். பொழுதுபோக்கு உல்லாச விடயங்களுக்காக கணிசமான பணத்தைச் செலவு செய்யலாம். சோர்வு, சோம்பல் ஆள்கொள்ளும். சில பொருள்களை மறதியாக எங்காவது வைத்து விட்டுத் தேடலாம். திட்டமிட்ட காரியங்களில் வெற்றி கிடைக்கும். சிரமம் இல்லாமல் சுலபமாகச் சில வேலைகள் முடிவுக்கு வரும். பணவரவுகளுக்கு வாய்ப்பு உண்டு. வருமானம் வரும் வழிகள் அதிகரிக்கும். வளர்ந்த பிள்ளைகளுக்காக எடுத்த கல்வி முயற்சிகளில் முன்னேற்றம் உண்டு. பதவி உயர்வு, சம்பள உயர்வை எதிர்பார்ப்போர் நல்ல செய்திகளைக் கேட்கலாம். நெடுநாள்களாக வராமல் இருந்த கடன் மிகுதிகள் வரலாம். சிறிது சிறிதாக சேமித்த பணம் ஒன்று கைக்கு கிடைத்து, அதை புதிய வகையில் முதலீடு செய்வீர்கள். நிலம், பூமி வாங்கப் போட்ட திட்டங்களில் முன்னேற்றம் உண்டு. திட்டமிட்ட சில வேலைகளை முடித்துக் கொள்ள சந்தர்ப்பம் சாதகமாக அமையும். எதிர்பார்த்த கடனுதவி கிடைத்து மகிழ்ச்சி அடைவீர்கள்.

### கடகம்

சோர்வின்றி, அடுக்கடுக்காக பல வேலைகளை திட்டமிட்டுச் செய்து பரபரப்பாக இருப்பீர்கள். குடும்ப உறுப்பினர் அல்லது சக ஊழியர் ஒருவருடன் கருத்து மோதல், தன்மானப் பிரச்சினை உருவாகலாம். எதிர்பார்த்த பணவரவுகளுக்கு வாய்ப்பு உண்டு. தாமதமாக ஆரம்பித்தாலும், சில வேலைகளைச் சரியான நேரத்திற்கு முடிப்பீர்கள். ஒன்றுக்கு மேற்பட்ட வழிகளில் செலவுகளைச் சந்திக்கலாம். சிலரை விமர்சனம் செய்து, அதில் இன்பம் காண்பீர்கள். நீண்ட நாள்களாகத் தள்ளிவைத்த வெளியூர் பயணம் செல்லலாம். தொழில் ரீதியான விடயங்களில் என்ன தான் பொறுப்பாக செயற்பட்டாலும், ஏதாவது ஒரு வகையில் தவறுகள், குறைகள் ஏற்பட்டு, அதனால், விமர்சனங்களை எதிர்கொள்ளலாம். அதனால், எந்த வேலையைச் செய்தாலும், ஒன்றுக்கு இரண்டு முறை சரிபார்த்துக் கொள்ள வேண்டியது அவசியம். சுப காரிய விடயங்களிலும் இழுபறிகள் காணப்படும். பண விடயங்களை உருட்டி, புரட்டி சமாளித்துக் கொள்வீர்கள். ஓய்வாக இருக்காமல், ஏதாவது வேலை செய்து கொண்டிருக்க மாற்று மதத்தினர் மூலமும் நன்மை அடையலாம்.

### சிங்கம்

செலவு, அலைக்கழிப்பு அதிகரிக்கும். சேமித்த பணத்தை ஒரு விஷயத்திற்காக செலவிட வேண்டிய கட்டாயம் உருவாகும். தொழில் ரீதியாக சிலருக்கு உதவி செய்யலாம். உறவினர் அல்லது நண்பர் ஒருவர் உங்களிடம் கடன் கேட்கலாம். தன்னம்பிக்கையுடன் செயற்படுவீர்கள். ஆபத்தான பொருள்களை கவனமாக கையாள வேண்டும். அடுத்த சில நாள்களுக்குப் பிறகு நடக்கும் என நினைத்த காரியங்கள் எல்லாம் சுலபமாக நடக்கலாம். உறவினர்கள், நண்பர்கள் மத்தியில் உங்களின் மதிப்பு, கௌரவம் மேம்படும். பலரும் உங்களைப் பார்த்து பொறாமைப்படும் வகையிலான நிகழ்ச்சிகள் நடக்கலாம். கடந்த காலங்களில் சோம்பிக் கிடந்த நீங்கள், இப்போது சுறு சுறுப்புடன் செயற்படுவீர்கள். பொன், பொருள்கள், ஆடை, ஆபரணங்கள் சேரும். நோய் உபாதைகள் நீங்கி, தெம்பு உற்சாகமாக செயற்படுவீர்கள். மற்றவர்களைப் பார்த்து, நீங்கள் ஆதங்கப்பட்ட நிலைமை மாறி, உங்களைப் பார்த்து மற்றவர்கள் ஆதங்கப்படலாம். பெண்கள், பயணங்கள், பொழுது போக்கு விடயங்கள், ஆடம்பர ஈடுபாடுகளால் பணம் கரையலாம். சோர்வு, சோம்பல் கூடும்.

### கன்னி

பணம் வரும். கடன் மிகுதிகள் வசூலாகும். ஆசைப்பட்ட சில பொருள்களை வாங்குவீர்கள். சுபகாரிய நிகழ்ச்சிகளில் பங்கேற்பதன் மூலம் மகிழ்ச்சி அடைவீர்கள். கேளிக்கை, கொண்டாட்டங்களால் சந்தோஷம் உண்டு. எதிர்பார்த்த வாய்ப்புகள் தேடி வரும். ஒன்றுக்கு மேற்பட்ட வழிகளில் செலவுகளைச் சந்திக்கலாம். தம்பதியர் இடையே சில பிரச்சினைகள் தொடர்பாக வாக்குவாதங்கள் ஏற்படலாம். சில வேலைகளுக்காக மற்றவர்களுடன் சேர்ந்து அலையலாம். சில நேரங்களில் உங்களின் ஊக்கம், உற்சாகத்தை குறைக்கும் நிகழ்ச்சிகள் நடக்கலாம். விமர்சனங்களாலும் மன அமைதி பாதிக்கப்படலாம். பணப்புழக்கத்தில் தடை உண்டாகலாம். எதிர்பார்த்தபடி சில விடயங்கள் நடக்காமல் ஏமாற்றம் அடையலாம். பணிபுரிவோர் நிர்வாகத்தினரின் நெருக்கடிகளுக்கு ஆளாகலாம். கடன் பிரச்சினைகளாலும் கவலை உண்டாகும். பொலிஸ் தொடர்பான விடயங்களில் எச்சரிக்கை அவசியம். பெண்கள், பயணங்கள், பொழுதுபோக்கு விடயங்கள் போன்றவற்றால் சந்தோஷம் அடைவீர்கள்.

### துலாம்

சிரமங்கள் இருந்தாலும், சில வேலைகளைத் திட்டமிட்டபடி முடிப்பீர்கள். தம்பதியர் இடையே அன்னியோன்யம் அதிகரிக்கும். தேக ஆரோக்கிய விடயங்களில் அக்கறை காட்டுவீர்கள். தொழில் ரீதியான பணவரவுகளைப் பெறலாம். விருந்தினர்கள் வருகையால் வீட்டில் கலகலப்பு குடிகொள்ளும். ஆதாயகரமான பணவரவுகளை, பொருள் வரவுகளைப் பெறலாம். எதிர்பார்த்த உதவிகள் எளிதில் கிடைத்து சந்தோஷம் அடைவீர்கள். நீண்ட நாள்களாகச் சந்திக்காத உறவினர்கள் சிலரைச் சந்திக்கும் வாய்ப்பு கிடைக்கும். பணம் பல வகையிலும் கரைந்து கொண்டிருக்கும். ஒரு செலவை எப்படி சமாளிக்கப் போகிறோமோ என, கவலைப்படும் நேரத்தில் அடுத்தடுத்து செலவுகள் வந்து கொண்டிருக்கும். வீட்டுத் தேவைகளை நிறைவேற்றவும், வாங்கிய கடனுக்கு வட்டி கட்டவும், வழக்கு விவகாரங்களிலும் கணிசமான பணம் கரையும். இந்தச் செலவுகளை எல்லாம் அப்படி, இப்படி புரட்டி சமாளிப்பீர்கள்.

### விருச்சிகம்

பலர் பங்கேற்கும் நிகழ்ச்சி ஒன்றில் நீங்களும் கலந்து கொள்ளலாம். மனதிற்குப் பிடித்த வகையில் சில விடயங்கள் நடக்காமல் ஏட்டிக்குப் போட்டியாக நடக்கலாம். ஆலய வழிபாடுகளில் நாட்டம் செல்லும். பல நாள்களாக சந்திக்காத சிலரைச் சந்திக்கலாம். ஊக்கம், உற்சாகமாக செயற்படுவீர்கள். உங்களின் தொழில் ரீதியான செயற்பாடுகளை மற்றவர்கள் பாராட்டலாம். சந்தோஷம் தரும் செய்திகளைக் கேட்கலாம். குடும்பத்தில் கலகலப்பு குடிகொள்ளும். தொழில் துறையில் அபவிருத்தி காணப்படும். போட்டி, எதிர்ப்புகள் விலகும். வழக்கு விவகாரங்களில் சாதகமான நிலைமை காணப்படும். கடன் பிரச்சினைகளை வெற்றிகரமாக சமாளிப்பீர்கள். நிலம், பூமி வாங்கப் போட்ட திட்டங்களில் முன்னேற்றம் உண்டு. சகோதரர்கள், பங்காளிகள் உதவிகரமாக இருப்பர். பொலிஸ் தொடர்பான விடயங்களிலும் முன்னேற்றம் உண்டு. கணவன் மனைவி உறவில் பிரச்சினை வராமல் இருக்க விட்டுக் கொடுத்துச் செல்ல வேண்டும். ஏட்டிக்குப் போட்டியாக விமர்சிப்பதை தவிர்க்கவும்.

### தனுசு

எதிலும் பொறுமை, நிதானமாக செயல்பட வேண்டும். திட்டமிட்டதை விட சில விடயங்களுக்கு அதிகமாகச் செலவாகி பணப்பற்றாக்குறை உண்டாகலாம். பெரிய மனிதர்கள் சிலர் உங்களின் மனம் நோகும் வகையில் பேசலாம். வழக்கத்திற்கு மாறாக கூடுதல் வேலைப்பளுவைச் சந்திக்கலாம். கலகலப்பான அனுபவங்களை எதிர்கொள்ளலாம். எதேச்சையாக நடக்கும் சில விடயங்களால் மனதில் சந்தோஷம் குடிகொள்ளும். உங்களுக்கு வேண்டிய சிலருக்காக மற்றவர்களிடம் உதவி கேட்கலாம். உடல் உபாதைகளால் உற்சாகம் குறையும். உங்களின் வசதி வாய்ப்புகளும், பணப்புழக்கமும் அதிகரிக்கும். யாருடைய பணமாவது உங்களின் கைகளில் புரளும். பிள்ளைகளின் சுபகாரியங்களை நடத்த மேற்கொண்ட முயற்சிகளிலும் முன்னேற்றம் உண்டு. அவசரப்பட்டு சில விடயங்களில் முடிவெடுத்து விட்டுப் பின்னர் வருத்தம் அடைவீர்கள். குதர்க்கமான பேச்சுக்களால் சிலருடன் மனஸ்தாபம் ஏற்படலாம். அவர்களால் சில நன்மை அடையலாம். வெளிவட்டாரத் தொடர்பு விரிவடையும். காரிய வெற்றி உண்டு. முக்கியமான செய்தி கேட்கலாம். பணம் வரும்.

### மகரம்

அலைச்சல் இருந்தாலும், திட்டமிட்டபடி சில வேலைகளை முடிப்பீர்கள். பிரியமான நண்பர்கள், உறவினர்கள் சந்திப்பு நிகழும். உங்களுக்காகவோ அல்லது மற்றவர்களுக்காகவோ ஆடை, அலங்காரப் பொருள்கள் வாங்கலாம். பொழுதுபோக்கு, உல்லாச விடயங்களில் நாட்டம் செல்லும். சிலர் மூலம் பணவரவுகளைப் பெறலாம். திட்டமிட்ட காரியங்களைச் செய்ய முடியாமல் தடை, தாமதங்களைச் சந்திக்கலாம். வழக்கத்திற்கு மாறாக கூடுதல் நேரம் வேலை செய்யலாம். சிக்கனமாக இருக்க நினைத்தலும், ஏதாவது ஒரு வழியில் தண்டச் செலவுகளை எதிர்கொள்ளலாம். மறதியால் அவதியுண்டு. உறவினர்கள் வகையிலும், வாகனங்கள், வீடு போன்றவற்றைப் பராமரிக்கவும் கணிசமாக செலவு செய்யலாம். சிலர் தொழில் ரீதியான இடமாற்றங்கள் அல்லது வீடு மாற்றங்களைச் சந்திக்கலாம். பணிபுரிவோர் புதிய பொறுப்புகளை ஏற்க நேரிடலாம். தற்காலிக பணியில் இருப்போர் நிரந்தரம் பெறலாம். தொழில் ரீதியாக பரபரப்பாக செயற்படலாம். ஒரு வேலை முடியும் முன்னரே, அடுத்த வேலை உருவாகி உங்களை ஓய்வின்றி செயற்பட வைக்கலாம். பெண்கள், பயணங்கள், பொழுது போக்கு விடயங்கள் போன்றவற்றால் சந்தோஷம் அடைவீர்கள்.

### கும்பம்

எதிர்பார்த்த அல்லது எதிர்பாராத பணவரவுகளைப் பெறலாம். உறவினர்கள், நண்பர்கள் கேட்ட உதவிகளைச் செய்வீர்கள். அடுக்கடுக்காகப் பல வேலைகளைத் திட்டமிட்டு செய்வீர்கள். புத்திசாலித்தனமான செயற்பாடுகள் மூலம் சில விடயங்களில் ஆதாயம் பெறுவீர்கள். மனதில் இனம்புரியாத சந்தோஷம், மகிழ்ச்சி குடிகொள்ளும். எந்த வேலையையும் பிறகு என தள்ளிவைக்காமல் உடனுக்குடன் செய்வீர்கள். நண்பர்களுடன் கொண்டாட்டங்களில் பங்கேற்கலாம். நடப்பது போல தோன்றிய விடயங்களில் எல்லாம் திடீர் சுணக்கம், தடை ஏற்படலாம். தேவையான பணத்தைப் புரட்டிக் கொள்வதிலும் சிரமங்களைச் சந்திக்கலாம். கடினமாக உழைத்தும் பலன் கிடைக்காமல் போகலாம். அடிக்கடி மற்றவர்களின் குற்றம், குறைகளுக்கு ஆளாகலாம். கடனுதவிகள் பெற மேற்கொண்ட முயற்சிகளில் முன்னேற்றம் உண்டு. பணிபுரிவோர் நிர்வாகத்தினரிடம் முன்வைத்த கோரிக்கைகள் நிறைவேறும். சகோதரர்கள் கேட்ட உதவிகளைச் செய்து பெருமை அடைவீர்கள். பங்காளிகளுடன் ஏற்பட்ட பகைமை அகன்று, பாசம் அதிகரிக்கும்.

### மீனம்

ஒருவரை நம்பி ஒப்படைத்த வேலை முடியாமல், அதை மற்றொருவர் மூலம் முடிக்கலாம். தர்ம, புண்ணிய காரியங்களைச் செய்வீர்கள். வெளியிடங்களுக்கு செல்லும் போது நண்பர் அல்லது உறவினர் ஒருவரைச் சந்திக்கலாம். பணவரவுகளைப் பெறலாம். நீண்ட நாள்களாகப் பேசாத ஒருவர் உங்களைத் திடீரெனத் தொடர்பு கொண்டு பேசலாம். பால்ய நண்பர் ஒருவரை எதிர்பாராமல் சந்திக்கலாம். போட்டி, எதிர்ப்புகள் விலகும். கணவன் மனைவி உறவில் கருத்து வேறுபாடுகள் வரலாம். வழக்கு விவகாரங்களில் இழுபறிகள், சாதகமற்ற நிலைமை காணப்படும். ஏண்டா வாழ்கிறோம் என அடிக்கடி வெறுப்பு உண்டாகும். நீங்கள் பொறுப்போடு வேலை செய்தாலும், அதைப் பாராட்டுபவர்களை விட, விமர்சிப்பவர்களே அதிகம். சூழ்ச்சி வலையில் அடிக்கடி சிக்க நேரிடலாம். ஏதோ ஒரு வகையில் வருமானம் வந்து உங்களின் பற்றாக்குறையை சரி செய்ய வைக்கும். பிள்ளைகளின் சுபகாரிய விடயங்களிலும் முன்னேற்றம் உண்டு. பொன், பொருள் வாங்கப் போட்ட திட்டம் நிறைவேறும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈ: www.conlineuthayan.com

ance.lk



CDB நிலையான வைப்புக் கணக்கில் ரூ.50,000 சேமித்து புத்தம் புதிய 3 ஜீப்களை வென்றிடுங்கள்!

| | மாதாந்த வ.வீ. | முதிர்ச்சியில் வ.வீ. | வ.தே.வீ. மாதாந்தம் | வ.தே.வீ. முதிர்ச்சியில் |
|---|---|---|---|---|
| 1 மாதம் | | 9.50% | | 9.92% |
| 3 மாதங்கள் | 10.00% | 10.50% | 10.47% | 10.92% |
| 6 மாதங்கள் | 10.50% | 11.00% | 11.02% | 11.30% |
| 12 மாதங்கள் | 11.00% | 11.50% | 11.57% | 11.50% |
| 18 மாதங்கள் | 11.25% | 12.50% | 11.85% | 12.20% |
| 24 மாதங்கள் | 11.50% | 12.75% | 12.13% | 12.03% |
| 36 மாதங்கள் | 11.50% | 13.00% | 12.13% | 11.60% |
| 48 மாதங்கள் | 11.50% | 13.00% | 12.13% | 11.04% |
| 60 மாதங்கள் | 11.50% | 13.00% | 12.13% | 10.53% |

கிளைகள்: யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, வவுனியா

CDB அதிர்ஷ்டம்

CDB சிட்டிஸன்ஸ் டிவலப்மன்ட்

இன்றே பேசுங்கள்: 0117 388 388
சிட்டிஸன்ஸ் டிவலப்மன்ட் பிஸ்னஸ் ஃபினான்ஸ் பி.எல்.சி.
இல.18, ஸ்ரீ சங்கராஜ மாவத்தை, கொழும்பு 10.
பதிவிலக்கம்: PB232PQ
www.cdb.lk

WP/GT/3333

Co. Reg. No. PQ31

இலங்கை மத்திய வங்கி நாணயச்சபையின் 1988ம் ஆண்டு 78ம் இலக்க நிதிக்கம்பனிகள் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது.

RAM Rating (Lanka) Limited BBB-/P3

தாபிக்கப்பட்டது: 1995 செப்டெம்பர் 7

ஓரிக்ஸ் வலையமைப்பு







உலகளாவிய ரீதியில் 27 நாடுகளின் அனைத்து பாகங்களிலும் செயற்படும் 811 ஒன்று சேர்ந்து இயங்கும் துணை நிறுவனங்கள், 108 குழுமக் கம்பனிகளை உள்ளடக்கிய சர்வதேச ஓரிக்ஸ் வலையமைப்பில் "மிகப் பிரபலமான நிதி நிறைவேற்றுனர் 2010/2011" என்ற நாமத்தினை **LOLC** பெருமையுடன் பெற்றுக் கொண்டுள்ளது. 5 கண்டங்களிலும் நாம் எம் வாடிக்கையாளர்களுக்கு உயரிய சேவையையும், அர்ப்பணிப்பையும் வழங்கியதன் காரணமாய் அனைத்து சர்வதேச வலையமைப்பின் மிகப் பிரபலமான நிறைவேற்றுனர் என்ற நாமம் எமக்கு சூட்டப்பட்டுள்ளது. புகழ் மிக்க இச் சாதனையை அடைவதில் பங்களிப்பு வழங்கிய **LOLC** இன் ஒவ்வொரு உறுப்பினருக்கும் இத் தருணத்தில் நன்றியையும் வாழ்த்தையும் கூற நாம் கடமைப்பட்டுள்ளோம்.

LOLC
அபிவிருத்திப் பாதையின் முன்னோடி
www.lolc.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

MASSEY FERGUSON 240 TRACTORS
2011 BRAND NEW MF 240 Tractors
இறக்குமதி செய்யப்பட்டு நாடுமுழுவதும் மலிவு விலையில் விநியோகப்படுகின்றது.
சகலவிதமான விவசாய உபகரணங்கள், நீர்த்தாங்கிகள் மற்றும் இணைப்பு வண்டிகளும் கிடைக்கும்.



விற்பனையின் பின் ஒருவருட உத்தரவாதம்
SOLE AGENT
Samarakoon Tractors (Pvt) Ltd.
Minuwangoda.
Tel: 011 2295254, 0773049237
Dealer:- Blue Sky Agency15/1/1, Kandy Road, Chavakachcheri.
Tel: 0212270200, 0772248322.

# உடல் ஆரோக்கியத்தை உற்று நோக்கும் ஆடைகள்

ஐரோப்பியத் தொழில்நுட்ப ஆராய்ச்சியாளர்கள் ஆடைகளை வடிவமைக்க ஆரம்பித்து இருக்கிறார்கள் என்றால் ஆச்சரியமாக இருக்கிறதல்லவா?

ஆனால் இவை சாதாரணமாக நாம் பயன்படுத்தும் அலங்கார ஆடைகளோ அல்லது ஆடம்பர ஆடைகளோ அல்ல. இவை மின்னணுக் கருவிகள் கொண்ட ஆடைகள். இவற்றை அணிபவர்களின் ஆரோக்கியத்தை இந்த மின்னணுக் கருவி ஆடைகள் தொடர்ந்து கண் காணிக்கும் என்பது தான் இவற்றின் சிறப்பு.

உணர்திறன் ஆடைகள் எனப்படும் இந்த ''நுணுக்கமான முறையில் உடல் ஆரோக்கியத்தைக் கண்டறியும் துணி வகைகள்'' பல தகவல் கருவிகளைக் கொண்டிருக்கும். இவற்றின் துணையுடன் உடலில் செயற்படும் நீரோட்டத்தை அதாவது இரத்தம், வியர்வை ஓட்டத்தின் மாற்றங்களைத் தொடர்ந்து கண்காணித்து உடல் ஆரோக்கியத்தைக் கணிக்கும் வகையில் இவை அமைக்கப்பட்டு இருக்கின்றன.

மருத்துவமனை நோயாளிகளில் குறிப்பாக கோமா நிலையில் இருப்பவர்கள், மனநலம் குன்றியவர்களின் உள்ளார்ந்த மாற்றங்களைக் கவனிக்க இந்த நவீன ஆடைகள் மிகவும் பயன்படும் எனத் தெரிவிக்கப்படுகின்றன.

மனதின் எண்ணங்களுக்கு ஏற்ப உடல் இரத்த ஓட்டம் மாறுபடுவதால், குற்றவாளிகளின் எண்ணங்களை ஆராய குற்றவியல் காவல்துறையினருக்கும் இந்த உணர்திறன் ஆடைகள் மிகுந்த பயனளிக்கும் என்று கூறப்படுகிறது.

HERO HONDA
100 වාසි
நீங்கள் கொள்வனவுச்செய்யும் அனைத்து 100cc ஹீரோ ஹொன்டா மோட்டார் சைக்கிள்களுடனும்
ஒயில் கேன் 2ம், பின்பக்க ப்ரேக் சூ ஜோடியும்,
எயார் க்ளீனர் 1ம், முன்பக்க ப்ரேக் (சூ/பேட்) ஜோடிகளும்
முற்றிலும் இலவசம்



CD Dawn ரு. 93,750 + வரி



CD Deluxe (Alloy/Kick start) ரு. 104,464 + வரி
(Spoke/Power start) ரு. 114,285 + வரி



Splendor NXG ரு. 124,910 + வரி



Passion Pro (Drum Brake) ரு. 133,839 + வரி
(Disk Brake) ரு. 140,625 + வரி

நீங்கள் மோட்டார் சைக்கிள்களை கொள்வனவுச்செய்யும் போது 2 ஒயில் கேன்களையும் உதிரிப்பாகங்களின் கூப்பனையும் எமது விற்பனை முகவர்களிடம் பெற்றுக்கொள்ளவும்.

மேலும் விபரங்களுக்கு 0114607200 அல்லது 0114301240 இன்றே அழையுங்கள்

இச்சலுகை ஏப்ரல் மாதம் 7ம் திகதி முதல் ஜூன் மாதம் 30ம் திகதி வரை மாத்திரமே வழங்கப்படும்




ஸ்டபர்ட் மோட்டர் கம்பனி லிமிட்டட்
மற்றும் அங்கீகரிக்கப்பட்ட விற்பனை முகவர்களிடம் மாத்திரமே
100 වාසි 100 වාසි 100 වාසි

# சிறுநீரகங்கள் மூலம் இதய பாதிப்புகளுக்கு சிகிச்சை அளிக்க முறை

சிறுநீரகங்களை உயர் அழுத்த அலைகள் மூலம் தூண்டி மாரடைப்புக்கு சிகிச்சையளிக்கும் புதிய முறையைக் கண்டுபிடித்து இங்கிலாந்து மருத் துவர்கள் சாதனை படைத்துள்ளனர்.

லண்டன் இம்பீரியல் கல்லூரியின் ஆராய்ச்சியாளர்கள் டாக்டர் டாரெல் பிரான்சிஸ் தலைமையில் இதயநோய் குறித்து மேற்கொள்ளப்பட்ட ஆய் வின்போது மாரடைப்பு உள்ளிட்ட இதய நோய்களும், சிறுநீரகப் பாதிப்பும் ஒன்றை ஒன்று சார்ந்தது என்று கண்டுபிடித்துள்ளனர். இதன் மூலம் இதயம், சிறுநீரகம் ஆகிய இரண்டும் அல்லது ஏதாவது ஒன்று பாதிக்கப்பட்டால் இரண்டுக்கும் சிகிச்சை அளிப்பதன் மூலம் நிவாரணம் பெறலாம் என்றும் கண்டறிந் துள்ளனர்.

இந்தப் புதிய சிகிச்சை முறை குறித்து டாரெல் கூறியதாவது: இதயம், சிறுநீரகம் இடையே உள்ள நரம்புகளைக் கட்டுப்படுத்துவதன் மூலம் இரண்டு உறுப்புகளின் பாதிப்புகளை சீராக்குவதே புதிய சிகிச்சையின் முக்கிய நோக்கம் ஆகும்.

சிறுநீரகங்களில் இருந்து நரம்புகள் மூலம் அனுப்பப்படும் உயர் அழுத்த சமிக்ஞைகள் முதலில் மூளையை அடைந்த பின்னர் அங்கிருந்து இதயத்துக்கு அனுப்பப்படுகிறது.

ஏதேனும் ஒரு உறுப்பில் இருந்து மூளைக்கு அனுப்பப்படும் இந்த மின் அழுத்த சமிக்ஞைகள் மற்ற உறுப்பின் பாதிப்புகளைச் சீர்செய்கின்றன. இந்தப் புதிய சிகிச்சையால் இதயத் துடிப்பு சீராவதுடன் இரத்த அழுத்தமும் கட்டுப்படுத்தப் படுவதோடு சுவாசக் கோளாறுகளான மூச்சு வாங்குதல், சோர்வு உள்ளிட்ட பாதிப்புகளும் குணமாகும்.

விலங்குகளில் சோதனை நடத்தியபோது இந்த சிகிச்சைக்கு வெற்றி கிடைத்ததைத் தொடர்ந்து மனிதர்களி டமும் பரிசோதித்துப் பார்க்கப்பட்ட போது அதிலும் வெற்றி கிடைத் துள்ளது.

இதுகுறித்து மேலும் பல ஆய்வுகளும் நடத்தப்பட்டு வருகிறது. இந்தப் புதிய முறை நடைமுறைக்கு வந்தால் இதய நோய் மற்றும் சிறுநீரக பாதிப்பால் அவதிப்படுபவர்களுக்கு வரப்பரசாதம் கிடைக்கும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org